27 JAN 1931
81

# கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் 1.] 1931ஆ ஜனவரிமீ [இலக்கம் 4.

## வருடாந்திர மகாநாடு.

### ராஜீய மகாநாடு.

டிசம்பர் மாதத்தின் கடைசிவாரம் எப்பொழுதும் மிகவும் சுறு சுறுப்பானவாரம். மகாநாடுகள் கூடுகின்ற காலமும் இதுவே. இந்த வாரத்தில் வழக்கமாக நடக்கிற மிகவும் முக்கிய கூட்டம் இந்திய தேசிய மகாநாடே ஆகும். கராச்சியில் டிசம்பர் மாதத்தில் குளிர் அதிகமாயிருப்பதினால் 1930 டிசம்பர் மாதத்திற்குப் பதிலாக 1931 பிப்ரவரியில் தேசிய மகாநாடு அங்கே கூடவேண்டுமென்று லாகூரில் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி தேசிய மகாநாடு, தேசிய வாரமென்று அநேகம் வருஷங்களாக எண்ணி வருகிற வருஷாந்திர வாரத்தில் இப்பொழுது கூடவில்லை.

வழக்கமாய் நடக்கிற முஸ்லீம் லீக் ஸெஷன் அலஹாபாத்தில் நடை பெற்றது. அக்கூட்டத்திற்கு ஸர். மகமத் இக்பல் அக்கிராசனம் வகித்தார். இந்தியாவிற்குள்ளேயே மகம்மதிய இந்தியா ஏற்படுத்த மகம்மதியர் கேட்டது நியாயமென்று அவர் நாட்டினார். இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில் முரண்படாமல் ஒற்றுமையாய்த் தேசத்தை ஒன்று கட்டுவதற்கு மிகவும் சிறந்த நோக்கத்தோடுகூடிய ஜாதிப் பிரிவு மிகவும் இன்றியமையாததாகும். இவ்விதம் ஜாதியபிமானத்தைக் கொண்டாடுவது மிகவும் அநுசிதம். அந்தக் காங்கிரஸின் வேலையையாவது, முஸ்லிம் லீகின் வேலையையாவது சீர்தூக்கிப் பேசுவது நமது விஷயமன்று. எனினும் அவை கிராமவாழ்வைச் சிலபொழுது பாதிக்குமாதலால் நாம் அந்த விஷயங்களை முற்றிலும் அலட்சியமாகத் தள்ளிவிடமுடியாது. தற்காலம் நடக்கிற விஷயங்கள் நமக்கு மிகவும் தெளிவாகக் காட்டுகிற செய்தி ஒன்று உண்டு. முன்னே சொல்லப்பட்ட அந்தப் பெரிய சங்கங்கள் யாருக்காகப் பேசுகிறதோ அந்த ஜனங்களாகிய இந்தியர்கள் கிராமங்களில் ஏற்படுகிற சிறு சங்கங்களின் மூலமாகவேதான் தங்கள் முழு அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டால்

தான் இப்படிப்பட்டதான அபிப்பிராய பேதங்களுக்கு முடிவான முத்திரைத் தீர்ப்பு ஏற்படும் என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. முன்னிருந்ததைப் பார்க்கிலும் தற்போது கிராம சங்கங்களின் தேவை மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆகையால் கிராம சங்கங்கள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட்டு மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டும். தன்னை எவ்வளவு நன்றாய் அரசாங்கத்தார் ஆளவேண்டுமென்று சொல்லும் முடிவான அதிகாரம் கிராமத்தானுக்கு ஏற்பட்டிருக்கவேண்டும். சாதாரணமாக ஒரு கிராமத்தானுக்கு சுதந்திரத்தையோ, டொமினியன் ஸ்டேட்டஸ்ஸையோ, சர்வ இந்திய பெடரேஷனையோ, பிரிட்டிஷ் இந்திய பெடரேஷனையோ, ஜாதிப்பிரிவையோ, ஜாதிபேதமற்ற சமரசத்தையோ குறித்து ஒன்றுமே தெரியாமலிருக்கலாம். ஆனால் அவனுக்கு அவனளவான சாதாரண சமாசாரங்களையும் விஷயங்களையும் தன்னைப்போலக் கிராமத்திலுள்ள இதர ஜனங்கள் கேட்க ஆசைப்படுகிற இதர விஷயங்களையும் குறித்து அவன் நன்றாய் அறிவான். கிராமத்தானுக்குக் காரியங்களை நிறைவேற்றுவதற்கு உரிய சாதகங்களை செய்து கொடுத்து அவனைத் தன் வாழ்வையும் தாழ்வையும் சிற்பித்து அமைக்கிற சிற்பனாக்கக்கூடுமானால் அவன் ஜாதி மத பேதங்கள், ராஜீய தத்துவ ஞானங்கள் அல்லது, மதமார்க்க சம்பந்தமான தத்துவஞானங்கள், முதலியவைகள் தன்னை மேற்கொண்டு ஆள ஒருபொழுதும் இடம் கொடுக்கமாட்டான். கிராமத்தான் மிகவும் அறிவுடையவன்; உபாயக்காரன்; தன்னை வெகு எளிதில் காப்பாற்றிக்கொள்ளும் திறமையுடையவன். பரம்பரை பரம்பரையாக இந்த நாட்டிலே தோன்றிய எண்ணிறந்த பொதுஜன ஊழியர்களும் புகழ்பெற்ற தலைவர்களாகி விளங்கிய இந்திய ஸ்திரீகளும் புருஷர்களும் ஓயாமல் செய்த வேலைக்காக அவர்களுக்கு மனமார்ந்த நன்றி செலுத்துகிறோம். அவர்கள் முயற்சியினாலேயே கிராமத்தான் மிகவும் முன்னேற்றம் நிறைந்த ஒரு நாளின் உதயகாலத்தில் எழுந்து நிற்கிறான். இந்த தேசத்தின் சிந்தனைகளை ஆண்டு நடத்துகிற தலைவர்களுக்கு, கிராம ஜனங்களுக்கு நன்மையாயிருக்கிற எல்லாக் காரியங்களிலேயும் நன்றாக ஒத்துழைக்கிறதற்கும், கிராமந்தார இந்தியாவை இனிமேல் வரப்போகிற மிகவும் கஷ்ட நிர்ப்பந்த நிலைமைகளிலும் கூட, அது நிலைத்திருக்கச் செய்வதற்கும் போதுமான அறிவின் வலிமையைக் கொடுக்கவேண்டிய ஓரே விண்ணப்பத்தைக் கடவுளின் சன்னிதானத்தில் அர்ப்பணம் செய்கிறோம். திருத்தணியில் கூடின ஜமீன்தாரிக் குடிகளின் காண்பெரன்ஸின் அக்கிராசனாதிபதியாயிருந்த ஸ்ரீமான் ராமதாஸ் பந்துலு அவர்கள் தாம் செய்த அக்கிராசனாதிபதி பிரசங்கத்தில் ஆங்கில கவியாகிய கோல்டுஸ்மித்து என்பவர் தம்முடைய சிறு பிராயத்தில் தாம் வாழ்ந்த சிறு கிராமமாகிய ஆபேர்னைக் குறித்துப் "பாழாய்ப்போனக் கிராமம்"



160210



என்னும் தலைப்பெயரோடு பாடிய பாடலில் இருந்து எடுத்துக் காட்டியிருக்கிற ஒரு வாக்கியமானது இந்தியா தேசத்திலுள்ள தற்கால நிலைமையை நமக்கு வெகு நன்றாக எடுத்துக்காட்டுகிறது,

"வீரம் செறிந்த நற்பயிர்த் தொழிலே
அவர் தம் நாட்டின் அழியாப் பெருமை
அதுதான் அழிய நேரின் அந்தோ
அதனை நிறைக்க எதனால் ஆகும்"

என்று பொருள்படும் ஆங்கில அடிகளை ஸ்ரீமான் ராமதாஸ் அவர்கள் வெகு அழகாக மேற்கோளெடுத்துக் காட்டினார்கள். மிகவும் உன்னதமான அரசாங்க முறைகளிலும், மிகவும் உன்னதமான தேசிய விஷயங்களிலும் உள்ள வித்தியாசங்கள், மனிதர்களை பரஸ்பர ஸ்பரிசத்திற்கும் இடம் கொடுக்காதபடி தனித்தனி குழுக்களாகப் பிரித்து அவர்களை, அவர்களுடைய அனுசார வழக்கங்களைத் தவிர மற்றவைகளையும் அலட்சியம் செய்யத் தூண்டிவிடுகிறபொழுதுதான் மிகவும் பயங்கரமாய்க் காணப்படுகின்றன. இக்கொடுமை நேரிடாமல் இந்தியாவைக் கடவுள் காப்பாற்றுவாராக.

இந்நாட்டின் ராஜீய நிலைமைகள் இவ்வாறிருக்கையில், நமது தேசத்தின் பலபாகங்களிலே நமது தேசத்திற்கு நன்மை தரக்கூடிய பல முக்கியமான விஷயங்களைப்பற்றி அங்கங்கே பல கூட்டங்கள் கூடின.

அந்தக்கூட்டங்கள் எல்லாவற்றையும்பற்றி இங்கேசொல்ல நமக்குப் போதுமான இடமில்லை. அவைகளிலேதாவது ஒன்றைக் குறித்து முழுவதும் விரிவாக இங்கே எழுதுவதற்கும் இடமில்லை. எனினும் இந்தக் கூட்டங்களில் சில நம்முடைய பஞ்சாயத்தாருக்கு மிகவும் நெருங்கிய சம்பந்தமுடையவைகளாய் இருக்கின்றன.

## இந்திய சாஸ்திர மகாநாடு.

இந்த மகாநாடு நாகப்பூரில் கூடியது. இந்த மகாநாட்டில் ஒரு விவசாயப் பகுதி உண்டு. இந்த உலகத்தில் எங்கும் விவசாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறகாலம் இப்பொழுது உதயமாயிருக்கிறதினாலே நகாப்பூரில் கூடிய சாஸ்திர மகாநாட்டில் இதரப் பகுதிகள் கூட விவசாய விஷயங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்யவும் அதற்காகப் பாடுபடவும் கூடுமென்று நாம் முற்றிலும் நம்புகிறோம். விவசாயப் பகுதிக்கு ஸர். டி. விஜயராகவாசாரியர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். மேலும் இம்பீரியல் கௌன்சில் ஆப் அக்கிரிகல்சரல் ரிஸேர்ச்சுக்கு வைஸ் சேர்மனாக இருந்து சமீபகாலத்திலே ஐரோப்பா தேசத்தில் அனேக இடங்களிலெல்லாம் பிரயாணம் செய்து விட்டு இப்பொழுது அவர் திரும்பி வந்திருக்கிறார். ரோமாபுரியிலே உள்ள இண்டர் நாஷனல்

இன்ஸ்டிட்யூட் ஆப் அக்கிரிகள்ச்சருடைய கடைசி செனரல் அசம்பளிக்கு முற்றிலும் இந்தியர்களால் அமைந்த முதல் டெலிகேட்டுகளுக்குத் தலைவராய்ச் சென்றிருந்தவர் இவரே. இவர் தம்முடைய சுற்றுப் பிரயாணத்தில் கானடா, ஆஸ்திரேலியா, ந்யூசிலாண்டு, என்னும் நாடுகளில் ஏற்படுத்தியிருக்கிற அக்கிரிகள்சரல் ரிஸேர்ச்சு கௌன்ஸில்களிலுள்ள தலைவர்களோடும் இன்னும் அனேக நாடுகளிலுள்ள விவசாய சாஸ்திரத்தில் கைதேர்ந்த சாஸ்திரிகளோடும் கலந்து பேசி அனேக அருமையான விஷயங்களையும் தத்துவங்களையும் அறிந்து கொண்டவர். அவர் வாயிலிருந்து வருகிற ஒவ்வொரு வார்த்தையும் இந்த விஷயமாகப் பேசுகிறதற்குப் பூர்ண அதிகாரம் பெற்றவர் வாயிலிருந்து வருகிற வார்த்தையாயிருக்கின்றது என்று நாம் சொல்லத் தேவையில்லை அவருடைய பிரசங்கத்தில் அவர் பேசின அனேக விஷயங்களில் இரண்டு பத்திகளை மட்டும் இங்கே எடுத்து காட்டுகிறோம்.

" விவசாயச் செழிப்பு விவரங்களைக் கற்பதே செல்வ நிர்வாக சாஸ்திரத்திலும் விவசாயத்திலும் முக்கிய அடிஸ்தானமாயிருக்கையில், தனிதனி சாஸ்திரத்தில் விசேஷிக்க ஞானமடைவதற்காக முயன்று வருகிற இந்நாட்களில், பூகோளங்காதி சாஸ்திர சம்பந்தமானதும சாஸ்திர யுக்தமானதுமான செழிப்பு விவரச் செய்திகளைப் பரவச்செய்வது மேன மேலும் முக்கியமாகிக்கொண்டே வருகிறது

விவசாயப் பொருள்களின் கிரயத் தாழ்ச்சியினால் சமீபத்தில் ஏற்பட்டிருக்கும் விவசாய இறக்கமானது என்னுடைய பிரசங்க விஷயத்தில் இரண்டு முக்கியமான கூற்றுக்களை மிகவும் தெளிவாக விளக்கிக்காட்டுகிறது விலை வீழ்ச்சியைத் திட்டமான ஒரு முறையிலே எதிர்க்க ஒரே நிலையான வழியுண்டு. அந்த வழியானது விவசாயப் பொருள்களை விளைவிக்கும் திறமையிலே இருக்கிறது. ஆகையால் அத்திறமையை அபிவிருத்தி செய்துகொள்ளவேண்டிய தேவை முன்னிலும் மதிகமாயிருக்கிறது. பயிர்த்தொழிலின் திறமையை அபிவிருத்தி செய்ய முயற்சிப்பதில், சாஸ்திர ஞானத்தையும் தொழில் ஞானத்தையும் பரவச்செய்வது மிகவும் இன்றியமையாததாகும். விவசாய சமபந்தமாக இப்பொழுது இவ்வுலகமெங்கும் ஒரு வகையான நெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கத்தினாலே பல தேசங்கள் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ வேண்டியதாயிருக்கின்றன என்பது மிகவும் தெளிவாகிறது. அதோடு, தற்காலத்தில் இருக்கிறதைப் பார்க்கிலும் விவசாயச் சாக்குகளின் விளைவையும் உபயோகத்தையும்பற்றிய சரியான கணக்கு விவரங்கள் மிகவும் தேவையாகவிருக்கிறது என்றும் தெளிவாகிறது."

உண்மையே! இக்காலத்தில் தேசங்களுடைய பரஸ்பர சகாயத் தேவை அதிகரித்திருக்கிறது. நாம் அறிவில் வளர்ந்தோங்கப் பெரிதும்





தாகமுடையவர்களாயிருக்கவேண்டும். நாம் சர். டி. விஜயராகவாசாரியார் அவர்களிடம் மேலேசொல்லப்போகிற விஷயத்தை கவனிக்குமாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். மேலே உள்ள ஆராய்ச்சிக் கழகங்களில் கண்டு பிடிக்கப்படுகிற விவசாய ஆராய்ச்சிகளையும் பல புதிய தத்வங்களையும் கீழே உள்ளதாகிய குடியானவர்கள் அறிந்து தம்முடைய பயிர்த் தொழிலிலே உபயோகப்படுத்திக் கொள்ளுமாறு அவர்களுக்கு கற்பிக்கிறதற்கு ஏற்ற ஒரு முறையையும் ஏற்படுத்திக் குடியானவரை வேலைக்கு சுறுசுறுப்பாக்கவேண்டுமென்றும் கோருகிறோம். கானடா, ஆஸ்திரேலியா, ந்யூசீலாண்டு முதலிய நாடுகளில் ஒரே பாஷை வழங்கி வருகின்றது. கானடா தேசத்தில் ஒரு சிறுது பிரஞ்சு பாஷை வழங்கி வருகிறது. ஆனால் இந்தியாவிலோ, நம்முடைய தேசத்தின் விஸ்தீர்ணத்திற்கும் ஜனத்தொகைக்கும் கைகடந்தவிதமாக அனேக பாஷைகள் வழங்கிவருகின்றன. சர்வ இந்தியா ரிஸேர்ச் கௌன்ஸிலின் தலை அதிகாரியாகிய சர். ஆசாரியார் அவர்கள் ஏணியின் கீழ்படிகளிலுள்ள குற்றங்களுக்கும் குறைவுகளுக்கும் ஆளாகமாட்டார் என்பது உண்மையே; எனினும் நாம அவரை நோக்கி ஐப்யா, தங்களுடைய கண்ணிய மிக்க இந்த உற்சாகத்தை இந்த நாட்டின் அரசாங்கத்தின் ஆதீனத்திலே இருக்கிற புழு ஆட்சியந்திரத்திற்கும் சிறிது புகட்டுங்கள் என்று தாழ்மையாய் கேட்கத் துணிந்திருக்கிறோம்.

## முனிசிபல் எஞ்ஜினியர்களின் மகாநாடு

நமமுடைய நகரத்தில் கூடிய முனிசிபல் எஞ்ஜினியரின் மகாநாடு மிகவும் முக்கியமானதும் அவசரமானதுமான நம்முடைய ரஸ்தாக்களைப் பற்றி விசேஷமாக ஆராயத் தலைப்பட்டன. நம்முடைய மாகாண அரசாங்கத்தில் பிரதான மந்திரியாகிய திவான் பகதூர் முனுசாமி நாயுடு அவர்கள் அந்தக் கூட்டத்திற்கு அக்கிராசனம் வகித்தார். அவர் வெகு எச்சரிக்கையாகத் தாம்செய்த பிரசங்கத்திற்கு அமைந்த முன்னுரையிலே தாம் ஜில்லா போர்டின் பழைய பிரசிடெண்டு என்ற தோரணையிலே அபிப்பிராயங்களை வெளியிடுவதாச் சொல்லிக்கொண்டார். அவருடைய சொந்த அனுபவத்தில் அவர் கண்டது என்னவெனில் சமீப வருஷங்களில் ஜில்லா போர்டுகளே ராஜ ரஸ்தாக்களைக் குறித்து மிகவும் கவலை எடுத்துக் கொள்ளுகின்றன என்பதாகும். மோட்டார் போக்கு வரத்துகள் ராஜ ரஸ்தாக்களில் அதிகமாக வளர்ந்துகொண்டு வருவதினாலே ஜில்லா போர்டு எஞ்ஜினீயர்களுக்கு கிராமாந்தர ரஸ்தாக்களையும் போதுமானபடிக் கவனிப்பது மிகவும் கஷ்டமாயிருந்ததென்று அவர் அபிப்பிராயப்பட்டார், ஜில்லா போர்ட் எஞ்ஜினீயர்களை இரண்டு கட்சிகளாக பிரித்து ஒரு கட்சியை ராஜ ரஸ்தாக்களைக் கவனித்துக் கொள்ள

வும் மற்றொரு கட்சியை கிராம ரஸ்தாக்களை கவனிக்கவும் ஏற்பாடு செய்யவேண்டிய காலம் வந்திருக்கிறது என்று அவர் நம்பியிருக்கிறாராம். இந்த மகா நாட்டில் ரஸ்தா விஷயமாக நடந்த இதர சம்பாஷணைகளில் பல ராஜ பாதையைப் பற்றிய சகல சமாசாரங்களையும் வெகு விரிவக ஆராய்ந்து காட்டுகின்றன. ஆகையால் அவை மிகவும் முக்கியமானவை. கிராமாந்தர ரஸ்தாக்களைப்பற்றிய சமாசாரத்தில் ஸ்ரீமான் வி. எஸ். ஸ்ரீனிவாஸ ராகவாசாரியாருடைய உபன்னியாசம் மிகவும் முடிவான தீர்மானங்களாய் இருந்தன. அவர் எடுத்துக் காட்டியபடி லோக்கல் போர்ட் கூட்டங்களில் நடைபெற்ற மிகவும் ரசமான ப்ரோகிராமில் கிராம ரஸ்தாக்களுக்கென்று நிதிவகுத்துக் கொடுப்பதில் அவர்கள் காட்டி இருக்கிற உற்சாகமே ஆகும். தீர்வை கட்டுகிற கிராமத்தானுக்கு திருப்தியானபடி இந்தக் கிராம ரஸ்தாக்களைப்பற்றிய காரியங்களை முடிவு செய்யாவிட்டால், முதல் தரமான அல்லது, இரண்டாவது தரமான ரஸ்தாக்களை மிகவும் பணச் செலவுக்கிடமான சீர்திருத்த ப்ரோபோணைகளைக் கொண்டுவருகிறபொழுது கிராமத்தான் அதற்கு ஒத்துக் கொள்ளமாட்டான். இந்த நாட்டில் தேவையான எல்லா நிஜமான பிரயாண சௌகரியங்களும் கிராமத்தோடு சம்பந்தப்பட்டிருக்கவேண்டும். நமக்காகப் பொருள்களை உற்பத்தி செய்பவன் கிராமத்தான். சமீபகாலத்திலே, இந்தஉலகமெங்கும், விவசாய பொருள்களை அபிவிருத்தி செய்ய மிகவும் பெரிய ஊக்கமும் முயற்சியும் போட்டி போட்டுக்கொண்டே எங்கும் பரவிவருகின்றது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நம்முடைய நாட்டிலும் விவசாய விளைவுகளை அதிகரிக்க செய்கிற விஷயத்தில் நாம் எத்தகைய முன்னேற்றமடையவேண்டுமானாலும் நமது கிராமாந்தரத்தாருக்கு நல்ல ரோடுகளை அமைத்துக் கொடுப்பது மிகவும் இன்றியமையாததாகும். நம்முடைய கிராமத்தார் அவர்களுடைய கிராமங்களில் விளைகிற பொருள்களைச் சந்தைக்கு கொண்டு போகிறபொழுது நல்ல ரஸ்தாக்கள் இல்லாமல் அந்த ஜனங்கள் படுகிற பாட்டை பார்க்கிறபொழுது, நம்முடைய கண்களினின்று நீர் வரும் என்பதற்குச் சந்தேகமே யில்லை. அவர்கள் படுகிற கஷ்டங்களோடு தங்கள் சரக்குகளை விற்பதில் அவர்கள் பாழாக்குகிற உடல் வலியும் சமயமும் பொருளும் மிகவும் அதிகமாக இருக்கின்றன. நல்ல ரஸ்தாக்கள் இல்லாததினாலே விளைவுப் பொருள்கள் மட்டுமல்ல கிராமங்களை விட்டு வெகு சீக்கிரம் அசைய முடியாமல் தவிக்கின்றன; தொத்து நோய்களும் வெகு சீக்கிரம் எங்கும் பரவுகிற வியாதிகளும் ஏற்படுகிற காலத்திலே அந்த நோய்களைத் தடுப்பதற்கான முறைகளையும் எச்சரிப்புகளையும் கற்பிக்கிற ஞானம் கூட நல்ல ரஸ்தாக்களில்லாமையினாலே ஏற்ற சமயத்தில் கிராமத்தாருக்கு எட்டாமல் போகிறது. இந்த கிராமாந்தர ரஸ்தா விஷயமானது மிகவும் முக்கியமானது. எப்போழுதும் கிராமாந்தர





விஷயத்திற்காகவும் ஊக்கமெடுத்துக்கொள்ளுகிற பிரதம மந்திரியானவர் வெகுசீக்கிரம் கிராமாந்தர ரஸ்தா அமைப்பு விஷயமாக மிகவும் விரிவான ஏற்பாடுகள் செய்து அவற்றை நடைபெறும்படிச் செய்வாரென்று நம்புகிறோம். பருத்திக் கருப்பு மண் நிலங்களைத் தவிர இதர நிலங்களில் யந்திரப்பாதுகாப்போடு கூடிய மண் ரஸ்தாக்களை அமைக்கிறதைப்பற்றி மிஸ்டர் ஸ்ரீனிவாஸராகவாசாரியார் அவர்கள் காட்டியிருக்கிற குறிப்பை உடனே நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும். அரசாங்க முறையில் கிராமாந்தர ரஸ்தாக்களை முதலிலும் இதர விஷயங்களைப் பிந்தியும் கவனிப்பதாயிருக்கவேண்டும். மிஸ்டர் டானியல் அவர்கள் எடுத்துக்காட்டினபடி, நவீனகாலத்து மேல் பரப்பும் தளமும் உடைய ரோடுகள் நம்முடைய ஜில்லாவில் எந்த எந்த இடங்களிலே பட்டணத்தைபோன்ற நிலமைகள் இருக்கிறதோ அங்கே மட்டும்தான் அவசியமாயிருக்கும்; மற்ற இடங்களில் அவ்வளவாகத் தேவையில்லை. ஆகையினாலே நாம் இந்த சமாசாரங்களை முற்றிலும் விட்டுவிடலாம். காண்கிரீட்டும் ஆஸ்பால்ட்டும் எல்லாம் எப்படிவேண்டுமோ இருக்கட்டும். கவர்ன்மெண்டார் இந்த விஷயங்களிலாவது, அயல் நாட்டிலுள்ள உற்பத்திக்காரர்களிலாவது பஸ் முதலாளிகளுடைய க்ஷேமத்திலாவது கண்ணும் கருத்துமாய் இருக்கக்கூடாதென்பதை அவர்கள் கவனிக்கவேண்டும். முதன் முதலில் கிராமத்தானுக்கு நமது சிரத்தையைக் கொடுக்கவேண்டும். அவன் மிகவும் கஷ்டத்தோடு சர்க்காருக்குக் கட்டுகிற வரிப்பணமானது —அதுவும் வற்புறுத்தலினாலே கட்டப்படுகிற வரிப்பணமானது—ஏற்ற வழிகளிலே உபயோகிக்கப்படவேண்டும்.

## ஜமீந்தாரிக் குடியானவரின் மகாநாடு

ஜமீந்தாரிக் குடியானவருடைய மகாநாடு திருத்தணியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தற்போது ஜமீந்தாரிகளின்கீழ் அகப்படுகிற காணி ஆட்சி முறையின் மிகவும் கஷ்டமான தன்மையைக் குறித்துப் பெரும்பாலும் பேசப்பட்டது. இந்த மகாநாட்டிற்கு ஸ்ரீமான் ராமதாஸ் பந்துலு அவர்கள் பி.ஏ.பி எல்., அக்கிராசனம் வகித்தார். அவருடைய பிரசங்கத்தின் சுருக்கத்தை இந்தப் பத்திரிகையில் வேறொரு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம். நம்முடைய குடியானவர்களுடைய செல்வவாழ்க்கையோடு நம்முடைய கட்டுக்குத்தகைச் சட்டங்கள் மிகவும் நெருங்கிய சம்பந்தமுடையனவாய் இருக்கின்றனவென்று அவர் கூறினார். இந்திய நகரத்தின் செல்வமில்லை, கிராமாந்தரத்தின் செல்வமில்லை இவற்றின் பலவீனத்துக்கு மிகவும் முக்கியமான காரணமாயிருப்பது சற்றும் முன்னேற்றமடையாத முரட்டு முறையான நம்முடைய நிலக் காணி ஆட்சியேயாம். காலாகாலத்தில் வருகிற செட்டில்மெண்டோடு கூடிய ரயட்வாரி டெனியூர் சட்ட யுக்தமான அனுமதி

பின்பேரிலே ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு முறையில் புதிதாக செய்யப்படுகிற ரீசெட்டில்மெண்டிலும் மூன்றிலும் அதிகமான ஒரு தொகையை அடையவேண்டுமென்கிற நோக்கத்தோடு எக்ஸிக்யூட்டிவ் அதிகாரிகளின் ஆண்டுதனினாலேயே முற்றிலும் நடைபெற்றுவருகிறது. இவ்வாறு செய்வதில் செல்வ முறையான பல தீமைகள் உண்டு. பின்பு அவர் ஜமீன்தாரின் கீழே இருக்கிற காணி ஆட்சிக்காரர்களுடைய நிலைமை நம்முடைய நிலைமையிலும் அதிகப் பரிதாபகரமாயிருக்கிறதென்று வாதித்தார். அநேக ஜமீன்தாரி ஏரியாக்களில் தற்போது இருக்கிற நிலத்தீர்வை ஏற்பட்டிருப்பதற்கு எவ்விதமான தகுந்த நியாயமும் முறையும் இல்லை. சில சந்தர்ப்பங்களில் நிலத்தை சர்வே செய்து வரி செட்டில்மெண்டு செய்தபொழுது அதுவும் அதனோடு தானியத்தீர்வைக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்ட பணத்தீர்வையும் ஆக ஒன்று சேர்ந்து முன்னிருந்ததிலும் மூன்று பங்கு அதிகமாக இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஜமீன்தாரிகளின் கீழிருக்கிற குடியானவர்கள் பயிர் விளைச்சல் இல்லாத காலத்தில் நிலத்தீர்வையைத் தள்ளித் தரும்படியாகக் கேட்கவாவது பயிர்க்காக உபயோகப்படுத்துகிற நீர் நிலைகளையும் கால்வாய்களையும் மராமத்துச் செய்து சீராக்கிக் கொடுக்க ஜமீன்தாரை வற்புறுத்தவாவது அதிகாரம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ராமதாஸ் அவர்கள் இன்னும் பலவிதமான குறைவுகளை எல்லாம் எடுத்துக்காட்டி எஸ்டேட்ஸ் நிலச்சட்டத்தை மிகவும் தகுந்தவாறு அமைக்கவேண்டுமென்று கூறினார் அப்படிச் செய்வதற்காகக் கேட்டு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அதற்காக வேலை செய்வதற்கு கம்மிட்டிகளும் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த மகாநாட்டைத் திறந்துவைத்தவர் ஆனரபிள் திவான்பகதூர் முனுசாமி நாயுடு அவர்களேயாம். அவர் தம்முடைய பிரசங்கத்தில் ஜமீன்தாரின் கீழிருக்கிற குடியானவர்களுக்கு இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் நல்லதான சட்டமொன்று ஏற்படுத்தவேணுமென்றும் அவர்களை நன்றாக நடத்தவேணுமென்றும் கூறினார்.

இந்த மாகாணத்தில் உள்ள 40,000,000 ஏக்ராவில் 19,000,000 ஏக்ரா நிலங்கள் ஜமீன்தாரி குடியானவர்களைச் சேர்ந்திருக்கிறது. இந்த மகாநாட்டில் ஸ்ரீமான் ஹரிஸர்வோத்தம ராவ் அவர்களும் பேசினார்கள். அவர்கள் குடியானவர்களுடைய அரசாங்க மேற்படாத காலமெல்லாம் இந்தியாவிலே ஜனநாயக ஆட்சி ஏற்படமுடியாது என்று பேசினார். ஆனால் நம்முடைய நாட்டில் மூன்றில் ஒரு பங்கு நிலமானது, சற்றுமே சுதந்திரம் செலுத்துகிறதற்கு முடியாதபடி ஏற்படுத்தப்பட்டிருக்கிற [illegible] ஆட்சியின் கீழே இருக்கிற குடியானவர்களாலே பயிர் செய்யப்படுகிறமட்டும், நாம் நிச்சயமாகவே ஜனநாயக ஆட்சியிலிருந்து வெகுதூரத்திலிருக்கிறவர்களாவோம். குடியானவர்களுக்குத் தங்களுடைய





நிலைமை நன்றாய்த் தெரியும். பெரிய தீமைக்கிடமான சண்டை சச்சரவுகள் ஏற்படுகிறதற்கு முன்னதாகவே இது விஷயங்களைச் சீர்தூக்கிச் சரிப்படுத்தினால் அது அரசாங்கத்துக்கும் ஜமீன்தார்களுக்கும் மிகவும் கீர்த்திகரமாகவும் இருக்கும்.

---

## சர்வ ஆசியா கல்வி மகாநாடு.

சர்வ ஆசியா கல்வி மகாநாட்டை ஒரு ஒப்பற்ற சம்பவம் என்று நாம் கூறலாம். அந்தக் கூட்டம் காசியில் மத்திய ஹிந்து பள்ளிக்கூடத்தில் (*Central Hindu School*) நடைபெற்றது. மகா தத்வசாஸ்திர பண்டிதர் என எல்லா தேசத்தாராலும் புகழப்பட்டவரும் தென்னாட்டுத் தெலுங்கருமாகிய மகா பண்டிதர் எஸ். ராதாகிருஷ்ணனவர்கள், தென்னாட்டு வித்வானாக புகழ்பெற்ற பண்டிதர் சேஷாத்ரியின் ஆதரவின் கீழ் அக்கிராசனம் வகித்தார். மகா பண்டிதர் ராதாகிருஷ்ணனவர்கள் கீழ்தேசத்து மகாகலைகளையும் மேல்நாட்டு சாஸ்திரீய முடிவுகளையும் ஒற்றுமைப்படுத்துவதற்காக அவர் கூறிய வேண்டுகோளானது மிகவும் தகுந்த காலத்திலேயே வந்திருக்கிறது. அவர் கல்வி கற்பிக்கிற ஆசிரியர்களை நோக்கி அவர்கள் ஆசியாக்கண்டத்தையும் ஐரோப்பாக் கண்டத்தையும் ஒன்றுக்கொன்று எதிராக மூட்டித்தாக்கி சண்டை போட வைக்கப்போகிறார்களா அல்லது அவைகளைப் பரஸ்பரம் சிநேகபாவத்தில் நடத்தப்போகிறார்களா என்பதைக் குறித்து தீர்மானம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். உலக உபாத்தியாயர்கள் பெடரேஷனின் ஆதீனத்தில் முன்னே சொன்ன மகாநாடு கூடியது. கிழக்கையும் மேற்கையும் உறவுபடுத்துகிற அநேகப் பிரச்னைகள் முதலில் தீர்மானமாக வேண்டியிருக்கின்றன. அதோடு, யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட ஜீவியப் பிரசினைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். இது, கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கலாசாமர்த்தியங்களை ஒன்று சேர்ப்பதினால் தான் ஏற்படக்கூடும். இந்த முறை இப்பொழுதே தொடங்கப்படவேண்டுமென்றுகூற ஆசிரியர்கள் முற்படுவார்களா? இதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறோம். விவசாயப் பொருள்களின் விலை வீழ்ச்சிக்கும் கைத்தொழில் பொருள்களின் விலை வீழ்ச்சிக்கும் உள்ள வீதங்களின் இடையே ஏற்பட்டிருக்கிற ஒரு பெரிய அகழை நிறைத்துப்பாலமிட்டுச் சேர்ப்பதற்கு அதாவது அவ்வற்றின் விலை வீழ்ச்சிகளைச் சரிகட்டுவதற்கு என்ன உபாயம் செய்யலாம். மிகவும் திறமையோடு விவசாயப் பொருள்களை உற்பத்திசெய்தல், விவசாயப் பொருள்களின் விளைவைக் குறைத்துவிடுதல், விவசாய விளைவுகளின் விரயத்தை குறைத்துவிடுதல் என்ற இந்த முறைகளினால் அதை சரிக்கட்ட முடியுமா? இல்லை. இந்த முறைகள் ஒன்றினாலும் இந்த நிலைமையைத் தடுக்கமுடி



2

யாது. அல்லது ஏகாதிபத்தியத்திற்குரிய தனிப்பட்டையான விசேஷ உரிமைகளினாலும் சாதகங்களும் பிரிட்டிஷ் மகாராஜ்யத்தில் முன் சொன்ன காரியத்தை நிவர்த்திசெய்ய முடியுமா? முடியாது. ஏனென்றால் இங்கிலாந்து தேசம் அப்படிப்பட்ட தனிப்பட்டையான விசேஷ உரிமைகளும் சாதகங்களும் செய்து கொடுக்கமுடியாத நிலைமையில் இருக்கிறது. குடியேற்நாடுகளும் அதைவிரும்பாதவர்களாய் இருக்கிறார்கள். இந்தக் காரியத்தைத் தீர்ப்பதற்கு நம்முடைய மனதில்படும் உத்தம வழி என்னவென்றால் எளிய வாழ்க்கையே ஆகும். கைத்தொழில் என்னும் பேரினாலே இந்த உலகத்தில் உலவிவருகிற மிகவும் நிஷ்பிரயோசனமான சாமான்களையும் சரக்குகளையும் நம்முடைய வாழ்க்கையின் தேவையிலிருந்து அப்புறப்படுத்தி ஜீவித்தலும், நமக்கு உள்ளதைக் கொண்டு வாழ்க்கையை நடத்தவேண்டுமென்றதாகிய நிலைமைக்குநம்மை க்கொண்டு வருகிற விதமுமே அப்படிப்பட்ட நிலையைத் தவிர்க நமக்கு தவிசெய்யும். நவீன உலகத்தில் அப்படிபட்ட ஜிவிதத்தை எவ்வளவு தூரம் அமைத்துக் கொள்ளக்கூடுமோ அம்மட்டும் அமைத்து கொள்ளவேண்டும். அப்படிபட்ட ஜீவிதத்தை அடைய வேண்டுமென்ற ஆசை எல்லா தேசத்தாருக்கும் இப்பொழுது இருக்கிறது. ஒவ்வொரு தேசமும் தங்களுக்குள்ளதைக் கொண்டு காலத்தை நடத்தவேண்டுமென்று மிகவும் முயற்சி செய்து பார்க்கிறார்கள். ஆனால் இவ்வுலகத்தின் ராஜீக முறைகளும் உலகத்தின் செல்வ நிலைகளும் அந்த விஷயத்தில் குருட்டுத்தனமாயிருக்கிறது. ஏனென்றால் உள்ளதைக் கொண்டு நடத்த முயலுகிறதினாலே, இன்னும் உலகத்தை ஆண்டுகொண்டிருக்கிற கைத்தொழில் ராஜ்யங்களுடைய அமித போகங்கள் குறைந்து போகிறதாயிருக்குமே. எப்பொழுதும் அமித போக வாழ்க்கையே விரும்புகிறதாகிய மனிதர்களுடைய மனப்பான்மை உலகத்திலுள்ள உபாத்தியாயர்கள்தாம் மாற்றவேண்டும். இந்தக் காலத்தில் எங்கும் பரவிய இந்தக் கொள்கை அங்கீகரிக்கப்படுமானால், அது இந்த உலகத்தை சமாதானத்திலும் ஏற்ற முடிவிடத்திலும் கொண்டுபோய்ச் சேர்க்கும். அதை நாம் அங்கீகரித்துக்கொள்ளாவிட்டாலோ, விரோதமும் சண்டையும், சச்சரவும் எல்லாம் உண்டாகும். எனினும் முடிவிலே ஐயமிருக்கும்.

சர்வ ஆசிய கல்வி மகாநாடு தன்னுடைய அனேகப் பிரிவுகளிலே ஒன்றாகிய புஸ்தகசாலைப் பிரிவின்கீழே டிசம்பர்மாதத்தில் வெளியான தென்னிந்திய உபாத்தியாயர்என்னும் மாதாந்தரப்பத்திரிகையில் புஸ்தகசாலை சாஸ்திர சம்பந்தமாகவும், நம்முடைய நாட்டிலும் பொதுவாக இந்த உலகமெங்கும் காணப்படுகிற புஸ்தகசாலை இயக்கத்தைப்பற்றியும் மிகவும் முக்கியமான அனேக பெரிய விஷயங்களை ஒன்றாகச்சேர்த்து





வெளியிட்டு சிறந்த ஊழியம் செய்திருக்கிறது. சாமான்ய வேலைகளில் புஸ்தகசாலை சம்பந்தமான வேலையில் ஊக்கமெடுத்துக்கொள்பவர்களும் அதில் பற்றுடையவர்கள் எல்லோரும் டிசம்பர் மாதத்தில் வெளிவந்த அந்தப் பத்திரிகையைப் படித்தால் நலமாயிருக்கும்.

---

## இந்தியா வெட்டரினேரி கான்பிரன்ஸ்.

கால்நடைகளின் பராமரிப்பைப்பற்றிய எல்லா விஷயங்களுக்கும், இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் ஆலோசனை சொல்லுகிறவரும், இந்திய வெட்டரினெரி 'கான்பரன்ஸ் பிரஸிடெண்டுமான கர்னல் ஆலிவர் என்பவர் கால் நடைகளுக்கு ஏற்படும் வியாதிகளை சாஸ்திர முறைப்படி தடுப்பதையும், அப்படி செய்வதால் உண்டாகும் பொருளாதார நன்மையையும் மிகவும் அழுத்தமாகப்பேசியிருக்கிறார் அவர் தென் ஆப்ரிக்காவை உதாரணமாகக் காட்டுகிறார் தென் ஆப்ரிக்கா யுத்தத்திற்கு முன் அந்தேசம் பழக்கப்பட்ட கால் நடைகள் வசிக்கத் தகுதியற்றதாயிருந்தது. ஆனால் அந்தேசம் இப்பொழுது 'ரின்டர் பெஸ்ட்' 'சிறுக்கைச் காய்ச்சல்' முதலிய வியாதிகள் அறவே ஒழிக்கப்பட்டு, கால் நடைகள் வசிக்கத் தகுதியுள்ளதாயிருக்கிறது. சாஸ்திர முறைப்படி மேற்கூறிய வியாதிகளைத் தவிர்ப்பதன்பயன், இப்பொழுது லக்ஷக்கணக்கான பவுன்கள் ஒவ்வொரு வருஷத்திலும் மிச்சப்படுகின்றது.

கான்பரன்ஸைத் திறந்துவைத்த ராஜ கார்ய ப்ரஸக்த திவான் பஹதூர் N. N. கிருஷ்ணராவ், டெலிகேட்களுக்கு நல்வரவளித்த மேஜர் R. W. லிம்ஸன் ஆகிய இவர்களின் சொற்பொழிவுகளினால் மைசூர் ஒரு உன்னத ஸ்தானத்தையடைகிறது. மைசூரே தான் ஸீரம் வைக்ஸினேஷன் முறை என்னும் முறையை முதன்முதல், கையாளத் தொடங்கியது. முக்தேசர் என்னும் இடத்தில் உள்ள இம்பீரியல் ஆராய்ச்சி இன்ஸ்டிட்யூட்டுக்கு அடுத்தபடியாக மைசூரில்தான் ஸீரம் இன்ஸ்டிட்யூட் ஏற்படுத்தப்பட்டு ஆராய்ச்சியும் தொடங்கியிருக்கிறது, மைசூர் ராஜ்யத்திலுள்ள 70 தாலூக்காக்களில், 60 தாலூக்காக்கள் வெட்டரினெரி இன்ஸ்டிட்யூஷன்கள் உடையனவாக இருக்கின்றன: அந்த தாலூக்காக்களிலுள்ள பஞ்சாயத்துக்களும் இந்த கான்பரன்ஸை [illegible] சமானதாகச்செய்ய ஒத்துழைத்திருக்கின்றன. மாகாணங்கள் [illegible] 'ஸீரம்' 'ஆராய்ச்சி' முதலியவைகள் செய்ய இன்ஸ்டிட்யூட்கள் ஏற்படுத்தவேண்டுமென்று இந்தக் கான்பரன்ஸ் செய்த தீர்மானம் வெகு சீக்கிரத்தில் பலனடையுமென்று எதிர்பார்க்கிறோம்.

## அகில இந்திய ஆயுர்வேதிக் கான்பரன்ஸ் கண்காட்சி.

வெட்டரினெரி கான்பரன்ஸோடு, அகில இந்திய ஆயுர்வேதிக் கான்பரன்ஸையும், கண்காட்சியும் நடத்த மைசூர் உரிமைபெற்றது, மஹாமஹோபாத்யாய கவிராஜ கணநாத ஸென் என்பவர் தலைமை வகித்தார். ஆயுர்வேதம் என்பது இந்தியாவின், மகிமைவாய்ந்த குணமாக்கும் வித்தை என்று நிரூபித்தப்பின் அது உலகத்திற்கே பெரிய எடுத்துக்காட்ட ஒருகாலத்தில் இருந்தது என்றும் ஆனால் இப்பொழுது அதன் மிகுந்த பாகங்கள்—முதற்படியான பாகங்கள்கூட—திரும்பக்கிடைக்க முடியாதபடி அழிந்துவிட்டதென்றும் கூறினார். கணநாத ஸென் என்பவர் சில வேளைகளில் ஆயுர்வேத பண்டிதர்களுக்கு வருத்தந்தரத்தக்க அத்தனை உண்மையோடு விஷயங்களை எடுத்துரைத்தார். தானே யோஜிக்காதபடி, பழைமையைக் காப்பாற்றுவதை அவர் குறைகூறினார். "பாரத்வாஜர்" என்னும் முற்கால ஞானி இந்திரனிடம் கற்கச் சென்றதை அவர் பண்டிதர்களுக்கு நினைவூட்டினார்: ஞானிகள்கூட முற்றுந்தெரிந்தவர்களாக இருக்கமுடியாது. சரகர், சுச்ருதர், இவர்களின் காலங்களுக்குப் பின் அநேக வியாதிகள் மாறுபாடுகள் பெற்றிருக்கின்றன: அநேக புதிய வியாதிகள் தோன்றியிருக்கின்றன. 'வியாதிகளைத் தீர்க்கவை சக்திவாய்ந்தவையாக இருக்கின்றனவோ அவையே சரியான ஔஷதங்களாம்' என்று சரகர் கூறியபடி, தற்கால ஆயுர்வேத வைத்தியர்கள், வியாதிகளைத் தீர்க்கும் ஔஷதங்கள் எந்தெந்த இடங்களில், தேசங்களில் கிடைத்தாலுஞ்சரி, அவைகளைத் துணிந்து கையாள முற்படவேண்டுமென்று கூறினார். பாவமிச்ரர் முதலியவர்கள், அநேக யூனானி மருந்துகளை நம ஆயுர்வேத வைத்திய அகராதியில் சேர்த்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டினார். சமபரம நகரத்திலுள்ள, ஆசிரியா சந்த்ரசேகர தாராமத்ரர் என்பவர், சாதாரண 'உடுமபர' (*fig*) (அத்தி) என்பதன அதிசயப்படத்தக்க விதமாகக் குணப்படுத்துமு தன்மையைக் கண்டு பிடித்ததைப்பற்றிக் கூறினார். இவ்விதம், கணநாத ஸென், ஆயுர்வேத பண்டிதர்கள் தங்களுக்குள்ள அறிவோடு, தற்கால பண்டிதர்கள் கண்டுபிடிக்கும் விஷயங்களையும் நன்றாய் அறிந்து தங்கள் அறிவை விருத்தி செய்யவேண்டுமென்றார். ஒருவரை யொருவர் குறைகூறுவதையும், மற்ற வைத்திய முறைகளைப் பழிப்பதையும் நிறுத்த வேண்டுமென்றும் கூறினார். கணநாத ஸென, டாக்டர்களின் வழக்கப்படி தம வருமபடியை மட்டுமே கவனிக்காமல, அதை யிழந்தேனும் நோயாளிகளைக் குணஞ்செய்ய வேண்டுமென்று சொலலும ரிஷிகளைப் போன்ற நோக்கமுடையவர். முடிவாக அவர் ஆயுர்வேத சாஸ்திரத்தை, அதன பழைய பெருமைக்காக மட்டுமன்றி, அதன மகிமைவாய்ந்த எதிர்காலத்திற்காக போற்றினார்.





கண்காட்சித் திறப்பு விழாவில் தலைமை வகித்த டாக்டர் P. சுப்பராவ் என்பவர் தாம் செய்த ஆராய்ச்சியின் பலன்களை விவரமாக எடுத்துரைத்தார். வேதங்கள் முதன் முதலாக வைத்தியம் மருந்துவம் இவற்றைப் போதிக்கும் சாஸ்திரங்கள் என்றும், ரிக்வேதம் வைத்தியத்தையும் யஜுர்வேதம் அதர்வவேதம் முதலியவை மருத்துவத்தையும் விரிவாக விளக்குகின்றன என்றும் அபிப்பிராயப்படுகிறார். இந்த மூன்று வேதங்களுமே ஆயுர்வேதத்தின் முக்கியமான அடிப்படையாகும். ஆயுர்வேத சாஸ்திரங்களான, ஆரியத், விருத்த ஐக்ரேய, என்று அழைக்கப்படுபவைகளும், சரக சஸ்த்தம, வாக்பட முதலிய நூல்கள் பிற்பட்ட சார்பு நூல்களே என்றும், அவை பொதுவாக அநேக விஷயங்களில் வேதங்களோடு ஒத்துச்சென்றாலும், காலத்துக்கேற்றபடி சிற்சில முக்கியமான மாறுபாடுகளுடைய கொள்கைகளைக் கைக்கொண்டிருக்கின்றன என்றும், கூறினார். கிருமி சாஸ்திரமும், உயிருடன் இருக்கும் ஜந்துக்களை அறுப்பதும் வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன என்றும் நாடி நிர்ணய சித்தாந்தம் என்பது வேதத்தோடு சமகாலத்தது என்றும் கொள்ளுகிறார்.

இரண்டு தலைவர்களும் தங்கள் திறமையைக் காட்டியிருக்கிறார்கள். கிராமவாசிகளுக்குத் தற்காலம் கிடைப்பதைக் காட்டிலும் அதிகப் பயன் தரும் வைத்திய முறையைக் கண்டுபிடிப்பது, ஆயுர்வேத பண்டிதர்கள், ஸ்தல சுயஆட்சிகள், கவர்ன்மெண்ட் ஆகியவர்களின் வேலையாகும்.

கிராமந்தர வைத்தியர்களின் கான்பரன்ஸில் தலைமை வகித்த டாக்டர் M.S கிருஷ்ணமூர்த்தி ஐயர் கூறுகிறபடி, இந்த மாகாணத்தில், எல்லா ஆஸ்பத்திரிகளிலும சேர்ந்து மொத்தம் 9390 படுக்கைகள் (அதாவது 9390 பிணியாளர்க்கு வசதி) இருக்கின்றன, என்றும், அப்படியும் அது 5000 பேர்களுக்கு ஒரு படுக்கை வீதமே ஆகிறது என்றும் ஆனால் அமெரிக்காவில், 270 பேர்களுக்கு ஒரு படுக்கை வீதம் இருக்கிறது என்றும் கூறுகிறார். ஆயுர்வேத வைத்தியாலயங்களிலும் படுக்கைகள் ஏற்படுத்தக்கூடாதா? அப்படி ஏற்படுவதால் கிராமவாசிகளுக்கு அதிகச் செலவில்லாமல் வைத்திய உதவி கிடைக்கும்படி செய்யக்கூடாதா என்று நாம கேட்கிறோம்.

---

## கிராமாந்தர வைத்தியத் தொழிலாளர்களின் கான்பரன்ஸ்.

கிராமாந்தர வைத்தியத் தொழிலாளர்களின் குறைபாடுகள், இந்தக் கான்பரன்ஸில மிகவும் பரிதபிக்கப்படும் வகையில் வெளியாயின. டாக்டர் எஸ். ராமசுப்பா என்பவர் கிராம வைத்தியத் தொழிலாளர்களை தாலூக் போர்ட் பிரஸிடெண்டுகள் மிகவும் அகௌரவமான வகையில் நடத்திவருகிறார்கள் என்பதற்கு அநேக உதாரணங்கள் காட்டினார். இன்னும் வைத்

தியத் தொழிலாளர்களை இடமாற்றுதல் நடந்துகொண்டிருக்கின்றது என்று குறைகூறினார். அவர் தாலூக்கா போர்டுகளின் தொந்தரவின் கீழ் வேலை செய்வதற்குப் பதில், கிராண்டு பெற்றுக்கொண்டு வைத்தியத் தொழில் செய்வதை ஏற்படுத்தவேண்டுமென்று பிரேரேபிக்கிறார்.

கிராமத்தார் வைத்திய சாலைகள் தொடங்கப்பட்டது நல்ல முகூர்த்தத்திலாகும்: பிறகு அந்த வைத்தியசாலைகள் ஆயுர்வேத ஔஷதாலைகளாக இருகிளையாக ஏற்பட்டது மிகவும் சந்தோஷந்தருவதாகும். இந்த முறையில் ஏற்பட்டிருக்கிற எல்லா ஊழல்களும் தீர விசாரிக்கப்படவேண்டும். கிராம வைத்தியன் கிராமவாசியின்மேல் குதிரை யேறாதபடி பார்த்துக்கொள்வதோடு, அவன் வைத்தியன், அவன் தொழிலில் ஒருவர் தயவையும் எதிர்பாராமல் நிலைத்திருக்கும்படி செய்யவேண்டியது மிகவும் அவசியமானதாகும். கிராம வைத்தியனை அதிகமாக ஏற்பட்டு, அவன் தன் தொழில் மிகவும் ஊக்கத்தோடு வேலைசெய்ய முற்படுவானானால், கிராம புனருத்தாரண வேலையைச் சரிவரச் செய்வதற்குத் தகுதியான மனிதன் ஒருவன் அதிகமாகக் கிடைக்கிறான். முற்காலங்களில், புரோகிதனே வைத்தியனாகவுமிருந்தான்: அதனாலேயே அவன் மிருந்த செல்வாக்கும் சக்தியும் வாய்ந்தவனாயிருந்தான் என்பது இவ்விடத்தில் ஞாபகப்படுத்தப்பட வேண்டிய விஷயம்.

---

## பஞ்சாயத்துகளின் ஆட்சி

1929-30 முடிய கிராமப் பஞ்சாயத்து ஆட்சி ரிப்போர்ட் அனேக விஷயங்களை நமக்கு கற்பிப்பதாயும் அனேக செய்திகளை நமக்கு அறிவிப்பதாயும் இருக்கிறது. மிகவும் ஒளிவும் மறைவுமில்லாமல் ஏற்ற விதத்திலே ஏறக்குறைய சரியாக எல்லாம் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கத்தில் பஞ்சாயத்தாருக்கும் ஜில்லா, தாலூக்கா போர்டுகளுக்கும் எச்சரிக்கை செய்கிறதினாலும் மறுபக்கத்தில் சர்க்காரை எச்சரிக்கை செய்கிறதினாலும் இந்த நிலையில் அது மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கிறது. இப்பொழுது பஞ்சாயத்துக்கள் இப்புது லோக்கல் போர்டு ஆக்டின்கீழ் செய்யவேண்டிய நடவடிக்கை சித்தி பெறவேணுமானால் இந்த ரிப்போர்டில் கண்டுவரும் குறிப்புகளையும் விஷயங்களையும் பஞ்சாயத்துகளுக்கு சம்பந்தப்பட்ட எல்லோரும் ஜாக்கிரதையாக அறிய வேண்டியதாயிருக்கிறது.

நாம் முதல் முதலில் கவனிக்கவேண்டிய விஷயம் எதுவெனில் ரெவினியூ இலாக்காவின் கீழிலுள்ள சிற்சில வரிகளை கிராமப் பஞ்சாயத்தாருக்கு ஒப்படைத்து கொடுக்கிறதும் பஞ்சாயத்து வேலை அபிவிருத்தியாகிறதற்குத் தேவையான சாதனங்களை செய்து கொடுக்கிறதும் மிகவும்





நிலையம் என்பதை அறிந்துகொள்வதில் சர்க்கார் பின்தங்கி இருந்தார்கள் என்ற விஷயமே ஆம். பஞ்சாயத்துக்களின் ரிஜிஸ்டிரார் ஜெனரல் அவர்கள், இதே விஷயத்தை ஓரிடத்திலல்ல, அனேக இடங்களில் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார். அவர் சொல்லுகிறதைக் கவனியுங்கள். பஞ்சாயத்தார்கள் தாமாகவே ஏற்படுத்துகிற பவுண்டுகளையாவது தங்கள் மேற்பார்வையில் நடத்திக்கொள்ள இடங்கொடுக்கவேண்டுமென்று அவர் அறிவிக்கிறார். அரசாங்கத்தார் ஆக்டில் இந்த அலுவலைப் பஞ்சாயத்தார்களுக்கு ஒப்படைக்கலாமென்று இருந்தும்கூட, இது பஞ்சாயத்தாருக்கு ஒப்படைக்கக் கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இப்படி ரிஜிஸ்டிரார் ஜெனரல் குறை கூறுவது இதுவே முதல்முறை அல்ல. இதற்கு முன்னும் எத்தனையோ முறை அவர்கள் இப்படி குறை கூறியிருக்கிறார்கள். பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜெனரல் அவர்களிடம் இருந்து வருகிற இதுபோன்ற விண்ணப்பங்களை மறுக்கிறதற்கு சர்க்கார் கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் இலாகாக்கள் இப்பொழுது சற்றேனும் அவருடைய வேண்டுகோளுக்கும் மரியாதை செய்வதில்லை. உதாரணமாக புஸ்தகசாலைகளுக்குள்ள கிராண்டுகளை எடுத்துக்கொள்வோம். பஞ்சாயத்தார்கள் இது விஷயமாக செய்து கொண்ட விலமனுக்கள் கலெக்டர்களாலே கவனியாமல் புறக்கணித்துத் தள்ளப்பட்டன என்ற விவரம் தம்முடைய அறிவில் எட்டி இருப்பதாக ரிஜிஸ்டிரார் ஜெனரல் அவர்கள் கூறுகிறார். ரெவினியூ அதிகாரிகள் பஞ்சாயத்துகள் விஷயமாக எடுத்துக்கொண்ட சிரத்தையைக் குறித்து ரிஜிஸ்டிரார் ஜெனரல் சொன்னதை மறுபடியும் கவனியுங்கள். சிற்சில இடங்களில் இந்த ரெவினியூ அதிகாரிகளுடைய ஆடிட் ரிப்போர்ட்களின் பேரிலே சில பஞ்சாயத்துகளை எடுத்துவிடும்படியாகத் தாம் கேட்டுக் கொடுத்தாராம். பின்பு விசாரணை செய்தபொழுது இந்த ரெவினியூ அதிகாரிகள் கணக்குகளை மாத்திரம் விசாரித்து பஞ்சாயத்துக்கள் செய்யும் வேலைகளை சற்றும் கவனியாமல் அவைகளுக்கு விரோதமான ரிப்போர்ட்டுகள்செய்து தகுந்த நியாயம் நடத்தவில்லை என்று வெளிவந்ததாம். புறம்போக்குகள், கிராமக்காடுகள், நீர்ப்பாய்ச்சல், என்றவைபோன்றதாகிய காரியங்களில் நடத்துகிறதற்கு உள்ள அதிகாரங்களைப் பஞ்சாயத்தார்களுக்கு கொடுக்காமல் இருக்கிறதைக் குறித்து ரிஜிஸ்திரார் ஜெனரல் அவர்கள் ஒன்றும்சொல்லாமல் மௌனமாயிருப்பதற்குக்காரணம் அந்த விஷயங்களைக் குறித்து சொல்லுகிறதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்ற மனச்சோர்விலேதான். இப்பொழுதுப் பஞ்சாயத்துகள் லோக்கல் போர்ட் ஆக்டின் ஆட்சியின் கீழ் மாற்றப்பட்டதினாலே இதர இலாக்காக்களில் இருக்கின்ற கவர்ன்மெண்டார் முன்னிலும் அதிகமான உபேட்சையோடேயிருக்கக்கூடாது. அரசாங்கத்தார் முழுமனதோடு பரிட்சை பண்ணித் தேவையாகக் காணுகிறதும், சற்றுபக்கத்து நிலைமை

களிலேத் தேவையாயிருக்கிற அநேக சௌகரியங்களையெல்லாம் கொடுக்கிறதற்கு இசைந்தாலல்லாமல் கிராமப் பஞ்சாயத்து கவர்ன்மெண்டு ஒரு பொழுதும் சாத்தியமாகாது. கிராமந்தரத்திற்குள்ளே கொண்டுபோகப் படுகிற எத்தகைய விசேஷ அமைப்பிரிவுகளும் முற்றிலும் நிச்சயமாய் பயனற்றதாயிருக்கும். இக்கற்றக் கிராமத்தான் திறமையற்றவனென்று கூறுகிறதிற்கு அது ஏற்றதோர் கோலாக இருந்தாலும்கூடக் கிராமத்தாருடையத் திறமையை அபிவிருத்தி செய்கிற முதல் நோக்கம் முற்றிலும் அழிப்பதாக யிருக்கும். பஞ்சாயத்துகளின் மந்திரி அவர்கள் இந்த விஷயங்களையெல்லாம் கவனித்து காபினட்டில் அதிக பொறுப்புடையவர்கள்மேல் தம்முடைய வல்லமையை சிறிது செலுத்துவார் என்று நம்புகிறோம்.

பஞ்சாயத்து ரிஜிஸ்டிராரவர்கள் இந்த ரிப்போர்ட்டில், பஞ்சாயத்தியக்கம் எவ்வளவு கொடுமைகள் கஷ்டங்களுக்கு உள்பட்டாலும் ஜயமடைந்து இருக்கிறதாகத் தெளிவாக நிரூபிக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. நாமக்கல் பஞ்சாயத்து யூனியனும், அதற்கு சேர்ந்த பஞ்சாயத்துகளும் நடத்தின உயர்ந்த நடவடிக்கை மிகுந்த கர்வத்தோடு அவர் எழுதுகிறார். வருடத்திற்கு 300 ரூபாயாகிய குறைந்த சிப்பந்தி செலவினால் 13,700 ரூபாய் வரவுச் செலவை மிகவும் ஒழுங்காக கோடிப்பள்ளி பஞ்சாயத்து நடத்தினதையும் எடுத்துக் காட்டுகிறார். இதெல்லாம் உண்மைதான்; ஆனால் அவர் தம்முடைய ஆட்சி ரிப்போர்டிலே, மற்ற விஷயங்களில் ஒளிவு மறைவு இல்லாததைப் பார்க்கிலும் அதிகமாக ஒளிவு மறைவு இன்றித் தம்முடைய பஞ்சாயத்துகளின் குறைவுகளை வெகு தெளிவாக எடுத்து காட்டுகிறார். ஏறக்குறைய 700 பஞ்சாயத்துக் கமிட்டிகள் வெறும் கிராமப்பள்ளிக்கூடக் கமிட்டிகளாகவே இருக்கின்றனவே தவிர வேறொன்றுமல்ல என்றும் வேறு பல பஞ்சாயத்துக் கமிட்டிகள் இருந்தபோதும் சரியானபடி வேலை செய்வதில்லை என்றும் 231 பஞ்சாயத்துக்கள் கிராமத்தார்கள் அவர்களோடு ஒத்துழைக்க மறுத்துவிட்டதினாலே ரத்து செய்யப்பட்டன என்றும் கூறுகிறார். பஞ்சாயத்து பிரிசிடெண்டுகள் கஜானாவிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட பிறகும் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுக்கத் தாமதித்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அநேக பஞ்சாயத்துக்கள் தங்கள் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொடுக்கத் தவறினார்கள் என்றும் அதற்குத் தேவையான கிராண்ட்டுகள் பெற்றுக்கொள்ளத் தவறினார்கள் என்றும் அதனாலேதான் 10,000 ரூபாயைத்தான் மறுபடியும் கஜானாவில் கட்டிவிடவேண்டியதாயிருந்ததென்றும் கூறுகிறார். சில இடங்களிலே கல்வியை ஜனங்களுக்கு பாலாடையில் வைத்து புகட்டவேண்டியதாயிருந்ததென்றும் கூறுகிறார்.





சரியானபடியிலே பள்ளிக்கூடத்தை நடத்தாதினால் 44 பள்ளிக்கூடங்களுக்குள்ள கிராண்டுகள் தள்ளிவிடப்பட்டன. பள்ளிக்கூடங்கள் தேவையாயிருந்த பல இடங்களில் ஏற்ற முறையிலே பஞ்சாயத்துக்களை அமைப்பது மிகவும் கஷ்டமாயிருந்தது என்று குறிப்பிடுகிறார். நாமக்கல், அலமூரு, குண்டூர் என்னும் பஞ்சாயத்து யூனியன்களைத் தவிர இதர பஞ்சாயத்து யூனியன்கள் வெறும் பெயராகவே நின்றுவிட்டன. சாத்தூர் தாலூக்கா பஞ்சாயத் யூனியன் அதின் அங்கத்தினருக்கிருந்த மன வேற்றுமையினாலே வேலை செய்யத் தவறிப்போய்விட்டன. அநேக பஞ்சாயத்துக்கள் வேலை செய்கிற ஜில்லாக்களில் அவைகளுக்குப் புத்திமதி சொல்லுவதற்கும் அவைகளை நடத்துவதற்கும் சம்பளம் கொடுத்து அதிகாரிகளை ஏற்படுத்தியிருப்பது மிகவும் விரும்பத்தக்கதேயாம்.

இந்த விஷயங்கள் எல்லாம் அதிகாரி அல்லாதவர்களுக்குப் பஞ்சாயத்துகாரிடத்தில் இருக்கும் சிரத்தையையும் ஊக்கத்தையும் பற்றின சேர்துக்கும் உரைகளேயாம். இவையாவும் பஞ்சாயத்து அதிகாரி ஒருவரிடத்திலிருந்து வருவதினாலே இவருடைய வார்த்தைகளில் நாம் கழித்தல் கணக்கை கையாடவேண்டுமென்று நினைக்கக்கூடாது. கிழக்கு கோதாவரி ஜில்லா போர்ட் பிரசிடெண்டாகிய ஸ்ரீமான் பி. பெத்திராசகாரு நாதிப்பள்ளிக்கூடம் தாலூக்காப் பஞ்சாயத்து கான்பரென்ஸில் பேசினபோது அவர் அதிகாரிகளல்லாதத் தலைவர்களுக்குப் பஞ்சாயத்தில் சிரத்தை குறைவாகயிருக்கிறதென்று கூறுகிறார். கண்ணியமிக்க சிலரைத் தவிர தாலூக்கா போர்டு பிரசிடெண்டுகளும், ஜில்லா போர்டு பிரசிடெண்டுகளும், இவ்விஷயத்தில் எவ்விதமான சிரத்தையும் எடுத்துக் கொள்ளவில்லை. இப்பொழுது எங்கும் அதிகப் பேச்சாயிருக்கிற கிராம புனருத்தாரணத்தை கவனிக்கும் பொழுது அதிகாரிகளல்லாதத் தலைவர்கள் முன்னுக்கு வந்து பஞ்சாயத்து கவர்ன்மெண்டை நிஜமான நிலைக்குக் கொண்டுவரவேண்டும். இப்பொழுது ஜில்லா பஞ்சாயத்து அதிகாரிகளை உத்தியோகத்தில் ஏற்படுத்தக் கூடுமானதால், நாம் முன்னே ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னபடி, பொது ஜனங்களுக்குள் செல்வாக்குடைய பிரமுகரான தலைவர்களை பஞ்சாயத்து வேலையை ஏற்றதான முறையில் அங்கீகரித்துக் கொள்ள தூண்டமுடியுமானால், தற்போது பஞ்சாயத்தில் அதிகாரிகளல்லாதவர்களிடையில் காணப்படுகிற குறைவுகளை முற்றிலும் இல்லாமல் செய்துவிடக்கூடாமல் போனாலும், பெரிதும் குறைத்துவிடமுடியும். கிராம ஜனங்களிடையில் வேண்டிய ஊக்கத்தை அவர்கள் உண்டாக்குவதும் தவிர, அடிக்கடி பல்விதமான துறைகளிலே மிகவும் நன்றாகவும், அதிக முன்னேற்றமாகவும், பஞ்சாயத்து வேலைகளை செய்வதற்கான ப்ரோக்ராமை ஆயத்தம் செய்வதற்கு எந்த எந்தத் துறைகளிலே எந்த எந்த முறைகளை கையாட-

வேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு அடிக்கடி சொல்லுவதற்கும் சாத்தியமாகும்.

இதரசமாசாரங்கள் நடக்கலாம் அல்லது நடக்காமலிருக்கலாம். என்னவானாலும் வருங்காலத்தில் பஞ்சாயத்து பலன் பெறுவதற்கும் அல்லாததற்கும் ஜில்லா தாலூக் போர்டுகளின் தலைவர்களே, ஜவாப்தாரியாயிருப்பார்கள். நமது பார்வைக்கு வந்த பஞ்சாயத்தாட்சி ரிப்போர்டில் லோக்கல் போர்ட் எஞ்சினீயரிங் அதிகாரிகள் மிகவும் கண்டிக்கத்தக்கதான (பயங்கரமான) அஜாக்கிரதையோடு இருக்கிறார்கள் என்று காணப்படுகின்றது. அனேக ஜில்லாக்களில் எஞ்சனீயரிங் உத்தியோகஸ்தர்கள் செக்மெஷர்மெண்ட் செய்வதில் தாமதம் காட்டினபடியால், அனேகம் பஞ்சாயத்துகள் ஜல சப்ளியில் முழுத்தொகையையும் வாங்குவதற்கு முடியாமல் போய்விட்டார்களென்று நாம் அறிகிறோம். சரியான சமயத்திற்குள்ளாக செக்மெஷர்மெண்ட் செய்யாததினால் 38 வேலைகளுக்குள்ள 1794 ரூ. மறுக்கப்பட்டது. இப்புதுச் சட்டத்தின்படி, செக்மெஷர்மெண்டு செய்வதோ அல்லது பள்ளிக்கூடங்களை ஒப்புவிப்பதோ அல்லது, பட்டினி கிடைப்பவனுக்கு பிச்சைபோடுவதுபோல் கொஞ்சம் பணத்தை பஞ்சாயத்துகளுக்கு கொடுப்பதோ அல்ல, தாலூக்கா ஜில்லா போர்டினுடைய கடமைகள். அவர்களுக்குப் பிரியமிருக்குமானால், அவைகள் கிராமங்களுக்கு சுயாட்சி கிடைக்கும் பொருட்டுள்ள எல்லா வேலைகளையும் கைக்கொள்ளலாம். ரிஜிஸ்டிரார் ஜனரல் அவருடைய ரிப்போர்ட்டில் மேற்கோதாவரி, குண்டூர் செங்கல்பட்டு, ராமநாடாகிய 4 ஜில்லா போர்டுகளும், செய்யார், நன்னிலம், புத்தூர் (தெற்குகர்னூடகம்) கரூர், தாடேபள்ளிகூடம், பீமாவரம், கார்வேட்டிநகரம். காவலி, தெனாலி ஆகிய 9 தாலூக்கா போர்டுகளும் மாத்திரமே பஞ்சாயத்துகளில் மிக்க சிரத்தை செலுத்தினதாக சொல்லியிருக்கிறார். இவ்வளவு சொற்பமான ஜில்லா தாலூக்கா போர்டுகளே பஞ்சாயத்து முன்னேற்றத்திற்கு அவாவாயிருக்கின்றன என்று நினைக்கும்போது நமக்குக் கொஞ்சம் துயரம் உண்டாகிறது. இதர ஜில்லா தாலூக்கா போர்டுகள் இன்று முதல் பஞ்சாயத்தின் அபிவிருத்தியே தங்களுடைய முதற்கடமை என்ற எண்ணத்தோடும், தாம் பஞ்சாயத்துகளின் ரக்ஷகன் என்ற நிலையை விட்டுவிட்டு அவைகளுக்கு ஊழியன் என்ற நோக்கத்தைக் கைக்கொண்டு, பஞ்சாயத்துகள் இல்லாத இடங்களில் அவைகளை ஸ்தாபிப்பதற்கும் அவைகளைச் சரிவர நடத்துவதற்கும் தங்களால் இயன்றமட்டும் சகாயம் செய்வதற்காக முன்வருவார்களென்று நாம் அவர்களை கேட்டுக்கொள்வது மிகையாகாது என்று நம்புகிறோம்.

ரிஜிஸ்திரார் ஜனரலுடைய ரிப்போர்ட்டில் பஞ்சாயத்துகளின் நல்ல லட்சணங்கள் அனேகம் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர் இன்னும் பல நல்ல அபிப்பிராயங்களை அதில் கூறியிருக்கிறார். இவைகளைப்பற்றி நாம் மனப்பூர்வமாக ஒன்றும் சொல்லவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால் நமது சஞ்சிகையில் மற்றொரிடத்தில் பிரசுரித்திருக்கிற அந்த மிகவும் நல்லதாகிய ரிப்போர்டை நமது சந்தாதார்கள் வாசித்துத் தாங்களாகவே அவைகளை தெரிந்துகொள்ளலாம் என்பதேயாம்.

---



# சென்னை மாகாணக் கிராமப் பஞ்சாயத்துக்களின் ஆட்சி ரிபோர்ட்டு.

## வேலைகளின் முன்னேற்றம்.

கவர்ன்மெண்டார் 1929-30 வருஷத்திய பஞ்சாயத்துக்களின் ஆட்சி ரிப்போர்ட்டை இப்போது பிரசுரித்திருக்கிறார்கள். அந்த ரிபோர்டின் முக்கிய பாகங்களைக் கீழே பிரசுரிக்கிறோம்.

கௌரவ ஆர்கனைசர்களின் தொகை 172-ல் இருந்து 196-க்கு அதிகரித்திருக்கிறது. அவர்களில் பெரும்பான்மையோர் ஊக்கத்தோடு நல்ல வேலை செய்தார்கள் என்பதை நான் இன்று சந்தோஷத்தோடு கூறுகிறேன். அவர்களில் 13 பேர்கள் தங்கள் வேலையை ராஜீனாமா கொடுத்துவிட்டார்கள். 24 பேர்கள் தங்களுடைய வேலையில் போதுமான சிரத்தை காட்டாததால், அவர்கள் வேலைக்காலம் முடிவடைந்தபோது, இவ்வருடம் திரும்ப நியமிக்கப்படவில்லை. இவர்களுக்குச் சுற்றுப்பிரயாணத்திற்கிருந்த ரூ. 5000-ம் செலவு செய்யப்பட்டது. சிலருக்கு இவ்விஷயமாகக் கொடுக்கவேண்டிய பணம் நடக்கும் வருஷத்தில் கொடுப்பதாக நிறுத்திவைக்கப்பட்டது. செங்கல்பட்டு ஜில்லா போர்டும், மேல் கோதாவரி ஜில்லா போர்டும், புத்தூர் தாலூக்கா போர்டும், வழக்கம்போல இவ்வருஷமும் கிராம புனருத்தாரண சூபர்வைசர்களைச் சம்பளத்திற்கு வேலைசெய்ய அமர்த்தியிருக்கின்றன.

இவ்வருஷம் நெல்லூர் ஜில்லாபோர்டும் அதேமாதிரியான 2 உத்தியோகஸ்தர்களை நியமித்தது. பெல்லாரி ஜில்லா போர்டும் இவ்வித அதிகாரி ஒருவரை நியமிப்பதாக சம்மதித்திருந்தும், இவ்வருஷத்தின் கடைசிவரையில் அவரை நியமிக்கவில்லை. நன்னிலம் தாலூக்கா போர்ட் ஒரு பஞ்சாயத்து மேல்பார்வை ஸ்தாபனத்தை இவ்வருஷத்திலும் வைத்துக்கொண்டிருந்தது. கவர்ன்மெண்டாரின் சம்மதத்தின்மேல், 1929-ஆம் மே மாதத்தில் செய்யார் தாலூக்கா போர்ட் 4 கல்வி சூப்பர்வைஸர்களை நியமிப்பதற்கு சாங்க்ஷன் கொடுத்தது. இவர்களில் 2 பேருக்கு பொது நிதியிலிருந்தும் மற்று 2 பேருக்குக் கல்வி இலாகா நிதியிலிருந்தும் சம்பளம் கொடுக்கவேண்டியது. இவர்களின் வேலை தாலூக்காவிலும் பஞ்சாயத்துகளிலும் உள்ள பள்ளிக்கூடங்களை கவனிப்பதாகும். ஒவ்வொரு சூப்பர்வைஸர்களுக்கும் கீழ் சராசரியாக 50 பஞ்சாயத்துகளுடையவும் போர்டுகளுடையவும் பள்ளிக்கூடங்கள் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டன. மேலும் அவர்கள், தங்களுடைய அதிகார எல்லைக்குட்பட்ட பஞ்சாயத்துகளுக்கு அநேகவிதங்களில் உதவிசெய்தார்கள். உதாரணமாக, தேவையான ஆசிரியர்களை தேடி நியமித்தல், கவர்ன்மெண்ட் ஆதரவு பெறுதல், பள்ளிக்கூடங்களுக்கு இடம் வாங்கிக்கொடுப்பது, வரிவிதிக்கும் ஆலோசனையைக் கொண்டுவருதல், வரி அல்லாத வேறு வருமான ஊற்றுகளை தேடிப்பிடித்தல், கிராம உத்தாரணத்திற்கு உதவுகின்ற முறைகளை குறிப்பது, கிராமவாசிகளுக்குத் தேச பரிபாலன முறைகளை போதித்தல் இவை போன்ற வேலைகள் பலசெய்து, அவர்கள் பஞ்சாயத்துகளுக்கு மிகவும் உதவிபுரிர்

தார்கள். இன்னும், பள்ளிக்கூடங்களை உயர்த்த போதுமான சக்தியுள்ளவையாகக் கொண்டுவருவது, பயிற்சி முறைகளையும் அவற்றிற்கு வேண்டிய பொருள்களையும் சீர்திருத்தம் செய்வது, உபாத்தியாயர்களுக்கு தக்க சமயங்களில் சம்பளம் கொடுப்பதை ஏற்படுத்துகிறது போன்ற வேலைகளிலும் அவர்கள் மிகவும் உதவிபுரிந்தார்கள். இதைப்போல் எந்த தாலூக்கா போர்டுகளில் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்கள் ஏராளமாக இருக்கின்றதோ அந்த தாலூக்கா போர்டுகளிலெல்லாம் இவ்விதமான ஒரு ஏற்பாட்டை ஏற்படுத்தி மிகவும் நன்மைபெறலாம். கீழே சொல்லப்போகிற தாலூக்கா போர்டுகள் பஞ்சாயத்துகளில் அதிகம் சிரத்தை எடுத்துக்கொண்டு அவைகளை மிகவும் முன்னேற்றமடைய உதவிசெய்தது. அவை, செய்யார், வள்ளிலம், புத்தூர் (தெற்கு கர்நாடகம்), கரூர், சாடேயபள்ளிக்கூடம், பீமாவரம், கார்வெத்நகர், காவலி, தெனாலி இவைகளே ஆம். பஞ்சாயத்துகளுக்கு உதவிபுரிவதற்கு ஆயத்தமாயிருப்பதிலும், அவைகள் தம்மை வளர்த்துவருவதற்கு சகாயம் செய்வதிலும், கவனம் காட்டியிருந்த ஜில்லா போர்டுகள், மேற்கு கோதாவரி, குண்டூர், செங்கல்பட்டு, ராமநாட் இவைகளே. பெல்லாரிஜில்லாபோர்டும், திரிச்சிராப்பள்ளி ஜில்லா போர்டும் கிராமபுனருத்தாரண கமிட்டிகளையும் மேல்பார்வையிடும் அதிகாரிகளையும் நியமிப்பதற்கு வேண்டிய தீர்மானங்களை ஆலோசனைக்கு கொண்டுவந்தன.

பஞ்சாயத்துகளின் எண்ணிக்கையும் அவைகள் இருக்கும் இடங்களும்.

இந்த வருஷத்தில் முதன் முதலாக 8282 பஞ்சாயத்துகள் இருந்தன. வருஷக்கடைசியில் அவைகளின் எண்ணம் 8756 ஆகப்பெருகிறது. சரிவர நடைபெறுதினாலோ, அல்லது தேர்தெடுப்பு சமயத்தில் கிராமத்தார்கள் மறுத்துவிட்டதினாலோ, 281 பஞ்சாயத்துகள் ரத்து செய்யப்பட்டன. 28 பஞ்சாயத்துகள் வேறு அதிகார எல்லைகளோடு இரும்பவும் ஏற்படுத்தப்பட்டன. வேறு சில அவைகளை நீக்காமல் இருப்பதற்கு போதுமான காரணங்கள் காண்பிப்பதற்காக நோட்டீசு கொடுத்தபொழுது, தூக்கத்திலிருந்து எழுந்து, பின் உழைப்பதாக இருப்பதாகச் சொல்லி நோட்டீசுகளை வாபீஸ் செய்யக் கேட்டுக்கொண்டன. சில பஞ்சாயத்துகளை ரிவின்யூ அதிகாரிகளின் ஆடிட் ரிப்போர்டின்பேரில் ரத்து செய்வதற்கு நோட்டீசு அனுப்பினதற்கு பின், அந்த ரிவனியூ அதிகாரிகள் அப்பஞ்சாயத்துகளுக்கு சற்றேனும் நியாயமாக இருக்கவில்லை என்று புலப்பட்டது. இதற்குக் காரணம் பஞ்சாயத்துகளின் கணக்குப் பரிசோதனை அல்லாமல், அவைகள் என்ன வேலைகள் செய்துவருகின்றன என்பது ஒன்றையும் சரியான விதம் அவர்கள் கவனியாமல் இருந்ததேயாம். வேலை செய்யாத பஞ்சாயத்துகளை நீக்கிவிட்டதனால், பஞ்சாயத்துகளின் வளர்ச்சி இந்த வருஷம் மிகவும் கழிந்த வருஷத்தில் காட்டிலும் மந்தமாகவே காணப்படுகின்றது. போன வருஷம் அதாவது 1928 29-ல் புதிதாக 645 பஞ்சாயத்துகளும், 1927-28-ல் 779 பஞ்சாயத்துகளும் ஸ்தாபிக்கப்பட்டன. இவ் வருஷம் ஸ்தாபித்தவைகளின் தொகை 783. ஆயினும் 800 பஞ்சாயத்துகள் கிராமப்பள்ளிக்கூட கமிட்டிகள் மாத்திரமே அன்றி நிஜமான பஞ்சாயத்துகள் அல்ல. இதர பஞ்சாயத்துகளில் அநேகம் பேருக்குமட்டும் பஞ்சாயத்துக்களாக இருக்கின்றனவேயன்றி உழைப்புள்ளவைகளல்ல வென்றே கூறவேண்டும்.





பஞ்சாயத்து யூனியன்கள்.

அவ்வொரு யூனியனும், தன்கீழ் பஞ்சாயத்து அசோசியேஷனுக்... ஸ்தாபிக்கப்பட்டு கொஞ்சம் திருப்தியான வேலைகள் செய்திருக்கின்றன. சாத்தூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள அங்கத்தினர்கள் தமக்குள் வேற்றுமையினுண்டான போதும் பஞ்சாயத்து வேலைகளைச் சரிவர செய்யவில்லை. மிகவும் ஊக்கத்தோடு கூடிய காரியதரிசியின் சிரமத்தால், நாமக்கல் சப்-ஜில்லா பஞ்சாயத்து கமிட்டி மெச்சத் தக்கதான வேலைகளை வழக்கம்போல் செய்துவருகிறது. கவர்மெண்டார் சில பஞ்சாயத்து வேலைகளுக்காக கொடுத்த பாதிப்பொருள் உதவியினால், அது தன்னுடைய ஓவர்சியர்களையும், ஆபீஸ் உத்தியோகஸ்தர்களையும் கொண்டே அவ்வேலைகளை வழக்கம்போல் நடத்தியது. சேலம் ஜில்லாவில் ராசிபுரம், நாமக்கல் தாலூக்காக்களைச் சார்ந்த பஞ்சாயத்துகளினால் அந்த கமிட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய மெம்பர்கள் 79 பஞ்சாயத்துகளின் அங்கத்தினராகிய 891 பேர்களாகும். அதன் நிர்வாகக் கமிட்டியில், தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மெம்பர்களும், 5 கோஆப்டட் மெம்பர்களும் அங்கத்தினர்கள். ரிவனியூ டிவிஷனல் ஆபீஸரே அதனுடைய பிரசிடெண்டாகும். இவ்வருஷத்தில் 8 நிர்வாகக் கமிட்டிக் கூட்டங்களும், ஒரு ஜனரல்பாடிக் கூட்டமும் நடைபெற்றது. அந்த ஜனரல்பாடி மீட்டிங்கானது பஞ்சாயத்துகளின் ஜம்பூரியாகவும், காட்சியாகவும் உபயோகப்படுத்தப்பட்டது. 28,054 ரூபாய் பெறுமான, கிணற்று வேலைகளும், ரஸ்தா வேலைகளும் நடைபெற்றன. அதின் அங்கத்தினராகிய பஞ்சாயத்துகள் 48 பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களை பரிபாலித்து வந்தன. அவைகளில் 10 பஞ்சாயத்துகள், ஆசிரியர்களுக்கு சர்க்கார் கொடுப்பதைவிட அதிகச் சம்பளம் கொடுத்தன. உரம், விதைகள், விவசாயத்திற்குத் தேவையான இதர சாமான்கள் இவைகளை விற்பதற்காக ஒரு கூட்டுறவு சங்கம் ஏற்படுவதற்குக் அக்கமிட்டி சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிறது. மெம்பர்களுக்கு விநியோகித்து கொடுப்பதற்காக நல்ல பருத்தி விதைகள் அது வாங்கியிருக்கிறது. தாலூக்கா போர்டானது ஒரு பஞ்சாயத்து உபகமிட்டியை ஸ்தாபிப்பதற்கு அது ஏற்படுத்தியிருக்கிறது. இந்த உபகமிட்டியானது சந்தையிலிருந்துவரும் வருமானத்தில் ஒரு பாகத்தை சில பஞ்சாயத்துகளுக்கு கொடுத்துவிடுமாறு அந்தத் தாலூக்கா போர்டை சம்மதிப்பித்தது. அதன் வருமானம் ரூ. 1,994-ம் செலவு ரூ. 1,930-ம் ஆகும். இதைத்தவிர வேறே உள்ள பஞ்சாயத்து யூனியன்கள், எனக்கு தெரிந்தமட்டும், வேலைகள் ஒன்றும் செய்யாமல் வெறும் பேரோடு நின்றுவிட்டன.

பஞ்சாயத்துகளின் தீர்மானங்கள், முன்போலவே, எல்லா புறம்போக்குகளையும் பஞ்சாயத்துகளுக்கு உட்படுத்துதல், பௌண்டை அவைகளுக்கு ஒப்புவித்தல், அவைகளுக்கு மூலதனத்திற்காக கவர்மெண்டார் உதவி செய்தல், இன்னும் அநேக வேலைகளையும் உரிமைகளையும் அவைகளுக்கு கொடுத்தல் முதலியவைப்பற்றியதாக இருந்தன. புதிதாக நாம் ஸ்தாபிக்கும் பௌண்டுகளையாவது கவனிப்பதற்கு அந்த பஞ்சாயத்துகளுக்கே அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று இந்த ஆபீஸில் இருந்து கவர்மெண்டாருக்கு அனுப்பின சிபார்சை அங்கீகரிக்காமல், ஆக்ஷல் பஞ்சாயத்துகளுக்கு கொடுக்கலாம் என்று சொல்லியிருந்தும் கவர்மெண்டார், பௌண்டு நிர்வாகத்தை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க[illegible]

என்று நிச்சயமாகத் தீர்மானித்துவிட்டார்கள். பஞ்சாயத்துகளின் தீர்மானங்கள் சட்டமுறைக்குரியதாயிருந்தாலோ, அல்லது அவைகளைப்பற்றி இதற்கு முன்னதாகவே முடிவு செய்யாவிட்டாலோ, அவைகளை இந்த ஆபீஸ் கவனித்தது. லோக்கல் போர்டுகளின் ஆக்ட் சீர்திருத்துகிற பில் இவர்களால் மிகவும் கவனிக்கப்பட்டது. பொதுவாக பஞ்சாயத்துகளும், கௌரவ ஆர்கனைசர்களும், பஞ்சாயத்துகளை இப்புதுச்சட்டத்தில் சேர்த்தது தவறென்று எண்ணினார்கள். 2 கௌரவ ஆர்கனைசர்களின் ஆதரவில் சென்னையில் 1929-ம் டிசம்பர் 14-உ கௌரவ ஆர்கனைசர்களின் ஒரு கான்பெரன்ஸ் கூடப்பட்டது. அதன் உத்தேசமானது புதிய பில் முதலில் பிரசுரித்ததின்படி அது கிராம பஞ்சாயத்துகளை எவ்வாறு பாதிக்கிறது என்று கவனிப்பதற்கும், அவர்களுடைய நோக்கங்களைச் சட்டசபையில் அறிவிப்பதற்கேற்ற வழிகளை ஆராய்வதற்கும் ஆகும். நான் அந்தக் கூட்டத்தைத் திறந்தேன். சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பாலோர்களுடைய நோக்கத்திற்கு இசைந்து, கிராமப் பஞ்சாயத்து ஆக்டை சீர்திருத்தம் செய்கிற பில் எவ்விதம் விடப்பட்டதென்பதும் பஞ்சாயத்துகளை லோக்கல் போர்டுகளில் சேர்த்துக்கொண்டது எவ்விதம் என்றும் தெரிவித்தது மாத்திரமன்றி அந்தக் கூட்டத்தின் இதர காரியங்களில் நான் பங்கு எடுத்துக் கொள்ளவில்லை,

## தேர்ந்தெடுத்தல்கள். (எலக்ஷன்கள்)

1929-30 வருஷத்தில் 695 எலெக்ஷன்கள் நடைபெற்றன. அவைகளில் 4463 பஞ்சாயத்தார்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 52 கேசுகள் முறை பிசகென்று பெட்டிஷன்கள் வந்தன. அவைகளில் விசாரணையின் பேரில் 81 கேசுகள் தள்ளப்பட்டன. பாக்கி 21-க்கு மட்டும் புதிதாக எலக்ஷன் ஏற்படுத்தப்பட்டன. ஆதித்திராவிடர்களும், ஆதி ஆந்திரர்களும் எலக்ஷன்களில் ஜயித்தனர். வருஷ கடைசியில் இவ்விரண்டு வகுப்பினரும் நமக்கு சமாசாரம் தெரியவந்த 1670 பஞ்சாயத்துகளுள், 154 பஞ்சாயத்துகளில் பிரதிநிதித்வம் சித்திபெற்றார்கள்.

## பஞ்சாயத்தின் வேலை.

ஒவ்வொரு பஞ்சாயத்தும் சராசரி 8 வீதம், 1274 பஞ்சாயத்துகள் 10818 மீட்டிங்குகள் கூடின. வெகு தடவையும் மீட்டிங்குக்கு வாராததின்பற்றி, 30 பஞ்சாயத்தார்கள் நீக்கப்பட்டனர்.

## பஞ்சாயத்தின் காரியங்கள்.

கவர்ன்மெண்ட் கிராண்டுகளின் உதவியின்பேரில் 1260 பஞ்சாயத்துகள் 1286 பள்ளிக்கூடங்களை நடத்தின; இப்பொழுது 534 பஞ்சாயத்துகள், தம்முடைய சொந்தமாகவே பள்ளிக்கூட கட்டிடங்களை அமைத்துள்ளன. நிர்பந்த கல்வி ஆனது 4 பஞ்சாயத்து எல்லைக்குள் நடந்து வந்தது. ராமனாட் ஜில்லாவிலும் மற்றொரு ஸ்தலத்திலும் நிர்பந்த கல்வி ஆரம்பிக்க ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன. ஆனால், சென்ற மார்ச்சுக்குள் அவைகள் முடிவுக்கு வரவில்லை. சமாசாரம் கிடைத்த வரையில், 191 பஞ்சாயத்துகள் சப்பாத்திக்கள்ளியை ஒழித்தன, 138 தம் கிராமங்களுக்கு விளக்குகள் போடும் விஷயத்தை கவனித்தன, 99 சுகாதார வேலைகளை கவனிக்க உத்தியோகஸ்தரையும், ஆட்களையும் நியமித்தன, 2 மரங்களை நட்டன, 509 வாசகசாலைகளை ஏற்படுத்தின, 558, கிராம உபயோகத்திற்கு வேண்டிய ஜலம் சரிவர கொடுத்து வருவதற்கு ஏற்பாடுகள் செய்தன, 396 போக்கு





வரவுக்கு வேண்டிய சௌகரியங்களை அமைத்தன, 64 பஞ்சாயத்துகள் குடிமராமத்துகளை நடத்திவந்தன, 2 நீர்பாய்ச்சலையும் 9 பயிர் காப்பாற்றலையும், காவல்காரர்களின் சம்பளங்களை வசூல் செய்வதையும் கவனித்துவந்தன. 29 சந்தைகளை நடத்துவதையும், 71 குளக்காவலர்களை தாமே நியமிப்பதையோ, அல்லது அவ்வாறு நியமிக்கும் பொருட்டு பணம் கொடுப்பதையோ செய்து வந்தன, முந்தின வருஷங்கள் போலவே, சில பஞ்சாயத்துகள் உற்சவங்கள் நடத்துவதையும், கோவில்களை சீர்திருத்துவதையும், கோவில் நிலங்களை கவனிப்பதையும், தங்களுடைய கிராமத்தாரின் பொது சம்மதத்தின் பேரில் செய்துவந்தன. கணக்கு பரிசோதனை செய்தபொழுது சில பஞ்சாயத்துகள் மேற்கூறிய காரியங்களுக்காக பிரத்தியேகம் கொடுக்கப்பட்ட பணத்தைக்கொண்டு மட்டும் அக்காரியங்களை நடத்துவதுடன், அவைகளின் பொது வருமானத்திலிருந்தும் கொஞ்சம் பணம் எடுத்துக்கொண்டதாக தெரியவந்தது. அப்பஞ்சாயத்துகள் அவ்வாறு செய்வது தகுதியல்லவென்று அறிவிக்கப்பட்டன. 35 பஞ்சாயத்துகள் போர்டு பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கும், மேல்பார்வை இடுவதற்கும் உள்ள அதிகாரங்களை செலுத்திவந்தன. பஞ்சாயத்துகள் பள்ளிக்கூடங்களை நடத்துவதைத்தவிர மற்று முக்கியமாக செய்திருக்கும் வேலை தங்கள் கிராமத்தின் போக்கு வரவுகளையும் ஜல சப்ளையும் சீர்திருத்தத்தினதேயாகும். இவ்விஷயத்தைப்பற்றி கீழ் வரும் பாராவில் விவரமாக எடுத்துக்கூறி இருக்கிறது. போர்கோல் கணக்குகளைப்பற்றியும் மற்று மெலிவான கணக்குகளைப்பற்றியும் பரிசோதிக்கும் பொருட்டு மதுரை ஜில்லாவில் சுற்று பிரயாணம் செய்த பிறகு, நான் கவர்ன்மெண்டாரிடம் இம்மாதிரி வேலைகளை நடத்துவதற்காக கிராண்டைக் கேட்டேன். ஆனால் அவர்களுக்கு அதை கொடுக்க முடியவில்லை. ஆயினும் இவ்வருஷம் 15,000 ரூபாய் இதன்பொருட்டு அளிக்கப்பட்டது. என்னுடைய சென்ற வருஷத்திய ரிப்போர்ட்டில் எடுத்துக்காட்டின, கிராமங்களில் காணும் வெகு அசங்கியமான காட்சிகளை நீக்குவதற்கு பஞ்சாயத்தார்களை முயலச்செய்வேன் என்று நம்புகிறேன். பஞ்சாயத்து ஏற்பாட்டை அனுசரிப்பதால் என்னவெல்லாம் செய்யமுடியும் என்பதை விளக்க நான் கீழ் கோதாவரியிலுள்ள கோடிபள்ளி பஞ்சாயத்தை உதாரணமாக எடுத்துக் காட்டுவேன். அது 300 ரூபாய்க்குட்பட்ட ஆபீஸ் செலவுகளைக் கொண்டு 13,700 ரூபாய் வருமானத்தை உபயோகித்து வருகிறது. இதை இப்போதுள்ள ஒரு யூனியனுடனோ தாலுக்கா போர்டினுடனோ ஒப்பிட்டுப் பாருங்கள். அதனுடைய வருமானம், வரிகளும், கவர்ன்மெண்ட் வேலைகளுக்காகக் கொடுக்கும் பாதி கிராண்டுகளும், ஜில்லா போர்ட் கொடுக்கும் பணங்களும், உற்சவங்களை நடத்தும்பொருட்டு விஜயநகர ஸமஸ்தானம் கொடுக்கும் பணமும் அடங்கியுள்ளது. இவ்வருமானத்தைக் கொண்டு அது ஜல சப்ளை, போக்குவரவுகள் இவைகளில் சீர்திருத்தங்கள் செய்வதுடன் ஒரு பெரிய உற்சவத்தையும், ஆஸ்பத்திரியையும், கிராமத்திற்கு விளக்கு போடுவதையும், சுகாதார ஏற்பாடுகள் செய்வதையும் நடத்திவருகின்றது.

## முன்னேற்ற வேலைகள்.

முன்னேற்ற வேலைகளும், சர்க்கார் கிராண்டுகளும்:—ஜல சப்ளை சீர்திருத்தத்திற்கு 1½ லட்சம் ரூபாயும் பஞ்சாயத்து கிராமங்களில் போக்கு வரவு சீர்திருத்

தத்திற்காக 1½ லட்சம் ரூபாயும், சென்ற வருஷம் போலவே சர்க்கார் சாங்ஷன் செய்தார்கள். சென்ற வருஷத்தில் கைக்கொண்ட முறைப்படி நான் இவ்வருஷம் சர்க்கார் சாங்ஷன் செய்த பணத்தொகைக்கு மேலாகவே, எஸ்டிமேட்டுகளை சாங்ஷன் செய்தேன். இந்த வருஷத்தில் ஜல சப்ளைக்கு 3,58,892 ரூபாய் பெறுமான எஸ்டிமேட்டுகளும், போக்கு வரவு சம்பந்தமாக 4,41,824 ரூபாய் பெறுமான எஸ்டிமேட்டுகளும் சாங்ஷன் செய்யப்பட்டு, எல்லா ஜில்லாக்களிலும் பங்கிடப் பட்டது.

மேலும், சென்ற வருஷங்களில் சாங்ஷன் செய்ததும் முடிவுபெறாததுமான வேலைகளுக்கு சர்க்கார் கொடுக்கிற பாதி கிராண்டுகள் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்பட்டன. இவ்விஷயமாக மொத்தம் ஜல சப்ளைக்கு 50,256 ரூபாயும், ரஸ்தாக்களுக்கு 32,993 ரூபாயும் செலவழிக்கப்பட்டன. கிராம போக்கு வரவுக்காக பங்கிடப்பட்ட பணம் முழுதும் செலவு செய்ததைப்பற்றி சந்தோஷத்தோடு நான் இவ்விடம் கூறுகிறேன். மேலும், ராமனாடு ஜில்லாவிலுள்ள கிராம பஞ்சாயத்துகளின் ரஸ்தாக்களுக்காக பிரத்தியேகமாக வைக்கப்பட்டிருந்த 20,000 ரூபாயில் 18,000 ரூபாயை, அவர்கள் அப்பணத்தை செலவு செய்யாததால் நான் அதை வேறு கிராம ரஸ்தாக்களுக்காக உபயோகித்தேன். பஞ்சாயத்துகள் ஜல சப்ளைக்காக சர்க்காரால் கொடுத்த கிராண்டு முழுவதும் பெற்றுக்கொள்ளவில்லை. ரூபாய் 1,21,054-5-0 மாத்திரம்தான் பாதி கிராண்டாக செலவழிக்கப்பட்டது. அனேக ஜில்லாக்களில் என்ஜினீரிங் உத்தியோகஸ்தர்கள் செக் - மெஷர்மெண்டுக்கு தாமதித்ததால், மார்ச்சு மாதத்தில் மிகவும் அதிகமாக பில்கள் என்னுடைய ஆபீசுக்கு வந்தன. அதனால் கழிந்த 14 தினங்களாக என்னுடைய ஆபீசு உத்தியோகஸ்தர்கள் மிகவும் சிரமப்பட்டு அந்த பில்லுகளை பரிசோதிக்கவும், அனுமதிக்கவும் பே செக்குகளை அனுப்பவும் செய்தார்கள். இந்த வருஷத்தில் லோக்கல் பண்ட் என்ஜினீயரிங் உத்தியோகஸ்தர்கள் சரியான சமயத்தில் செக்-மெஷர் செய்யாததினால் 38 வேலைகளுக்குத் தேவையான 1794 ரூபாய்கொண்ட செலவு தள்ளப்படவேண்டி வந்தது.

போக்கு வரவின் கீழ் பிரதானமாக செலவென்னவென்றால் வண்டிப்பாதைகளை பீடர் ரஸ்தாக்களாக மாற்றி அவைகளை ஜில்லா தாலூக்கா போர்டு ரஸ்தாக்களுடன் சேர்ப்பதாகும். டெல்டா பிரதேசங்களில் மிகுந்த விலையுள்ள மெட்டல் போடுவதும், ஆறுகளை கடப்பதற்கு பாலங்களும், சானல்களை கடப்பதற்கு சிறு பாலங்களும் கட்டுவதும் நடத்தவேண்டியிருந்தது. ஒரு ஜில்லாவில், ரிவினியூ அதிகாரிகள், வண்டிப்பாதை புறம்போக்குகளை ரோடுகளாக்குவதற்கு முன், அவைகள் சர்க்காரால் பஞ்சாயத்தினப்படுத்தல் கட்டாயமாக வேண்டுமென்று கூறுவதைக் கண்டு பிடித்தவுடன் நான் அதை கவர்ன்மெண்டின் ஆலோசனைக்கு கொண்டுவந்தேன். அதன்மேல் நான் சுட்டிச்சொன்னபடியே, இவ்விஷயங்களில் அவசியமானது என்னவென்றால், ரவினியூ அதிகாரிகளின் வழக்கமான சம்மதம் மாத்திரம்தான் தேவை என்றும் அந்த ரஸ்தாக்களிலுள்ள மரங்கள் முதலியவைகளின் பேரிலுள்ள உரிமை பஞ்சாயத்துகளுக்கு சாதாரணமாக உள்ள நிபந்தனைகளின்படி கொடுத்தாலொழிய அவைகள், ரிவினியூ அதிகாரிகளேயே சார்ந்ததென்றும் கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்தார்கள். ஜல சப்ளையின்கீழ் பஞ்சாயத்துகள் முக்





கியமாக செய்த வேலைகள் என்னவென்றால், புதிதாக கிணறுகள் குழிப்பதும், தற்காலமுள்ள கிணறுகளை ஆழமாகத் தோண்டுவதும், பணமில்லாததினால் தாலூக்கா போர்டாரால் அசட்டை பண்ணப்பட்ட குளங்களை ஆழமுள்ளவையாகவும் சேறில்லாமலும் பழுதுபார்ப்பதும், சானல்களுக்கும் குளங்களுக்கும் படிக்கட்டுகள் கட்டுவதுமேதான். காப்பாற்றப்படுகிறதான சிறு ஜல சப்ளை முறைகளை ஏற்படுத்துவதற்கு பஞ்சாயத்துகளை வினவியபொழுது அவைகள் அதற்கு இசையவில்லை. எனினும் பஞ்சாயத்துகளில் பல, குடிக்க உபயோகிக்கும் குளங்களை பாதுகாப்பதற்குப்பணம் செலவுசெய்தன. ஜல சூத்திரங்கள், குழாய்கள், ஜலம் நிறைத்துவைக்கும் ஸ்தலங்கள், முதலியவற்றை ஏற்படுத்துவதற்கு முதன்முதல் வேண்டியதான பணத்தொகை மிகவும் அதிகமானதால், அது பஞ்சாயத்துகளுக்கு பயமுறுத்துகின்றதாகவே இருக்கின்றது. திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கிராமத்தில் மாத்திரமே இம்மாதிரி ஸ்கீம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களில் எஸ்டிமேட்டுகள் போடவும், பஞ்சாயத்துகளை வேலை செய்வதில் சகாயிப்பதற்கும், மேற்பார்வை இடுவதற்கும், பில்களை தயார் செய்வதற்குமாக விசேஷமான பஞ்சாயத்து ஓவர்சியர்கள், ஜில்லா போர்டு என்ஜினீயர்களின் கீழ் நியமிக்கப்பட்டார்கள்.

## கல்வி.

கல்வி—வருஷாரம்பத்திலுள்ள பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களின் தொகை 1190 ஆகும். ஒரு ஆசிரியர் உள்ள மொத்தம் 1412 பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களும் கூடுதலாக 286 உபாத்தியாயர்களும் நியமிப்பதற்கு சர்க்கார் சித்தமாயிருந்தார்கள். வருஷக் கடைசியிலுள்ள பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களின் தொகை 1286 ஆகும். சரியான வேலை செய்யவில்லை என்ற காரணத்தால் 44 பள்ளிக்கூடங்களுக்குள்ள கிராண்டுகள் முழுதும் நிறுத்திவிடப்பட்டன. பள்ளிக்கூடங்கள் தேவையாயிருக்கிற பல இடங்களில் திருப்தியான பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதற்கு வழியில்லாமையால் சர்க்காரால் அனுமதிக்கப்பட்ட பணம் முழுதும் உபயோகப்படுத்தவில்லை. இப்பள்ளிக்கூடங்களை நடத்திவரும் பஞ்சாயத்துகளில் அனேகமும், கிராமப்பள்ளிக்கூட கமிட்டிகளேயாம். அவை வேறொரு வேலைகளையும் செய்வதில்லை. 100-க்கு 20 வீதம் அதிகப்படி உபாத்தியாயர்கள் வேண்டுமென்று முதலில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இந்த அளவு போதுமானதாகக் காணப்படவில்லை. மொத்தம் 1286 பள்ளிக்கூடங்களுக்கு 296 அதிகப்படி உபாத்தியாயர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். 28 பஞ்சாயத்துகள் 240 ரூபாய் வீதம் அதிகப்படி கிராண்டு பெற்று இருக்கின்றன. இந்த கிராண்டு போதனாமுறை பயிற்சி பெற்றவரும் ஸ்கூல் பைனல்வரை படித்துள்ளவருமான உபாத்தியாயர்களுக்கே கொடுக்கப்படுகின்றது. இந்த வருஷ கடைசியில் பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களில் படித்துவரும் பிள்ளைகளின் தொகை 44,887 சராசரி ஆஜர் 42,408, பட்டிகையில் சேர்க்கப்பட்டிருக்கும் பிள்ளைகளில் 100-க்கு 90 பேர் வீதம் ஆஜராயிருக்கின்றனர். இப்பிள்ளைகளில் 4767 பெண்பிள்ளைகள், 4112 ஆதித்திராவிடர்கள். உபாத்தியாயர்களுக்காக கிராண்டு கொடுத்தப் பணத்தின் செலவு ரூ. 2,56,438-3-0; மேசை, நாற்காலி கிராண்டு ரூ. 24,930-8-0 பல பஞ்சாயத்துகள் தமக்கு வேண்டிய உபகரணங்களை வரவழைத்துக்கொள்ளவும் அதற்கு

கொண்டு வாங்கிக்கொள்ளவும் தவறி இருக்கின்றனர். எனக்கு கிடைத்த ரூ. 31,200 உபகரண கிராண்டுத் தொகையில், ரூ. 10,000 வரையும் நான் திருப்பிக்கொடுக்க வேண்டியதாயிருந்தது. எனது போன வருஷத்து ரிப்போர்டில் குறித்தபடி இந்த வருஷத்தில், உபாத்தியாயர்களின் அவசியமான குறைந்த படிப்பு எவ்வளவு என்பதை என்னால் கட்டாயப்படுத்த முடிந்திருக்கிறது. இந்த பிப்ரவரி மாதத்தில் ஒரு புதுத் தீர்மானம் ஏற்பட்டிருக்கிறது. இத்தீர்மானம் தெரிந்தெடுத்த கௌரவ ஆர்கனைசர்களுடையவும், ஜில்லா கல்வி அதிகாரிகளுடையவும் அனுமதியுடன் இந்த வருஷத்து கிராண்டுகளை பஞ்சாயத்துகளிடமிருந்து கீழ்வரும் சர்டிபிக்கெட்டு பெற்ற பின்னரே கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த சர்டிபிக்கெட் என்னவெனில் ஒரு வருஷத்திற்கு அதிகமாக நடந்து வரும் ஏதாவது ஒரு பள்ளிக்கூடம் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும். குறித்தபடி யோக்கியதையுடைய உபாத்தியாயர்கள் நியமிக்கப்பட்டிருக்கவேண்டும். அந்த உபாத்தியாயர்கள் ஜில்லாக் கல்வி அதிகாரியின் அனுமதியுடன் நியமிக்கப்பட்டிருக்கவேண்டும். கட்டடம் வசதியுடையதாயும், எல்லா ஜாதியாரும் வரக்கூடியதாயும் இருக்கவேண்டும். அவசியமான உபகரணங்கள் குறைவில்லாமல் இருக்கவேண்டும். சர்டிபிக்கெட்டில் இவ்விஷயமெல்லாம் குறிப்பிட்டிருக்கவேண்டும். இம்முயற்சியில் ஜில்லாக் கல்வி அதிகாரிகள் எனக்கு வேண்டிய உதவிபுரிந்துள்ளார்கள் அவர்கள் பள்ளிக்கூடத்தின் நிலைமையை அப்பப்போது எனக்கு அறிவித்தும், பஞ்சாயத்துகளுக்கு உபாத்தியாயர்கள் கிடைக்காதபோது அவர்களை கண்டுபிடித்து கொடுத்தும், இன்னும் வேறுவிதத்திலும் பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களை அபிவிருத்தி செய்தும் வந்துள்ளார்கள். பஞ்சாயத்துகளுக்கு கொடுக்கும் புது கிராண்டு சட்டப்படி கிராண்டு தொகைகள் சாங்க்ஷன் செய்யப்படும் மாதம் வரையும் கொடுக்கப்படும். அதன் பின் கிராண்டு முன்பு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை, ஆறு மாதத்திற்கு ஒரு தடவை, பின்பு மும்மூன்று மாதங்களுக்கு முன் பேருகக் கொடுப்பதற்கு பதிலாக மாதாமாதம் கொடுக்கப்படும். சில ஸ்தலங்களில் முன் பேராக பணம் கொடுக்கும் முறை அதிர்ப்திகரமாகவும் முடிந்திருக்கின்றது. சில கௌரவ ஆர்கனைசர்கள் என்னிடம் சொன்னதாவது. பல பஞ்சாயத்தலைவர்கள் தாங்கள் பணம் பெற்ற பின்பும் உபாத்தியாயர்களுக்கு பணம் கொடுக்க தாமதிக்கின்றார்களென்றும் அதனால் என்னுடைய ஆபீஸில் இருந்து நேராக மணியார்டர் மூலம் அவர்களுக்குச் சம்பளம் அனுப்பவேண்டுமென்றும் சொன்னார்கள். என்னுடைய ஆபீஸில் இருக்கும் சிப்பந்திகளை நினைக்குமிடத்து, மாதாமாதம் எண்ணிறந்த மணியார்டர்கள் அனுப்பும் வேலை மிகவும் கஷ்டமாகவே இருக்கும். அதல்லாமலும் இம்முறை தவறென்று எனக்குத் தோன்றுகிறது. உபாத்தியாயர்கள் ரிஜிஸ்டிரார் ஜனரலுக்கு கீழடங்கியவரென்றும், பஞ்சாயத்துகளுக்குக் கீழ்படாதவரென்றும் நினைப்பது உசிதமாகாது. பஞ்சாயத்தார்கள் இந்தப் பள்ளிக்கூடங்களைத் தமக்குச் சொந்தமென்றும் தம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டதென்றும், தம்முடைய கவனத்தாலேயே முன்னுக்கு வரக்கூடியதென்றும் கருதவேண்டும். அதற்கு எனதாபீஸில் இருந்து சம்பளம் பட்டுவாடா செய்தல் ஏற்ற முறை ஆகாது. புதிதாகத் திறக்கப்படும் பள்ளிக்கூடங்களுக்கு அவசியமான சித்திரங்கள், படங்கள் முதலியவற்றை சென்னை நகரிலிருந்து நேராக ஒரு வியாபாரி போனவருஷத்திற் போல இந்த வருஷத்தி





லும் அனுப்பி கொடுத்திருக்கிறார். அவர் மேஜை, நாற்காலி, பெட்டி, பலகை, கரும்பலகை முதலியவை மிகவும் லாபமாகவும் நயமாகவும் கொடுத்துவருகிறார். இப்பொருள்களுக்கு அவசியமான பணத்தைக்கொண்டு பஞ்சாயத்துகள் அவற்றைத் தாமே ஊரில் செய்துகொள்வது அசாத்தியமென்றும், சென்னையிலிருந்து வரவழைப்பதுதான் சௌகரியமென்றும் அவர் அறிவிக்கிறார்.

## பள்ளிக்கூட கட்டடங்கள்.

இப்போது தெரிந்தவரையில் இந்த வருஷத்தில் 82 பள்ளிக்கூடக் கட்டடங்கள் பஞ்சாயத்துகளால் கட்டப்பட்டுள்ளன. மொத்தம் 534 கட்டடங்கள் ஆகின்றன. பாதி கிராண்டு முறைப்படி 30,000 ரூபாய் இந்த வருஷத்திற்கு அபேட்சிக்கப்பட்டிருக்கின்றது. போதனை கிராண்டு 407 பஞ்சாயத்துகளுக்கு கொடுக்கப்படவில்லை. பள்ளிக்கூடத்தில் ஆதித்திராவிடரை சேர்த்துகொள்ளுதல், உபாத்தியாயரின் கல்வித் தேர்ச்சி, கட்டட வசதி, பிள்ளைகளின் தொகை முதலிய விஷயங்களை பொறுத்த விதிகளை பஞ்சாயத்துகள் அனுசரிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தவே, இவ்வாறு செய்யப்பட்டது. சில பள்ளிக்கூடங்களை நான் சட்டத்தின்படி மூடி இருக்கிறபோதிலும் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களை மற்ற உபாத்தியாயர்களால் நடத்தப்படும் கிராண்டு பள்ளிக்கூடங்களோடு ஒப்பிட்டு பார்க்குமிடத்தில், எனக்குப் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்கள் மிகவும் திருப்திகரமான நிலையில் இருப்பதாகவே தோன்றுகின்றன பல ஜில்லாக் கல்வி அதிகாரிகளும் என்னைப் போலவே அபிப்பிராயப் படுகின்றார்கள். இதுவரையும், உதவி பெறும் பள்ளிக்கூடங்கள் இருக்குமிடங்களில் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களை வைப்பதற்கு அனுமதி கொடுப்பதில்லை. ஆனால் என்னுடைய அபிப்பிராயம் என்னவெனில் திறமுடைய பஞ்சாயத் தொன்றிருக்கும்போது அவரைக்கொண்டேப் பள்ளிக்கூடத்தை நடத்தச் சொல்வதுதான் சிலாக்கியமாகும். வேண்டுமென்றால் பஞ்சாயத்தார் ஒரு கட்டடத்தை அமைத்து கிராண்டு உபாத்தியாயர் யோக்கியதையுடையவரானால் அவரையே பஞ்சாயத்துப் பள்ளிக்கூடத்தில் நியமிப்பது உசிதமாகும். இதனால் சர்க்காருக்குச் செலவு கொஞ்சம் அதிகமாகலாம். ஆனால் இம்முறையினால் உண்டாகும் பிரயோசனம் அச்செலவுக்கு ஈடாகக்கூடியதே. பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களை அனுமதிக்கும் விஷயத்தில் சிறு பிள்ளைகளுக்கு ஒரு மைல் நடக்கமுடியாது என்ற அபிப்பிராயத்தை நான் தடுத்திருக்கிறேன். ஆனால் சில இடங்களில் ஜனங்களின் கண் முன்னையே பள்ளிக்கூடங்களை நாட்டுவது மிகவும் அவசியமானதே.

என்னுடைய சுற்று பிரயாணங்களில் நான் பஞ்சாயத்தார்களிடமும், கிராமத்தார்களிடமும், பிள்ளைகள் குறைந்தது நான்காவது வகுப்புவரை படிக்கவேண்டுமென்பதை வற்புறுத்தி இருக்கிறேன் இரண்டாவது வகுப்புக்கு மேலாக வரும் பிள்ளைகளின் தொகை மிகவும் அதிகமாயிருக்கின்றது. ஏழையான தாய் தந்தையர் பலர் பள்ளிக்கூடங்களை தமது மக்கள் தம்மை வேலை செய்யும் நேரங்களில் தொந்திரவு செய்யாமல் அப்புறப்படுத்தி வைக்கும் இடங்கள் என்று கருதுகின்றனர். உபாத்தியாயர்களில் 100-க்கு 30 பேர்கள் சிசுக்களை பாதுகாக்கும் தாதிகளே என்று நான் நினைக்கிறேன். இது பொது வருவாய்க்கேற்ற செலவென்று ஜனங்

கள் நினைப்பார்களானால் நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. அப்படி நினைக்க வில்லையானால் இந்த ஆரம்ப கல்வி பள்ளிக்கூடங்களில் ஏற்படும் பண நஷ்டத்தைத் தடுப்பதற்கு உபாயங்கள் தேடவேண்டும். கட்டாயக் கல்வியே இதை நிவர்த்தி செய்யும், அது அசாத்தியமானால் வயது வந்த பிறகேப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளை சேர்த்துக்கொள்வதை செய்யலாம். வயது 9 அல்லதோ அதற்கு மேற்பட்ட வயதுள்ள பிள்ளைகளையோ பள்ளிக்கூடங்களில் சேர்ப்பதாக தீர்மானிக்கவேண்டும். குடியானவர்களும் தொழிலாட்களும் அப்படிப்பட்ட பிள்ளைகளை மேல் படிக்க வேண்டுமென்ற உத்தேசமில்லாமல் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பமாட்டார்கள்.

சமாசாரம் தெரிந்தவரையில், 571 பஞ்சாயத்துகளில் புத்தக நிலயம் இருக்கின்றன. 254 பஞ்சாயத்துகள் இந்த வருஷத்தில் புஸ்தகங்களுக்காக கிராண்டு பெற்றன. இந்த கிராண்டுகள் 20 ரூபாய் முதல் 100 ரூபாய் வரையும் கலெக்டர்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன, சிற்சில போது பஞ்சாயத்துகளின் அபேட்சைகள் காரணமின்றியும் மரியாதைக்குறைவுடனும் தள்ளப்பட்டிருக்கின்றன என்பது நான் அறிவேன். ஆயினும் முந்திய வருஷத்தைவிட இத்தொகை திருப்திகரமாக பங்கிடப்பட்டிருக்கிறது.

ஆனால் ஜில்லாக்களுக்கிடையில் இத்தொகைச்சரியாக பங்கு செய்யப்பட வில்லை. அதற்குக்காரணம் கலெக்டர்களின் மனோநிலையே என்று நான் நினைக்கிறேன். கொஞ்சம் பஞ்சாயத்துகளே நன்றாக வேலை செய்துவரும் அனந்தப்பூர் ஜில்லாவிற்கு ரூ. 4,000 கிடைத்திருக்கிறது. அதற்குக் காரணம் என்னவெனில் கலெக்டர் அத்தொகையை அபேட்சித்தார். ஆனால் 812 பஞ்சாயத்துகளும் 449 பஞ்சாயத்துப்பாடசாலைகளும் உள்ள வட ஆர்க்காட் ஜில்லாவிற்கு ரூ. 1,150-தான் கிடைத்தது. கலெக்டர் அதற்கதிகம் கேட்கவில்லை போலிருக்கிறது. நான் சமீபத்தில் அந்த ஜில்லா வழியாக பிரயாணம் செய்தபொழுது பல பஞ்சாயத்தார்கள் புஸ்தகங்களுக்காகத் தாங்கள் கேட்ட பணம் அனுமதிக்கப்படவில்லை என்று என்னிடம் அடிக்கடி பிராது கூறியதுண்டு. அப்பஞ்சாயத்தார்கள் பள்ளிக்கூடம் வைப்பதற்கு நல்ல கட்டடமும் கட்டிக்கொடுத்து திருப்திகரமாக பாடசாலையும் நடத்தி வருகிறார்கள். ஆயினும் அவர்களின் மனு தள்ளப்பட்டது.

## வரவு செலவு.

767 பஞ்சாயத்துகள் தீர்வை விதித்தும், வேறு விதத்திலும் தம்முடைய செலவுகளுக்குக்காக ரூ. 4,78,169 சேர்த்துள்ளன. 154 பஞ்சாயத்துகள் தாலூக்கா போர்டிடம் இருந்து ரூ. 68,188 பெற்றுள்ளன. 10 பஞ்சாயத்துகள் ஜில்லா போர்டினிடமிருந்து ரூ. 5,429 பெற்றுள்ளன . 1018 பஞ்சாயத்துகள் சர்க்காரிலிருந்து 3,00,232 பெற்றுள்ளனர். (கல்வி கிராண்டாகவும், கட்டட கிராண்டாகவும், புஸ்தகங்களுக்காகவும்.)

## கணக்கு பரிசோதனை.

இந்த வருஷத்தில் 1357 பஞ்சாயத்துகளின் கணக்கு தீர்வை இலாகா அதிகாரிகளினால் பரிசோதிக்கப்பட்டது இந்தப் பரிசோதனையைப்பற்றி நான் முந்தியே கூறியிருக்கிறேன். (ஜி. ஓ. நெம்பர் 2449 எல் & எம். தேதி ஜூன் 20, 1930) பெரிய குற்றமோ, பணமோசமோ ஒன்றும் கணக்குப் பரிசோதனையில





தெரியவரவில்லை. ஆனால் பல இடங்களில் சீர்திருத்தம் பெற இடமுண்டு. அனுமதிக்கப்பட்ட தீர்வைகளைத் திரட்டுவது சில பஞ்சாயத்துகளில் பெயருக்கு மட்டுமாகவே இருக்கின்றது. அதனால் பஞ்சாயத்தின் தீர்மானங்களுக்கு ஜனங்கள் ஆதரவளிக்கவில்லை என்று தோன்றுகிறது. ஒரு கலெக்டர் பஞ்சாயத்தின் கடன் பட்ட நிலைமையைப்பற்றி குறித்துள்ளார். அப்படி கடன்பட்டு இருப்பதால் அவர்களால் ஒரு வேலையும் நடத்தமுடியாதென்று கூறுகிறார். ஆனால் எனக்கு இது ஒரு சுபகுறியாகத் தோன்றுகின்றது. பஞ்சாயத்தார்களும் தலைவர்களும் தங்கள் பொறுப்பிலேயே கடன் வாங்கிச் செலவு செய்து வருதல் பஞ்சாயத்தாரின் சமூக உணர்ச்சியையும் சாசுவத உணர்ச்சியையும் விளக்குகிறது. கணக்குப் பரிசோதனையிலிருந்து இப்பஞ்சாயத்தார்களுக்கு போதனைகூற சம்பளம்பெறும் அதிகாரிகள் அவசியமென்று தெரியவருகிறது. பஞ்சாயத்துகள் நிறைந்த ஜில்லாக்களில் இவ்வித அதிகாரிகள் மிகவும் அவசியம். ஆனால் சில இடங்களைத்தவிர மற்றெல்லா கலெக்டர்களும் பஞ்சாயத்து விஷயமாகத் தங்கள் சிப்பந்திகள் செய்யும் வேலை அதிகப்பட்டிருக்கின்றன என்று கூறவில்லை. இப்பொழுது நடந்துவரும் முறையே இன்னும் கொண்டுசெல்லலாம் என்று கூறுகிறார்கள். கணக்கு பரிசோதனையின்பேரில் பல பஞ்சாயத்துகளுக்கு ஏன் அவர்களைத் தள்ளிவிடக்கூடாதென்பதற்கு எச்சரிக்கை செய்திருக்கின்றது. இவ்வெச்சரிக்கைபற்றி பல பஞ்சாயத்துகள் ஜாக்கிரதையாக நடந்துவருகின்றன. பஞ்சாயத்துகளுக்குக் கணக்குப் புஸ்தகங்கள் கடனாகக் கொடுப்பதால் அந்தப் பணத்தை வசூல் செய்வது கஷ்டமாயிருக்கின்றது. கட்டட வேலை கிராண்டுகளும், பள்ளிக்கூட கிராண்டுகளும் பட்டுவாடா ஆக வேண்டிய பஞ்சாயத்துகளிடமிருந்து வசூலிப்பதில் கஷ்டம் ஒன்றும் காணவில்லை. ஆனால் இதர பஞ்சாயத்துகளிடமிருந்து கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தாலன்றி பணம் திரும்பி கிடைக்காத நிலையில் இருக்கின்றது. அதனால் நான் கணக்கு புஸ்தகங்களை கடனாக கொடுக்கிறதை நிறுத்தி வைத்திருக்கிறேன்.

---

முன்சிப்பல் கௌன்சில்,
லோக்கல் போர்ட் இன்ஸ்பெக்டர்.

1930-ம் ௵ டிசம்பர் 19-ம் தேதி சர்குலர் நம்பர் 100.

விஷயம்:—நிலத்தீர்வை—கிராமப் பஞ்சாயத்துக்கள்—இன்ஸ்ட்ரக்ஷனஸ் கொடுக்கப்பட்டன.

1930-ஆம் வருஷத்திய 11 வது ஆக்ட் பிரகாரம் சீர்திருத்தப்பட்ட லோக்கல் போர்ட்ஸ் ஆக்டின் 78-வது செக்ஷன்படி, நிலத்தீர்வையானது ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள நிலங்களின் வருஷ வாடகை வருமானத்தில் ரூபாய் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ அணா வீதம் வரி வாங்குவதே ஆகும். இவ்வாறு சீர்திருத்தப்பட்ட ஆக்டின் 5-வது ஷெடுலின் கீழுள்ள ரூல் 5—A (1) படிக்கு செக்ஷன் 78-ன் பிரகாரம் இடப்பட்ட நிலத்தீர்வையில் 6-ல் ஒரு பாகம் கிராம நிதிகளுக்கு செலுத்தப்படும். இப்புதிய ஆக்டானது 1930-ஆம் ௵ ஆகஸ்ட் 26-ந்தேதி அமுலுக்கு வந்தது. பசலி வருஷத்தின் ஆரம்பத்திலேயே அல்லாமல் இப்பொழுது இச்சட்டத்தின்படி மாற்றங்கள்

ஏற்படுத்துவதால் லோக்கல் போர்டுகளுக்கு நிலத்தீர்வைப் பணத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதில் தொந்திரவுகள் நேரிடுமானதால் கவர்ன்மெண்டார் கட்டளை இட்டிருப்பது என்னவெனின், பசலி வருஷம் 1340 ல் 26-8-'30-க்கும் 30-6-31-க்கும் இடையிலுள்ள காலத்தில் பிரிக்கப்பட்டத் தீர்வைப் பணமானது அந்தப் பசலி வருஷத்தில் 26-8-30-க்கு முன்னுள்ள காலத்தில் எக்கணக்காக ஜில்லா, தாலுக்கா போர்டுகளுக்கும் எந்த லோக்கல் போர்டுகளுக்கும் பங்கிடப்பட்டதோ அதே கணக்காகவே அந்த லோக்கல் போர்டுகளுக்குமே பங்கிடப்படவேண்டியது. நிகழும் பசலி வருஷம் கிராமப் பஞ்சாயத்துகளுக்குத் தீர்வைப் பணம் ஒருபாகமும் சேராது; பசலி 1341-லேயேத் தீர்வைப் பணம் ரூபாய் ஒன்றுக்கு 3 பை வீதம் கொடுக்கப்படும்.

---

## வாக்குரிமை விளக்கம்.

இப்பெயரிட்ட 32 பக்கங்களடங்கிய சிறு புத்தகமொன்று நம் பார்வைக்கு வந்தது. இந்நூலாசிரியர் கனம் கெ. எஸ். முத்துசுவாமி அய்யர் வாரவாரச் சம்பாஷணை நடக்கும்பாவனையாக எழுதியிருக்கிறார் ஒவ்வொரு வாரத்திலும் ஒவ்வொருவர் அதிகமாய் 5 பெயர் வரைக்கும் சம்பாஷணையில் கலந்துகொள்கின்றனர். வாக்கைக் குறித்துள்ள சாமானிய எண்ணங்களையும் நன்றாய் அவரவர்களின் மனப்போக்கிற்கும் அறிவிற்குப் தகுந்தவாறு ஒவ்வொருவரும் வெளியிட்டிருக்கின்றனர். விஷயங்கள் எல்லோரும் அறியும்படியான சாதாரண நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. சரித்திர மூலமாயும்—தர்மநூலின் மூலமாயும் வாக்குரிமையால் ஜனசமூகம் எவ்விதம் முன்னேற்றமடையலாம் என்பதை நிரூபித்துக் காண்பித்திருக்கிறார். இந்நூலாசிரியர் "ஜனசமூக சபை (Parliament) கவர்ன்மெண்டின் வரவு செலவும் நிதியும் (Taxation and finance) இவ்விஷயங்களைப்பற்றியும் இதே மாதிரி நடையில் வெளியிடப் போகிறாரெனவும் கேள்விப்படுகிறோம். இவரின் முயற்சி கைக்கூட வேண்டுமென்பது நமது எண்ணம். புதுமைகளடங்கிய தமிழ் நாடு, இவரின் முயற்சியால் சாமானியர்களின் அறிவுவிருத்தியடையும்படி இவருக்கு அனுகூலமாயிருக்குமென்று நம்புகிறோம்.

இதன் விலை 2 அணா.
10 புஸ்தகங்களின் விலை ரூ. 1.

---

இது சென்னை ராயப்பேட்டை 'நவசக்தி' ஆபீஸில் கிடைக்கும்.





## ஜமீன்தாரி ரயத்துகள் மகாநாடு.

### ஸ்ரீமான் வி. ராமதாஸ்பந்துலுவின் பிரசங்கம்.

புதன்கிழமை திருத்தணியில் கூடிய ஜமீன்தாரி ரயத்துகள் மகாநாட்டில் தலைமைவகித்த ஸ்ரீமான் வி. ராமதாஸ் பந்துலு செய்த பிரசங்கத்தின் சாரம் பின்வருமாறு:—

நீங்கள் எனக்களித்திருக்கும் கௌரவத்திற்கு நன்றிபாராட்டி வந்தனமளிக்கிறேன். இம்மாகாணத்தில் கிராமப்பொருளாதாரத்தில் ஜமீன்தாரி ரயத்துகள் ஒரு செல்வாக்குள்ள சக்தியாக விருக்கின்றனர். இம்மாகாணத்தில் ரயத்வாரி முறையில் 270 லக்ஷம் ஏக்கரும் 190 லக்ஷம் ஏக்கர் நிலச்சுவான்தார்களின் கீழும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. ரயத்துவாரி முறையில் ஒவ்வொரு பைசலியிலும் அதிக வருமானத்தைப் பெறவேண்டிய ஒரே நோக்கத்துடன் சட்டமுறை ஏதுவுமின்றி மறுபைசல் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை நடத்தப்படுகிறது. ஜமீன்தார்களின் கீழுள்ள குடிகளின் நிலைமை இன்னும் கேவலமாகவிருக்கிறது. 1908-ம் வருஷத்திய எஸ்டேட்ஸ் லாண்டுச் சட்டம் நிலைமையை வெகுதூரம் மாற்றியது. பல ஜமீன்தாரிப் பிரதேசங்களில் இப்போதுள்ள வாரம் கொள்கை எதையும் பொறுத்ததாகவில்லை. அந்த வாரங்கள் தகுதியானவை என்று ஆராய்வதற்குத்தரம் ஏதுவுமில்லை இதற்குக்காரணம் சுலபமானது. கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனி 18, 19-வது நூற்றாண்டுகளில் நிலவரி செட்டில்மெண்டுகளை நடத்தி வைத்தபோது வரியைச் சரியாக வசூலித்துக் கஜானாவுக்குச் செலுத்தக் கூடியவர்களைப் பெறுவதிலேயே கவனமாக விருந்தது. 1802-ம் வருஷத்திய சாஸ்வதப் பைசல் சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட ஜமீன்தார்கள் நிலத்தின் சொந்தக்காரர்களாகப் பாவிக்கப்பட்ட பின்னர் வந்த சட்டங்கள் இதை ஊர்ஜிதம் செய்தன. நிலத்தை உண்மையில் சாகுபடி செய்பவர்களுடைய உரிமைகள், அவர்களுக்கேற்படும் பொறுப்பு முதலியவை கவனிக்கப்படவேயில்லை. வெளியேற்றவும், வாரத்தை உயர்த்தவும் ஜமீன்தார்களுடைய அதிகாரத்திற்கு எவ்வித நிர்ப்பந்தமுமில்லை. 1865-ம் வருஷத்திய வாரச்சட்டம் குடிகள் செய்யும் அபிவிர்த்திக்கு வரி விதிக்கக் கூடாதென்றுதான் பாதுகாப்பளித்தது. காலம் முடிந்தவுடன் வெளியேற்றுவதற்கு ஜமீன்தாருக்கு உரிமை யிருப்பதாலும் வெளியேற்றும்போது அபிவிர்த்திக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்ற விதியில்லாததாலும் இந்தப் பாதுகாப்பு பயனவிற்கே. ரயத்துகளின் வாரத்தை உயர்த்துவதற்கு இந்த வெளியேற்றுவதற்கான உரிமை மிகவும் உபயோகமாகவிருந்தது. ஆகையால் சென்னை எஸ்டேட்ஸ் லாண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது வாரங்கள் போட்டியின் பேரில் ஏற்பட்டவையாக விருந்தன. அச்சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்ட வாரம் ஜமீன்தாரிக்கு ஜமீன்தாரி வேற்றுமைப்படுகிறது. இந்தச் சட்டத்தில் வேறு பல குறைகளுமிருக்கின்றன. செட்டில்மெண்டு உத்தியோகஸ்தர் தமதிஷ்டப்படி வாரத்தை உயர்த்த அது இடமளிக்கிறதென்று ஹைக்கோர்ட் வியாக்கியானம் கூறியிருக்கிறது. ஜமீன்தாரி மூலத்திலிருந்து பாசனத்திற்கு ஜலம் பெறும் ரயத்துகள், அந்த பாசன மூலங்களைச் சரியாக வைத்திருக்குமாறு ஜமீன்தார்களை நிர்ப்பந்திக்க முடியாது. ஜல

சப்ளை யில்லாததால் மாருல் தவறினால் தண்ணீர்த் தீர்வையையும் நிறுத்தமுடியாது. ரெவின்யூ உத்தியோகஸ்தர்கள் மூலம் பழுது பார்க்கும் வேலையையும் நடத்தி வைப்பதும் மிகவும் சிக்கலாகவிருக்கிறது. வரட்சியாலோ வெள்ளத்தாலோ மாருல் அடியோடு தவறிப்போகும்போதுகூட ஜமீன்தாரி ரயத்துகள் வரி வஜாவைப் பெறமுடியாது. இதற்குப் பரிகாரம் செய்யப்படவேண்டுமென்று பஞ்சக்கமிஷன் கூறியிருக்கிறது. புறம்போக்கு நிலத்தில் மாடுகளை மேயவிடுவது, பக்கத்திலுள்ள ஜமீன்தாரிக் காடுகளிலிருந்து விவசாய கருவிகளுக்கு மரம்பெறுவது முதலிய உரிமைகளும் எஸ்டேட்ஸ் லாண்டுச் சட்டத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. நிலத்தை புதிதாக ஒரு குடி பெறும்போது வரியைப்போல் 2½ மடங்குக்குமேல் பிரிமியம் கொடுக்குமாறு கேட்கக்கூடாது. ரயத்துகளிடமிருந்து வருஷா வருஷம் வருமானத்தை கணக்கிட்டு வாங்குவதில், ஜமீன்தாரின் சிப்பந்திகள் நெறியற்றவர்களாயிருந்தால் குடிகளைப் பலவழிகளிலும் ஹிம்ஸிக்கக்கூடும். இவ்வழியில் ஜமீன்தாரி ரயத்துகளை விடக் கவர்ன்மெண்டு ரயத்துகளின் நிலைமை சௌகரியமாயிருக்கிறது. ஜமீன்தாரி வேலைகளுக்கு நியமிக்கும் விஷயத்தில் உள்ள முறையே இதற்குக் காரணம். ஜமீன்தாரிகளின் கீழுள்ள ரயத்துகளுக்கு அவசியமான மூலதனமோ கடனோ கிடைப்பதில்லை. இந்தியாவில் கிராம, நகரப் பொருளாதார பலஹீனத்திற்கு குடிபாத்திய முறை சரியாக இல்லாததே வெகுதூரம் காரணம். விவசாயத்தின் திறமையும் நிலைமையும் அது யாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதோ அவர்களுடைய திறமையைப் பொறுத்திருக்கிறது. இப்போதைய நிலச்சுவான்தார் முறை பண்டை காலத்திய விவசாயிகளின் முன்னேற்றத்திற்குதவியாகவில்லை. ஜமீன்தார்கள் தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்குதவி யளிக்கும் முறையில் வேலை செய்யவேண்டும். குடிகள் பொருளாதாரக் கஷ்டங்களைச் சமாளித்து சுபிக்ஷமாகவிருந்து அவர்கள் உதவியளிக்கவேண்டும். ராஜீய பொருளாதார நிலைமைகளில் புரட்சிகரமான மாறுதல்களேற்பட்டிருப்பதைக் கவனிக்காமல் இயற்றப்படும் குடிபாத்தியச் சட்டம் எதுவும் பிரயோஜனப்படாது. கவர்ன்மெண்டாரும் சட்டசபைகளில் விவசாயிகளின் பிரதிநிதிகளாக 20 வருஷங்களாக இருந்தவர்களும் இதற்கு என்ன செய்திருக்கின்றனர்? நிலச்சுவான்தார்களின் உணர்ச்சியை புண்படுத்தாமல் நடந்துகொள்ள கவர்ன்மெண்டார் விரும்புகின்றனர். தங்களுடைய நில வரிக் கொள்கையையும் பக்ஷபாதமற்ற கமிஷன் அல்லது கமிட்டியின் ஆராய்ச்சிக்குவிட அவர்கள் விரும்பவில்லை. சீர்திருத்தத்தின்கீழ் விவசாயம் மந்திரிக்கு மாற்றப்பட்டு ரெவின்யூ நிர்வாகசபை மெம்பருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போதைய சட்டசபைகளில் விவசாயிகளின் நிலைமையை அபிவிருத்திசெய்யும் சட்டங்களை இயற்றுவது கடினமாகவிருக்கிறது. தகுந்த சீர்திருத்தத்தை நடத்திவைக்குமாறு பொதுஜன அபிப்பிராயத்தை உண்டு பண்ணுவதுதான் இதற்குப் பரிகாரமாகும். இது சிக்கலானதாகவிருக்கிறது. நிலச்சுவான்தார்கள் இன்னும் நியாயமாயும் கிரமமாயும் குடிகளிடம் நடந்துகொள்ளுவதாலேற்படும் அனுகூலங்களைத் தெரிந்துகொள்ளுமாறு செய்யவேண்டும். விவசாயிகள் சிக்கனமாயும் சுய நம்பிக்கையுடனும் உரிமைகளை யுணர்ந்தும் நடக்குமாறு செய்யப்படவேண்டும் இப்படிச் சம்பந்தத்தை திருத்திக் கிராமப் பொருளாதாரத்தை புதிய வழியில் ஸ்தாபித்துத் தாய்நாட்டின் விடுதலைக்குதவியளிக்கவேண்டும்.

37

இதழ் I. நெ. 5.

ரிஜிஸ்தர் நெ. M. 2623.

# 'கிராமப் பஞ்சாயத்து.'

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

8 APR 1931

பிப்ரவரி 1931.

பிரசுரஞ் செய்வோர்.

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

நன்ஜன்கூடு சத்வைத்திய
சாலை கூட்டுவேலை.




ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ்:
"சத்வைத்தியசாலை." நன்ஜன்கூடு
சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

டானிக்
ச்யவனப்
ராசா
ஜீவனமித்ரா
பாலமித்ரா

I.D.L. CHYAVANPRASH TONIC

தைலம்:
ப்ருங்காமலக
அமிர்தாமலக
சந்தனாதி

(குழந்தை கட்டிக்கு, 15 நாள் மருந்து ரூ 2—0—0).

நஞ்சன்கூடு பல்பொடி


அடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | காலம் சென்றார் ... ... | 99 |
| 2. | சங்க ஸ்தலங்களை நீக்குதல் ... ... ... | 101 |
| 3. | பத்திராதிபரின் குறிப்புகள் ... ... ... | 105 |
| 4. | சர்க்காரைச் சேர்ந்த தரிசு நிலங்களின் விற்பனை ... ... | 107 |
| 5. | சீர்திருத்தப்பெற்ற துங்கபத்ரா ப்ராஜக்ட் ... ... | 108 |
| 6. | பஞ்சாயத்தாரும்—அவர் எலெக்ஷனும் ... ... | 109 |
| 7. | விவசாயிகளுக்குத் தெரியவேண்டிய விஷயங்கள் ... ... | 115 |
| 8. | விவசாயமே உயிர்த்தொழில் ... ... ... | 118 |
| 9. | லோகல் போர்டுகளைப்பற்றிய குறிப்புகள் ... ... | 120 |



சந்தா விவரம்.

பஞ்சாயத்தாருக்கு வருஷத்துக்கு ரூபாய் 2.

மற்றவர்களுக்கு ... „ 3.

தனிப்பிரதி ... அணா 4.

விளம்பர விகிதம்.

பத்திரிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

## பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள். பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசாரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் விஷயங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட விஷயங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம்: ஆனால் விஷயங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.

---


### நம்பிக்கையுள்ள ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.] [கேட்லாக் இனாம்]

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26, பிராட்வே, சென்னை.


## காலஞ் சென்றார்.

---

பண்டித் மோதிலாலை நம்மிடம் இருந்து எடுத்து கொண்டு போகவேண்டுமென்று ஈசன் எண்ணினால் போதும். அவர் விசேஷ தன்மை பொருந்திய ஒரு பெரியார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. தற்காலத்தில் பாரதநாட்டில் ஜனங்கள் கொண்டாடிவரும் மஹான்களில் அவர் மிக்க சிறந்தவர். அவருடைய குணங்களும் அவருடைய ஜீவ சரித்திரத்தைப் போலவே நிசாற்றது. இதற்கு திருஷ்டாந்தம் என்னவெனில் கால தத்வம் எவ்வாறு அவரை பழைய ஜீவிதத்திலிருந்து மாறுபடுத்தியுள்ளது என்பதை நாம் சற்று கவனித்தால் போதும். பிரபுக்களில் முதல் பிரபுவாகவும், உலகத்தின் சகல போக போக்கியங்களையும் அனுபவித்தவரும் ஒருவருடைய கட்டுக்கும் அடங்காதவராயிருந்த அவர் தர்மதேவதையின் உத்தரவு எப்பொழுது வந்ததோ அதே சமயத்தில் அச்சுகங்களை எல்லாம் முற்றிலும் துறந்து, பெரும் துறவறத்தைக் கைக்கொண்டு நமது ராஜ்யத்தில் மெதுவாக வளர்ந்துவரும் ஜனநாயக முறையின் உருவாகவே அமைந்தார். இப்பூமியில் மேன்மையாக வாழ்ந்துள்ளோம் என்ற திருப்தி அவர் ஆத்மாவுக்கு அளிக்குமென்பதற்கு ஐயமில்லை.

# கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் 1.] 1931௵ பிப்ரவரி௴ [இலக்கம் 5.


## சுங்க ஸ்தலங்களை நீக்குதல்.

*சாதாரண குடியானவனின் அபிப்பிராயப்படி எல்லாத் தீர்வைகளிலும் அதிக தொந்தரவானது சுங்கத்தீர்வையே. விவசாயியின் அபிவிருத்தியை நாடும் எல்லோரும் சுங்கங்களை முற்றிலும் ஒழிக்கவேண்டுமென்று நெடுநாளாக முயன்று வருகின்றனர். ஆனால் மோட்டார் வண்டிகளின் வரவானது இக்கொடிய சுங்கங்களை நீக்குவதற்கு காரணமாயிருக்கிறது. சீக்கிரம் பிரயாணம் செய்கிற இந்நாளில் சுங்கங்களும் அவைகளின் கண்ட்ராக்டர்களும் பெரும் தடைகளாக எண்ணப்படுகிறார்கள். ரஸ்தாக் கமிட்டியின் அபிப்பிராயம்பற்றி இச்சுங்கங்களெல்லாம் கூடிய சீக்கிரத்தில் நீக்கப்படும்.*

*சென்னை மாகாணத்தின் சென்ற சட்டசபைக் கூட்டத்தில் பிரதான மந்திரி அவர்கள் "சென்னை மோட்டார் வண்டிகள் தீர்வை மசோதா" (The Madras Motor Vehicles Taxation Bill) என்ற ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார். அந்த மசோதாவின் பெயர் சுங்கம் தீர்க்கும் மசோதா என்பதே உசிதமாகும். நவீனகால வாழ்வில் மோட்டார் வண்டிகளின் முக்கியத்தை குறிப்பிடவோ அவ்விதம் அந்த மசோதாவுக்கு அவர் பெயரிட்டார் என்ற விஷயத்தை நாம் ஆராயவேண்டியதில்லை.*

*இந்த் மசோதாவின் உத்தேசத்தையும் காரணங்களையும்பற்றிய அறிக்கையிலிருந்தும் முகவுரையிலிருந்தும் எல்லா சுங்கங்களையும் நீக்குதலே இச்சட்டத்தின் கொள்கை என்று புலப்படும். மோட்டார் வண்டிகள் நீங்க இதர வண்டிகளின் மேலுள்ள தீர்வை நியமங்கள் முனிசிப்பாலிட்டிகளின் வருவாய்க்காக சென்னை நகர முனிசிப்பல் சட்டத்திலும், ஜில்லா முனிசிப்பாலிட்டிகள் சட்டத்திலும் மாற்றப்படமாட்டாது. லோக்கல் போர்ட் சட்டத்தில் காணப்படும் சுங்க சம்பந்தமான எல்லா நியமங்களும் நீக்கப்படும். லோக்கல் போர்ட் சட்டத்தின்படி "வண்டிகள், சுங்கங்கள்" (Carriages, Carts and Tolls) இவைகளைப்பற்றி*

ஜில்லா போர்டுக்கு மாத்திரமே அதிகாரம் உண்டு. ஆனால் சவாரி வண்டிகளின்பேரில் (*Vehicles*) தீர்வை விதிப்பதற்கு அதற்கு அதிகாரம் ஒன்றுமில்லாமலிருந்தது. இப்பொழுது மேற்கண்ட தீர்மானத்தின்படி லோக்கல் போர்ட் சட்டத்தின்கீழ் எத்தகைய வண்டியின்பேரிலும் தீர்வை விதிக்கமுடியாது. இதனால் இந்த மசோதா சட்டமாகும் பொழுது குடியானவனுடைய வண்டிகளோ, மிருகங்களோ, எத்தகைய தீர்வையும் கொடுக்கவேண்டிய அவசியமிராது. இது ஒரு பெரும் லாபம் என்பதில் சற்றும் ஐயமில்லை. குடியானவனுக்கு கிடைக்கும் உதவியும் பெரிய உதவியானது.

ஒரு அவசரத்தில் மாத்திரமே கவர்ன்மெண்டார் சுங்கம் விதிக்க அதிகாரம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது அந்த மசோதாவின் 14-வது பிரிவில் காணப்படுகிறது. அதாவது, தங்களுடைய முழுச்செலவிலாவது, பாகச்செலவிலாவது ஏதேனும் பாலத்தையோ, அல்லது, ரஸ்தாவையோ, புதிதாக ஏற்படுத்தவோ, சீர்திருத்தவோ செய்தால் அப்பணத் தொகையை மீண்டெடுக்கும் நாள்வரையும் அவ்விடத்தில் கவர்ன்மெண்டார் சுங்கங்கள் ஏற்படுத்தலாம் என்பதே. முதல் பார்வையில் இது ஹிம்சைசெய்யாததென்று தோன்றும். அவ்விதம் இருக்கவேண்டுமானால் லோகல் கவர்ன்மெண்டார் இந்த முறையை அதிகமாக கையாடாமல் இருக்கவேண்டும். ஸெலக்ட் கமிட்டியில் கவர்ன்மெண்டுக்கு பொதுவாக அவர் செய்யும் நன்மையைக் கருதி இவ்விஷயத்தில் சற்று சுதந்திரம் கொடுக்கவேண்டுமென்று எண்ணினாலும் கவர்ன்மெண்டார் இவ்விதியை அதிகமாக உபயோகப்படுத்தல்கூடாது. அதனால் மட்டுமே இந்த சட்டத்தினால் அதிக நன்மை உண்டாகும்.

தற்காலம் சுங்கத்தீர்வையிலிருந்துண்டாகும் ஏராளமான வரும்படி முற்றிலும் மறைந்தால் கவர்ன்மெண்டார் எவ்விதம் அவ்வரும்படியை பெறுவார்களென்று நமது நேயர்கள் எண்ணலாம். கவர்ன்மெண்டாரின் உத்தேசமானது மோட்டார் வண்டிகளின்மேல் மாகாணத்தீர்வை ஒன்று ஏற்படுத்துவதே ஆகும். ஷெடூல் II-ல் இத்தீர்வை விவரம் குறித்துள்ளது. பாரமேற்றாலும், "நியூமாட்டிக் டயர்களில்லாமலும்," 4-டண் நிறைக்கு அதிகப்படுகின்ற மோட்டார் வண்டி ஒன்றின்மேல் அரை வருஷத்திற்கு 850 ரூபாயே அதிகமான தீர்வையாகும். இதற்கு உயர்ந்த தீர்வை விதிக்கப்படமாட்டாது. மோட்டார் லாரிகளுக்கும், வாடகைக்கு விடுகிற மோட்டார் வண்டிகளுக்கும் லைசன்சு பீஸ் பெறுவதற்கு இப்பொழுது முனிசிப்பாலிட்டிக்கும் ஜில்லா போர்டுக்கும் என்னென்ன அதிகாரம் இருக்கின்றனவோ, அதெல்லாம் இந்த சட்டத்தின் பின்னும் இருக்கும் இவைக்கதிகப்படியாக பெட்ரோல் தீர்வையும் ஏற்படும். ரஸ்தாக்களுக்கும் போக்கு வரவுக்கும் தேவையான செலவுகளெல்லாவற்





றிற்கும் மேல்சொல்லப்பட்டத் தீர்வைகள் வேண்டிய வருமானம் அளிக்குமென்று கவர்ன்மெண்டார் நம்புகிறார்கள்.

சென்னை லோக்கல் போர்ட்ஸ் ஆக்ட் 166-வது செக்ஷன்படியும், சென்னை ஜில்லா முனிசிப்பாலிட்டிச் ஆக்ட் 174 (A) செக்ஷன்படியும் ரஸ்தாபீஸுகளாக வாடகைக்கு விடப்படுகிற (மோட்டார்) வண்டிகளுக்கு தீர்வைகள் விதிக்கப்படுகின்றன. இத்தீர்வைகளையும் மாகாண வண்டித் தீர்வையில் சேர்க்கலாமா என்பதை கவர்ன்மெண்டார் கவனித்ததாக அவர்கள் தங்களுடைய உத்தேசங்களையும் காரணங்களையும் குறிப்பிடுகிற அறிக்கையில் சொல்லுகிறார்கள். ஆனால் ஒவ்வொரிடத்திலும், நிலைமை வெவ்வேறாய் இருக்கின்றது. அதனால் எல்லா இடங்களுக்கும் ஒரேவிதமான சரியான கணக்கு கிடைப்பது கஷ்டமாக இருந்ததே இதற்கு காரணமென்றும் சொல்லுகிறார்கள். கவர்ன்மெண்டாருடைய முற்கூறிய கொள்கையை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. சில இடங்களில் ஜில்லா போர்ட் லைசன்ச் பீஸுகள் மிக்க கொடுமை விளைக்கின்றன. இத்தீங்குக்கு மருந்தொன்று தேடுவது அவசியம். "காற்றுள்ளபோது தூற்றிக்கொள்" என்று சொல்வது வழக்கமே. இச்சந்தர்பத்தைத் தவற விடுவோமானால் வாடகைக்கு ஓட்டுகிற மோட்டார் வண்டி உடமஸ்தர்கள் இதைப்போன்ற சமயம் பெறமாட்டார்கள். ஒவ்வொரு பிரதேசமும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கின்றது என்பது பெரிய உண்மையே. ஜில்லா போர்டுகள் தங்கள் மனம் போனபடி தீர்வை விதிக்கிறார்கள். இந்த மசோதாவை கொண்டுவந்துள்ள மந்திரி அவர்கள் ஒரு ஜில்லா போர்ட் பிரசிடெண்டாக வெகுகாலம் அனுபோகமுடையவர்; அவ்வேலையில் பேருதவி செய்தவரென்று புகழ் அடைந்தவர்; இப்பொழுது மிகவும் துன்பமடைந்திருக்கிற பஸ் முதலாளிகள் இந்த ஜில்லா போர்ட் ரஸ்தாபீஸைப்பற்றிய ஒரு புதுத்தீர்மானத்தை மந்திரி அவர்கள் கொண்டுவருவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்த கஷ்டத்தை இன்னும் பெருகவிடாமல் எல்லோருடைய நன்மையையும் உத்தேசித்து சட்டசபை முடிவாக திட்டம் செய்யவேண்டும். இந்த பீஸுகளை மாகாணத்தீர்வையில் சேர்க்கவேண்டும். ஸெலக்ட் கமிட்டி இவ்விஷயத்தில் தமது அபிப்பிராயத்தை வெளியிடுவார்களென்றும் இம்மசோதாவில் இவ்விஷயமும் அடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்வார்களென்றும் நாம் நம்புகிறோம்.

இந்த சந்தர்பத்தில் போலீச் சிப்பாய்களுக்கு கொடுக்க நிச்சயித்திருக்கும் அதிகாரங்களை குறித்து கண்டிக்கவேண்டியது மிக்க அவசியமாகும். மோட்டார் வண்டிகளின்மேல் விதிக்கப்படுகிற தீர்வையைப் பற்றி அனேக நியமங்களும் இந்த மசோதாவில் அடங்கி இருக்கின்றன. தீர்வை முன்னதாகவே கொடுக்கவேண்டும். நிலத்தீர்வையின் பாக்கியை

எவ்வாறு வசூல் செய்யப்படுகிறதோ, அவ்விதமே இந்த தீர்வை பாக்கியையும் வசூல் செய்யப்படும். ஏதேனும் மோட்டார் வண்டிக்காக கொடுக்கவேண்டிய தீர்வையானது கொடுக்காவிட்டால் அந்த வண்டியின் சொந்தக்காரனோ, அல்லது, யாருடைய ஆளுகையிலோ, அல்லது, அதிகாரத்திலோ இருக்கிறதோ அவன் 100 ரூபாய்வரை அபராதத்திற்குட்படுவான். ரிஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தருக்கு அந்த மோட்டாரை பலவந்தமாக பறிமுதல் செய்யவும் தமதிடம் வைத்துகொள்ளவும் அதிகாரம் கொடுத்திருக்கின்றது. இத்தகைய அதிகாரங்கள் அவசியமோ, அல்லது, தகுந்ததோ, என்பது மிகவும் கவனிக்கவேண்டிய விஷயமாகும். இதற்கும் மேலாக எல்லா போலீச் அதிகாரிகளுக்கும் ஒடுகிற எந்த மோட்டாரையும் தடுத்து நிறுத்தி அதில் பகிரங்கமான ஒரு ஸ்தலத்தில் வைக்கவேண்டிய தீர்வை லைசென்சை பரிசோதிக்கும் அதிகாரமும் கொடுக்கப்படுமானால் மிக்க தொந்தரவுகள் நேரிடும் என்பதில் ஐயமில்லை. இந்த நியமத்தையேனும் எவ்விதத்திலும் மாற்றவேண்டியது அவசியம்.

மேலும் இந்த மசோதாவின்படி தீர்வையை குறைக்கும் அதிகாரத்தை லோக்கல் கவர்ன்மெண்டின் ஆளுகையில் முற்றிலும் விடப்பட்டிருக்கின்றன. இது தவறு. இந்த விஷயத்தைப்பற்றி சட்டத்தில் தானே பொதுவாக நியமங்கள் இருக்குமானால் நலம்

இந்த மசோதா இன்னும் சட்டமாகாததினால், கவர்ன்மெண்டார் கொஞ்ச நாட்களுக்கு முன் முனிசிப்பாலிட்டிகளுக்கும் லோக்கல் போர்டுகளுக்கு மிட்டுள்ள உத்தரவில் 1932௵ மார்ச்சுமாதம் 31உக்கு மேற்பட்ட ஏற்பாடுகள் ஒன்றும் செய்யக் கூடாதென்று அவர்களை எச்சரிக்கை செய்துள்ளார்கள். மேலும் இந்த சட்டமானது அமுலுக்கு வரும்பொழுது ஏதாவது கண்ட்ராக்டர்களுக்கு கண்ட்ராக்ட் காலத்திற்குள் ஏதேனும் நஷ்டங்கள் ஏற்படுமானால் அந்த நஷ்டம் அவர்களுக்கு ஈடு செய்யப்படும்.

நாம் இந்த மசோதாவை மனமாற அனுக்கிரகம் செய்கிறோம். அனாவசியமான காலதாமதமின்றி இந்த மசோதா சட்டமாகுமென்று நாம் நம்புகிறோம்.

---



## பத்திராதிபரின் குறிப்புகள்

சீர்திருத்தப்பட்ட பஞ்சாயத்து சட்டத்தினால் உண்டாகும் பயனைப்பற்றி சிலபேருக்கு மிக்க அவநம்பிக்கை இருக்கின்றது. இப்பொழுது பஞ்சாயத்துக்களின் ரிஜிஸ்டிரார் ஜனரல் என்ற உத்தியோகமானது நீக்கப்பட்டதினால், அவருடைய சோலிகளெல்லாம் தாலுக்கா போர்டுகளிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறதாக அவர்கள் நினைக்கிறார்கள். இது ஒரு தப்பிதமான அபிப்பிராயம். இப்போது பஞ்சாயத்துக்களெல்லாம் லோக்கல் போர்டுகளாகிவிட்டன. பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜனரலுக்கு பஞ்சாயத்துக்கள்பேரில் எந்தெந்த பொறுப்புகள் இருந்தனவோ, அவை எல்லாம் லோக்கல் போர்டு இன்ஸ்பெக்டருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. ரிஜிஸ்டிரார் ஜனரல் மூலமாக பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கப்பட்ட கவர்ன்மெண்டாரின் பொருளுதவி இப்புதுச் சட்டத்தின் கீழ் நின்றுவிடப் போகிறதில்லை. இவ்விஷயத்தில் லோக்கல் போர்ட் இன்ஸ்பெக்டரானவர் ரிஜிஸ்டிரார் ஜனரலைப் போலவே அதிகாரம் செலுத்துவார். இக்காரணங்களினால் இவ்விஷயத்தில் கவலைக்கு கொஞ்சமும் இடம் இல்லை. பஞ்சாயத்துக்களை ஸ்தாபிப்பதிலும் லோக்கல் போர்ட் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் ஒன்றுமில்லாமல் போகவில்லை. கௌரவ ஆர்கனைசர்களின் நிலை இப்பொழுதும் சற்றும் மாறவில்லை. முன்னாலோசனைப்படி ஜில்லா பஞ்சாயத் ததிகாரிகளுக்கு கவர்ன்மெண்டார் சம்பளம் கொடுக்கிறதாயிருந்தால் லோக்கல் போர்ட் இன்ஸ்பெக்டர் முன்போலவே அவர்களிடமிருந்து வேலைவாங்கவேண்டியதாக இருக்கும். சீர்திருத்தப்பட்ட சட்டத்தில் பௌண்டுகள், பொதுப்புறம் போக்குகள், சுத்த ஜலகுளங்கள், நீர்ப்பாய்ச்சலையும் குடிமராமத்து வேலைகளையும் கவனிப்பது, இவைபோன்றவேலைகளை பஞ்சாயத்துக்களின் ஆளுகைக்கு கொடுப்பதற்கு வேண்டிய நியமங்கள் இல்லை என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இது சரியல்ல. இவ்விஷயமாக கவர்ன்மெண்டாரிட்டிருக்கும் அறிக்கைகளுக்கு ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. மேலும் 470 யூனியன் போர்டுகள் லோக்கல் போர்டுகள் ஆக்டின் கீழ் இதுவரை இருந்ததால் இவ்விஷயங்களில் அதிகாரம் ஒன்றுமில்லாமல் இருந்தன. இப்புதுச் சட்டத்தின்படி அவைகளுக்கும் எல்லா பஞ்சாயத்துகளைப் போலவே அதிகாரம் பெறலாம். ஆனால் 1920வருஷ கிராமப் பஞ்சாயத்து சட்டத்தின்கீழ் எவ்விதம் கவர்ன்மெண்ட் டிப்பார்ட்டுமெண்டாரும் கலக்டர்களும் அனுதாபமில்லாதவர்களாக இருந்தார்களோ, அதுபோலவே இப்பொழுதும் அவர்கள் இருக்க இடமுண்டு. இது சீர்திருத்தப்பட்ட சட்டத்தின் பயனல்ல. சுகாதாரம் ஜலவசதி, முதல்போன்ற விஷயங்களை குறித்துள்ள நியமங்களெல்லாம்

பட்டணங்களுக்கே பொருந்துமென்றும் பஞ்சாயத்துகளுக்கு தேவை இல்லை என்றும் சிலர் எண்ணுவார்கள். பட்டணங்களைப்போன்ற அனேகம் பஞ்சாயத்துகள் நமது மாகாணத்தில் இருக்கின்றன. அதனால் இவ்விதிகள் பட்டணங்களின் நிலைமை பெற்ற பெரிய கிராமப் பஞ்சாயத்துக்களுக்கே பொருந்தும். நாளடைவில் கவர்ன்மெண்டார் கிராமப் பஞ்சாயத்துக்களுடையவும் பட்டணப் பஞ்சாயத்துக்களுடையவும் வித்தியாசங்களை உணர்ந்து அவற்றிற்கு தனித்தனியாக உசிதமான விதிகளை ஏற்படுத்துவார்களென்று நாம் நினைக்கலாம். பழய சட்டத்தின்படி கிராமத்தாரிடமிருந்து ஊழிய வேலை வாங்க பஞ்சாயத்துகளுக்கதிகாரமுண்டாயிருந்ததென்றும் அந்த அதிகாரம் இப்புதுச்சட்டத்தில் இல்லாமல்போய் விட்டதென்றும் சிலர் சந்தேகிக்கிறார்கள். ஆனால் இப்பொழுது கிராமத்தின் ரஸ்தா, கட்டடங்கள் இவைகளுக்காக கிராமத்தாரிடமிருந்து சிறு தீர்வை ஏற்படுத்தலாம். இத்தீர்வையை எல்லோரிடமுமிருந்து பணமாக வசூல் செய்யவேண்டுமென்பதில்லை. தீர்வை கொடுக்கமுடியாதவர்கள் பொதுக்காரியத்திற்காக தமது மெய்யால் ஊழியம்செய்து தம்கடமையை நிறைவேற்றும் சௌகரியமும் ஏற்படுத்தலாம். இதற்கு சட்டம் தடைசெய்யாது. எலக்ஷனைப்பற்றியும் கணக்குகளைப்பற்றியும் சீர்திருத்தப்பட்டசட்டமானது அதிருப்திகரமென்ற அபிப்பிராயத்துடன் நாம் இசைகிறோம். இந்த சட்டத்தின் கீழிலும் சாதாரண பஞ்சாயத்துக்கள் கணக்கு வைக்கும் முறை இன்னும் இலகுவாக்குவார்களென்றும், பஞ்சாயத் தெலக்ஷனில் வயதுவந்த எல்லோரும் வோட்டுருமை கொடுப்பதற்கு வேண்டிய சீர்திருத்தங்கள் கூடியசீக்கிரத்தில் கொண்டுவரப்படுமென்றும் நாம் நம்புகிறோம். இந்த ஆக்டானது இதைவிடத் தெளிவாகவும் தாராளமாகவுமிருக்கலாமென்ற அவர்களுடைய அபிப்பிராயத்தில் நாமும் இசைகிறோம். மேலும் சுய ஆட்சி கட்டடமானது இப்போது அவ்வளவு சரியாக கட்டி இருக்கவில்லை என்றே நாம் எண்ணுகிறோம். பஞ்சாயத்துக்களுக்கு அதற்கு மேலான ஸ்தாபனங்களில் சரியான பிரதிநிதித்வம் கிடைத்திருந்தால் மிகவும் நன்றாயிருக்கும். இந்த குற்றம் குறைவுகள் இருந்தபோதிலும் புதுச் சட்டமானது சரியாக நடத்தப்பட்டால் சுய ஆட்சி முன்னேற்றத்திற்கு வேண்டிய உதவி நிச்சயமாக செய்யுமென்று நாம் நம்புகிறோம்.



## சர்க்காரைச் சேர்ந்த தரிசு நிலங்களின் விற்பனை.

மாகாணத்திலுள்ள ஜலமாராமத்து வேலையினாலே தற்காலத்திலாவது அல்லது வருங்காலத்திலாவது நன்மை ஏற்படுகிற சர்க்கார் தரிசு நிலங்களை விற்பனை செய்கிற விஷயமாகப் போர்ட் செண்ட்ஜார்ஜ் கெசட்டில் அரசாங்கத்தார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜல மராமத்து ஏற்பாடாவது ஏற்பாடுகளாவது அரசாங்கத்தாரால் அட்டவணையாகத் தாக்கலாகி வந்திருக்கிறது. ஒவ்வொரு ஜல மராமத்து ஏற்பாட்டினாலும் சம்பந்தப்படுகிற கிராமங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கிராமங்களில் நிலங்களை விபாகித்துக் கொடுப்பது அரசாங்கத்தார் மறுபடியும் அந்த நிலங்களை தங்களுக்கு இஷ்டமானபோது சுதந்தரித்துக் கொள்வதற்கான உரிமையைபொறுத்திருக்கிறது. தற்காலத்திலும் வருங்காலத்திலும் பிரித்துக்கொடுக்கிற நிலங்களெல்லாம் பிற்காலத்தில் அரசாங்கத்தாரால் பிரித்து கொடுக்கப்பட்டவர்களுக்கே சொந்தமென்று விளம்பரம் செய்யப்படும். இந்த இடங்களிலுள்ளதாகிய நிலங்களை மீண்டும் எடுத்துக் கொள்வது ஜல மராமத்து வேலைகளுக்கு உபயோகப்படுத்தும் நோக்கத்தோடேயாம். ஆகையால், சர்க்கார் மறுபடியும் நிலங்களைச் சுவீகரித்துக் கொள்ளும் பொழுது நிலங்களில் அவர்கள் கைபற்றிக் கொள்ளுகிற பாகத்திற்குரிய கிரயத்தையாவது அல்லது முழுநிலத்தின் கிரயத்தையாவது கொடுக்க ஆயுத்தமாயிருக்கும் பொழுது அவர்கள் அந்த விதமாக சுவீகரித்துக்கொள்வதற்கு முன்னதாக அந்த நிலங்களிலே ஏற்பட்டிருக்கிற எந்த விதமான சீர்திருத்தங்களுக்கும் பணம் ஈடாக செலுத்தும் பொறுப்பு அவர்களுக்கு இல்லை. (பக்கம் 1864 போர்ட் செண்ட் ஜார்ஜ் கெஜட் 16ந்தேதி டிசம்பர் 1930 G.O. 2292 ரெவின்யூ.) கிராமங்களின் பெயர்களை கொடுத்திருக்கிற அட்டவணையில் கர்னூல் ஜில்லாவில் தோகப்பள்ளி ப்ராஜக்டின் கீழ் 8 கிராமங்கள் காணப்படுகின்றன. சமீபத்தில் வெளிவந்த ஒரு G.O-வில் இந்த ப்ராஜக்ட்டு ரத்து செய்திருக்கிறது. இந்தக் கிராமங்களின் பெயர்கள் இந்த அட்டவணையில் ஏன் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பது நம்முடைய அறிவிற்கு நன்றாய்ப் புலப்படவில்லை. இதைப்போன்ற பல உதாரணங்கள் இன்னமும் இருக்கலாம். சில கிராமக் குடியானவர்கள் தங்களுக்குச் சமீபகாலங்களில் எப்பொழுதுமே எந்த விதமான ப்ராஜக்ட்டுகளும் காணக் கூடாதிருக்கையில் அனாவசியமாக அவர்கள் கஷ்டப்படுகிறதைத் தவிர்க்கும்படியாக கவர்மெண்டார் தங்கள் கிராம அட்டவணையை மறுபடியும் நன்றாகத் திருத்தி வெளியிடுவார்களானால் மிகவும் நன்றாயிருக்கும்.

## சீர்திருத்தப்பெற்ற துங்கபத்ரா ப்ராஜக்ட்.

1930-ம் வருஷம் நவம்பர் மாதம் 28-ம் தேதி ஜி. ஓ. நம்பர் 2292 ரெவினியூவில் இந்த மாகாணத்திலுள்ள பல ஜில்லாக்களில் ஏற்பாடாகி வருகிற ஜல மராமத்து ப்ராஜக்டினால் நன்மை பெற்றிருப்பனவும், இனி வருங் காலத்தில் நன்மைபெற இருப்பனவும், ஆன கிராமங்களின் பெயர் அட்டவணையைப் பார்க்கும்பொழுது, வெகு சீக்கிரம் துங்கபத்ரா (கிருஷ்ணா) ரிசர்வாயர் ப்ராஜக்ட் ஏற்படபோகிறது என்ற நம்பிக்கை எழுகிறது. அந்த அட்டவணையின்படி சீர்திருத்தப்பெற்ற துங்கபத்திரா ப்ராஜக்ட் ஒன்றினால் மட்டுமே ஐந்து ஜில்லாக்களிலுள்ள 1440 கிராமங்கள் நன்மை பெறமுடியும்.

| சீர்திருத்தப்பெற்ற துங்கபத்ரா ப்ராஜக்ட். | ஜில்லா. | நன்மை பெறும் கிராமங்களின் தொகை. |
|---|---|---|
| ,, | அனந்தப்பூர் | 208 |
| ,, | பல்லாரி | 517 |
| ,, | கடப்பா | 201 |
| ,, | கர்னூல் | 246 |
| ,, | குண்டூர் | 268 |

கடப்பா கர்னூல் கெனல், வெல்கோட் ப்ராஜக்ட், செப்பாட் மேடுகூர் சேனல்களும் பலப்படுத்துவதினால் ஏற்படும் குணங்களையும், சீர்திருத்தப்பெற்ற துங்கபத்ரா ப்ராஜக்டின் குணங்களோடு சேர்ப்போமானால் சுமார் இன்னும் 120 கிராமங்களையும் சேர்க்கவேண்டியிருக்கிறது. அப்படியானால் 1500 கிராமங்களில் உள்ள பிரதேசங்களில் விவசாய முன்னேற்றத்திற்குத் தடை உண்டாகுமாறு நிலங்கள் அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

சர்க்கார் இந்தப் ப்ராஜக்ட்களின் முழுநிலைமையையும் சீர்திருத்தப்பெற்ற துங்கபத்ரா ப்ராஜக்ட்களினால் உண்டாகக்கூடிய வருங்கால நன்மை இவ்வளவு என்று திட்டமாய்க் கணக்கிட்டு நிதானித்த பிறகே இப்பொழுது சொல்லப்பட்ட ஜீ. ஓவை வெளியிட்டிருக்கிறார்கள் என்று நாம் நம்புகிறோம்.

சென்ற நாலைந்து வருடங்களாக சீர்திருத்தப்பெற்ற துங்கபத்ரா ப்ராஜக்ட் எவ்வளவு தூரம் நன்மைகொடுக்கும் என்பதைப்பற்றி ஆராய்ச்சியிலிருந்தது. நெடுங்காலமாக காரியங்களைத் தாமதப்படுத்துவதும் பல வருடங்களாக விவசாய சீர்திருத்த முயற்சிகளைத் தடுப்பதும் மிகவும் அசௌகரியமாக இருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்பொழுதாவது இந்தத் துங்கபத்ரா ப்ராஜக்டை பிரத்தியட்சப்படுத்தி யதார்த்தமாகத் தேவையான முறைகளைச் சீக்கிரம் செய்யக்கோருகிறோம்.

---



## பஞ்சாயத்தாரும்—அவர் எலெக்ஷனும்.

ஒரு கிராமம் அல்லது ஒரு கிராமத்தின் ஒரு பாகம் அல்லது சில கிராமங்கள் சேர்ந்து, தகுந்த முறையில் முன்னறிக்கை கொடுத்த பிறகு பஞ்சாயத்து ஆட்சிக்காக, ஒரே கிராமமாகக் கொள்ளப்படலாம். இவ்விதம் குறிக்கப்பட்ட ஏரியாவானது ஒரே ரிவினியு தாலூக்காவின் உள்ளடங்கியதாகவிருக்கவேண்டும். இவ்விதம் அமைத்து முறை செய்வது ஸ்தலஆட்சியின் அதிகாரத்தைச்சேர்ந்ததாகும். இவ்விதம் ஏற்படுத்தப்பட்ட கிராமங்களின் அமைப்பை மாற்றுவதற்கோ அல்லது எடுத்துவிடுவதற்கோ உள்ள அதிகாரமும் ஸ்தல கவர்ன்மெண்டதேயாம். அவ்விதம் செய்வதற்கு முன்னதாக பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துக்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை அறிவித்துக்கொள்ள வேண்டிய சாதகங்கள் யாவும் செய்யப்பட வேண்டும். (சீர்திருத்தப்பட்ட சென்னை லோக்கல் போர்ட் சட்டம். செக்ஷன் 5.)

இவ்விதம் அமைக்கப்பட்ட கிராமத்தின் பஞ்சாயத்து மெம்பர்களின் தொகை கூடுதல் 16 முதல் குறைந்தது 8 வரை இருக்கலாம். (செக்ஷன் 7.) ஸ்தல கவர்ன்மெண்ட் ஒரு அறிக்கையால் பஞ்சாயத்து மெம்பர்களின் தொகையைத் தெரியப்படுத்தும். (செக்ஷன் 10) என்றாலும் பஞ்சாயத்துக்கள் அசாதாரண விசேஷக் கூட்டங்களில் $\frac{3}{4}$ மெஜாரிட்டி வோட்டுபெற்று, கவர்ன்மெண்டின் அநுமதி பெற்றபிறகு பஞ்சாயத்தாரின் தொகையை வேண்டுமானால் மாற்ற உரிமையுண்டு.

எல்லா பஞ்சாயத்து மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். (செக்ஷன் 8.) ஆதிதிராவிடர்களுக்காகத் தனியான ஸ்தானங்கள் பிரித்து வைக்கக் கவர்ன்மெண்டுக்கு உரிமையுண்டு. (செக்ஷன் 8) அவ்விதம் பிரித்துவைக்கும் ஸ்தானங்கள் மொத்தத் தொகையில் நான்கில் ஒரு பங்குக்கு அதிகப்படக் கூடாது. இவ்விதம் ஸ்தானங்கள் ஆதித்திராவிடர்களுக்கென்றே பிரித்துவைக்கப் படுவதாலும், இவ்விதம் பிரிப்பதால் மட்டும் ஆதித்திராவிடர்கள் பிரித்துவைக்கப்படாத ஸ்தானங்களுக்கு எலெக்ஷனில் மெம்பர்களாக நிற்பதினின்றும் தடுக்கப்படாதபடியாலும், பிரித்துவைக்கப்பட்ட நான்கில் ஒருபங்கு ஸ்தானங்களுக்கு ஆதித்திராவிடர்கள் மட்டுமே நிற்கலாம் என்று கொள்ளவேண்டும். பிரித்து வைக்கப்பட்ட ஸ்தானங்கள், பிரித்து வைக்கப்படாத ஸ்தானங்கள் ஆகிய எல்லா ஸ்தானங்களுக்கும் எல்லா வாக்காளர்களும் வாக்களிக்கலாம். எலெக்ஷனுக்காகக் கிராமங்களை வார்டுகளாக (வேண்டுமானால்) ஸ்தல கவர்ன்மெண்டுகள் பிரித்துக்கொள்ளலாம். இங்ஙனம்

செய்வது பஞ்சாயத்தின் ஆலோசனையின்மேல் செய்யவேண்டும். ஆதித்திராவிடர்களுக்காக ஸ்தானங்கள் பிரித்துவைக்கப்படுமானால், அவர்களுக்கு வோட் செய்யவேண்டிய வார்டுகளும் மேற்கூறிய விதமே தீர்மானிக்கப்படும். (செக்ஷன் 10.). இந்தத் தனித்த வார்டுகளுக்கு பிரித்துவைக்கப்பட்ட ஸ்தானங்களல்லாமல் மேலும் ஒன்று அல்லது அதிகப்பட்ட ஸ்தானங்களும் தெரிந்தெடுக்கப்படுவதற்காகக் கொடுக்கப்படலாம். மற்ற எல்லா வார்டுகளும் ஒவ்வொன்று ஒவ்வொரு மெம்பர் வீதம் தேர்ந்தெடுக்கவேண்டும். (செக்ஷன் 49.) ஏற்கெனவே இருக்கும் வார்டுகளில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டுமானால் அது அடுத்த பொதுத் தேர்தலுக்கு மாத்திரமே உபயோகப்படுத்தலாம். இவ்விதம் வார்டுகளை மாற்றி அமைக்கும்பொழுது, எலெக்ஷனை நடத்துவதற்கு குறிக்கப்பட்ட அதிகாரம் வாய்த்தவர், ஸ்தல கவர்ன்மெண்ட் அநுமதிப்பதற்குட்பட்டு, பழைய மெம்பர்களை வார்டுகளுக்கு நிறுத்துவார்.

அதற்கென்றே குறிப்பிடப்பட்ட அதிகாரியாலேயே எலெக்ஷன் ஜாபிதாக்கள் தயார் செய்யப்படும். அந்த ஜாபிதாக்களை, எலெக்ஷன் வருகிற வருஷம் ஜூன்மாத முடிவிற்குள் குறிக்கப்பட்டவகையில் பிரசுரிக்கப்படும். திருத்தி அமைத்தல் ஒவ்வொரு வருஷத்திலும் ஜூன் மாத முடிவிற்குள் நடைபெறவேண்டும். எங்கெங்கே வார்டுகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் எலெக்ஷன் ஜாபிதாக்கள் வார்டு வாரியாக வகுக்கப்படும். புதிய ஜாபிதாக்கள் ஆதிக்கத்தில் வரும் வரையிலும் பழைய ஜாபிதாக்களே ஆதிக்கத்தில் இருக்கும் (செக்ஷன் 51.)

எலெக்ஷன் ஜாபிதாவில் காணப்படாதபெயர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் மெம்பர்களாக நிற்கவும் உரிமையற்றவர்கள் (செக்ஷன் 51 & 54)

எலெக்ஷன் ஜாபிதாவில் சேர அருகதையுள்ளவர்கள் ஆகவேண்டுமானால் அவர்கள் :—

(1) பிரிட்டிஷ் பிரஜையாகவோ அல்லது ஒரு இந்திய சுதேச இராஜ்யப் பிரஜையாகவோ இருக்கவேண்டும். வேறு தேசத்தனவர்களாயிருந்தால் அவர்கள் ஸ்தல கவர்ன்மெண்டிடமிருந்து (எக்ஸெம்ப்ஷன்) அனுமதி பெற்றிருக்கவேண்டும்.

(2) எலெக்ஷன் ஜாபிதா பிரசுரிக்கப்படும் வருஷத்திற்கு ஒரு வருடம் முந்தியே தம் 21-வது வயதை அடைந்தவர்களாயிருக்க வேண்டும்.

(3) எலெக்ஷன் நடக்கும் வருஷத்திற்கு முந்தின வருஷத்தில் குறைந்தது 120 நாட்களாவது அந்தக் கிராமத்தில் வசித்திருக்க வேண்டும்.





(4) முந்தின வருஷத்தில் அவர் இந்திய கவர்ன்மெண்டுக்கு ஏதாவது வரி செலுத்தியவராயிருக்கவேண்டும்; அல்லது சென்னை மாகாண கவர்ன்மெண்டுக்கோ, அல்லது அதன் கீழுள்ள ஸ்தல கவர்ன்மெண்டுகளுக்காவது (அதாவது முனிஸிப்பாலிட்டி, லோகல்போர்டு, பாளையம் (கண்டோன்மெண்டு) இவைகள்போன்ற ஏதாவது அதிகாரம் பெற்ற ஸ்தாபனத்திற்காவது வரி செலுத்தியிருக்கவேண்டும்; அல்லது அவர், ரிஜிஸ்தர் செய்யப்பட்ட பட்டாதாராகவோ அல்லது இனாம்தாராகவோ இருக்கவேண்டும்; அல்லது எழுத்து மூலமான அடையோலையின்பேரில் அந்தக் கிராமத்துப் பட்டாதாரிடமோ அல்லது இனாம்தாரிடமோ குத்தகைக்காரராக இருக்கவேண்டும்; அலலது, பட்டாதார் அல்லது இனாம்தாரிடம் வாடகைக்கு வசிப்பவராகவிருக்கவேண்டும்; அல்லது 1895-ம் வருஷத்து மலபார் லாண்ட் ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட் 14-வது ஸெக்ஷன்படி, அந்தக் கிராமத்து நிலத்தை உபயோகிக்கிறவராக அந்நிலத்தின் சொந்தக்காரரோடு கூடச்சேர்த்து ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கவேண்டும்; அல்லது சென்னை மாகாண 1908-ம் வருஷ எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின்கீழ், அந்தக் கிராமத்தில் நிலசுவதனாக ஏதாவது எஸ்டேட் வைத்திருக்கவேண்டும்; அல்லது உபகாரச் சம்பளம்பெற்ற அல்லது ரிட்டையர்டு ஆபீஸராகவிருக்கவேண்டும். அல்லது சக்கிரவர்த்தியின் துருப்புகளில் ஒருநாண் கம்மிஷண்ட் ஆபீஸராகவாவது சிப்பாயாகவாவது இருக்கவேண்டும். (3-வது ஷெட்யூல் 1-வது ரூல்); அல்லது, கம்பெனி அல்லது அசோசியேஷனின் பிரதிநிதியாக இருக்கவேண்டும்; அல்லது அவிபக்த குடும்பத்தாராகவாவது அல்லது ஜாயின்ட் பட்டாதாராகவாவது இருக்கவேண்டும். (ஷெட்யூல் 3, ரூல் 4.)

(5) அவர், பைத்தியக்காரனாகவாவது, செவிட்டூமையாகவாவது அல்லது குஷ்டரோகியாகவாவது இருக்கக்கூடாது.

(1) ஆறு மாதத்திற்கு அதிகமான காலவரை யறையுள்ள கிரிமினல் தண்டனை அடைந்தவரும், நாடு கடத்த விதிக்கப்பட்டவரும், பஞ்சாயத்து ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுக்கக்கூடாது. இந்த நிபந்தனை தண்டனை நிவிர்த்தியான நாள் முதல்கொண்டு ஐந்து (5) வருஷ காலம்வரையே உள்ளது. தண்டனை ராஜீய விஷயங்களுக்காக இருந்தாலும், கெட்ட நடவடிக்கைகளால் ஏற்படாமல் இருந்தாலும், தண்

டனை யில்லாது மன்னிப்புப் பெற்றாலும் லோகல் கவர்ன்மெண்ட் உத்தரவு கொடுத்தாலும், இந்த விதி கட்டுப் படுத்தாது.

(2) அல்லது, நாமினேஷன் தேதியில் பைத்தியம் கொண்டவரா யிருந்தாலும், செவிடு ஊமையாயிருந்தாலும் தேர்தலுக்கு அருகதையற்றவராவார்.

(3) அல்லது, இன்ஸால்வெண்டாகி, கணக்குகள் சீர்படுத்த வேண்டிய நிலையிலிருந்தாலும், இன்ஸால்வெண்ட் ஸர்டிபிகேட் பெறாமல் இன்ஸால்வெண்ட் ஆனாலும், அருகதை யற்றவராவார்.

(4) அல்லது, ஏதாவது ஒரு கம்பெனியில் பாகஸ்தாரயில்லாமல் பஞ்சாயத்தோடு தற்காலம் ஏதாவது கண்ட்ராக்ட் சம்பந் தப்பட்டவராயிருந்தாலும், அருகதையற்றவராவார்.

(5) அல்லது, பஞ்சாயத்திற்காகவாவது அல்லது அதற்கு எதி ராகவாவது, வக்கீலாக இருந்தாலும், அருகதை யற்றவ ராவார்.

(6) லோக்கல் போர்ட் ஆக்டின்கீழ், உத்தியோகஸ்தாகவோ அல்லது வேலையாளாகவோ இருந்தாலும் பஞ்சாயத்தில் தேர்தலுக்கு அருகதையற்றவராவார்.

(7) கிராமத்தில் ஒரு கௌரவ மாஜிஸ்திரேட் ஆனாலும் அரு கதையற்றவராவார்.

(8) எலெக்ஷன் ஊர்ஜிதமாகும் தேதியில் அவர் ஏதாவது லோகல்போர்டு மெம்பராயிருந்தாலும் புதிதாக லோகல் போர்டுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டாலும் அருகதையற்ற வராவார்.

(9) அல்லது ஷை தேதியில், தெரிந்தெடுக்கப்பட்ட ஏதாவ தொரு மெம்பரின் கீழ் வேலையாளாகவோ அதிகாரமுறை யில் கீழ்ப்பட்டவராகவோ அல்லது, எஜமானராகவோ, அதிகாரமுறையில் எஜமானராகவோ இருந்தாலும் அரு கதையற்றவராவார். (செக்ஷன் 55.)

(10) அல்லது கிராமத் தலைவனாகவல்லாமல் வேறு ஏதேனும் முழுச்சமய கவர்ன்மெண்டதிகாரியாயிருந்தாலும் அரு கதை யற்றவராவார்.

(11) அல்லது எலெக்ஷன் தவறுகளுக்காக குற்றஞ் சாட்டப் பட்டவராக இருந்தாலும் அருகதையற்றவராவார்.

காலி ஸ்தானங்கள் ஏற்படுவதற்கு முன்வரும் ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில், அதற்கென்று குறிப்பிட்ட அதிகாரம் பெற்ற





வரால் எலெக்ஷன் நடத்தப்படும் கவர்ன்மெண்ட் உத்தரவின்மேல் செப்டம்பர் மாதத்திலும் எலெக்ஷன் நடத்தலாம்.

பஞ்சாயத்து மெம்பராக ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டபின், தம்முடைய பதவியை இராஜினாமா செய்யாதிருந்தாலும், அல்லது இறந்துபோகாதிருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்டபின் மூன்று மாதங் களுக்குள் ராஜவிசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டாலும், வேறெவ் வகையிலும் (56வது செக்ஷனில் கண்டபடி) உரிமையற்றவராகாம லிருந்தாலும் பஞ்சாயத்து கலைந்தோ அல்லது மாற்றப்படாமலோ இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள், நவம்பர் மாதம் முதல் தேதி பன்னிரண்டு மணிக்குத் தொடங்கி அதே வேளையில் முடிகிற மூன்று வருஷ காலம் மெம்பர்களாயிருப்பார்கள். 56-வது ஸெக் ஷனில் கூறப்பட்டுள்ள விலக்குகளில், தேர்தல் ஸ்தானங்களுக்கு நிற் பதற்குள்ள விலக்கும் நிபந்தனைகளும் சேர்ந்திருக்கின்றன. அவற் றோடுகீழ் கூறப்படுபவைகளும் கவனிக்கப்படவேண்டும். ஒரு பஞ்சா யத்து கிராமத்தில் வசிக்காதிருந்தாலும், சேர்ந்தாப்போல் மூன்று மாதங்களுக்குப் பஞ்சாயத்துக் கூட்டங்களுக்கு வராதிருந்தாலும், மூன்று மாதகாலத்திற்கிடையே இரண்டு பொதுக்கூட்டங்களை கூட்டப் பட்டால் அவ்விரண்டு கூட்டங்களுக்கும் வராதிருந்தாலும், பஞ்சாயத் தார் பதவியிலிருந்து நீங்கவேண்டியவராவார். ஆனால் அவர் மீட்டிங்க் கோட்டீஸ்கள் பெற்றிருக்கவேண்டும்; அதோடு, ஆக்டின்படி திரும்பப் பதவியளிக்கப்படாதவராகவும் இருக்கவேண்டும்.

திரும்பப்பதவியளித்தலாவது : மீட்டிங்குகளுக்கு வரத்தவறுவதால் பஞ்சாயத்தார்கள், பதவியை இழந்தவுடன், பிரஸிடெண்ட், அவர் அவ் விதம் பதவியிழந்த விவரத்தை எழுத்து மூலமாக அந்த மெம்பருக்கு அறிவிப்பதோடு, அடுத்த மீட்டிங்கிலும் இந்த விவரத்தை சபையாருக்கு அறிவிக்கவேண்டும். இதில் சம்பந்தப்பட்ட மெம்பர், நோட்டீஸ் கிடைத்த 15 நாட்களுக்குள்ளாவது அல்லது அடுத்த மீட்டிங்குக்குள் ளாவது தான் திரும்பவும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்று பஞ்சாயத்துக்கு மனுசெய்து கொண்டதன்மேல், பஞ்சாயத்து அவரைத் திரும்பவும் சேர்த்துக்கொள்ளலாம். (செக். 56).

காலி ஸ்தானங்கள் ஏற்படுவதில் இரண்டு வகையுள :—பொதுக் காலி ஸ்தானங்கள், தற்காலக் காலி ஸ்தானங்கள். பொதுக் காலி ஸ்தா னங்கள் என்பது ஒரு பஞ்சாயத்தின் காலம் முடிவாகி மற்றொரு தேர்தல் நடக்குமுன் ஏற்படுவது. (செக்ஷன் 3·13·A) மற்றதெல்லாம் தற்கால காலி ஸ்தானங்கள். பொதுத் தேர்தல்,—ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்தில் நடக்கும் பொதுத் தேர்தல் மூலமாக பொதுக் காலி ஸ்தா னங்களை நிரப்பவேண்டும். அல்லது, லோக்கல் கவர்ன்மெண்ட் அனு

மதித்தால் ஸெப்டம்பர் மாதத்திற்கு பின்னும் தேர்தல் நடத்தலாம். அதனால் மேற்குறிப்பிட்ட காலி ஸ்தாபனங்களெல்லாம் தற்காலக் காலி ஸ்தானங்களேயாம். அவை உபத்தேர்தல்களால் நிரப்பப்படவேண்டும். காலி ஏற்பட்டதன்மேல், அதற்கென்று அதிகாரம் வாய்ந்தவரால், எப்பொழுது எலெக்ஷன் நடைபெறவேண்டுமென்று குறிப்பிடப்படும். ஆனால் அவ்விதம் காலி ஏற்படுவது பொதுத் தேர்தலுக்கு மூன்று மாதத்திற்குட்பட்ட காலத்தில் ஏற்பட்டால், அது நிரப்பப்படாது. உபத்தேர்தல் மூலமாக மெம்பர் ஆனவர்கள், அவர்கள் ஸ்தானத்தில் இருந்தவர் எத்தனை காலம் மெம்பராக இருந்திருக்கலாமோ அவ்வளவு காலம் வரையே மெம்பர் பதவி வகிக்க அருகதையுள்ளவர். (செக். 11). உப எலக்ஷெனில் தேர்ந்தெடுக்கப்பட்டவர், தம்ஸ்தானத்திற்கு உரிமை வாய்ந்தவர்களுக்கு அந்த ஸ்தானத்தைத் திரும்ப அளிக்கவேண்டுவது கீழ்க்கண்ட இரண்டு வகையிலாகும் :—(1) அதாவது, தண்டனையடைந்தவர், தம் தண்டனையை ரத்து செய்யவேண்டுமென்று அப்பீல் செய்து ஜயமடைந்தாலும், வேறு ஏற்பட்ட தடங்கல்கள் நிவர்த்தி ஆனாலும், முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு ஸ்தானத்தை ஒப்படைக்க வேண்டும். (2) அன்றியும் எலெக்ஷன் குற்றங்களுக்காக ஸ்தானத்தினின்றும் நீக்கப்பட்டவர்கள், அக்குற்றங்களினின்றும் நீக்கப்பட்டுத் திரும்பவும் தேர்தலுக்கு நிற்க உரிமை பெற்றாலும், உபத்தேர்தலில் நின்று ஸ்தானம் பெற்றவர் தம்ஸ்தானத்தை அவருக்காகக் காலிசெய்து கொடுக்க வேண்டும் (செக் 56).

பஞ்சாயத்தார் எலெக்ஷன்கள், அதற்கென்று கவர்ன்மெண்டால் குறிப்பிட்டு, அதிகாரம் பெற்றவர்களால் நடத்தப்படும். (ஸெக் 51). இப்பொழுது இந்த அதிகாரங்களை லோகல்போர்ட் இன்ஸ்பெக்டருக்கு கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கிறார். இவரே எலெக்ஷன் ஜாபிதாக்கள் தயார் செய்வது, அவற்றைப் பிரசுரிப்பது எலெக்ஷன்கள் நடத்துவது முதலிய வேலைகளைச் செய்யவேண்டும்; அவ்வேலைகள் சரிவர நடப்பதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். 1930-ஞு டிசம்பர்மீ 2உ வெளியிட்ட போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஸட், 1000 பக்கம் பிரசுரித்திருக்கும் 2136 நம்பர் புரொஸிடிங்க்ஸில், கவர்ன்மெண்டார், ஒவ்வொரு லோகல்போர்டிடமிருந்தும் எலெக்ஷன் செலவுக்காக வருஷவாரி பணம் பெற்றுக்கொள்ள அதிகாரம் பெற்றிருப்பதை அறிவித்திருக்கிறார்கள். இன்னொரு புது ரூல்படி, அவ்விதம் லோக்கல் போர்டுகள் பணம் கொடுக்கத் தவறினால், அதைக் கட்டாயப்படுத்திப் பணம் வாங்கவும், அதிகாரம் பெற உத்தேசிக்கிறார்கள்.

இவ்விதம் எலெக்ஷன்கள் நடத்த அதிகாரம் வாய்ந்தவரே, பஞ்சாயத்தார்களின் பொது தேர்தல்களையும் உபத்தேர்தல்களையும் நடத்துவார்.

## விவசாயிகளுக்குத் தெரியவேண்டிய விஷயங்கள்.

### விறகும் சாணியும்.

நாலு பெரியவர்கள் இரண்டு குழந்தைகள் உள்ள ஒரு குடும்பத்துக்கு வருஷம் ஒன்றுக்கு 50 ரூபாய் பெறுமான விறகு தேவையாயிருக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சாணியை வறட்டி தட்டி விறகாக எரிக்கிறவர்கள் அப்படிச் செய்வதால் தங்களுடைய நாட்டுக்கு ஏற்படுகிற திரவிய நஷ்டத்தைச் சிறிதும் அறியாதிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் கஞ்சாம் ஜில்லாவைச் சேர்ந்தவர்களே முதல் குற்றவாளிகளாவார்கள். விசாகப்பட்டணம் ஜில்லா இதற்கு பக்கத்தில் இருக்கிறது. அவ்விடத்தில் பனைமரம் நன்றாக வளருகிறது. இங்கே பனமரத்தை நட்டு வளர்ப்பதும் சுலபமாயிருக்கிறது. கஞ்சாம் ஜில்லா ஜனங்கள் பனைமரத்தை வளர்த்து சாணியின் அழிமதியைத் தவிர்ப்பதால் மிகவும் நலம். இதுபோலவே இதர ஜில்லாக்காரர்களும் விறகுக்காக வேறு உபாயத்தைத் தேடி, சாணியை உரத்திற்குமாத்திரமே உபயோகிப்பது தேசத்திற்கு பெருபகாரம்.

### மேய்ச்சல் இடங்கள்.

தென்மேற்கு பருவக்காற்று அடிக்கடி பொய்த்து விடுகிறதினாலும் அதற்குப் பின் வருகிற வருஷந்தோறும் மிகவும் உஷ்ணமான உலர்ந்த காலம் மூன்று நான்கு மாதங்கள் வரைக்கும் நீடித்திருப்பதாலும் நம்முடைய கரவை இனங்களுக்கு போதுமான புல்பயிர்செய்வதற்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. தற்காலம் மேய்ச்சல் இடம் என்று கருதப்படுகிற நிலங்களில் முட்புதர்களும் சப்பாத்திக் கள்ளியுமே நிறைந்திருக்கின்றன. நெல்லூர் ஜில்லாவிலுள்ள புகழ்பெற்ற பீடுக்களும் கஞ்சாக்களும்கூட இப்படியே இருக்கின்றன. ரோடுக்கு இருகரைகளிலும் வேலிகள் எதுவுமில்லாமல் பாதுகாப்பற்றுகிடக்கிற விசாலமான நிலங்கள் பெரிய பணக்காரர்களுக்குச் சொந்தமாயிருக்கின்றன. கரவை இனங்களை நன்றாய்ப் போஷிக்க வேண்டுமானால் இன்னும் அதிகமான சீர்திருத்தம் இருக்க வழியுண்டு. இன்னும் அதிக சீர்திருத்தம் அவசியமானது.

முதலாவது மேய்ச்சல் நிலங்களுக்கு வேலியிட்டு அவைகளிலுள்ள புதர்களையும் சப்பாத்தி கள்ளிகளையும் வெட்டி அப்புறப்படுத்தவேண்டும். பருவ மழைகள் வருகிறபொழுது புல் நன்றாய் முளைப்பதற்கு வசதியாயிருக்கவும் நிலத்தில் ஈரம் இருக்கவும் தக்கவாறு சிறிது உழுது பரப்பவேண்டும். புல் விதைகள் அகப்படும் இடமெல்லாம் அவற்றைச் சேகரித்து முன்சொன்னபடி தயாரித்த நிலங்களில் விதைப்பது நலம். அப்படி செய்வதினால் ஒருவருஷத்தில் குறைந்தது ஆறு ஏழு மாதங்களுக்காவது போதுமான புல் இருக்கும். மீதிமாதங்களில் இந்த ஸ்தலங்கள் அவர்களுக்கு தேகப்பயிற்சிக்கு உதவும். தற்காலம் ஏராளமான மேய்ச்சல் இடங்கள் காட்டுப் பஞ்சாயத்தின் கீழில் இருக்கின்றன. இந்த சீர்திருத்த விஷயத்தில் காட்டுப் பஞ்சாயத்துகள் சிரத்தை எடுக்குமானால் அவைகள் பெருதவி பெறும் நல்ல வேலை செய்யக்கூடும்.

### பருத்தி வித்துத் தோட்டங்கள்.

பல்லாரி ஜில்லாவைச் சார்ந்த பண்டன ஹாவில் விவசாய முன்னேற்ற கூட்டுறவு சொஸைட்டி ஒன்று இருக்கிறது. அதில் 12 ரிஜிஸ்டர் செய்யப்பட்ட மெம்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் பருத்தி வித்துத் தோட்டங்களைச் சார்ந்தவர்களேயாம். போன வருடத்தில் 832 ஏக்ராக்கள் அளவுள்ள வித்துத் தோட்டங்கள் அவர்களுக்கு இருந்தன. அவர்களுக்கு 58,000 பௌண்ட் அடித்த பஞ்சு கிடைத்தது. அவர்கள் அவற்றை ஒன்று சேர்த்து விற்றார்கள். அவர்களுக்கு 21,591 ரூபாய் கிடைத்தது. மேற்கு ஏரியாவில் அந்த சொஸைட்டிக்கே உயர்ந்த விலை கிடைத்ததாக தெரியவருகிறது. 312 பௌண்டு அடங்கிய ஒரு நாகாவுக்கு 10 ரூபாய் லாபம் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. ஒன்று சேர்ந்து பருத்தி விற்பனை செய்ததினால் மெம்பர்கள் இந்த வருஷம் 2,000 ரூபாய் அதிகமாகப் பெற்றிருக்கிறார்கள்.

### தோட்டப்பயிர்கள்.

எல்லூர் தாலூகாவில் புன்னா என்னும் கிராமத்தருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு பகுதி நஞ்சை நிலத்தில் வாழை, கத்திரி முதலியன பயிர்செய்யப்பட்டது: அவ்விதம் பயிர்செய்த விவசாயி ஏக்ரா ஒன்றுக்கு ரூ. 400 லாபம் பெற்றார். அவர் அந்நிலத்தில் நெல்பயிர் செய்திருந்தால் ஏக்ரா ஒன்றுக்கு 60 முதல் 70 ரூ. வரையே லாபம் கிடைக்கும். நெல்விலை மிகக்குறைவாயிருப்பதால், விவசாயிகள் அதிக லாபந்தரும் பயிர்களைப் பயிர்செய்வதில் தங்கள் கவனத்தைச் செலுத்துவது நலமாகும். சாமல்கோட்டை விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில், ஒரு குறிப்பிட்ட தோட்டப்பயிரைப் பயிர்செய்வதால் ஏக்ரா ஒன்றுக்கு ரூ. 800 வரை கிடைக்கிறதென்று கண்டிருக்கிறார்கள். ஆனால் அது சிறு அளவில் பயிர் செய்தபடியால் உண்டான லாபமாகவிருக்கும் என்று அநுமானித்தாலும், பெரிய டௌன்கள் ரெயில்வே ஸ்டேஷன்கள் முதலியவற்றின் சமீபத்திலுள்ள நிலங்களில் காய்கறிப் பயிர்செய்வது லாபகரமானது என்பதற்கு ஒரு ஆக்ஷேபமுமில்லை.

### சப்பாத்துக்கள்ளியை அழிப்பதற்கு:

சப்பாத்துக்கள்ளி மிக எளிதில் பரவுகிறது. நம்முடைய ஜில்லாக்களிலுள்ள கிராமங்களிலெல்லாம், அது மிகவும் பரவியிருக்கிறது. அதன் வளர்ச்சியைத்தடுப்பது விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கிறது. சமீபகாலத்தில் "கொக்கினீல்" என்ற ஒருவகைப்பூச்சி சப்பாத்துக்கள்ளியை அழிப்பதற்குத் தகுந்த சாதனமாகக் கையாடப்பட்டது. கடந்த இரண்டு வருஷங்களாக, திருநெல்வேலி, கோயம்புத்தூர், கிருஷ்ணா, குண்டூர், சேலம் முதலிய ஜில்லாக்கள் இந்த முறையைக் கையாடி வந்திருக்கின்றன. அனந்தப்பூர் ஜில்லாவிலுள்ள "லேபக்ஷி" என்னுமிடத்திலுள்ள கிராமப் புனருத்தாரண ஸெண்டர் இந்த முறையைச்சென்ற 6 மாதகாலங்களாக உபயோகப் படுத்தி வருகிறது. இந்தப் பூச்சி லக்ஷக்கணக்காகப் பெருகி சப்பாத்துக்கள்ளியை அழிக்கிறது. அந்தப் பூச்சிகளை ஒரு தடவில் கொண்டுவந்து விட்டபிறகு அதிகமாக கவனிக்கவேண்டியதில்லை. இந்தப் பூச்சி விழுந்த சப்பாத்துக்கள்ளிகளிலிருந்து சில பாகங்களை, அழிக்க வேண்டிய சப்பாத்துக்கள்ளிகளின் இடையில் விட்டெறிந்தால் சுமார் ஒரு வருஷக் காலத்தில், மிகவும் அடர்ந்த சப்பாத்துக்கள்ளிக் காடுகளையும்





அழித்துவிடலாம். இந்தப்பூச்சிகள் வேண்டுமானால் சமீபத்திலுள்ள விவசாய ஆபீஸருக்கு எழுதித்தருவித்துக் கொள்ளலாம்.

### கூட்டுறவும்—பாங்கிக் ஆராய்ச்சியும்.

பாங்கிங் என்க்வெயரி கமிஷன் கீழ் பாம்பே ஒரிஸா பீஹார் மாகாணங்களில் பாங்குகளின் நிலையை விசாரிப்பதற்காக ஏற்படுத்தப் பெற்ற பாங்கிங் என்க்வெயரி கமிட்டிகளின் ரிப்போர்ட்டுகள் (இப்பொழுது பிரசுரிக்கப்பட்டவை) கூட்டுறவு இயக்கத்தில் அதிகமாகத் தங்கள் கவனத்தைச் செலுத்துகின்றன; விவசாயக் கூட்டுறவு சொஸைட்டிகளுக்குப் பொருளுதவி செய்யும் வகையில் அநேக தீர்மானங்களைப் பிரேரேபித்திருக்கின்றன. கூட்டுறவு சங்கங்களுக்கும் விவசாய சங்கங்களுக்கும் கைத்தொழிற் சங்கங்களுக்கும் குறைந்த வட்டியில்—அதாவது 3 % ல்) கடன்கொடுத்து உதவுவதற்காக, போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்க் நிதியில் ஒருபாகம் ஸ்தல கவர்ன்மெண்ட்களின் கையில் ஒப்படைக்கப்படவேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறது. பீஹார் ஒரிஸா கமிட்டி, தற்காலம் உள்ள முறைப்படி ஸென்ட்ரல் பாங்குகளின் வியாபாரத்தில் 44% நீடித்தகால அளவுள்ள கடன்களாக இருப்பதாலும், அவை மிகவும் குழப்பத்தைத் தருவதாலும், ஷை ஸெண்ட்ரல் பாங்குகளின் வியாபாரத்தை குறைந்தகால அளவுள்ள கடன்கள் என்றும் நீடித்த கால அளவுள்ள கடன்கள் என்றும் பிரிக்க வேண்டுமென்றும், குறைந்தகால அளவுள்ள கடன்கள், விவசாயிகளின் தற்காலத் தேவைக்கு உதவும்படி கொடுக்கப்படவேண்டுமென்றும் சிபாரிசு செய்கின்றது. மறுபடியும், பாம்பே கமிட்டி, தற்கால ஊழியம் செய்துவரும் ஜில்லா கூட்டுறவு கிளைகளுக்குப் பதிலாக ஜில்லா ஸெண்ட்ரல் பாங்குகள் ஏற்படுத்தப் படவேண்டும் என்று சிபாரிசு செய்கிறது. இந்த பாங்குகள் ஒரு ஸெண்ட்ரல் பாங்க் கமிட்டியோடு சேர்ந்து வேலைசெய்ய வேண்டும். குடிசைத்தொழில்களுக்குப் பொருளுதவி செய்ய ஒரு கூட்டுறவு கைத்தொழில் பாங்கியும் ஏற்படுத்தப்படவேண்டும்.

---

லங்காஷைர் காட்டன் கார்பொரேஷன், தலைவரான ஸர் கென்னத் ஸ்டிவர்ட் என்பவர், தம்முடைய கார்ப்பொரேஷன் மட்டும் வாரவாரம் ஆயிரம் பேல்கள் வீதம் உயர்ந்து வரும் ரேட்டில் இந்திய பருத்தியை வாங்கிவருவதாகவும், அடுத்த வருட முடிவிற்குள், அவர் கார்பொரேஷன் மட்டுமே தற்காலம் இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகிற இந்தியக் காட்டனின் அளவைக்காட்டிலும் அதிகமாக அளவுள்ள இந்தியப் பருத்தியை உபயோகிக்கக்கூடும் என்று சொன்னதாக அறிவிக்கப்படுகிறது.

---

# விவசாயமே உயிர்த்தொழில்.

## நம்நாட்டு நெல் பயிர்.

ஸர் டி. விஜயராகவாசாரியார் சொல்வதாவது 'நிலங்களைத் திரும்பப் பெறுவதாலும், சாகுபடி செய்வதற்கும், சாகுபடியானவற்றை மார்கெட் செய்யவும் பரப்பவும் ஆக கோவாபரேடிவ் சொசைடிகளை ஏற்படுத்துவதாலும், ஒரு விவசாய முறையை மிகவும் மும்முரமாக, இப்பொழுது அதிகாரத்திலுள்ள இதாலி கவர்ன்மெண்ட் கையாடி வருகிறது'. இத்தாலியில் தானியங்கள் மிகவும் அதிகப்படியாகப் பயிர்செய்வது எத்துணை முக்கியமானதாகக் கருதப்படுகிறதென்பதையும், ஐரோப்பிய மார்க்கெட்டுகளில் இத்தாலிய அரிசியும் நெல்லும் இந்திய அரிசியோடு எவ்வளவு மும்மரமாகப் போட்டிபோடக் கூடுமென்பதையும், இன்னும் இந்தியமக்கள் உணரவில்லை. அவருடைய (விஜயராகவாசாரியார்) அபிப்பிராயமாவது "இத்தாலிய அரிசியைவிட இந்திய அரிசி எவ்வகையிலும் குறைந்ததல்ல: ஆனால் இத்தாலிய அரிசி அதிகமாகத் தீட்டப் பெற்றிருக்கிறது: எப்படியோ, அதையே அதிகமாக ஐரோப்பியர் விரும்புகிறார்கள்.

## சாம்ராச்ய மார்க்கட்டிங் போர்டு.

இங்கிலாந்திலுள்ள சாம்ரூச்ய மார்க்கட்டிங் போர்டு (*Empire Marketing* Board) ஆங்கிலேயர்கள் இங்கிலீஷ் நாடுகளில் விளையும் பொருள்களையே அதிகமாக உபயோகிக்க வேண்டுவதின் அவசியத்தை நன்கு எடுத்துக்காட்டும் தன்மை வாய்ந்த ஒரு சினிமாச்சுருளை தயார்செய்திருக்கிறார்கள். அந்த சுருளையின் பெயர் "ஜான் கெட்டின வீடு" (*The House that John built*) ஜான் என்பவன் பயிர் செய்பவனாகவும் இங்கிலாந்தே—ஆடுகளும் பன்றிகளும் நிறைந்ததும் திராக்ஷைத் தோட்டங்களாலும், மாட்டுப் பண்ணைகளாலும் புது வருவாயாலும், செழிப்படைந்ததுமான இங்கிலாந்தே—அந்த ஜான் கட்டிய வீடாகவும்; காவல் பொம்மைகள் தோட்டங்களை அழிக்கும் பறவைகளைத் தம் கையில் வைத்திருக்கும் முள் கரண்டியால் குத்திக் குத்தி ஓட்டுவதாகவும்; அகசியக்காரன் தான் அணிந்திருக்கும் அரை டஜன் கம்பளிச் சட்டைகளையும் ஒவ்வொன்றாய்க் கழற்றி எறிவது போன்று, ஆடுகள் தங்களின் கம்பளி உடைகளைக் கழற்றிப் போடுவதாகவும்; பன்றிகள் எல்லாம் கூடி மார்க்கட்டில் மிகவும் கொழுத்துக் காணப்படுவதற்காக வேண்டி விருந்துகள் நடத்துவதாகவும்; பசு ஒன்று, மந்திரசக்திவாய்ந்த, பால்கறக்கும் பாத்திரமொன்றை ஆகாசத்திலிருந்து கொண்டுவந்து தருவதாகவும், இன்னும் பலவிதமாக அந்தச்சுருளையைத் தயார் செய்திருக்கிறார்கள். நிலங்களில் விளையும் பொருள்கள், ஏரோப்ளேன்களாலும் பலூன்களாலும், இங்கிலீஷ் கடைகளில் கொண்டுவந்து குவிக்கப் படுகின்றன.

## அமெரிக்க ஐக்கிய நாட்டில் புதுச் சட்டம்.

"தற்காலம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விவசாய இலாகா விவசாயத் தகவல்களையும் மற்ற விஷயங்களைப் பற்றிய தகவல்களையும் சேகரித்து அவற்றை ஜனங்களுக்கு விளக்குவதற்காக எவ்வெவ்வகையில் உழைத்து வருகிறதோ, அவ்விதமாகவே, அந்நிய நாடுகளில் கையாடிவரும் விவசாய முன்னேற்ற முறை ஐக்கிய நாடுகளிலும் பரவச்செய்யவேண்டும் என்று அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஒரு





சட்டம் பிறப்பித்திருக்கிறது. மேற்கூறிய சட்டத்தில் "வேண்டிய தகவல்கள்" என்று சொல்லப்படுவது இவைகளே. உலகப்போட்டி, விவசாயப் பொருள்களுக்குப் பல இடங்களிலும் உள்ள கிராக்கி, உற்பத்தி, முதலியவை; "மற்ற விஷயங்கள்" என்பது, அந்நிய நாடுகளில் "அமெரிக்கப் பருத்தியின் ரகங்களையும், தரத்தையும், கோதுமை முதலிய மற்ற அமெரிக்க விவசாயப் பொருள்களையும்" கண்காட்சிகள் மூலமாக விளம்பரம் செய்வதாகும். இந் நோக்கங்களை உள்ளடக்கி; ஐக்கிய நாடுகள், ஒரு வகையான வேலைத்திட்டத்தைக் கையாளுகின்றன. அவைகள் இதற்குள்ளாகவே, உலகத்தின் பலபாகங்களிலும் விளையும் கோதுமையின் பலவித குணங்களையும் பாகுபாடுசெய்து, டெக்னிகல் புல்லெட்டின 197-ல் வெளியிட்டிருக்கின்றன. அந்த புல்லெட்டின் 224 பக்கங்கள் கொண்டதாய் கோதுமை சாகுபடி செய்யும் எல்லா நாடுகளையும் நன்கு விவரிக்கிறது. 38 தேசங்களிலிருந்து 852 ரகங்கள் கோதுமை கிடைத்தன: அவைகளில் 421 ரகங்கள் பல மாதிரியானவை: 431 ரகங்கள் ஏற்றுமதி செய்யக்கூடியவை. இவைகளைப் பற்பல விதமாகப் பரீக்ஷை செய்து அவற்றின் குணாகுணங்களைக் கண்டறிந்து கணக்கு திட்டங்களை வெளியிட்டிருக்கிறார்கள். உலகத்திலுள்ள எல்லா வெள்ளைக் கோதுமைகளையும் விட, இந்தியக் கோதுமையே மாவாக்கும் வகையில் முதன்மை பெற்று விளங்குவது; என்றாலும் ரொட்டியாக்கும் வகையில், இந்தியக் கோதுமை அவ்வளவு சிறந்ததன்று.

இரண்டு வகையிலும் சிறந்ததாக விருக்கவேண்டுமானால் இந்தியக்கோதுமை மற்ற கோதுமைகளோடு கலக்கப் படவேண்டும். இப்பொழுதுதான் உலகத்திலுள்ள பஞ்சு இழைகளின் வலிவைப்பற்றிய ஒரு புஸ்தகத்தையும் பிரசுரித்திருக்கிறார்கள்.

## அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலிருந்து சில செய்திகள்.

1928-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் மதிப்பெடுத்தபடி, அமெரிக்காவில் மொத்த ஜனத்தொகை 11,93,19,534. இவர்களில் விவசாயிகள் மட்டும் 2,75,11,000. இவர்களைப் பற்றிய கணக்குகள் எடுப்பதற்காக ஐக்கிய கவர்ன்மெண்டு செலவாக்கிய பணம் ரூ. 50,00,000 மார்க்கெட் செய்கிற கூட்டுறவு சங்கங்களை மட்டும் கணக்குப் பண்ணிய போதிலும், 1400 பாலாடைக் கட்டிகள் செய்யும் சாலைகளும், 740 கட்டித் தயிர் (*cheese*) தயார் செய்யும் சாலைகளும், 114 பாற்சாலைகளும் 47 பால்விற்கும் சாலைகளும், 199 மற்றச் சில்லறை வியாபாரங்கள்—சுமார் 64,00,00,000 டாலர்கள் அல்லது 192 00,00,000 ரூ. வரை விலைமதிக்கும்படி செய்யும் சங்கங்களும் இருக்கின்றன: ஒவ்வொன்றுக்கும் வருஷத்தில் மொத்தலாபம் சராசரி ரூ. 1870. 1929-ம் வருடம் அக்டோபர் மாதத்தில் விவசாய வேலைக்கூலி கணக்கிட்டதில் கண்ட விவரங்கள்:—சாப்பாடு வசதியோடு, ஒரு மாதத்திற்கு 108 ரூ. சாப்பாடு வசதியில்லாமல், 150 ரூ. அதாவது தினம் ஒன்றுக்கு முறையே ரூ. 5-14-8, 7-6-8 வீதம் ஆகும். சராசரி 4, 3 பேர்கள் அடங்கிய ஒரு குடும்பத்தின் வருஷச் செலவு ரூ. 2800, அதாவது தலைக்கு மாதச் செலவு ரூ 54. இதில் உணவுக்காக ரூ. 27, உடை ரூ. 9 வீட்டுவாடகை ரூ. 4-8, தட்டுமுட்டு சாமான் வகைய ரூ. 1-8, மற்ற சாமான்கள் ரூ. 5-8, வைத்தியச்செலவு ரூ. 2, முன்னேற்றக் கல்விக்காக ரூ. 2-12, கைச்செலவு ரூ. 1-8, இன்ஷியூரன்ஸ் 0-10 ஆகும்.

## எகிப்தில் பருத்திச் சாகுபடி.

எகிப்தில் இப்பொழுது பருத்தி சாகுபடி செய்வது குறைக்கப்பட்டிருக்கிறது சமீபத்தில், கெய்ரோவிலிருந்து வந்த செய்தியிலிருந்து, "ஸாகேல்லாரிடிடிஸ்" என்ற ஜாதிப் பருத்தியை, மொத்தப் பருத்திச் சாகுபடியில் 40% ஆகக் குறைத்து இன்னும் 3 வருஷங்கள்வரை பயிர் செய்வார்களாம்.

# லோகல் போர்டுகளைப்பற்றிய குறிப்புகள்.

## பூந்தமல்லி பஞ்சாயத்து.

1920 வருடம் சென்னை ஜில்லா முனிசிபல் ஆக்ட்படி செடூல் 5. கிளாஸ் B & C யும் செக்ஷன் 146, 149, 269-ம் ; மேற்குறித்த அதே செக்ஷன் கிளாஸின் படி செடூல் 7 & 8 செக்ஷன்கள் 249, 313, 338 மூலமாக தங்களுக்கு அதிகாரம் செலுத்துவதற்கு உரிமை அளிக்கும்படி பூந்தமல்லி பஞ்சாயத்து கேட்டுக்கொண்டதின் பேரில் கவர்ன்மெண்டார் அதற்கு அனுமதி கொடுத்திருக்கின்றனர். செக்ஷன் 146, 149 வீட்டுச் சொந்தக்காரர்களாவது, குடக்கூலிக்கிருப்பவர்களாவது சொந்தக் கக்கூசுகள் அமைத்துக்கொள்வதைப்பற்றி யவைகளாம். செக்ஷன் 269 கசாப்புக்கடைக்காரர்களுக்கும், மீன் விற்பனை செய்பவர்களுக்கும், கோழி விற்பனை செய்பவர்களுக்கும் லைசன்ஸ் கொடுப்பதைப்பற்றியதாம். செக்ஷன் 249-இல் லைசன்ஸ் இல்லாமல் எந்த எந்த இடங்களை எந்த எந்தக்காரியங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடாது என்பதைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. செடூல் 5 கிளாஸ் B & C செல் வேகவைத்தல், கற்பூரம், கந்தகம், கொழுப்பு முதலியவைகளை உபயோகப்படுத்தும் இடங்களைக் குறிப்பதாம். செடூல் 7-ம் 8-ம் பெனல்டி செடூல்களாம். செக்ஷன் 313-ம் பெனல்டி செக்ஷன். லைசன்ஸ்களையும் ஆர்டர்களையும் கொடுப்பதற்கான முறை ஒழுங்குகள் நடவடிக்கையில் கொண்டுவருவதற்கான விதிகள் 338-ம் செக்ஷனில் அடங்கியிருக்கின்றன. அதனால் தனித்தனி உபயோகத்திற்கான கக்கூசுகள் கட்டுவதற்கு வற்புறுத்துவதற்கும், தீமையானதும் அபாயகரமானதுமான வர்த்தகச் சரக்குகளுக்கு லைசன்ஸ் போடுவதற்கும் உள்ள அதிகாரத்தை பூந்தமல்லி பஞ்சாயத்தார் நிச்சயமாகவே அடைந்திருக்கிறார்கள்.

## அஸ்கா பஞ்சாயத்து.

அஸ்கா பஞ்சாயத்தார் மனுச்செய்து கொண்டதின்பேரில் கவர்ன்மெண்டார் சென்னை டிஸ்டிரிக்ட் முனிசிபாலிட்டிகள் ஆக்ட் 818 செக்ஷன் மூலமாக அஸ்கா பஞ்சாயத்தாருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். இந்த செக்ஷன் தோட்டிகளுடைய வேலை சம்பந்தப்பட்டதாகும். அந்த செக்ஷனில் உபப்பிரிவு (1) படி வேலையிலிருக்கிற ஒவ்வொரு தோட்டிக்கும் வேலையிலிருந்து நீக்குவதற்கு முன்னதாக ஒருமாத எச்சரிக்கைக்கு உரிமை உண்டென்றும் அப்படி ஒருமாத எச்சரிக்கை இல்லாதபோது ஒருமாதச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் கண்டிருக்கிறது. 318 இரண்டாவது உபப்பிரிவே மிகவும் முக்கியமானது. அந்த உபப்பிரிவின்படி எந்தத் தோட்டியும் ஒரு மாத நோட்டீஸ் கொடுக்காமல், வேலையை ராஜினாமா கொடுக்கவாவது, வேலைக்குப் போகாமல் நின்றுவிடவாவது தன்வேலையைச் சரியானபடி செய்யாமலாவது, வேலையைச் செய்ய மறுக்கவாவது கூடாது.

இப்படிப்பட்ட நிபந்தனைகளிலிருந்து தவறினால் குற்றம் சாற்றப்பட்டு 50 ரூபாய்க்குட்பட்ட அபராதமும் இரண்டு மாதத்திற்கு அதிகப்படாத சிறை இருப்பும் விதிக்கப்படும் என்று கண்டிருக்கிறது. மேற்படி செக்ஷனில் மூன்றாவது உபப்பிரிவு, பொதுஜன சுகாதார விஷயங்களையாவது, பொது ஜனக்காப்பையாவது





நெருங்கிச் சம்பந்தப்பட்ட இதர முனிசிபல் அலுவல்களைக் குறித்ததாகும். இந்த அலுவல்களுக்கும், முதலாவது இரண்டாவது உபப்பிரிவுகளில் கூறப்பட்ட நிபந்தனைகளை வருவித்துக்கொள்ளலாம். என்றாலும், இவ்விதம் முதலாவது இரண்டாவது உட்பிரிவுகளைச் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் ஒரு நியமம் இருக்கிறது ; அதாவது, லோக்கல் கவர்ன்மெண்டார் இதை பிரசுரித்த பின்பே இவ்விதம் செய்யலாம்.

## உசிலம்பட்டி பஞ்சாயத்து.

கௌன்சிலோடு கூடின கவர்னர் ஜனரல் அவர்கள் தென் இந்திய ரயில்வே சங்கத்தாரிடமிருந்து கல்வி வரியை வசூலிப்பதற்குரிய அதிகாரம் உசிலம்பட்டி யூனியனுக்கு உண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

## மைசூரை மெச்சுகிறோம்.

மைசூர் சமஸ்தானம் சர்க்காரைச் சார்ந்த எல்லாக் கிராமங்களிலும் கிராம பஞ்சாயத்து ஏற்படுத்தியிருக்கிறது. மைசூர் பஞ்சாயத்தைச் சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயம் என்னவெனில் கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒரு வருடத்தில் 36 வாரங்களில் திங்கள்கிழமை தோறும் மூன்றுமணி நேரம் ஒரு கூலியாள் வேலைக்குக் கொடுக்க வேண்டுமென்றும் அல்லது அதற்குப் பதிலாக ஒவ்வொரு நாளுக்கும் மூன்றணா கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய்திருப்பதேயாம். அதனால், மைசூர் சமஸ்தானத்தில் கிராம ரஸ்தாக்கள் அமைப்பு சம்மந்தமான விஷயங்கள் வருங்காலத்தில் அதிக முன்னேற்றம் அடையக் கூடியதாயிருக்கிறது. நமது கிராம பஞ்சாயத்துப் பத்திரிகையின் பத்திராதிபர் அவர்கள் சமீபத்தில் மைசூரிலுள்ள மூன்று பஞ்சாயத்திற்கு சென்று பார்வையிட்டார்கள். அவற்றுள் இரண்டில் கிராம ரஸ்தா போக்கு வரவிற்கு ஏற்றதாயிருந்தது. அந்த ரஸ்தாவை ஜனங்கள் திங்கட்கிழமை ரஸ்தா என்று அழைத்து வருகிறார்கள்.

மைசூர் பஞ்சாயத்தைப் பற்றிய இன்னொரு முக்கிய விஷயம் என்னவெனில் ஒவ்வொரு கிராமத்திற்கு முன்னே அமைந்துள்ள வெளியிடமேயாம். இந்த வெளியிடத்தில் இரண்டு வரிசையாக அரசமரமும் வேப்பமரமும் நட்டு வளர்த்து இருப்பதோடு வரிசையிலுள்ள ஒவ்வொரு மரத்தையும் ஒன்றோடு ஒன்று சேர்த்து கீழே கண்ட அகன்ற திண்ணைகள் கட்டிவிடப்பட்டிருக்கின்றன. இந்த வெளி இடங்கள் முற்றிலும் சுத்தமாகவே யிருக்கின்றன. நமது பத்திராதிபர் அவர்கள் கவனித்த இன்னொரு விஷயமாவது கிராமங்களுக்குப் பக்கத்தில் மரச்சோலைகளைப் பயிர் செய்வதும், மேய்ச்சலுக்கு பிரத்தியேகமாக பூமிகளை கிராமந்தோறும் வைப்பதும் மைசூர் கவர்ன்மெண்டார் கிராம பஞ்சாயத்தாரை வற்புறுத்துவதேயாகும். மகாராஜாவினுடைய ஆட்சி சம்பந்தமான ஆண்டுகளின் ஜூபிலிகளைக் கொண்டாடுதல் முதலியவை போன்ற முக்கியமான சந்தர்ப்பங்களில் மரம் பயிர் செய்வது ஒரு வழக்கமாகும். மைசூர் பஞ்சாயத்துக் கிராமங்கள் நம்முடைய ஜில்லாக்களிலுள்ள ஜன நெருக்கமானதும் நெருக்கலாயிருப்பதுமான கிராமங்களிலிருந்து முற்றிலும் வித்தியாசமாய்க் காணப்படுகின்றன. மைசூரிலுள்ள சில பஞ்சாயத்தார்கள் தங்கள் கிராமங்களில் மின்சார விளக்குகள் ஏற்படுத்துவதற்கான முறைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று வெளியிட்டபடி மைசூர் பஞ்சாயத்துக்கள் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கின்றன.

## கிராமப் பஞ்சாயத்து

முதன் முதலிலே பஞ்சாயத்து ஏற்பாடுகள் தத்தமக்கு விருப்பமான முறையிலே ஏற்படவேண்டுமென இருந்தபோதிலும் பின்னால் கிராமப்பஞ்சாயத்து ஆட்சியில் ஒருவகையான வற்புறுத்தல் ஏற்பட்டிருப்பதினாலேதான் இப்படிப்பட்ட முன்னேற்றங்களெல்லாம் சாத்தியமானதென்று தோன்றுகிறது. கிராமத்தாரில் ஒருவர் நமது பத்திராதிபரைப் பார்த்தபொழுது அவரிடம் தம்முடைய கிராமத்திலே பஞ்சாயத்து ஏற்பட்டு இருப்பதை ஒன்றிரண்டு வருடங்களுக்கு முன்னேயே அறிந்ததாகவும் பஞ்சாயத்து ஏற்பட்டு 11 வருடங்கள் ஆயும் தாம் அதை அறியா திருந்ததாகவும் கூறினார்.

அந்தக் கிராமத்தார் தாம் பொறுக்கவேண்டிய பெரிய பாரங்களை குறித்து அவ்வளவாக சந்தோஷப்படவில்லை. வற்புறுத்தலினாலே சில பிரதித் தீமைகள் உண்டு என்றாலும் ஆரம்பத்தில் நல்ல நன்மை உண்டாவதற்காக கிராம பஞ்சாயத்து ஆட்சியில் வற்புறுத்தல் ஏற்படுத்துவதே ஏற்றதாகும்.

---

## மல்லப்பள்ளி கிராமப் பஞ்சாயத்து பிரசிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ எம் லிங்கப்ப செட்டி அவர்கள் எழுதுகிறார்.

### ரோடின் கஷ்டம்.

மல்லப்பள்ளி பஞ்சாயத்து கிராமத்திலிருந்து பெங்களூர் ரோட்டில் கலக்க ம-ா-ா-ஸ்ரீ கனம் ரிஜிஸ்ட்ரார் ஜெனரல் அவர்களால் சாங்கிஷன் செய்யப்பட்டு ஷை ரோடானது பஞ்சாயத்து எல்லை வரையில் போடப்பட்டு வேலைமுடிந்து சுமார் 2 வருஷங்களாகின்றன.

மேற்படி ரோடு பெங்களூர் ரோட்டில் கலக்க 3 பர்லாங் தூரம் பையனபல்லி ஜாகீர் எல்லை வழியாக போகவேண்டியிருப்பதால் ஜாகீர்தார்கள் தாங்களே ரோடு போட்டுக்கொள்வதாகச் சொன்னவர்கள் நாளதுவரையில் போடவில்லை.

2. மல்லப்பள்ளியிலிருந்து புதுப்பேட்டை ரோட்டில் கலக்கும் ரோடானது மல்லப்பள்ளி எல்லைவரையில் வேலை நடந்திருக்கிறது. புதுப்பேட்டையில் போய் கலக்க இன்னும் 4 பர்லாங் தூரமிருக்கிறது. இந்த ரோட்டை புதுப்பேட்டை பஞ்சாயத்து வேலை செய்தால் போக்குவரவுக்கு சௌகர்யமாய் இருக்கும்.

மேற்படி ரோடுகளை அதிகாரிகள் கவனித்து சீக்கிரம் முடிவுசெய்து கொடுப்பார்களென்றும், பொது ஜனங்களுக்கும் வண்டிகள் நடமாடுவதற்கும் சௌகர்யமா யிருக்கும் என்றும் நம்புகிறேன்.

---

## பூவனூர் பஞ்சாயத்து சித்த வைத்தியசாலை டாக்டர் வைத்தியபதி K. S. நடேசன் அவர்கள் எழுதுகிறார்.

தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி தாலூக்கா போர்டார் அவர்களின் ஆதரவையில் ஷை தாலூக்கா பூவனூர் பஞ்சாயத்து சபையாரால் நடத்தப்பட்டுவரும் பூவனூர் சித்த வைத்திய சாலையில் 13-7-30-ம் தேதியிலிருந்து 1-1-31 வரை, மருந்து அருந்தியவர்களின் பட்டிகை விபரம், ஆண் 1318, பெண் 892, குழந்தைகள் 290, இந்துக்கள் 2232, முகம்மதியர் 22, கிருஸ்தவர்கள் 246, பழைய சிக்காளி 1096. புதிய சிக்காளி 1404. உள்ளூர் 1410, வெளியூர் 1090. மொத்தம் 2500. 11—8 – 30. தேதியன்று 35 பேர்கள்.

---

# TO LET

# லோத்ரா

## கர்ப்பாசய ரோக நிவாரணி

எல்லாம் ஒருமிக்க புகழத்தக்கதே!

15 வருஷ இல்லற வாழ்க்கைக்குப் பிறகு என் மனைவி ஒரு பெண்குழந்தைக்குத் தாயானள்.

சர்வகாலமும் 'லோத்ரா' வை கையிருப்பாய் வைத்திருப்பேன்; தூக்கத்திலும் மறவேன்.

6 வேளை மருந்து 15 வருஷகாலம் நீடித்த நோயை நிவர்த்திசெய்தது.

ருதுக சம்பந்தமான எல்லா வியாதிகளையும் பரிஹரிப்பதில் தலைமை பெற்றதெனக் கண்டேன்.

ஸ்திரீகளுக்குச் சகஜமாய் உண்டாகக்கூடிய சர்வ வியாதிகளையும் ஆச்சரியப்படக் கூடியவாறு போக்கி, அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் ஆனந்தத்தையும் தரத்தக்கது.

**கேஸரி குடீரம்**

**எழும்பூர், மதராஸ்**

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

# அசோக சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

## (அசோக உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும், நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக-உப்பு ஓர் அருமருந்து.

உணவை நன்ருகச் செரிக்கச் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும், மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அஜீரணம், பித்த வாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலை மயக்கம முதலிய நோய்களை நீக்கவல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீரண பேதி, கணச் சூடு, வெட்டைச் சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல் போன்ற ரோகங்களைப் போக்கி, எவ்வித பிணியும் அணுகாமல் காக்கக்கூடியது அசோக-உப்பே யாகும்.

விலை ரூ. 1-8-0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி லிமிடெட், சென்னை.



பத்திராதிபர்.— கனம். ஸ்ரீ. [illegible]

அச்சிடுவோர்.— மதராஸ் கூட்டுறவு அச்சு இயந்திரசாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.


# மையர்ஸ் பம்புகள்

## ஜெகப்பிரசித்தி பெற்றவை

எல்லா வேலைகளுக்கும் இவைகளையே உபயோகியுங்கள்

கைபம்புகள், விசிறி (ஸ்பிரே) பம்புகள்,

பவர் பம்புகள் முதலியவை எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்




## ஸ்டோவர் எஞ்ஜின்கள்.

பவர் பம்புகளும் மற்ற மெஷின் பம்புகளையும் ஓட்டுவதற்கும், தங்களுக்கு எக்காரியத்திற்காகப் பம்புகள் வேண்டுமென்பதைப்பற்றியும் விவரமாக எழுதுங்கள். எஸ்டிமேட்டின் :: விவரம் முழுவதும் அனுப்புகிறோம். ::

இந்தியாவுக்கு சோல் ஏஜண்டுகள் !—

தபாற் பெட்டி நெ. 202 } ஸிமாயி பிரதர்ஸ் லிமிடெட்,
1/173, பிராட்வே, மதராஸ்.


இதழ் I. நெ. 6.

ரிஜிஸ்தர் நெ. M. 2623.

# 'கிராமப் பஞ்சாயத்து.'

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

8- APR

மார்ச்சு 1931.

பிரசுரஞ் செய்வோர்.

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

# நன்ஜன்கூடு சத்வைத்திய சாலை கூட்டுவேலை.




ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ்.

"சத்வைத்தியசாலை." நன்ஜன்கூடு

சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

டானிக்
சியாவனப்
ராசா
ஜீவஸ்ஹிதா
பாலஸ்ஹிதா




தைலம் :
ப்ருங்காமலக
அமிர்தாமலக
சந்தனாதி

(குழந்தை கட்டிக்கு, 15 நாள் மருந்து ரூ 2—0—0).

நஞ்சன்கூடு பல்பொடி

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.


## அடக்கம்.

பக்கம்.


1. நன்றி பாராட்டல் ... ... ... ... 123
2. லோக்கல் போர்டுகளின் இன்ஸ்பெக்டர் ... ... 126
3. மோட்டார் வண்டிகள் தீர்வை சட்டம் ... ... 127
4. துங்கபத்ரா அணைக்கட்டு ப்ருஜக்ட் ... ... ... 128
5. காட்டுப் பஞ்சாயத்தைப்பற்றிய விதிகள் ... ... 129
6. மத்திய பாடசாலைகளைப்பற்றிய ஆலோசனை ... ... 130
7. கிராமப் பஞ்சாயத்து அசல் காரிய நிர்வாகி ... ... 131
8. திருவாங்கூர் சமஸ்தானத்தில்—பஞ்சாயத்துக்களின் தேவை ... 138
9. புதுச்சட்டத்தின் அமுல் ... ... ... 142
10. விவசாயமே உயிர்தொழில் ... ... ... 146
11. சர்குலர் ... ... ... ... 147


## சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு ரூபாய் 2.

மற்றவர்களுக்கு ... „ 3.

தனிப்பிரதி ... அணா 4.

## விளம்பர விகிதம்.

பத்திரிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,


சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

## பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள். பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிருபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவு மிருத்தல்வேண்டும். கொஞ்சயிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிருபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிருபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.


**நம்பிக்கையுள்ள ஔஷதம்**

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, முதலிய வியாதிகளுக்கு எங்கள்

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1] [கேட்லாக் இனாம்

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26, பிராட்வே, சென்னை.


# கிராமப் பஞ்சாயத்து.


மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் 1.] 1931௵ மார்ச்சி௴ [இலக்கம் 6.


## நன்றி பாராட்டல்.

நமது வாழ்நாளில் நடக்கக்கூடிய சம்பவங்களில் மிகவும் முக்கியமான சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது. இர்வின் பிரபுவும், மகாத்மா காந்தியும் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டுவிட்டார்கள். இவரில் ஒருவர் இவ்வுலகத்தில் மகோன்னதமான ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக இருக்கிறார் மற்றொருவர் மனிதரால் அடையக்கூடிய ஆத்ம பயிற்சிக்கு அடையாளமாக இருக்கிறார். கோடிக்கணக்கான ஜனங்களின் சக்தி காந்தியை தாங்கி நிற்கின்றது. கிருஸ்துவின் நேர்மை இர்வின் பிரபுவையும் தாங்குகின்றது. இதற்கு ஐயமில்லை. சக்தியுடன் நேர்மை ஒன்று சேர்ந்துள்ளது ஒரு பக்கம். மற்ற பக்கத்தில் நேர்மையுடன் சக்தி கலந்துள்ளது. இக்காட்சி இன்றல்லாமல் வேறு ஒருபோதும் காண்பதரிது. நம் எல்லோரையும் ஆண்டு போற்றிவரும் சர்வ வல்லமை பொருந்திய கடவுளருளால் நமது துறவிகளும் ஞானிகளும் கனவிற்கண்ட காட்சி உண்மையாக நிகழ்ந்திருக்கின்றது. நாம் எவ்வளவு விசேஷமான காலத்தில் வாழ்ந்து வருகின்றோம் என்பதை நமது நேயர்கள் உணரவேண்டும். இந்த யுக தர்மத்திற்கு இசைந்தவாறு நமது தேசத்தார் புரிந்துள்ள முயர்ச்சி சொல்லுக்கடங்காத புகழுக்கு உரியது. ஆயிரக்கணக்கான மனிதர் தமது வீடு வாசல்களையும் மற்றெல்லா பொருள்களையும் இழந்து சமாதானத்தை நாடிய அற்புதம் உலக சரித்திரத்திலேயே இணையற்றது. சப்ரு, ஜயகர், சாஸ்திரி முதலிய மகான்களின் பெரு விடாமுயற்சியாலும் இச்சமாதானம் ஏற்பட்டுள்ளது. இதற்கும் பண்டைக்காலத்தில் இணை கிடையாது. இப்பொழுது இந்தியா கவர்ன்மெண்டின் பொறுப்பை தாங்கி வரும் இர்வின் பிரபுவுடைய ஆச்சரியமான பொறுமைக்கும் கடமின்மைக்கும் மகாத்மாஜியே சாக்ஷியாயிருக்கிறார். இர்வின் பிரபு தமது பொறுப்பை அதற்கு உரிமையுடைய சொந்தக்காரரிடம் கொடுக்க சித்தமாயிருக்கிறார்.

ராஜப்பிரதிநிதியை பார்க்க விரும்பியபோது காந்திஜி கூறிய வார்த்தைகளை நாம் நமது நேயர்களுக்கு நினைவு ஊட்டுவோம். தாம் இர்வினுடன் பேசுவது மனிதன் மாத்திரம் மற்றொரு மனித மாத்திரனுடன் எவ்விதம் பேசுவானோ அவ்விதம் பேச விரும்புகிறதாக அவர் கூறினார். அதனால் இப்பொழுது அவர்கள் அடைந்திருக்கும் விஜயம் காந்தியின் தலைமையும் அன்று, இர்வின் பிரபுவின் ராஜ்ய அதிகாரமும் அன்று; மற்றென்னவென்றால் அவர் இருவருடையவும் உயர்ந்த உள்ளத்தினுடைய விஜயமே. நெடுங்காலமாக மனிதனுடைய தன்மை அரசாங்க அதிகாரத்திலும் அதற்கு நேரு விதமான தேசியமுயற்சியிலும் மறைக்கப்பட்டு கஷ்டமடைந்துகொண்டிருந்தது. அஹிம்சைக்கும் சாந்தத்திற்கும் இடம் உண்டானால்தான், மனிதன் தன்மை வெளியில்வரக்கூடும். ஆகவே உலகத்தில் காந்தி முயற்சிகள்போன்ற அநேகம் ஆரம்பமாய் சர்வதேசசங்கத்தின் ஸ்தாபனத்தோடு முடிந்திருந்தன. ஈசுவரனுடைய கிருபையால் இப்பொழுது பாரத பூமியில் மனிதன் தன்மைக்கு உத்தமமான லக்ஷணங்களை காந்தி இர்வின் இருவரும் காட்டிவிட்டார்கள். உலகத்தினுடைய யாத்திரையில் இது முதல் சுமைதாங்கி என்றே கூறலாம். நம்தாய் நாட்டில் இந்த முதல் சுமைதாங்கியை ஏற்படுத்தி பெரும் கௌரவத்தை நமக்கு சம்பாதித்துக் கொடுத்த பராத்பரனை நாம் வணங்குவோம். காந்தியின் ஜீவித தத்வ ரஹஸ்யத்தை பாரதமக்கள் ஒருவரும் மறக்கக்கூடாது. மனிதரின் துன்பங்களை நீக்குவதற்காக அவதரித்துள்ள மஹானன்றி வேறொருவரும், அன்று காந்தி. அவரைத் தூண்டுகிறது குறுகிய தேசாபிமானமன்று. இந்திய சுயராஜ்யம் மூலமாக உலகத்தின் க்ஷேமம் அதிகரிக்கவேண்டும். அதற்காக கடவுள் இப்பொழுது நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். இந்தியர் பெற்றுள்ள பெரும் பேர்கள் யாவும் கடவுள் சித்தத்தின்படி இவ்வுலகத்தை சமாதான வழியில் ஒழுக செய்வதற்கே. நாம் எல்லோரும் இன்றைக்கு காந்திஇர்வின் சமாதானத்தைப்பற்றி பேரானந்தம்கொள்ளுவது ஏனென்றால், இந்தியாவிற்கு சுயராஜ்யம் கிடைத்துவிடும் என்பதனாலன்று; இவ்வுலகத்திற்கு நாம் செய்யக்கூடிய ஊழியத்தைச் செய்யும் ஆற்றல் பெற்றோம் என்பதினாலேயே. காந்தியின் திருவாக்குகளை திரும்பியும் நினையுங்கள். "மனிதனுடன் மனம்" பேசவேண்டும், ஒரு அதிகாரி மற்றொரு அதிகாரியுடன் பேசவில்லை: ஒரு தேசத்தின் பிரதிநிதி மற்றொரு தேசத்தின் பிரதிநிதியுடன் பேசவில்லை,

குணதிசையும் குடதிசையும் சந்தித்து, மானிடவாழ்வின் மேன்மையை புகழ்ந்து பாடுகின்றது. ஆனால் இதெல்லாம் ஆரம்பம் மட்டுமே. இந்த ஆரம்பம் உண்மையான ஆரம்பமாதலால் நாம் சந்தோஷப்படுகிறதில் குற்றமில்லை. நாம் யாத்திரை செய்யப் புறப்படுகின்ற வழி மிகவும்





நீண்டதாய் இருக்கிறது என்பது மெய்தான். இன்னும் இருள் அடர்ந்ததாய் இருப்பதும் மெய்தான். ஆனால் அஞ்சவேண்டிய காரணமில்லை. சத்தியமான ஜீவிதத்தின் பெருவெள்ளம் இந்த இருளை உடைப்பெடுத்துவிட்டது. இப்புவியில் ஒருவராலும் இப்பொழுது அந்த சத்திய ஜீவிதத்தை தடுக்கமுடியாது. எல்லாம் வல்லவனும் எல்லாம் அறிந்தவனுமாகிய கடவுள் இந்தியருக்கு பணிவையும் அறிவையும் இச்சமயத்திற்குரிய விசாலநோக்கத்தையும் அளிப்பாராக. அதர்மமான உர்ச்சாகத்தாலும், அஞ்ஞானத்தாலும், குறுகிய காழ்ச்சியினாலும், குருட்டுத்தனமான அபிமானத்தாலும் விளையும் படுகுழிகளிலிருந்து அவர் நம்மை காப்பாற்றுவாராக.

## லோக்கல் போர்டுகளின் புதிய இன்ஸ்பெக்டர்.

ம-ா-ா-ஸ்ரீ N. கோபாலசுவாமி அய்யங்கார் அவர்கள் இப்பொழுது திரும்பவும் லோக்கல் போர்டுகளின் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். நம்மை சம்பந்தித்த மட்டும் அவர் பஞ்சாயத்துக்களின் ரிஜிஸ்திரார் ஜனரல் என்ற பதவிக்கு திரும்பவும் வந்திருக்கிறார். இதற்காக அவரை நாம் மனப்பூர்வமாக நல்வரவு கூறுகிறோம். சென்னை பஞ்சாயத்து புல்லட்டின் அவராலேயே தொடங்கப்பட்டது. நாம் அதன் பிரசுரகர்த்தராக வந்திருப்பதால் அவருடைய முயற்சியாற்றியே நாம் இப்பொழுது வாழ்ந்து வருகிறோம். அவருக்கு பஞ்சாயத்துக்களின் மீதுள்ள அபிமானத்திற்கு அளவே இல்லை. இதற்கு அத்தாட்சியும் வேண்டுமானால் 1928-ம் ஆண்டு மேமாதத்தில் பிரசுரித்த முதல் சம்புடத்தின் முதல் இதழில் உள்ள முகவுரையில் அவர் குறிப்பிட்ட சில வாக்கியங்கள் தெளிவாக வெளி இடுகின்றன. அவர் குறிப்பிட்டதாவது :—

"நான் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சுயஆட்சி கிடைப்பதை மாகாண கவர்ன்மெண்டுக்கும், இந்தியா கவர்ன்மெண்டுக்கும் சுய ஆட்சி கிடைப்பதைவிட முக்கியமாகக் கருதுகிறேன். உனக்கு எது வேண்டும், ஸ்தல சுய ஆட்சி வேண்டுமா அல்லது இந்திய சுய ராஜ்பம் வேண்டுமா என்று கேட்டால், கொஞ்சமும் கூசாமல் நான் ஸ்தல ஸ்தாபனங்களின் சுய ஆட்சியையே ஒப்புக்கொள்வேன். ஸ்தல ஸ்தாபனங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத சிறு அணுக்களாக இருக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயமல்ல. அவையாவும் கூட்டுறவினாலும் ஐக்கிய மத்தியத்தினாலும் ஒன்றாகச் சேர்த்து கட்டப்பட்டிருக்கவேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சுதந்திரமும் சுய ஆட்சியும் கிடைப்பதே உண்மையான சுயராஜ்பமென்று நான் கருதுகின்றேன்." இவ்வாறு கூறியபின் உலகத்தினுடைய நோக்கத்தில் பிரதானமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எதிர் காலத்தில் நம்வாழ்க்கையில் ஏற்படக்கூடிய புரட்சிகளுக்கு, பஞ்சாயத்து சபைகள் தாங்குதலாக இருக்கவேண்டும். ஆனால் பஞ்சாயத்து சபைகளின் அபிவிருத்தியில் இவ்வளவு அன்பும் ஆதாவும் உடைய ஒரு பெரியார் திரும்பவும் தலைவராக வந்திருப்பது தெய்வீகமான அதிருஷ்டமென்றே நம்புகிறோம். இத்துறையில் முயன்றுவரும் எல்லா அதிகாரிகளுக்கும், மந்திரி அவர்களுக்கும் வேண்டிய அளவு கோபாலசுவாமி அய்யங்கார் அவர்கள் உதவிபுரிந்துவருவார் என்பதற்கு சிறுதும் ஐயமில்லை. புதுச்சட்டத்தினால் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ள இக்காலத்திற்குரிய எல்லா கஷ்டங்களையும் அவர் தமது ஆலோசனையில் நிவிர்த்திப்பார் என்று நம்பலாம். அவர் மூலமாக நாம் நமது லட்சியத்தை அடைவோம் என்று எண்ணலாம். அவருக்கு எடுத்த கருமத்தில் வெற்றி சித்திக்கவேண்டுமென்று ஆசிகூறுகிறோம்.



## மோட்டார் வண்டிகள் தீர்வை சட்டம்.

நமது சென்ற பத்திரிகையில் சுங்கங்களை நீக்குதற்கான ஒரு மசோதாவைப்பற்றி குறிப்பிட்டிருந்தோம். கோர்ட்டு பரிபாஷைப்படி அதன் பெயர் சென்னை மோட்டார் வண்டிகளின் தீர்வை மசோதா என்று இருந்தது. நமது சட்டசபை அதன் சென்ற கூட்டத்தில் இந்த மசோதாவை சட்டமாக செய்ததைப்பற்றி நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம். அது அமுலுக்கு வருவதற்கு கவர்னர் ஜனாலவர்களுடைய அனுமதியை பெறுவதுதான் தாமதம். இதுவும் கூடியசீக்கிரத்தில் நடைபெறுமென்று நாம் நம்புகிறோம். அவ்வாறு நடக்குமானால் வரும் வருஷத்திலும் லோக்கல் போர்டுகளும் முனிசிபாலிட்டிகளும் சுங்கங்களை ஏலம் போடும் தொந்தரவுக்கு இடமில்லாமல் இருக்கும். இந்த வருஷத்தில் இதற்குள்ளாக நடத்தப்பட்ட ஏலங்களையும் நிறுத்திவைப்பதற்காக கவர்ன்மெண்டார் உத்தரவு இட்டிருக்கிறார்.

இந்த மசோதா சட்டமானபொழுது யார் தீர்வை கொடுக்கவேண்டும் என்பது முற்றிலும் மாறிவிட்டது. இந்த விஷயமாக சட்டத்தில் வந்திருக்கும் மாறுதல்கள் மிகலமே. இந்த மசோதாவில் கண்டனம் செய்யத்தகுந்த பிரிவுகள், அதாவது முக்கியமாக தீர்வை வசூலிக்கும் முறைகளும் போலீசாருக்குள்ள அதிகாரங்களும், முன்போலவே சட்டத்திலும் இருக்கின்றன. ஆனால் இந்த மசோதாவின் கடைசி ஆலோசனை சமயத்தில் சில பேர்கள் நினைத்ததையும், இந்த மசோதாவுக்கதிகாரியான கனம் மந்திரி அவர்கள் உறுதி கூறியதையும் கவனிக்கும்பொழுது, இந்தச் சட்டத்திலுள்ள இப்பிரிவுகள் அனாவசியமான தொந்திரவுகளுக்கொன்றும் இடம் கொடுக்காமல் நடைபெறுமென்று நாம் நம்புகிறோம்.

இந்த மசோதாவை இத்தனை சீக்கிரத்தில் சட்டமாக்கியதற்கு பிரதான மந்திரியை நாம் மெச்சுகிறோம். சுங்கங்களை நீக்குதலென்னும் இச்சட்டத்தின் முக்கிய பாகம் மிகவும் சிலாக்கியமானதே. மேலும் மாகாணத்தில் இப்பொழுது தீர்வை போடப்படுகிற வண்டிகள் மோட்டார் வண்டிகள் மாத்திரமே. அவைகளிலும் விவசாயத்திற்கு உபயோகிக்கும் வண்டிகளின்மீது தீர்வை போடாததைப்பற்றி நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். தற்காலம் விவசாயத்துக்காக மோட்டர் வண்டிகள் அதிகமாக உபயோகப்படுத்தவில்லை. ஆயினும் சில காலங்களுக்குள்ளாக அவைகள் ஏராளமாக உபயோகப்படுத்தக்கூடும் என்பதில் தடை இல்லை.

## துங்கபத்ரா அணைக்கட்டு ப்ருஜக்ட்.

துங்கபத்ரா அணைக்கட்டைப்பற்றி நமது பெப்ரவரி மாதப் பத்திரிகையில் நாம் குறித்துள்ளோம். சென்ற ஜனவரி, பெப்ரவரிமாதங்களில் இந்த அணைக்கட்டு அமைப்பதைப்பற்றி சட்டசபையில் அனேகம் கேள்விகள் அங்கத்தினர்கள் கேட்டார்கள். நமது நேயர்களுக்கு இந்த அணைக்கட்டு என்னவென்பதைப்பற்றி நாம் விளக்குகிறோம். இந்த அணைக்கட்டு கட்டுவதற்கு இரண்டு ஸ்தலங்களை கவர்ன்மெண்டார் குறித்துள்ளார்கள். அவை திம்மலாபுரமும் மலப்புறமும் ஆகும். திம்மலாபுரத்தில் எந்த ஸ்தலம் நல்லது என்பதைப்பற்றி கவர்ன்மெண்டார் பார்வை இட்டிருக்கிறார்கள். மலப்புறத்தில் ஹைதிராபாத் ஸமஸ்தானத்திலுள்ள சில பிரதேசங்கள் நீரில் மூழ்கிவிடும்போல் இருக்கிறது. திம்மலாபுரத்திலுள்ள ஸ்தலமும் இதேமாதிரியாக பம்பாய் மாகாணத்திலுள்ளதும் மைசூர் ஸமஸ்தானத்திலுள்ளதுமான சில ஸ்தலங்களை பாதிக்கின்றது. நமது கவர்ன்மெண்டார் இந்த ஸ்தலங்கள் விஷயமாக மற்றுள்ள கவர்ன்மெண்டாரோடு ஆலோசனைசெய்து கொண்டிருக்கிறார்கள். இதர கவர்ன்மெண்டாரிடமிருந்தோ, நிஜாமினிடமிருந்தோ, ஒருசமாசாரமும் வரவில்லை. ரவன்யூ இலாகா மெம்பர் இந்த அணைக்கட்டு ஆலோசனையை தாய விட்டுவிடப் போவதில்லை என்று கண்டிப்பாகக் கூறினார். இதற்கு நாம் கவர்ன்மெண்டாரிடம் நன்றி பாராட்டுகிறோம். ஆனால் இந்த விஷயத்தில் அனாவசியமாகத் தாமதமும், சரியான ஆலோசனையும் இல்லை என்பது நன்றாக புலப்படுகிறது. சென்ற நான்கு வருஷங்களாக கவர்ன்மெண்டார் இந்த அணைக்கட்டு நிர்மிப்பதைப்பதைப்பற்றி ஆலோசித்து வருகிறார்கள். இப்பொழுது திம்மலாபுரம் ஸ்தலத்தை பார்வை இடுவது முடிந்திருக்கிறது. ரிசர்வாயர் அங்கே கட்டுவது சௌகரியமென்று கவர்ன்மெண்டார் உணர்ந்திருக்கிறார்கள். இதற்கு முன்னவசரங்களில் நமது கவர்ன்மெண்டார் பம்பாய் கவர்ன்மெண்டாரோடு ஆலோசிப்பதாக கூறியிருக்கிறார்கள். ஆனால் மைசூர் சமஸ்தானத்தோடு கலந்துபேசுவதாக ஒன்றும் தீர்மானமாக சொல்லவில்லை. மலப்புறத்தைப்பற்றி நிஜாம் ஒத்துழைக்க மறுத்துவிட்டதால் கவர்ன்மெண்டார் திம்மலாபுரத்தை பரிசோதனைசெய்து பார்த்தார்கள். ஆனால் இப்பொழுது நிஜாமின்கூட கவர்ன்மெண்டார் கடிதப்போக்குவரத்துச் செய்வதாகக்கூறுவதின் காரணம் நமக்கு நன்கு விளங்கவில்லை. மேலும் அநந்தப்பூர், தர்மாவரம் தாலுக்காக்களில் நீர்ப்பாய்ச்சலுக்கு வழி ஒன்றைப் பற்றியும் கவர்ன்மெண்டார் முடிவுக்கு வாராதது மிக்க வருத்தம் விளைக்கின்றது. ஒரு வினாவுக்கு ரவனியூ மெம்பர் பதிலளிக்கையில், இந்த அணைகட்டினால்





பல்லாரி, அனந்தபூர், கர்னூல், கடப்பா இந்த நான்கு ஜில்லாக்களே க்ஷேமம் அடையுமென்று கூறினார். அவர் ஞாபகத்தில் இருந்து பதிலளித்தார் என்று நாம் எண்ணுகிறோம். ஏனென்றால் அவர் குண்டூர் ஜில்லாவை மறந்துவிட்டார். கிருஷ்ணா அணைக்கட்டையும் துங்கபத்ரா அணைக்கட்டையும் சேர்த்து விசாரணை செய்வதைப்பற்றி நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். வெல்கோடுபோன்ற சிறு அணைக்கட்டுகளையும் சேர்த்து ஆலோசிப்பது நலமென்றே சொல்லவேண்டும். மற்ற கவர்ன்மெண்டாரிடம் கடிதப்போக்குவரவுசெய்து ஒரு காரியத்தை முடிவுக்கு கொண்டுவருவது என்பது ஒருநாளில் செய்யக்கூடிய வேலை அன்று. ஆகிலும் கவர்ன்மெண்டார் எவ்வளவு உறுதிமொழி கூறினாலும் அவர்கள் துங்கபத்ரா அணைக்கட்டு விஷயமாக சிறிது அசட்டையாக இருப்பதாகவே தெரியவருகிறது. 1927-ம் வருஷத்தில் திரும்பவும் இந்த அணைக்கட்டைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்ய துடங்கியது முதல் நாளதுவரை இது விஷயமாக என்னசெய்திருக்கிறார்களோ அதையும், மேலும் இதிலும் முக்கியமாக, மற்ற கவர்ன்மெண்டாருடன் செய்திருக்கும் கடிதப்போக்கு வரவுகளையும் வெளி இடுவார்களானால் ஜனங்களுக்கு சமாதானம் உண்டாகும் என்பதற்கு சந்தேகமில்லை. இந்த ஏற்பாடானது 1902-க்கு முன்னதாகவே கவர்ன்மெண்டாரால் ஆராயப்பட்டு வருகின்றது. கனம் A. Y. G. காம்பல் அவர்கள் கூறியதுபோல் கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் சிரத்தை செலுத்துவாரானால், அவர்கள் இந்த அணைக்கட்டு ஆலோசனையை கூடிய சீக்கிரத்தில் ஆரம்பித்து லக்ஷக்கணக்கான ஜனங்களின் நன்றியை பெறுவார்கள்.

### காட்டுப் பஞ்சாயத்தைப்பற்றிய விதிகள்.

கவர்ன்மெண்டார் சட்ட சபையில் ஒரு கேள்விக்கு பதிலளித்த போது காட்டுப் பஞ்சாயத்து விஷயமான விதிகளை இன்னும் அவர்கள் ஆலோசிப்பதாக கனம் ரவனியூ மெம்பர் கூறினார். இந்த விஷயம் இன்றைக்கோ, நேற்றிக்கோ, தொடங்கிய ஒரு காரியமல்ல. இது வெகுகாலமானது. ஏறக்குறைய 1928-ம் ஆண்டில் இந்த கேள்வி முதலில் எழும்பியது. போர்டின் நிரந்தர விதிகள் ஏற்படுத்தும் விஷயம் (Boards' Standing Order) 2 வருஷமாக ஆலோசனையில் இருந்துவருகின்றது. 1930-ம் ஆண்டு ஜூனிலோ, அல்லது ஜூலையிலோ, அவை பிரசுரிக்கப்பட்டன. அபிப்பிராய பேதங்களைகொண்டு வருவதற்கு ஸப்டம்பர் மாதம்வரை அனுமதி கொடுக்கப்பட்டது. இவ்விஷயமாக கவர்ன்மெண்டார் ஏதேனும் ஒருமுடிவுக்கு வருவதற்கு இன்னும் தாமதிக்கலாகாது. விதிகளின் நகல் அனேகம் குற்றம் குறைவுகளோடு இருந்ததாக பலபேர் அபிப்பிராயம் கூறினார்கள். சட்டமாவதற்கு முன்னதாக இந்த நகலில் ஏராளமான சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார்கள். காட்டுப் பஞ்சாயத்துக்களுக்காக சட்டம் ஒன்று

கவர்ன்மெண்டார் கொண்டுவராவிட்டாலும் இந்த நகலின்படி உள்ள விதிகளையாவது கூடியசீக்கிரத்தில் அமுலுக்கு கொண்டுவரவேண்டும். ரங்கநாத முதலியார் கூறியது போலவே இந்த நகலை திருத்தின கமிட்டி ஏகமனதோடு செய்த சிபார்சுகளையாவது உடனே அமுலுக்கு கொண்டுவர கவர்ன்மெண்டார் கடமைப்பட்டிருக்கிறார்.

## மத்திய பாடசாலைகளைப்பற்றிய ஆலோசனை.

மாகாண கவர்ன்மெண்டார் இப்பொழுதாவது ஆரம்ப பாடசாலைகளில் நிகழும் அழிமுறலை கண்டுபிடித்திருப்பதைப்பற்றி நாம் சந்தோஷப்படுகிறோம். ஒரு உபாத்தியாயர் மட்டுமுள்ள பாடசாலைகளுக்கு பதிலாக மத்திய பாடசாலைகள் ஸ்தாபிப்பதற்கு ஒரு புது ஏற்பாடு தொடங்கி இருக்கிறார்கள். பாலர்கள், பெண்பிள்ளைகள், முகம்மதியன், ஹிந்து இவர்கள் ஒவ்வொருவருக்கும் கீழ்வகுப்புகளிலும்கூட பிரத்தியேக பள்ளிக்கூடங்கள் கவர்ன்மெண்டார் ஸ்தாபித்திருக்கிறார்கள். உதாரணமாக ஒரு சிறு கிராமத்தில் தாலூக்கா போர்டின் ஆளுகையில் 6-க்கதிகம் பாடசாலைகள் பிரயோசனமற்ற ஒரு உபாத்தியாயரின்கீழ் மூன்றும் வகுப்புவரையில் கல்வி கற்பிப்பது மிக்க ஆச்சிரியம் விளைவிக்கும் காழ்சையாகும். கல்வி இலாகாத்தலைவர் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார். அவற்றின் உத்தேசமானது பல ஆரம்பப் பாடசாலைகளை ஒன்று சேர்த்து ஒரே இடத்தில் ஸ்தாபிப்பதே. ஒரே பாடசாலையில் அனேகம் உபாத்தியாயர்கள் இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் தமக்கு எந்தெந்த விஷயத்தை கற்பிக்க திறமையுண்டோ அந்தந்த விஷயத்தை கற்பிக்கவேண்டும். தாலூக்கா போர்டார் இவ்வித பெரியபள்ளிக்கூடங்களுக்குதான் பொருளுதவி சகாயம் செய்யவேண்டும். பல ஜாதி பெண் பாலர்களும் ஆண் பாலர்களும் ஒன்று சேர்ந்து படிப்பதற்கு ஏதேனும் பெருத்த தடை இருப்பின் அந்த ஸ்தலங்களில் அவர்களுக்கு தனித்தனியாக வகுப்புகள் பிரித்துவைத்து ஒரே பாடசாலையில் அவர்கள் படிக்கவேண்டும். கவர்ன்மெண்டாரின் கொள்கை என்னவென்றால் இந்த ஒரோ பள்ளிக்கூடங்களிலும் முடிவில் 500 பிள்ளைகளை படிப்பிக்க வேண்டுமென்பதே. இந்த அபிப்பிராயங்கள் சிலாக்கியமானதென்று நாம் எண்ணுகிறோம். இந்த ஒரோ பள்ளிக்கூடங்களிலும் படித்து வரும் ஆண், பெண் மக்கட்குத் தங்களுடைய பிற்காலத்தில் பிரயோசனப்படும் கல்வி பயிர்ச்சி அளிப்பார்களானல் நமது நாடு முன்னில்லாத வாறு அபிவிருத்தி அடையும்.

---



## கிராமப் பஞ்சாயத்து—அதன் காரிய நிர்வாகி.

ஒரு குறிப்பிட்ட எல்லையில் அடங்கிய பிரதேசத்தை ஆண்டு வருவதே பஞ்சாயத்து ஸ்தாபிப்பதின் உத்தேசம். அவ்வாறாகை சென்னை ஸ்தல ஆட்சி சட்டத்தின்படி நடைபெறவேண்டும். இச்சட்டத்தினலாவது, அல்லது வேறெந்த சட்டத்தினலாவது பஞ்சாயத்தின் தலைவருக்கோ, அல்லது அன்னியஸ்தல ஆட்சி ஸ்தாபனங்களுக்கோ, அல்லது அன்னிய அதிகாரிகளுக்கோ, திட்டமாக கொடுத்திருக்கும் வேலைகளில் பஞ்சாயத்து தலையிடக்கூடாது. (செக்ஷன் 6 சப்செக்ஷன் 2). இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு சென்னை ஸ்தல ஆட்சி சட்டத்தில் சொல்லப்படும் அரசாட்சி முறைப்பிரகாரம் பஞ்சாயத்தே தனதுகாரிய நிர்வாகியாக இருக்கிறது. இது இவ்விதம் இருப்பினும் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரங்கள் முழுவதும் அதனுடைய தலைவருக்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவசர சந்தர்ப்பங்களில் எந்த வேலையையாவது நடத்துவதற்கும் அதற்கு அவசியமான செலவை பிரியம்போல் செய்வதற்கும் பஞ்சாயத்துப் பிரசிடெண்டு உரிமை பெற்றிருக்கிறார். (செக்ஷன் 22) ஆனல் சதாரணமாக பஞ்சாயத்தின் தீர்மானங்களை நடவடிக்கையில் கொண்டுவர அவர் கடமைப்பட்டிருக்கிறார். (செக்ஷன் 21, சப்செக்ஷன் 1) ஏதாவது அவசர சந்தர்ப்பத்தில் அவர் ஏதேனும் செய்வாரானல், அது பஞ்சாயத்தின் கட்டளைக்கு விபரீதமாக இருக்கக்கூடாது. மேலும் அவ்விதம் செய்ததையும் அதன் காரணங்களையும் அடுத்த பஞ்சாயத்து பொதுக்கூட்டத்தில் அவர் வெளியிடவேண்டும். (செக்ஷன் 22 ப்ரொவிசோஸ் ஏ. & பி.) பஞ்சாயத்திற்கு தமது நடவடிக்கைகளை இஷ்டப்படி செய்வதற்கு உரிமை உண்டு. ஆனல் இந்த முறைகள் சென்னை ஸ்தல ஆட்சி சட்டத்தின் II-வது ஷெடியூலில் சொல்லி இருக்கும் விதிகளுக்கோ, அல்லது அச்சட்டத்தின் இதரபாகங்களுக்கோ, அல்லது லோக்கல் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் விதிகளுக்கோ விரோதமாக இருக்கக்கூடாது. (செக்ஷன் 31.) தமது அங்கத்தினர்கள் மூலமாக பஞ்சாயத்தார் எல்லா விஷயங்களைப் பற்றியும் எவ்விதத் தீர்மானங்களும் செய்வதற்கு உரிமையுடையவர். (செக்ஷன் 26 சப் செக்ஷன் 2.) ஸ்தாவரசங்கமமான இருவகை உடைமைகள் பஞ்சாயத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவை. (செக்ஷன் 6 சப் செக்ஷன் 3) பஞ்சாயத்து வேலைபாட்களையும் உத்தியோகஸ்தர்களையும் அதிகப்படுத்துவதற்கும் குறைப்பதற்கும், அவர்களின் எண்ணிக்கையையும் தரங்களையும் (grade) மாற்றுவதற்கும், அவர்களுக்கு கொடுக்கவேண்டிய சம்பளங்களையும் அலவன்சுகளையும் கூட்டுவதற்கும் குறைப்பதற்குமான எல்லா

ப்ரேரேபணைகளையும் பஞ்சாயத்தார் அனுமதி செய்யவேண்டும். (செக்ஷன் 67 சப் செக்ஷன் 1) வரவுசெலவு திட்டத்தை அங்கீகரிப்பதற்கும் அதை நிராகரிப்பதற்கும் பஞ்சாயத்தார் அதிகாரம் உடையவர். (செக்ஷன் 116) அவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கும், எந்த வேலைகளை செய்வதற்கும் கமிட்டிகளை ஸ்தாபிப்பதற்கும் அதிகாரம் உடையவர். (செக்ஷன் 28, சப்-செக்ஷன் 1 ஏ.) மெம்பர்களை தனித்தனியாகவோ, அல்லது, கமிட்டிகளாகவோ நியமித்து எந்த விஷயம் பற்றியும் அவர்களைக்கொண்டு ஆராய்வதற்கும், அல்லது, ரிப்போர்ட் செய்வதற்கும், அல்லது, உபதேசிப்பதற்கும் கட்டளை இடுவதற்கும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. (செக்ஷன் 28, சப்-செக்ஷன் 1 பி.) பஞ்சாயத்தின் தலைவர் இந்தக் கமிட்டிகளுக்கும் தலைவராயிருப்பர். பொதுக்காரியங்களில் வேறு சுயஆட்சி ஸ்தாபனங்களோடு ஒத்துழைப்பதற்கு பஞ்சாயத்தார் அதிகாரம் பெற்றிருக்கின்றனர். (செக்ஷன் 30, சப்-செக்ஷன் 1.) இந்த செக்ஷனை சப்-ஜில்லா பஞ்சாயத்துக் கமிட்டிகள் ஏற்படுத்துவதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். மேலும் தலைவர் மீதோ, அல்லது உபதலைவர்மீதோ அவநம்பிக்கை ப்ரேரேபணை கொண்டுவருவதற்கும் அவரைத் தம் வேலையிலிருந்து நீக்குவதற்கும் பஞ்சாயத்திற்கு அதிகாரம் உண்டு. (செக்ஷன் 44) இவ்விதம் நிர்வாக அதிகாரங்களை முற்றிலும் அடக்கி ஆளும் உரிமை பஞ்சாயத்தார் பெற்றிருக்கின்றனர்.

மேல் சொல்லப்பட்ட பஞ்சாயத்தின் அதிகாரங்களுக்குட்பட்டு, பஞ்சாயத்தின் தலைவரே அதன் பிரதான நிர்வாக அதிகாரி. முதலாவது அவர் பஞ்சாயத்தின் அங்கத்தினராக இருக்கவேண்டும். பஞ்சாயத்தங்கத்தினர்களே அவரை தெரிந்தெடுக்கவேண்டும். (செக்ஷன் 12) மெம்பராக எவ்வளவு காலம் அவருக்கு உரிமை இருக்கிறதோ அவ்வளவு காலமே பிரசிடெண்டாகவும் அவர் இருப்பார். அதாவது பஞ்சாயத்தில் எப்பொழுது மெம்பர் ஸ்தானம் நீங்கி விடுகிறதோ, அன்று முதலே தலைவர் பதவியையும் இழந்துவிடுவார். (செக்ஷன் 15—1 ஏ) வேறு ஏதேனும் ஸ்தல ஆட்சி ஸ்தாபனங்களுக்கு தலைவராக அவர் இருக்கும் பக்ஷத்தில் பஞ்சாயத்து தலைவராக இருக்கமுடியாது. அதாவது ஏதேனும் பஞ்சாயத்தின் தலைவராகவோ, அல்லது தாலுக்கா, ஜில்லா, போர்டுகளின் தலைவராகவோ அவர் இருக்குமிடத்தில் வேறொரு பஞ்சாயத்தின் தலைவராக இருப்பதற்கு உரிமையற்றவராவர். (செக்ஷன் 15-16) இவ்விதம் ஏதாவது சம்பவிக்குமானால் அவர் தமது பஞ்சாயத்துத் தலைவர் வேலையை ராஜினாமா செய்யக்கடவர். 44-ம் செக்ஷன்படி பிரசிடெண்டின்பேரில் அவநம்பிக்கைத் தீர்மானம் சித்திபெற்றால் அவர் தமது வேலையை ராஜினாமா செய்யவேண்டும். இன்னும் கீழே குறிப்பிடும் அவசரத்திலும் பஞ்சாயத்து பிரசிடெண்டார் தமது உத்தியோ





கத்தை ராஜினாமா செய்யக்கடமைபட்டவர். ஸ்தல ஆட்சி சட்டங்களையும், விதிகளையும், உத்தரவுகளையும் மனமாற செய்யத் தவறவோ, அல்லது மறுக்கவோ, அல்லது கவனியாமல் தமது மனம்போல் செய்யவோ, அல்லது அவருக்கு கொடுத்திருக்கும் அதிகாரங்களை அனாவசியமாக கையாளவோ செய்வாரானால் லோக்கல் கவர்ன்மெண்டார் அவரை வேலையிலிருந்தும் நீக்க அதிகாரம் பெற்றிருக்கின்றனர். (செக்ஷன் 43, சப்-செக்ஷன் 1) ஆனால் பிரசிடெண்டை நீக்குமுன்னர், கவர்ன்மெண்டார் இவ்விதம் தாங்கள் செய்வதின் காரணங்களை விளம்பரம் செய்ய வேண்டும. அந்த பிரசிடெண்டுக்கு சமாதானம் சொல்வதற்கும் அவசரமும் அளிக்க அவர் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒருவரும், லோக்கல் போர்டு சட்டத்தின், அல்லது அதன் விதிகளின்படி பஞ்சாயத்து பிரசிடெண்டாக இருப்பதற்கு தமக்கு உரிமை இல்லையென்று தெரிந்திருந்தால் பஞ்சாயத்து பிரசிடெண்டாக இருக்கக்கூடாது. தமக்கு கொடுக்கப்படாத அதிகாரங்களையும் செலுத்தக்கூடாது. அவர் அவ்விதம் செய்வாரானால் சிக்ஷைபெறுவதுமன்றி 1,000 ரூபாய்க்கதிகப்படாத அபராதமும் கொடுக்கநேரிடும். இதே மாதிரியாக பஞ்சாயத்து சம்பந்தமாக தமது பாத்திதையில் இருக்கும் சகல சாதனங்களையும், பணங்களையும், வஸ்துக்களையும் அவர் பின்வரும் பிரசிடெண்டினிடத்திலோ, அல்லது குறிப்பிட்ட அதிகாரியிடத்திலோ, கொடுப்பதற்கு ஒருவித தடையும் சொல்லக்கூடாது. இவ்விதம் செய்யத் தவறுவதாலும் அவர் மேற்கூறிய சிக்ஷை பெறுவார். (செக்ஷன் 208)

பஞ்சாயத்து மெம்பர்கள் அவரவர்கள் செய்யும் வேலைகளுக்காக பஞ்சாயத்து வருவாயிலிருந்து ஒரு பிரதிபலனையும் விரும்பக்கூடாது. அவர்கள் அவற்றை பெற்றுக்கொள்ளவும் கூடாது. பஞ்சாயத்து பிரசிடெண்டும் இந்த நியமத்துக்குக் கட்டுப்பட்டவர். (செக்ஷன் 20) பஞ்சாயத்து பிரசிடெண்டும் அவர் வேலையை பார்க்கும் மற்ற அதிகாரிகளும் பஞ்சாயத்துப் பணத்தை சட்டப்படி செலவு செய்யவேண்டும். இவ்விதம் செய்யாவிட்டால் கணக்கை பரிசோதிப்பவர்கள் இந்த அக்கிரமமான செலவுகளை அனுமதிக்காமல் அப்பணத்தை செலவுசெய்ய யார் அனுமதித்தாரோ அல்லது செலவு செய்தாரோ அவரிடமிருந்து ஈடு செய்யலாம். மற்ற அங்கத்தினர்களைப்போலவே, அவரும் தங்களுடைய அக்கிரமங்களினாலோ, அல்லது கவனக் குறைவினாலோ, பொருள்கள் நஷ்டமாகவோ, அல்லது அனாவசியமாக செலவுசெய்யவோ நேர்ந்தால் அதற்கு பாத்திதையுள்ளவராவர். லோக்கல் போர்டார் இப்பணத்திற்காக மாகாண கவர்ன்மெண்டின் அனுமதியுடன் அவர்மீது பிராது செய்யலாம். இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரியும் மூன்று வருஷத்திற்குள்ளாக அந்த பஞ்சாயத்து பிரசிடெண்டின்மீது வழக்குத் தொடரலாம்.

ஆனால் பஞ்சாயத்து பிரசிடெண்டோ, அல்லது அங்கத்தினர்களோ, அல்லது வேலைக்காரர்களோ, தமது வேலையை மனப்பூர்வமாகச்செய்து முடித்திருந்தால் பின்பு அவர் செய்கை தவறென்று புலப்படினும், அவர்கள் குற்றமடையமாட்டார்கள். இந்த விஷயத்தில் யார்மேலாவது வழக்கு கொண்டுவரமுடியுமானால், அது சில கட்டுப்பாடுகட்கடங்கி லோக்கல் போர்டுமீதே கொண்டுவரக்கூடும் (செக்ஷன் 225, சப்-செக்ஷன் A.)

நியாதிபதிகள், பஞ்சாயத்து பிரசிடெண்டும், உபப்-பிரசிடெண்டும், மெம்பர்களும் தமது உத்தியோக முறையில் ஏற்படும் எல்லா குற்றங்களை விசாரணை செய்ய அதிகாரம் பெறவில்லை. ஆனால் லோக்கல் கவர்ன்மெண்டின் அனுமதியுடன் அவர்கள் பேரில் குற்றம் சாட்டலாம். (செக்ஷன் 227 A.)

பஞ்சாயத்தும், அதன் பிரசிடெண்டும் சேர்ந்து அனுபவிக்கும் நிர்வாக அதிகாரங்களெல்லாம், ஸ்தல ஆட்சி சட்டத்திலிருந்து பிறந்தவையாகும். இவர்களைத் தவிர வேறு காரிய நிர்வாகிகளும் உண்டு. ஆனால் அவர்களுடைய அதிகாரம் பஞ்சாயத்தினிடமிருந்தோ, அல்லது, பஞ்சாயத்து பிரசிடெண்டினிடமிருந்தோ, ஏற்படவேண்டும்

இவர்களில் முக்கியமானவர் உபதலைவரே. எல்லாப் பஞ்சாயத்திற்கும் ஒரு உபதலைவர் அவசியம்வேண்டும். அவர் பஞ்சாயத்தின் அங்கத்தினராக இருக்கவேண்டும். அவர் அங்கத்தினர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவராகவும் இருக்கவேண்டும். (செக்ஷன் 12). அவர் எத்தனை நாள் பஞ்சாயத்தங்கத்தினராக இருக்கிறாரோ, அவ்வளவு காலமே அந்த பதவியிலிருக்கலாம். அதிகாரம் நிறுத்தல், அதற்கு சம்பந்தப்பட்ட தண்டனை முதல்போன்ற எல்லா விஷயங்களிலும் பிரசிடெண்டுக்கெவ்வாறோ அவ்வாறே, பிரசிடெண்டை பாதிக்கும் எல்லா செக்ஷன்களும் இவரையும் பாதிக்கும். மேலும் பிரசிடெண்டாக தெரிந்தெடுக்கும் விஷயத்தில் அவர் வைஸ்-பிரசிடெண்டு வேலையை ராஜினமா கொடுக்க வேண்டும்.

வைஸ்-பிரசிடெண்டுக்கு இயல்பாக நிர்வாக அதிகாரங்கள் ஒன்றும் கிடையாது. பிரசிடெண்டு உத்தியோகம் காலியாக இருக்குமாகில் புதிதாக ஒருபிரசிடெண்டு நியமிக்கப்படும் சமயம்வரை, வைஸ்-பிரசிடெண்டு அவருடைய அதிகாரங்களை செலுத்தலாம். (செக்ஷன் 22.A சப்-செக்ஷன் 1.)

மேலும் வைஸ்-பிரசிடெண்டானவர் பிரசிடெண்டு தமக்கு விட்டு கொடுக்கும் அதிகாரங்களையும் செலுத்தலாம். ஆனால் தமது தலைவரால் ஏதேனும் அதிகாரங்களை வேறொருவருக்கும் கொடுக்கக்கூடாதென்று





பஞ்சாயத்தார் எச்சரிக்கை செய்திருப்பாரானால் அவர் தமது அதிகாரங்களை விட்டுக்கொடுக்கக்கூடாது. (செக்ஷன் 23, சப்-செக்ஷன் 1.)

இவ்விதம் பிரசிடெண்டால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அவர் என்னென்ன கட்டுப்பாடுகள் ஏற்படுத்துகிறாரோ, அந்த கட்டுப்பாடுகளை எல்லாம் வைஸ் - பிரசிடெண்டு அங்கீகரிக்கவேண்டும். வைஸ்-பிரசிடெண்டு செய்த எந்த வேலையையும் பிரசிடெண்டுக்கு மாற்ற அதிகாரம் உண்டு. (செக்ஷன் 25). பிரசிடெண்டு அதிகாரம் கொடுக்காவிட்டாலும் சில சந்தர்பங்களில் வைஸ்-பிரசிடெண்டு, பிரசிடெண்டுக்கு பதிலாக அதிகாரங்களை செலுத்தலாம். பிரசிடெண்டு பஞ்சாயத்து வேலைபற்றி அன்றி சுயகாரியத்திற்காக சென்னை மாகாணத்திற்கு எல்லைப்புறம் 15 நாட்களுக்குமேல் போகும்போதும், அல்லது அவருக்கு வேலை செய்யமுடியாதவிதத்தில் தேக அசௌக்கியம் நேரிடும் போதும் வைஸ் பிரசிடெண்டு இவ்விதம் வேலை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர் பஞ்சாயத்தின் சிப்பந்திகளுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவோ, குறைவு சம்பளம் கொடுக்கவோ, அல்லது அவர்களை நீக்கவோ, அல்லது அவர்களின் எண்ணிக்கையை குறைக்கவோ, செய்யக்கூடாது. (செக்ஷன் 23, சப் செக்ஷன் 2). இந்த சந்தர்ப்பங்களில் வைஸ்-பிரசிடெண்டு செய்யும் காரியங்களை எல்லாம் பிரசிடெண்டு மாற்றலாம். எனினும் இப்பிரிவின் கீழ் அதிகாரம் செலுத்தும்போது, பிரசிடெண்டின் இதர நிபந்தனைகள் வைஸ்-பிரசிடெண்டை கட்டுப்படுத்தாது. 1922 நவம்பர் 23௳ பிறப்பெடுவித்த ஜீ. ஓ. நம்பர் 2889 எல். & எம்-ல் கவர்ன்மெண்டார் அறிவிட்டிருப்பதென்னவென்றால் வைஸ்-பிரசிடெண்டானவர் இவ்விதம் பிரசிடெண்டின் வேலையை நடத்திவரும்பொழுது அவர் அவ்விதம் செய்வதாக தமது தஸ்தாவேஜுவில் ஒப்பம் செய்யவேண்டுமென்பதே.

பஞ்சாயத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு பிரசிடெண்டானவர், எழுத்து மூலமாக தமது அதிகாரங்களை பஞ்சாயத்தங்கத்தினருக்கோ, அல்லது, வேலையாட்களுக்கோ, அல்லது கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தருக்கோ கொடுக்கலாம். (செக்ஷன் 23, சப்-செக்ஷன் 4) பஞ்சாயத்தார் மறுக்காவிடில் பிரசிடெண்டானவர் தமது அதிகாரங்களை வைஸ் பிரசிடெண்டுக்கு கொடுக்காமல் வேறொருவருக்கு கொடுக்கலாம். ஆனால் இவ்விதம் பிரசிடெண்டு தமது அதிகாரங்களை மொத்தம் 90 நாட்களுக்கதிகமாக ஒருவருக்கும் கொடுக்கக்கூடாது.

பஞ்சாயத்திற்கு பிரியமிருக்குமானால் மிகவும் அதிகாரம் வாய்ந்த அதிகார கமிட்டிகளையும், ஜாய்ண்டு கமிட்டிகளையும் ஸ்தாபிக்கலாம். அந்த கமிட்டிகளில் பஞ்சாயத்தங்கத்தினர்களல்லாதவர்களும் இருக்கலாம். ஆனால் அவர்கள் அக்கமிட்டிகளின் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகப்படக்

கூடாது. (செக்ஷன் 28 & 30). இந்த கமிட்டிகள் மிகவும் பிரயோசனமுள்ளவை இதனால் அனேகம் பஞ்சாயத்துக்கள் ஒத்துழைக்கலாம். மேலும் பஞ்சாயத்தங்கத்தினர்களை பஞ்சாயத்துக் காரியங்களில் பழக்கலாம். கமிட்டிகளுக்கு அதிகாரங்களை கொடுப்பதே சுய ஆட்சி ஸ்தாபனங்களை சரியாக நடத்தும் முறை.

சுருக்கமாக கூறுமிடத்து, இதுவே சாதாரண காலங்களில் ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக முறை. ஆனால் இப்பொழுதுள்ள ஸ்தல ஆட்சிச் சட்டம், தாலுக்கா போர்டு பிரசிடெண்டுகளுக்கும், கலெக்டர்களுக்கும் லோக்கல் கவர்ன்மெண்டாருக்கும் ஏராளமான அதிகாரங்களையும் கொடுத்திருக்கிறது. இவைகள் 38, 39, 41, 42, 43 செக்ஷன்களில் அடங்கி இருக்கின்றன. லோக்கல் கவர்ன்மெண்டார், எழுத்து மூலமாக, அனேகக் காரணங்களுக்காக பஞ்சாயத்தின் தீர்மானங்களையோ, அல்லது உத்தரவுகளையோ, அல்லது லைசென்சுகளையோ, அல்லது அனுமதிகளையோ நிராகரிக்கவோ, அல்லது நிறுத்தவோ செய்யலாம் பஞ்சாயத்தை ஏதேனும் ஒரு வேலையை நிறுத்த அவர்கள் கட்டளை இடலாம். இதற்கு பின்வரும் காரணங்கள் ஏற்படலாம். (1) சட்டவிரோதம் (2) இச்சட்டத்தில் கண்டு வரும் அதிகாரங்களை மீறுதல் (3) மனிதனுடைய ஆயுளுக்கும், ஆரோக்கியத்திற்கும் சௌகரியத்திற்கும் நேரிடும் அபாயங்கள் (4) ஜனங்களிடையில் சமாதானக்குறைவு. பொதுஜன சமாதானத்திற்கு அபாயமென்னும் காரணம்பற்றி எந்த கலெக்டரும் லோக்கல் கவர்ன்மெண்டுக்குரிய இந்த அதிகாரங்களையெல்லாம் செலுத்தலாம். ஆனால் கலெக்டரின் உத்தரவுகளை லோக்கல் கவர்ன்மெண்டார் திருத்தலாம். அவர்களுக்கு கலெக்டர் சமாசாரம் முழுதும் தெரியப்படுத்தவேண்டும். கலெக்டர் என்பவர் இவ்விதம் தடைசெய்யும் அதிகாரிமாத்திரமன்று. அவர் ஜனங்களின் க்ஷேமத்தை உத்தேசித்து அவசரமாக எந்த வேலையையும் செய்ய கட்டளை இடலாம். கவர்ன்மெண்டாருக்கு எழுதி அவர்களிடமிருந்து அதற்குவேண்டிய பொருளையும் பின்பு பெற்றுக்கொள்ளலாம். (செக்ஷன் 39). லோக்கல் கவர்ன்மெண்டாரும் இதேமாதிரியாக சாதாரண சமயங்களில் பஞ்சாயத்துக்களோ, அல்லது அவையின் பிரசிடெண்டுகளோ ஏதேனும் வேலை செய்ய தவறுமளவில் இந்த வேலைகளை செய்யலாம். ஆனால் அந்த பஞ்சாயத்துகளுக்கும் பிரசிடெண்டுக்கும் தாமாகவே அந்த வேலையை செய்வதற்கு சமயம்கொடுத்தபிறகே இவ்விதம் கவர்ன்மெண்டார்செய்யலாம். (செக்ஷன் 41.) தாலுக்கா போர்டு பிரசிடெண்டுக்கும் பஞ்சாயத்து சம்பந்தமாக இவ்வித அதிகாரங்கள் இருக்கின்றன; ஆனால் லோக்கல் கவர்ன்மெண்டார் வேறு விதத்தில் நினைப்பார்களானால் அவர்களின் கட்டளையே நடைபெறவேண்டியது.





இந்த அதிகாரங்களெல்லாம் மிகவும் ஏராளமாக காணப்படுகின்றன. ஆனால் அபூர்வமாகவே அவைகள் கையாளுவதாக நினைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் எவ்விதம் செலுத்தப்படுகிறது என்பது பஞ்சாயத்தில் சுயஆட்சி எவ்வளவு பலமாக இருக்கிறது என்பதை பொறுத்தது. பஞ்சாயத்துக்கள் தங்களுக்கு வெவ்வேறாகவும், சேர்ந்தும் உள்ள அதிகாரங்களை தக்கபடி உபயோகிக்குமானால், இந்த லோக்கல் கவர்ன்மெண்டு, கலெக்டர், தாலுக்கா போர்டு இவைகளுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களினால் பஞ்சாயத்தாட்சிக்கதிகக் கேடொன்றும் நிகழாதென்று நாம் நம்பலாம்.

## திருவாங்கூர் சமஸ்தானத்தில்—பஞ்சாயத்துக்களின் தேவை.

இந்த தேசத்தில் மிகவும் அபிவிருத்தி அடைந்திருக்கிற சமஸ்தானங்களின் முன்னணியில் திருவாங்கூர் சமஸ்தானம் இருக்கிறதென்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமே. மிகவும் முன்னேற்றமடைந்த ஆரம்பக்கல்வியின் மிகுதியாலும்; இயற்கையாகவே அமைந்துள்ள நிலவளத்தோடு பருவந்தவறாத நீர்வளமும் சேர்ந்து விவசாயத்தை விருத்திசெய்வதாலும்; அதோடு, குடிகளின் குறைகளை நீக்குவதில் கண்ணுங்கருத்துமாக இருந்து இந்நாட்டின் அரசர்கள் சலியாத ஊக்கமெடுத்து உழைப்பதாலும் இந்நாட்டு வாசிகள், மிகுந்த சுகவாழ்வுடையவர்களாயிருக்கிறார்கள். குடிகள் பல துறைகளிலும் முன்னேற்றமடைவதில் சலியாத ஊக்கத்தோடு அரசர்கள் உழைத்து வருகிறார்கள் என்பதற்கு, இந்நாட்டில் ஏற்பட்டுள்ள கல்விச்சாலைகளின் எண்ணிக்கையும் போக்கு வரவு சாதனங்களின் பராமரிப்பும், இவற்றோடு விவசாயம் விருத்திக்காக அவர்கள் செய்யும் பலவகை முயற்சிகளுமே போதிய சான்றாகும்.

ஆயினும், இவ்விதம் எல்லா வகையிலும் மிகவும் மேம்பாடுற்று விளங்கும் இந்நாட்டிலும் ஒரு குறையுளது; அதாவது, இந்நாட்டை இவ்விதம் விருத்தியடையச் செய்தது அரசாங்கத்தாரின் முயற்சியால் மட்டுமே அன்றி, அதிகமாக குடிகளின் திறமையாலோ அல்லது முயற்சியாலோ அல்ல என்பதேயாம். அதாவது குடிகள் அரசாங்க விஷயங்களிலும் அபிவிருத்தி இலாக்காக்களின் ஆட்சி வகையிலும் போதுமான சம்பந்தம் உடையவர்களாக இல்லை. இந்த சமஸ்தானத்தில் ஒரு சட்ட சபையும் ஜனசபையும் இருக்கிறதே என்று கூறலாம். ஆயினும் இவைகளின் சக்தியையும் செல்வாக்கையும் அரசர்களின் சக்தியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ஜனங்களுக்கு உதவிசெய்யும் விஷயத்தில் அரசர்களுக்கே மிகுந்த அதிகாரம் இருக்கிறது என்பது நன்கு விளங்கும். எத்தகைய நல்ல அரசாட்சியும் சுய ஆட்சிக்குச் சரியான பிரதியாகாததாகையாலும், ஒரு அரசாட்சியின் முக்கியமான கடமை அதன் ஆளுகைக்குட்பட்ட குடிகளை சுய ஆட்சிக்குத் தயாராக்குவதே யாதலாலும், திருவாங்கூர் சமஸ்தான பிரஜைகளையும் படிப்படியாகச் சுய ஆட்சி வகிக்கத் திறமையுள்ளவர்களாக செய்யவேண்டும். அன்றியும் சென்ற லண்டன் வட்டமேஜை மகாநாட்டில், இந்திய சுதேச சமஸ்தானங்கள், இந்திய மாகாணங்களோடு ஒரு பெடரேஷனில் ஒத்துழைப்பதாகத் தீர்மானம் செய்திருக்கின்றன. அவ்விதம் ஏற்படுமாகில் திருவிதாங்கூரிலும் காலதாமதமன்றி கூடிய சீக்கிரத்தில் ஸ்தல சுயஆட்சி ஸ்தாபனங்கள் ஏற்படுத்தவேண்டும்.

இவ்விதம் ஸ்தல சுய ஆட்சிக்கு அடிப்படையாக ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து ஒன்று ஸ்தாபிக்கப்படவேண்டும். அப்படி ஸ்தாபிப்பதிலும் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள இதர மாகாணங்களிலும் ஏற்பட்ட தவறுகள் ஏற்படாமல் கவனிக்கப்படவேண்டும். பிரிட்டிஷ் இந்தியாவில் ஸ்தல சுய ஆட்சி கட்டடமானது அஸ்தி





வாரத்திலிருந்து தொடங்குவதற்கு பதிலாக கூரையிலிருந்து கட்டப்பட்டிருப்பதாகவே சொல்லலாம். இந்நாட்டில் ஸ்தல சுயஆட்சி ஸ்தாபனங்கள் முதன் முதலாக கிராமங்களிலிருந்தும் பின்பு கொஞ்சம் கிராம யூனியன்கள் அல்லது தாலூக்காவிலிருந்தும் ஆரம்பித்து ஜில்லாவிலும் பின்பு ராஜ்ய முழுவதும் பரவவேண்டும்.

இவ்விதம் கிராமப் பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிப்பதால் வரும் நன்மை என்னவென்று கேட்கலாம். சரித்திர நூல்கள் கற்றறிந்தவர்களுக்கு கிராமப் பஞ்சாயத்துக்கள் எவ்வளவு அழகாக அவைகளின் வேலைகளை சோழ ராஜாக்கள் காலங்களில் செய்து வந்திருந்ததென்பது தெரிந்த விஷயமே. அதே மாதிரி இக்காலத்திலும் நமது பஞ்சாயத்துக்களுக்கு வேலைசெய்வது சாத்தியமாகும். இவ்வாறு கிராமங்களே அவைகளின் தேவைகளை சரிவரக் கவனிப்பது அதிகாரங்களை ஒரே இடத்தில் கொண்டு வைத்திருப்பதினால் நேரிடும் கஷ்டங்களை நிவர்த்தி செய்யும். கிராமவாசிகளை தமக்கு வேண்டியவற்றிற்கெல்லாம் பிறர் உதவியை நாடி நிற்காமல் சுதந்தரவானாக்கும்.

திருவிதாங்கூரில் கிராமப் பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிப்பதின் தேவை இதினின்றும் நன்கு விளங்குகிறது. அவைகள் எவ்விதம் ஸ்தாபித்தால் சரிவர நடைபெறும் என்பதே நாம் இனிமேல் கவனிக்கவேண்டிய விஷயம். இந்த விஷயமாக நமது ராஜ்யத்தில் ஒரு பிரதான கொள்கை உண்டு. அதின்படி கிராமத்தார் தாங்களாகவே முழுமனதோடு வேலைகளை செய்ய முன்வரவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் வழியால் இவ்வேலைகள் நடைபெறுமெனில் அது மிகவும் சிலாக்கியமே. கவர்ன்மெண்டார் பண உதவி செய்வதோ அல்லது சட்டங்களை இதற்காக அமைப்பதோ மிகவும் கெட்ட காரியமென்றெண்ணத்துடன் இக்கொள்கைக்காரர்கள் அவைகளை மறுத்துவிடுவார்கள். ஆனால் இவ்விதம் கவர்ன்மெண்டின் சகாயங்களை எதிர்பார்க்கக்கூடாதென்பது சரியன்று. நமது ராஜ்யத்தைக்காட்டிலும் சுய ஆட்சிமுறைகளிலும் ஜனங்களின் முன்னேற்றத்திலும் மேன்மை பொருந்திய இதர நாடுகளில் கூட கவர்ன்மெண்டார் அநேகம் விஷயங்களில் கட்டாயப்படுத்துகிறார்கள். இதனால் பஞ்சாயத்துக்கள் திருவிதாங்கூரில் ஸ்தாபிக்கும்பொழுது அவைகள் பொதுக் காரியங்களில் சிலவற்றை கட்டாயமாக செய்யவேண்டும் என்று சட்டத்தில் கண்டுவர வேண்டியது இன்றியமையாததாகும். நிர்பந்தமானது ஜனங்களுக்கு சில சமயங்களில் பெரும் உதவிசெய்வதாகும். எது இன்றைக்கு நிர்பந்தம் என்று கருதப்பட்டு ஜனங்களுக்கு பிரியமில்லாமல் இருக்கிறதோ அது நாளைக்கு அதே ஜனங்களால் கொண்டாடுவதாக முடிவது நாம் சாதாரணமாக பார்க்கும் விஷயமே. உதாரணமாக ஆரம்பக் கல்வியைக் கவனியுங்கள். நமது இந்திய தேசத்தில் இருந்துவரும் துக்ககரமான படிப்பில்லா நிலைமை ஆனது கூடிய சீக்கிரத்தில் தீரவேண்டுமெனில் கட்டாயப் படிப்பினால் தான் ஸாதிக்கும். நமது ராஜ்யத்தில் அவசியமாக நடைபெறவேண்டிய இன்னும் அநேக முன்னேற்ற விஷயங்களும் நிர்பந்த மார்க்கத்தினாலன்றி கைக்கூடாது. சரித்திர நூல்வழி ஆராய்வோமானால் அநேகம் தேசங்களுக்கு அவைகளின் முன்னேற்ற ஏணியில் சிலபடிகள் ஏறும் வரை அரசர்கள் ஜனங்களின் கொள்கைகளை சற்றும் கவனியாது (அவர்களுக்கு பிற்காலத்தில் பேருதவியாய் முடிந்த அநேகம் நன்மைகளை) ஜனங்கள் கட்டாயமாக அனுசரிக்கவேண்டியதென்று சட்டங்கள் பிறப்பித்திருக்கிறார்கள்

கிரீக் தேசத்தில் முன் காலங்களில் ஆண்டுவந்த அரசர்களும் நவீன காலத்தில் பிஸ்மார்க், முஸோலினி, கெமால்பாஷா போன்றவர்களும் இவ்வகுப்பை சேர்ந்தவர்களே.

இதனால் திருவிதாங்கூரில் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தும் தருணத்தில் முதலாவது கவனிக்கவேண்டிய விஷயம் என்னவெனில் அவைகள் கட்டாயமாக சில பொதுக்காரியங்களைச் செய்யவேண்டும் என்பதே. இரண்டாவது அவைகளுக்கு அவசியமான வருமானம் கொடுக்கவேண்டும். வேண்டிய பொருளில்லாவிடில் பஞ்சாயத்துக்களைக் கட்டாயப்படுத்தி வேலைசெய்வதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. சென்னை மாகாணத்தில் கட்டாயப்படுத்துவதும் இல்லை. சரியான பொருளுதவியும் இல்லை. ஆகையால் பஞ்சாயத்துப்பயிரின் வளர்ச்சி மிகவும்குன்றி இருக்கிறது மைசூர் ராஜ்யத்தில் இந்த இரண்டு தேவைகளும் சரிவர கவர்ன்மெண்டாரால் கவனிக்கப்பட்டிருக்கின்றன. 1927ஞு பிப்ரவரிமீ 1-ம்உ அன்று அத்தேச முழுவதும் பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அப்பஞ்சாயத்துச் சட்டத்தை நாம் மிகவும் கவனத்தோடு ஆராயவேண்டும். அச்சட்டத்தின் புதுமை என்னவென்றால், அதன்படி கவர்ன்மெண்ட் அதிகாரிகளும் கிராமவாசிகளும் சில வேலைகளைக் கட்டாயமாக செய்யவேண்டும். இவைகள் (1) ஒவ்வொரு ஜில்லாவிலும் அதன் தலைவரான டெப்டி கமிஷனர் தனித்த கிராமங்களிலோ அல்லது சில கிராமங்களின் கூட்டங்களிலோ பஞ்சாயத்துக்களைக் கட்டாயமாக ஸ்தாபிக்கவேண்டும். பஞ்சாயத்துக்கள் சரிவர வேலை செய்யத்தவறும் பக்ஷத்தில் டெப்டி கமிஷனர் தற்காலத்திற்கு அப்பஞ்சாயத்துக்களின் வேலையை நடத்துவதற்கு வேறு சில ஏற்பாடுகள் செய்யலாம். ஆனால் அவருடைய நோக்கம் கூடிய சீக்கிரத்தில் அப்பஞ்சாயத்துக்களை திரும்பவும் ஸ்தாபிப்பதே ஆக இருக்கவேண்டும்.

(2) எல்லா பஞ்சாயத்துகளும் கீழ் சொல்லப்படும் வேலைகளை சட்டாயமாக நடத்தவேண்டும். கவர்ன்மெண்டாரின் கைவசமுள்ளதோ அல்லது இதர ஸ்தல ஆட்சி ஸ்தாபனங்களின் கீழுள்ளதோ அல்லாத எத்தகைய ரஸ்தாக்களையும், பாலங்களையும் பழுது பார்ப்பதும், புதிதாக ஸ்தாபிப்பதும் கிராம சுகாதாரம், கட்டிடங்களை பாதுகாப்பது, ச்மசானங்களை புதிதாக ஸ்தாபிப்பதும் அவைகளை ஒழுங்குவர நடத்துவதும் பௌண்டுகளை கவனிப்பதும் நீர் பாய்ச்சலுக்கல்லாத மற்ற குளங்களையும் கிணறுகளையும் மேற்பார்வை இடுவதும் ஆகிய மற்றுமனேக வேலைகளாகும்.

இதற்கு மேலாக பஞ்சாயத்துக்கள் ஊக்கத்துடனும் திறமையுடனும் வேலை செய்யுமளவில் அவைகளுக்கு வேறு வேலைகளும் கொடுக்கப்படும். இவைகளை சர்க்கார் இரண்டாக பிரித்திருக்கிறார்கள். முதல் பாகத்தில் பிரயாணிகளுக்கு சௌகரியமளித்தல், நோயாளிகளையும் ஏழைகளையும் சம்ரட்சித்தல், கன்று காலிகளுக்காக குளங்களைக் கட்டி அவைகளை கவனித்தல், மரச் சோலைகளை உண்டு பண்ணுவது, பொது புறம்போக்குகளையும் மந்தைகளையும் பாதுகாப்பது, கல்வி கூட்டுறவு, கிருஷி, கைத்தொழில் போன்ற இதர ஸ்தாபனங்களை கவனிப்பது இவைகள் அடங்கி இருக்கின்றன. இரண்டாவது வகுப்பின்படி, கிராமக்காடுகளையும், நீர்பாய்ச்சலுக்கான ஏரிகளையும், கிராம உற்சவங்களையும் கவனித்து சீர்வர நடத்துவதும், கிராமப் பள்ளிக்கூடங்களை மேல்பார்வை இடுவதுமே ஆகும்.





இவ்வேலைகளுக்கு வேண்டிய பொருளை, ஒவ்வொரு பஞ்சாயத்தும் அதன் எல்லையிலுள்ள வீடு, கடை, காலி இடம், கொல்லை, வண்டி இவைகளின்மேல் ஒருவரி சட்டாயமாக ஏற்படுத்திப் பெறவேண்டும். அவைகளுக்கு வேறு வருமானத்துறைகள் இருந்தபோதிலும் இவ்வரி விதிக்கவேண்டியது அவசியம். சர்க்காரின் முன் சம்மதத்தின்பேரில் எந்த பஞ்சாயத்தும் அது கட்டாயமாக செய்யவேண்டிய வேலைகளைச் செய்வதற்கு எந்த வரியையும் ஏற்படுத்தலாம். பஞ்சாயத்து அங்கத்தினரில் யாராவது வரி கொடுப்பதற்குப் பதிலாக வேலை செய்வதாக ஒத்துக்கொண்டால் 18 நாளுக்குமேல் எல்லா வரிக்காகவும் சேர்ந்து வேலைசெய்ய அவரை கட்டாயப்படுத்தக்கூடாது. ஏதேனும் கட்டாய வேலைகளை செய்வதற்கு வேண்டிய பணமில்லாவிடின் பஞ்சாயத்துக்கள் சும்மா இருக்காமல் 6 மாதத்திற்குள்ளாக புது வரிகள் விதிக்கவேண்டும். அவ்விதம் செய்யத் தவறினால் டெப்டி கமிஷனர் வரிகளை உயர்த்துவதற்கு அவைகளை கட்டாயப் படுத்தவேண்டும். மைசூர் பஞ்சாயத்துச் சட்டத்தில் சில காலவரையறைகளும் கண்டிருக்கின்றன. உதாரணமாக டெப்டி கமிஷனரோ அல்லது பஞ்சாயத்தார்களோ ஏதாவது வரியை 3 வருஷத்திற்குள்ளாக ஒரு நபரிடமிருந்து வசூலிக்காவிடில் அதற்குபின்பு அம்மெம்பர் வரி கொடுக்க வேண்டாம்.

இவற்றிலிருந்து நாம் அறிவது என்னவெனில் மைசூர் ராஜ்யத்தில் பஞ்சாயத்தாட்சி முறையில் நிர்பந்தமானது அனேக இடங்களில் மிகவும் முக்கியமான முறையாக இருக்கிறதென்பதே. நமது கிராமத்தார்களும் அறிவில்லாமை, அஞ்ஞானம் விதியில் நம்பிக்கை இவைகளால் சூழப்பட்ட காரிருளில் இருந்து வெளிச்சத்தில் வரவேண்டுமானால் அவர்களைத் தமது நலத்திற்காகவே சில வேலைகளை கட்டாயப்படுத்தி செய்யவேண்டியது மிகவும் அவசியம். திருவிதாங்கூரில் மாத்திரமல்ல, இந்தியா முழுதும் கிராமாந்தர சமாசாரங்கள் ஒரு கொடிய வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கொடிய வியாதியிலிருந்து கிராமவாசி பிழைக்கவேண்டுமானால் ஒரு நல்ல ஔஷதம் அவனுக்குக் கொடுத்து அவ்வியாதியை முற்றிலும் ஒழிக்கவேண்டும். இதற்கு சரியான ஔஷதம் என்னவென்றால் கிராமப் பஞ்சாயத்தே. ஆனால் பேருக்கு மாத்திரம் இருக்கும் பஞ்சாயத்தினால் ஒரு பயனும் ஏற்படாது. ஊக்கத்துடனும் பொதுஜன நன்மையில் கண்ணும் கருத்துமாகவும் உழைக்கும் பஞ்சாயத்தானது, மத்திய ஆராய்ச்சிச் சாலைகளில் கண்டுபிடிக்கும் அருமையான தத்வங்களை கிராமத்தானுக்கு போதித்தல்வேண்டும். சில கிராமங்களில் பஞ்சாயத்துக்களை ஸ்தாபிப்பதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தி இருப்பதாக டிவான் அவர்கள் சட்டசபையில் கூறினார். மைசூரிலும் பிரிட்டிஷ் இந்தியாவிலும் ஸ்தாபித்திருக்கின்ற பஞ்சாயத்துக்களின் ஆட்சிமுறையிலிருந்து அனேகம் உயர்ந்த தத்வங்களை கையாண்டு கூடிய சீக்கிரத்தில் ஒரோ கிராமங்களிலும் கிராமப் பஞ்சாயத்துக்கள் அவர்கள் ஸ்தாபிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

# புதுச்சட்டத்தின் அமுல்.

(T. G. RUTHURFORD ESQ; C.I.E., I.C.S)

திருத்தப்பெற்ற சென்னை ஜில்லா முனிஸிபாலிட்டி சட்டமும் சென்னை லோக்கல் போர்ட்ஸ் சட்டமும் ஓட்டு உரிமை தாராளமாக கொடுத்திருக்கிறதினுல் முனிஸிபல் சபைகளுக்கும் சுய ஆட்சி ஸ்தாபனங்களுக்கும் ஓட்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி இருக்கின்றன. தாலூக்கா போர்டுகளுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் எவ்விதம் நேரான எலெக்ஷன்கள் இருக்கிறதோ, அவ்விதமே ஜில்லா போர்டுக்கும் இப்பொழுது நேரான எலெக்ஷன் ஏற்பட்டிருக்கின்றது. சென்னை லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின்படி தாலூக்கா, ஜில்லா, பஞ்சாயத்து எலெக்ஷன்களுக்கு ஒரேவிதமான ஓட்டு யோக்கியதை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முனிஸிபாலிட்டி சட்டத்தில் எலெக்ஷனுக்கு உரிமையுள்ள ஜனங்களின் பட்டிகை தயார் செய்வதற்கும் எலெக்ஷன்களை நடத்துவதற்கும் ஒரு "எலெக்ஷன் அதிகாரியை" குறிப்பிட்டிருக்கிறது. அவர் ஒரு முனிஸிபாலிட்டியின் தலைவரோ, உபதலைவரோ, அல்லது அங்கத்தினரோவாக இருக்கக்கூடாது. லோக்கல் போர்ட்ஸ் சட்டத்திலும் பிரத்தியேகமான ஒருஅதிகாரியால் இந்த வேலைகள் நடத்தவேண்டுமென்று குறித்துள்ளது. இந்த முதல் எலெக்ஷன் பட்டிகையை சித்தம் செய்வதற்கும் முதல் எலெக்ஷனை நடத்துவதற்கும் ஆகிலும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களே வேண்டுமென்று சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த இரண்டு காரியங்களையும் சரிவர நடத்துவதற்காக லோக்கல் போர்ட்ஸ் இன்ஸ்பெக்டரே நியமிக்கப்பட்டிருக்கிறார். மேலும் அவருக்கு சகாயத்திற்காக சில புதிய உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். முடியுமானால், எலெக்ஷனுக்கு முன்னதாக நடைபெறவேண்டிய எல்லா காரியங்களையும் எலெக்ஷனையும் 25-8-31-க்கு முன்னதாக நடத்தவேண்டியது. ஏனென்றால் 25-8-31 வரைதான் இப்பொழுது இருக்கும் முனிஸிபல் சபைகளுடையவும், லோக்கல் போர்ட்ஸுகளுடையவும் கால அளவை நீட்டலாம். பஞ்சாயத்துக்களை சம்பந்தித்தமட்டும் இப்புதுச் சட்டம் ஏற்படுத்துவதற்கு முன்னதாக இருந்த யூனியன் போர்டுகளில் மாத்திரமே இந்த உத்தியோகஸ்தர்கள் பட்டிகை சித்தம் செய்வார்கள். இடைக்காலத்தில் கையாளுவதற்காக கவர்ன்மெண்டாரால் அறியிட்டிருக்கிற விதிகளின் 12 வது ரூல்படி, சென்னை பஞ்சாயத்து சட்டத்தின்படி ஸ்தாபிக்கப்பட்ட பஞ்சாயத்துக்களிலும் புதிய சென்னை லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின்படி ஸ்தாபிக்கப்பட்ட பஞ்சாயத்துக்களிலும் எலெக்ஷன்கள் சென்னை பஞ்சாயத்துச் சட்டத்தில் கூறியபடியே நடைபெறும். ஆனால் தாலூக்கா போர்டுகளுக்கும், ஜில்லா போர்டுகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் ஓட்டு செய்ய உரிமை உடையவர்கள் ஒரேவிதமான யோக்கியதை உரிமை உடையவராவர். ஆகையால் பஞ்சாயத்து எலெக்ஷனில் ஓட்டு செய்யும் உரிமையுள்ளவர் ஓட்டு செய்யவேண்டுமானால் அந்த கிராமத்திலேயே 120 நாட்கள் வசிக்கவேண்டும். எனினும் வேறு நிபந்தனைகள் ஒரேவிதமாயிருப்பதால் எலெக்ஷனுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் புதிய உத்தியோகஸ்தர்கள் தாம் பட்டிகை தயார் செய்யும்பொழுது பொதுப் பட்டிகையில் இருந்து பஞ்சாயத்துக்களுக்கு





அவசியமான பட்டிகைகளையும் சித்தம் செய்துகொள்ளவேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறார்கள். இதன்றி தனியாக பஞ்சாயத்துக்களுக்கு பட்டிகை சித்தம் செய்ய அவசியமில்லை, இதனால் பிற்காலத்தில் புதுச்சட்டத்தின் விதிகளை பஞ்சாயத்துக்களுக்கும் கட்டுப்படுத்தும்போது அதிக கஷ்டங்கள் ஒன்றும் ஏற்படாது. இவ்வேலைகளுக்காக புதிதாக 4 லோக்கல்போர்ட்ஸ் டெப்டி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் நான்கு பேரும் ராஜமந்திரி, சென்னை, கோயமுத்தூர், திருச்சினாப்பள்ளி, என்ற நான்கு ஸ்தலங்களில் இருப்பார்கள். மேலும் ஒவ்வொரு ஜில்லாக்களிலும் அந்தந்த ஜில்லா எலெக்ஷன் அதிகாரி இருப்பார். அந்த ஜில்லாவிலுள்ள முனிசிபாலிட்டி, லோக்கல் போர்டு இவைகளின் எண்ணிக்கையை அனுசரித்து அந்த உத்தியோகஸ்தரின் கீழ் சிப்பந்திகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ராஜமந்திரி டெப்டி இன்ஸ்பெக்டர், கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணை, குண்டூர் இந்த ஜில்லாக்களை கவனிப்பார். சென்னை டெப்டி இன்ஸ்பெக்டர் நெல்லூர், கடப்பா, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர், சித்தூர் செங்கற்பேட்டு இவற்றை கவனிப்பார். திருச்சினாப்பள்ளி டெப்டி இன்ஸ்பெக்டரின் வேலையோ, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி இவற்றை மேல்பார்வை இடுவதே. கோயமுத்தூர் டெப்டி இன்ஸ்பெக்டர் தென்கன்னடம், மலபார், நீலகிரி, கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு, தென்ஆற்காடு என்ற ஜில்லாக்களை கவனித்து வருவர்.

ஜில்லா எலெக்ஷன் உத்தியோகஸ்தர்கள் முதன்முதலாக செய்யவேண்டியது என்னவென்றால் முனிசிபாலிட்டிகள் தோறும் ஓட்டுரிமை உடையவரின் பட்டிகையை தயார்செய்யவேண்டும். இரண்டாவது வேலை யூனியன் பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்தார்களின் அனுமதியோடு அவைகளை வார்டுகளாக பிரிப்பதும் பஞ்சாயத்தங்கத்தினர்களில் எத்தனை பேர்களுக்கு பிரத்தியேகமாக ஸ்தானங்கள் பிரித்துவைக்கவேண்டுமென்பதை திட்டப்படுத்தி கவர்ன்மெண்டாரின் சம்மதத்திற்கு அனுப்புவதும் ஆகும். இதற்கு பிற்பாடு அவர்கள் கிராம ரிக்கார்டுகளிலிருந்து கர்ணம் தயார் செய்யும் ஓட்டு பட்டிகையை சரிபார்த்து லோக்கல் போர்டுகளுக்கு ஓட்டுரிமை உள்ள நபர்களின் எண்ணிக்கையை திட்டப்படுத்துவார்கள். அங்கத்தினர்களை பிரத்தியேகமாக பிரித்து வைப்பதற்கும், டிவிஷன்களை வார்டுகளாகவோ அல்லது ஸர்கிள்களாகவோ பிரிப்பதற்கும் உள்ள தீர்மானங்களை ஜில்லா தாலூக்கா போர்டுகள் இன்ஸ்பெக்டருக்கு முதன்முதலாக அனுப்பவேண்டும். இவைகளில் சிலவற்றை அவரே கவனிப்பார்; என்றாலும் சாதாரணமாக அவர் டெப்டி இன்ஸ்பெக்டருக்கு அவற்றை விசாரணை செய்வதற்கு அனுப்புவார். டெப்டி இன்ஸ்பெக்டர்கள் முனிசிபாலிட்டி, லோக்கல் போர்டுகள் இவைகளின் அங்கத்தினர்களோடு கலந்துபேசி கூடுமானவரையில் தமது முடிவு தீர்மானங்களுக்கு அவர்களின் அனுமதிபெறவேண்டும். இன்ஸ்பெக்டர் இந்த தீர்மானங்களை கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்திற்கும் பிரசுரிப்பதற்கும் அனுப்புவார். எல்லா தீர்மானங்களும் இன்ஸ்பெக்டர் பரிசோதனை செய்ததிற்குபிறகே டெப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு அனுப்பப்படும். இந்த அபிப்பிராயங்களில் சட்டவிரோதமாகவோ, அல்லது கவர்ன்மெண்டாரின் கோரிக்கைக்கு விரோதமாகவோ இருப்பின், அதைப்பற்றி முனிசிபாலிட்டிகளையும் லோக்கல் போர்டுகளையும் தெரியப்படுத்தப்படும். அதன்மேல் அவர்கள் டெப்டி இன்ஸ்பெக்டர்களுடன் ஆலோசனை செய்யவேண்டும். லோக்கல் போர்ட்ஸ்

சட்டத்தின்படி ஒரோர் ரவின்யூ தாலூக்காவிற்கும் ஒரோர் தாலுக்கா போர்டு நியமிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறது. இரண்டு மூன்று தாலூகாக்களுக்கு சில இடங்களில் ஒரு தாலூகா போர்டே இருக்கிறது. அவைகளின் தீர்வை வருவாயும் ஜனத்தொகையும் போதுமளவு இருப்பின், அவற்றில் தனித்தனியாக தாலூகா போர்டு ஸ்தாபிக்கப்படும். ஏன் தனித்தனியாக சிறு தாலூகா போர்டுகளாக பிரிக்கக்கூடாதென்று கவர்ன்மெண்டார் அந்த பெரிய தாலூகா போர்டுகளை கேட்டிருக்கிறார்கள். முனிசிபல் சபை அங்கத்தினர்களின் தொகை முனிசிபாலிட்டியின் ஜனத் தொகையை அனுசரித்து சட்டத்திலேயே இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றது. லோக்கல் போர்டு அங்கத்தினர்களின் தொகை குறைந்த பக்ஷம் எவ்வளவென்றும் கூடின பக்ஷம் எவ்வளவு என்று மாத்திரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. விசேஷ காரணங்களொன்றுமில்லையானால் லோக்கல் போர்டுகளில் இப்போதுள்ள அங்கத்தினர்களின் தொகையை இனி மேலும் வைத்துக்கொள்ளுவதாக நிச்சயித்திருக்கிறார்கள். தனி தாலூகா போர்டுகளில் குறைந்தது சாதாரணமாக 12 அங்கத்தினர்களே இருப்பார்கள். பெண்களல்லாத மற்ற அங்கத்தினர்களுக்கு பிரத்தியேக ஸ்தானங்கள் ஏற்படுத்தவேண்டுமாகில், அதற்கு சட்டத்தில் சில கட்டுப்பாடுகள் குறிப்பிட்டிருக்கின்றன. குறைந்த வகுப்பினரின் ஜனத்தொகை ஏராளமாக இருக்கவேண்டும். அவர்களுக்கு வியாபாரம் போன்ற விசேஷ பொறுப்புகள் இருக்கவேண்டும். மேலும் தேர்தெடுப்பதில் அவர்களுக்கு நியாயமான ஸ்தானங்கள் கிடைக்காமல் இருக்கவேண்டும். முனிசிபாலிட்டிகளோ லோக்கல் போர்டுகளோ, மிக்க சுல்ப ஜனங்களுள்ள வகுப்பினருக்கு பிரத்தியேக ஸ்தானங்கள் வேண்டுமென்று அபிப்பிராயபடுவாரானால் அதை கவர்ன்மெண்டார் அவர்களுக்கு சுட்டி காண்பிப்பார். ஆனால் சாதாரணமாக அவர்களின் அபிப்பிராயங்கள் மிக்க அதிகமோ, அல்லது குறைவோ, இல்லாவிட்டால் அவைகளுக்கு கவர்ன்மெண்டார் தடை ஒன்றும் செய்யமாட்டார். இதுவரை தாலூக்கா ஜில்லா போர்டுகளுடமிருந்து வந்திருக்கும் தீர்மானங்களிலிருந்து ஆதித்திராவிடர்களின் தொகை ஜனத்தொகையில் 1/12 லிருந்து ¼ வரைகூட இருக்கிறதாகவும் அவர்களுக்கு பிரத்தியேகமாக பிரித்து வைத்திருக்கும் ஸ்தானங்கள் போதாதென்றும் காணப்படுகின்றன. இந்த வகுப்பினர்கள் சாதாரணமாகத் தீர்வை அதிகம் கொடுக்காதபடியால், அவர்களின் மொத்தத் தொகையை கவனிப்பது அவ்வளவு சரியன்று. ஏனென்றால் இவர்களில் சில நபருகளுக்கே இப்புதுச் சட்டத்தின்படியும் ஓட்டுஉரிமை கிடைக்கக்கூடும்.

(2) இந்த வேலைகளுக்காக புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களின் சம்பளச் செலவு லோக்கல் போர்டுகளிடமிருந்து ஈடுசெய்யப்படுமாதலால் சிப்பந்திகள் குறைவாகவே நியமிக்கப்பட்டிருக்கின்றனர். மேலும் பொது ஜனங்களின் உதவியினால்மட்டுமே ஓட்டு உரிமைக்காரர்களின் பட்டிகை சரிவர திட்டம் செய்ய முடியும். இதை உணர்ந்து ஜனங்கள் எல்லோரும் இவ்விஷயத்தில் தம்மால் இயன்றமட்டும் சகாயம் செய்யவேண்டும். ஜில்லா எலெக்ஷன் உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் அவரவர்களின் வேலைகளை எவ்வளவு பகிரங்கமாக நடத்த முடியுமோ அவ்விதம் நடத்தவேண்டும். முனிசிபாலிட்டிகளின் சென்ற வருஷத்து தீர்வை வருவாய் புஸ்தகங்களிலிருந்து ஓட்டு உரிமைக்காரர்களின் பட்டிகையை முதன்முதலில் தயார்செய்ய முடியும். அதனால் முனிசிபாலிட்-





டிக்கு சென்ற வருஷத்தில் நிலத்தீர்வையோ அல்லது தொழில்வரியோ, அல்லது வண்டி வரியோ அல்லது மாட்டு வரியோ கொடுக்கின்ற எல்லோரும் ஓட்டு உரிமை பெறுவார்கள். வருமானவரி நிர்ணயிக்கும் அதிகாரிகளும், பென்ஷன் பெற்றவரும் டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட ஆபீஸர்களும் மன்னரின் படையிலுள்ள யுத்த வீரரும், லோக்கல் அதிகாரிகளுக்கோ, அல்லது கவர்ன்மெண்டாருக்கோ தீர்வைகொடுக்கிறவரும் ஓட்டர் பட்டிகையில் சேரவேண்டியதாயிருக்கும். இதல்லாமல் நிலத்தீர்வை கொடுப்பவர்கள் யாவரும் அதாவது ஸ்தலங்களில் வசிப்பவர்களானால் ஓட்டுசெய்ய உரிமைபெறுவார்கள். மேல்சொல்லப்பட்டவர் எல்லோரும் கம்பெனி, அசோசியேஷன், அவிபக்த குடும்பத்தார், ஜாய்ன்டு பட்டாதார் இவைகளின் பிரதிநிதிகளும் தாங்கள் உரிமையுள்ளவர்கள் என்று சுயமாகவே அபேக்ஷிக்கவேண்டும் ஏனென்றால் வேறுவிதமாக இவர்களை பட்டிகையில் சேர்ப்பது மிக்க பிரயாசமான காரியம் ஆகும். ஓட்டு உரிமையுள்ளவர்கள் குறைந்தது 120 நாட்களாவது ஒரு முனிசிபல் எல்லைக்குள் வசித்தவராய் இருக்கவேண்டும். இந்த பட்டிகை தயார்செய்வதற்கு முந்திய வருஷத்தில் ஓட்டர்களுக்கு 21 வயது நிறைந்திருக்கவேண்டும். லோக்கல் போர்டு அங்கத்தினர்களை தெரிந்தெடுப்பதற்கு யோக்கியதை உள்ளவர்களின் சாதாரண பட்டிகை கிராமந்தோறும் கர்ணம் தயார் செய்வர். அவர்கள் ரயத்வாரி பட்டதாராகவோ, அல்லது இனும்தாராகவோ ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாலும், அல்லது ஒரு ஜில்லா அல்லது தாலூகா அல்லது கிராமத்தில் சென்னை எஸ்டேட்ஸ் லான்ட் சட்டத்தில் விளக்கப்பட்டவிதம் ஒரு நிலஸ்வான்தாரரின்கீழ் குடியானவராகவோ அல்லது பட்டத்தாராகவோ, இருந்தாலும், இந்த பட்டிகையில் சேர்க்கப்படுவார்கள். வருமானத் தீர்வை விதிப்பவர்களின் பெயர்களும் கிடைக்கும். ஆனால் சென்னை மாகாணத்தில் கவர்ன்மெண்டாருக்கோ, அல்லது ஏதாவது லோக்கல் அதிகாரிக்கோ வேறு தீர்வை கொடுப்பவர்களும், ஒரு ரயத்வாரி பட்டதாரிடமாவது ஒரு இனும்தாரிடமாவது அல்லது அப்படிப்பட்ட பட்டதார் அல்லது இனும்தாரரின் கீழுள்ள ஒரு பாட்டக்காரனிடமாவது கடிதமூலமாகவுள்ள ஒரு குத்தகை பத்திரம் உள்ளவரும் (இது மலபாரை விசேஷமாக குறிப்பிடுகிறது) மஹாராஜ சக்கிரவர்த்தியின் கருவர் (கிரமமான) சேனையிலிருந்து விலகிக் கொண்ட உத்தியோகஸ்தராயிருந்தாலும், விடுதலைபெற்ற உத்தியோகஸ்தராயிருந்தாலும் அல்லது போர்வீரராயிருந்தாலும், அவர்கள் தாம் ஓட்டு உரிமை உள்ளவர்கள் என்று அறிக்கையிட்டால்தான் அவர்கள் எல்லோரையும் பட்டிகையில் சேர்க்கமுடியும். ஜில்லா எலெக்ஷன் உத்தியோகஸ்தருக்கு இந்த அவகாசங்களைப்பற்றி இரண்டு மாதங்களுக்குள்ளாக கடிதமூலமாக அறியிக்கவேண்டும். கற்றோரெல்லோரும் இவ்விஷயத்தில் தங்களால் இயன்றமட்டும் ஜனங்களுக்கு எலெக்ஷன் நடவடிக்கைகளைப்பற்றி வெளிப்படுத்தி பட்டிகையை சரியாக சித்தம் செய்வதற்கு சகாயம் புரிய கடமைப்பட்டிருக்கிறார்கள். முனிசிபல் எலெக்ஷன்களை எந்த உத்தியோகஸ்தர் நடத்துவாரென்று இன்னும் தீர்மானிக்கவில்லை. ஜில்லா எலெக்ஷன் உத்தியோகஸ்தர்களின் உதவியோடு லோக்கல் போர்டு இன்ஸ்பெக்டரே அவைகளை நடத்துவராயிருக்கும். தாலூக்கா ஜில்லா போர்டு எலெக்ஷன்களையும் இவர்களே நடத்தலாம். யூனியன் பஞ்சாயத்து எலெக்ஷன்கள் ஜில்லா எலெக்ஷன் உத்தியோகஸ்தரின் பார்வையில் நடைபெறுமாயிருக்கும். போர்ட் ஸெண்டு ஜார்ஜ் கெஜட்டில் முனிசிபாலிட்டிகளில் ஓட்டு உரிமைபெற்றவர்களின் பட்டிகை இன்னென்ன விதம் தயார் செய்யவேண்டுமென்பதைப்பற்றி திருத்தப்பெற்ற விதிகளின் நகல் இப்பொழுது பிரசுரித்திருக்கிறது. எலெக்ஷன் நடவடிக்கைபற்றிய விதிகளும் லோக்கல் போர்டு பட்டிகைகள் தயார் செய்வதற்குள்ள விதிகளும் கூடியசீக்கிரத்தில் கெஜட்டில் பிரசுரிக்கப்படும்.

---

பலக்குறைவைக் நீக்கி, உங்கள் நரம்புகளையும், மூளையையும், சரீரத்தை
யும் பலப்படுத்திக்கொள்ள எங்கள் ஆயுர்வேத ரத்ன பண்டிட்
Dr. N.V, ஸ்ரீராமாசார்லுவின் திவ்விய ஔஷதத்தை சாப்பிடுங்கள்

## "ஸித்தகல்ப மகரத்வஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

எவ்வளவு கடினமான வியாதியையும் தவறாது கண்டிப்பதிலும், ரத்தத்தை நன்கு சுத்திசெய்வதிலும், நரம்பு தளர்ச்சியை நீக்குவதிலும் பொன்னைப்போல் போற்றத்தக்கதுமான டானிக் மருந்தில் இது நிகரற்றது. இச்சஞ்சீவியை தேர்ந்த வைத்தியர்கள் பரிசோதித்து, மனிதர்களின் வாழ் நாட்களை அதிகரிப்பதில் இதைவிட உத்தமமான ஔஷதம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். ஒரு புட்டி மருந்தினால் தேகம் முழுமையும் வீர்யம், வலிமை, ஜீவசக்தி முதலியவை ஏற்படுமென்பது திண்ணம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூ. 10—0—0.

மருந்துகள் உத்திரவாத முள்ளவை. நிவர்த்தி நிரந்தரமானது.

## மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்,

தபால் பெட்டி 151. (ஸ்தாபனம் 1915) தந்தி விலாஸம்:—"கல்பம்" சென்னை.

மிகவும் நீடித்ததும், சிக்கலானதுமான வியாதிகளுக்கு விசேஷமான
மருந்துகள் கொடுக்கப்படும்.

(கேட்லாக், வஜன் வீ விவரம், இனமாக அனுப்பப்படும்).

மானேஜர்:—வி. ரகுபதி, பி.ஏ., பி.எல்.

90-வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

## அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.



அநேக மெடல்கள், நற்
சாட்சி பத்திரங்கள்
பெற்றது.

காரம், மணம், நிறம்,
குணம், வாடை, உள்ளது.

விலை விபரத்திற்கு எழுதுக:—

ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி, லிமிடெட்.,
தபால் பெட்டி 140, மதராஸ்.

# மையர்ஸ் பம்புகள்
# ஜெகப்பிரசித்தி பெற்றவை

எல்லா வேலைகளுக்கும் இவைகளையே உபயோகியுங்கள்

கைபம்புகள், விசிரி (ஸ்பிரே) பம்புகள்,
பவர் பம்புகள் முதலியவை எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்




## ஸ்டோவர் எஞ்ஜின்கள்.

பவர் பம்புகளும் மற்ற மெஷின் பம்புகளையும் ஓட்டுவதற்கும், தங்களுக்கு எக்காரியத்திற்காகப் பம்புகள் வேண்டுமென்பதைப்பற்றியும் விவரமாக எழுதுங்கள். எஸ்டிமேட்டின் விவரம் முழுவதும் அனுப்புகிறோம்.

இந்தியாவுக்கு சோல் ஏஜண்டுகள் !—

தபால் பெட்டி நெ. 202 } லிமாயி பிரதர்ஸ் லிமிடெட்,
1/173, பிராட்வே, மதராஸ்.



பத்திராதிபர்.—கனம். ஜி. ஹரிஸர்வோத்தமராவ்-எம்.ஏ.

அச்சிடுவோர்.—மத்தியக் கூட்டுறவு அச்சு இயந்திரசாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.


1000


இதழ் I. — நெ. 7.

ரிஜிஸ்டர் நெ. M. 2623.


MAY 1931

# ‘கிராமப் பஞ்சாயத்து.’

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.



ஏப்ரல் 1931.

பிரசுரஞ் செய்வோர்.

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

## நன்ஜன்கூடு சத்வைத்திய சாலை கூட்டுவேலை.




ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ்,

"சத்வைத்தியசாலை." நன்ஜன்கூடு

சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

டானிக்
சியாவனப்
ராசா
ஜீவஸஞ்தா
பாலஸஞ்தா

HYAVANPRASH
TONIC

தைலம் :
பிருங்காமலக
அமிர்தாமலக
சந்தனாதி

(குழந்தை கட்டிக்கு, 15 நாள் மருந்து ரூ 2—0—0).

நஞ்சன்கூடு பல்பொடி
சோல்ஏஜெண்ட்: யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்


## அடக்கம்.

பக்கம்.


1. விளைபட்டங்களும் அவைகளின் பலன்களும் ... ... 149
2. பத்திராதிபரின் குறிப்புகள் ... ... ... 154
3. பேஷ்வாக்கள் காலத்தில் பஞ்சாயத்துக்களின் நிலைமை ... 159
4. கிராம சமுதாயமும் பஞ்சாயத்தின் தேவை ... ... 163
5. கொய்யாமர் தாலுக்கா போர்டின் எல்லைக்குட்பட்டிய பஞ்சாயத்துக்களின் 1929-30-ம் வருஷத்திய யாதாஸ்து ... ... 166


## சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு ரூபாய் 2.

மற்றவர்களுக்கு ... ,, 3.

தனிப்பிரதி ... அணா 4.

## விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்,


சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

## பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிருபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிருபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிருபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.


**நம்பிக்கையுள்ள ஔஷதம்**

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.] [கேட்லாக் இனாம்!

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26, பிராட்வே, சென்னை.



# கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் 1.] 1931ஆ எப்ரல்மீ [இலக்கம் 7.


## விலைமட்டங்களும் அவைகளின் பலன்களும்.

இந்த மாதச் சஞ்சிகையில் "விலைமட்டங்களும் அவைகளின் பலன்களும்" என்ற விஷயத்தைக் குறித்து எழுதுவதற்கு நாம் நமது சந்தாதார்களுடைய மன்னிப்பு கேட்கவேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகிறோம். நமது ராஜ்யத்திலுள்ள வியாபாரச் சுணக்கம் மிக்க கஷ்டத்தை தருவதால் இவ்விஷயத்தைக் குறித்து எவ்வளவு யோசனை செய்தாலும் அது மிகையாகாது. இந்த வியாபார தூக்கத்திற்கு யாரு ஜவாப்தார் என்பது விஷயமாக விநோதமான எண்ணங்கள் ஜனங்களிடையில் கண்டுவருகின்றன. கொஞ்சகாலத்திற்கு முன்பு இருந்த சாமான்களின் விலைக்கும் தற்காலத்திலுள்ளவைகளின் விலைக்கும் இருக்கின்ற பெரிதான வித்தியாசத்திற்குள்ள காரணத்தை எந்த மனிதனாலும் சரி, எந்த சம்பவமானாலும் சரி அவர்கள் மேல் சுமத்துவதற்கு ஜனங்கள் சித்தமாயிருக்கிறார்கள். இதற்கு உண்மையான காரணம் என்னவென்று சாதாரண மனிதனை தெரியப்படுத்தி அவனது தப்பபிப்பிராயத்தை போக்கடிக்கவேண்டியது மிகவும் அவசியமானது.

ஐக்கிய இந்திய வியாபார சபையின் சென்ற கூட்டத்தில மத்திய கவர்ன்மெண்டில் வியாபார, தொழில் இலாகா மெம்பரான ஸர். ஜார்ஜ் ரெயினி சர்க்காரின்மேல் புகார் சொல்லாமலிருப்பதற்காக இந்த ஸ்திதிக்குக்காரணம் லோகமெங்கும் உள்ள ஸ்திதி மட்டுமே என்றுகூறினார். இதை நாம் சம்மதிக்கிறோம். இந்திய விவசாயியானவன் கடைத்தேற வேண்டுமானால் எல்லா வழிகளிலும் அவசர உதவி செய்யவேண்டுமென்பதை பெரிய உத்தியோகஸ்தர்கள் அறிகிறதில்லை என்பதைப்பற்றி நாம் வருந்துகிறோம். உலக கஷ்டங்கள் எவ்வளவு அதிகமாயிருப்பினும், சர்க்காராலே இழைக்கப்பட்ட சில கண்டிக்கக்கூடிய திட்டங்களின் கெட்ட பலன்களையாவது அழிக்க அவர்களுக்கு முடியுமென்று நாம் வெகு நிச்சயத்தோடு கூறுகிறோம். 1914-1919 வருஷத்திய யுத்தம், அதனால்

160210



ஏற்பட்ட சாமானங்களின் பேரவி கிராக்கி, யுத்தம் கழிந்த பிறகு சுதந்திரம் சித்தித்த ராஜ்யங்களின் விவசாய சுறுசுறுப்பு, ஐக்கிய நாட்டிலும் ப்ரான்ஸிலும் பொன் குவித்திருப்பது, இவைபோன்ற இன்னும் அநேக காரணங்களால் தற்கால ஸ்திதி நேர்ந்தது என்று நாம் சம்மதிக்கிறோம். நமது விவசாயியும் இதர ராஜ்யங்களில் வசிக்கும் விவசாயிகளின் நிலைமையில் இருப்பானாகில், உலகமெங்கும் சாமான்களின் விலைக்குறைவிற்குள்ள காரணங்கள் கொண்டு நாம் சமாதானப்படலாம். அப்பொழுதும் இதர ராஜ்யங்களில் விவசாயிகளுக்கு சர்க்கார் செய்யும் உதவிகள் நமது ராஜ்யத்திலும் விவசாயியை பரிதாபகரமான பாழ்கிடங்கிலிருந்து கரையேற்றுவதற்கு இன்றியமையாததாகும். ஆனால் நமது ஸ்திதியோ இதர ராஜ்யங்களை போன்றதன்று; மிக்க மாறுபாடுகளுடையதாகவிருக்கிறது. நமது விவசாயி இந்த மாதிரியான கஷ்டங்களோடு மன்றாடுவதற்கு பணத்திறமையற்றவனாக இருக்கிறான். பின்தாங்கலாகப்பொருள் கொஞ்சமும் அவனிடம் கிடையாது. இது மாத்திரமன்று; கடனென்ற கொடிய சுரிக்கு அவன் கழுத்தில் மாட்டி இருக்கிறது. இந்தியாவில் ஒவ்வொருவருக்குமுள்ள வரியை கணக்கிடுவோமாகில், இதர ராஜ்யங்களைவிட அது சொல்பமாயினும், உண்மையில் இந்திய விவசாயியே கொடியதான தீர்வை கொடுப்பவன். நமது ராஜ்யத்தின் நாணயச் செலவாணி முறையானது எப்பொழுதுமே சர்க்காரால் நடத்தப்பட்டு வருகின்றது. கொஞ்சகாலத்திற்கு முன்னதாக நமது நாணயச் செலவாணி முறையில் சர்க்கார் செய்த மாறுபாடானது, அதாவது ரூபாய்க்கு 16 பென்ஸ் என்பதிலிருந்து 18 பென்ஸ் என்று மாற்றம் செய்தது, கஷ்டப்படுகிற கிருஷிக்காரன்மேல் 12½% அதிகத்தீர்வை விதித்தது போலாகுமென்று, இவ்விஷயங்களில் நிபுணரானவர்கள் கூறுகிறார்கள். கவர்ன்மெண்டார் இந்திய வியாபாரங்களுடையவும் தொழில்களுடையவும் நலத்தைக்கருதாது, விவசாயத்துக்கு கேடுவிளைக்கும்படியான ரயில்வே போக்குவரத்து கட்டணங்கள் திட்டத்தை கையாளுகின்றனர். இது கொஞ்ச காலத்திற்கு முன்னதாக எவ்விதம் கைத்தொழிலுக்கு தீங்களித்ததோ அவ்விதமே இப்பொழுது விவசாயத்துக்கு தீங்களிக்கிறது. இவை எல்வற்றிற்கும் மேலாக சர்க்காரின் பொது பரிபாலன திட்டமும், நிலவரி வசூலிப்பதில் தயை இல்லாமல் சர்க்காரின் பணத்தொகையை வசூலிப்பதும் ஜனங்களின் ஜீவிதத்தை மிகவும் பாதிக்கின்றன. மத்திய கவர்ன்மெண்டிலும் மாகாண கவர்ன்மெண்டுகளிலும், "நீ கெட்டாலும் சரி எனது காசைக்கொடு" என்ற நோக்கமானது தாமறியாமலே அனுஷ்டிக்கப்பட்டுவருவதால், நாம் தற்காலத்திய சீர்கெட்ட நிலையை அடைந்திருக்கிறோம். பணச்சிக்கனத்தால் ரயில்வே போக்கு வரத்து கட்டணத்தைக் குறைப்பது என்ற பிரச்னையை ஸர். ஜார்ஜ் ரெயினிக்குக் கவனிக்கமுடியாமல் போய்விட்டது. இதிலிருந்து இதைப்போலவே விவசாயிக்கும்



30 MAY 19



சாமான்களின் விலைகுன்றி இருக்கின்ற இக்காலத்திலும் முன்போலவே ரயில்வே போக்கு வரத்து கட்டணம் மூலமாக ப்ரிட்டிஷ் இந்திய ஆட்சி என்ற பெரிதான காரியத்திற்குக்கூடவும் முன்கொடுத்த பணம் கொடுக்க முடியாது என்பதும் திண்ணம்.

இந்திய விவசாயியின் நிலைமையை நாம் சற்று கவனிப்போமாக. அவனுடைய வியாபார பொருள்கள், அரிசி, கோதுமை, பருத்தி, நிலக்கடலை, கொஞ்சம் சணங்கு இவைகளாகும். இந்தியாவானது ஏராளமான கோதுமையை அன்னிய ராஜ்யத்திற்கு ஏற்றுமதி செய்வதற்குப்பதிலாக விசேஷமான நிலைமையை இந்த வருஷத்தில் அடைந்திருக்கிறது. அன்னிய நாட்டிலிருந்து, முக்கியமாக ஆஸ்டிரேலியாவிலிருந்து, ஏராளமான கோதுமையை இந்தியா விலைக்கு வாங்கிற்று. இதிலும் விசேஷமென்னவென்றால் சென்ற வசந்த காலத்தில் நமது நாட்டிலேயே ஏராளமான கோதுமை சாகுபடி செய்யப்பட்டதுமன்றி நமக்கு தேவைக்கதிகமாக சுமார் 51,000,000 மரைக்கால்களும் இருந்தன. நிலக்கடலைப் பயிரைப்பற்றி இதற்கு முன்னதாக நமது பத்திரிகையில் நாம் எழுதினோம். முன்னிருந்த ஸ்திதியிலிருந்து இப்பொழுது வெகுமாற்றம் ஏற்படவில்லை. பருத்தியைப்பற்றி விசாரிக்குமளவில், மத்திய பருத்தி கமிட்டியின் தீர்மானமென்னவென்றால் பருத்தி கிருஷியானது பிரயோசனமற்றதாய்விட்டதென்பதாகும். ஐக்கிய இந்திய வியாபார சபையில் பேசியவர்களில் ஒருவர் ஓரிடத்தில் விலையின் குறைவால் ஜனங்கள் விறகுக்குப் பதிலாக பருத்தி வித்துக்களை உபயோகித்தார்கள் என்று கூறினார். பருத்திக் கிருஷி ஸ்தலங்கள் வருஷாவருஷம் குறைந்தே வருகிறதென்று நாம் அறியும்போது இவர்கள் இவ்வாறு பருத்தி விதையை விறகாக உபயோகித்தது நமக்கு ஆச்சரியத்தையே விளைவிக்கின்றது. சென்னை மாகாணத்தை கவனிப்போமாகில், கீழ்கண்டுவரும் பட்டிகை இதைத் தெளிவாக்குகிறது.

| வருஷம். | | பருத்தி ஏக்ரு. | பருத்தி மொத்தம் சாகுபடி செய்த பேல்சன். |
|---|---|---|---|
| 1924-25—1928-29 சராசரி | ... | 2,513,000 | 414,000 |
| 1930-30 | ... | 2,467,000 | 429,000 |
| 1930-31 | ... | 2,075,000 | 349,000 |

நெல் பயிரின் ஸ்திதியோ, இதினும் கேடானதாகவிருக்கிறது. விவசாயத்தொழிலில் நிபுணர்கள் நெல்பயிர்செய்வதைவிட்டுவிட்டு வேறெந்த பயிரையாவது கிருஷி செய்யவேண்டுமென்று விவசாயிகளை வேண்டிக் கொள்கிறார்கள். தர்க்ககாரணம்பற்றி மாத்திரம் உலக ஸ்திதியே நமது கஷ்டங்களுக்கெல்லாம் காரணமென்று நாம் சம்மதிப்போமானாலும்,

இந்த கெடுக்கடி சமயத்தில் விவசாயி என்ன செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டார் உபதேசிக்கிறார்கள்? எல்லாப் பயிர்களும் மோசமான ஸ்திதியிலிருப்பதால் ஏதேன் ஒருசாமானத்திற்குப்பதிலாக மற்றொன்றை பயிர் செய்யென்று சொல்ல வழியில்லை. அவனது கிருஷித்தொழிலை விட்டுவிட்டு சாகுபடி பொருள்களைக் கொண்டுள்ள கைத்தொழில் வேலையை எடுத்துக்கொள்ள அதற்குத் தேவையான பணமும் அவனுக்கு கிடையாது. அதற்குவேண்டிய ஞானமும் அவனுக்கில்லை. அதனால் தற்காலத்தில் சாத்தியமென்னவென்றால் கூடினமட்டும் அவனிடமிருந்து சொல்பப் பணமே சர்க்கார் வாங்கவேண்டும். அவனுடைய சாகுபடி சாமானங்களை விற்கமுடியாமல் இருக்கின்றன. அவனுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பணமாக அவனுக்கு கொடுக்கமுடியாது. அவனுடைய கடமைகள் இல்லாமல் ஒழிக்கவேண்டும்; அல்லது அதிகமாகக் குறைக்கவாவதுவேண்டும். இந்த ஐக்கிய இந்திய வியாபார சபையில மிஸ்டர் வால்சந்து ஹிராசந்து ரயில்வே போக்குவரத்து கட்டணத்தில் 50% குறைக்கவேண்டுமென்று கூறினாரானால் அதன் உத்தேசமானது விவசாயியின் கடமையை குறைப்பதற்காகவே. சில ஸ்தலங்களில் நிலவரியை வசூலிக்காமல் இருப்பதற்கோ அல்லது கொஞ்சகாலம் சென்று வசூலிப்பதற்கோ சர்க்காரை வேண்டுவார்களானால், அதன் உத்தேசமும் இதுவே. கிஸ்து வசூலிப்பதை நிறுத்துவதற்கு விண்ணப்பம் செய்வதை சர்க்கார் சரியான எண்ணத்துடன் கவனிக்கவேண்டும். விவசாயியின் கடன்களை தற்காலம் ஒத்திவைக்கவோ, அல்லது முற்றிலும் அழிக்கவோ சட்டம் ஏற்படுத்தவேண்டுமென்று யாரேனும் சர்க்காரை கேட்பார்களானாலும் அதுவும் நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்காது.

காப்பு வரிகள் வேண்டுமென்று சொல்வதும் விவசாயியின் நலத்திற்காகவே. ஒரு சாமானம் உலக சாமான விலையில் விற்பனை செய்யப்படுமாகில், அந்த சாமானை உண்டு பண்ணுவர்களுக்கு காப்பு வரியால் நலமொன்றும் ஏற்படாது என்றனர். ஜார்ஜ் ரெயினி போன்றவர்கள் கூறுவது மாத்திரம் போதாது அவரைப்போன்ற மனிதர்கள் உலக சமூக வாழ்விற்காக எத்தனை பிரயத்தனப்பட்டபொழுதும், தற்காலத்தில் உலக முழுதும் ஒரு குடும்பமாகவில்லை; உலக முழுவதுமுள்ள பொருளுற்பத்தியில் நமக்கு எவ்விதமான அதிகாரமும் கிடையாது. நாம் தனிமையாக இருக்குமளவும், இதர ராஜ்யங்களில் நமது சரக்குகளை விற்பனை செய்வதற்குச் சிரமப்படாவிட்டாலும் நமது நாட்டிலாவது அவைகளை விற்க முயலவேண்டும். பலமான முறைகளாலன்றி வேறொன்றாலும் நமது மார்க்கட்டுகளையே நாம் கைப்பற்றிக்கொள்வது சாத்தியமன்று.





விவசாயியின் ஸ்திதியை நன்றாக்குவதற்கு இன்னமும் ஒருவழி இருக்கின்றது. சர்க்காரும் அவர்களின் வருமானத்திற்கேற்றவாறு செலவு செய்யவேண்டும். ஜனங்களுக்காக சர்க்கார் இருக்கிறது. சர்க்காருக்காக பிரஜைகள் இருக்கிறதில்லை. இதனால் பிரஜைகளுக்கு எப்பொழுது வரி கொடுக்கமுடியவில்லையோ அப்பொழுது கவர்ன்மெண்டாரும் குறைந்த செலவில் அரசியலை நடத்திக்கொள்ளவேண்டும். பணச்சிக்கனம் என்று சொல்லிக்கொண்டே ஆட்சி விஷயமாக ஏராள செலவு செய்வது சரியன்று. ஒவ்வொரு செலவு விஷயங்களையும் ஜாக்கிரதையாக பரிசோதனை செய்து வேண்டுமானால் கொஞ்ச வருஷங்களுக்கு தமது செலவைப் பாதியாகக் குறைக்கவேண்டும். தற்காலத்தில் இருக்கும் வியாபார தூக்கமானது கொஞ்சகாலத்தில் நீங்கிவிடும்போல் தோன்றவில்லை. பணசிக்கனமான இப்பொழுது தற்கால திட்டத்தின்படியாவது அல்லது தற்கால வழிகளிலாவது நிலவரி வசூலிப்பது வெகுபிரயாசமான வேலையாகும். சீர்திருத்தம் வேண்டுமென்று கேட்கிறவர்களுடைய அபிப்பிராயங்களை இதுவரை சர்க்கார் கவனியாமல் இருந்தபோதிலும், இனிமேல் நிலவரி விஷயமாக அவர்களின் திட்டத்தை வெளிப்படுத்தவேண்டும். ஆனால்தான் விவசாயிக்கு இதுபோன்ற சந்தர்ப்பங்களில் குணமேற்படும். கவர்ன்மெண்டின் தற்காலத்திய வருமான திட்டத்தின்படி இந்தியாவின் பொருள்கள் இதர ராஜ்யக்காரர்களால் உபயோகிக்கப்படுகின்றன. கவர்ன்மெண்டார் இத்திட்டத்தைமாற்றி இந்தியாவின் பொருள்கள் இந்திய விவசாயிக்கே உபயோகப்படும்படி செய்யவேண்டும.

முன்னேற்ற வேலையில் இன்னும் ஒருவழி இருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்றுமதி இறக்குமதி விஷயமாக நிபந்தனைகள் ஒன்றுமில்லாத திட்டத்தை அனுசரித்ததால், விவசாயி தன்னால் வாங்கமுடியாத சில சாமான்களையும உபயோகிக்கத் தொடங்கி இருக்கிறான். அவைகளில் முக்கியமானது துணியாகும். இன்னும் மற்றவைகள், சுகபொருள்களான அன்னிய நாட்டு உணவுகள், அன்னிய நாட்டுச் செருப்புகள், அன்னிய நாட்டு மருந்துகள் போன்றவையாகும். இப்பொழுது இந்தியாவுக்கு வேண்டிய பொருள்களெல்லாம் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யவேண்டும். ஆனால் மாத்திரம்தான் உயிருள்ள இந்தியாவை அரசாள சர்க்காருக்கு முடியும். தனக்குத் தேவையான பிரதான சாமான்களெல்லாம் தானாகவே உற்பத்தி செய்வதற்கு கிராமத்தான் கற்றுக்கொள்ளவேண்டும். இதர ராஜ்யங்களிலிருந்து அதிக விலைகொடுத்து வரவழைக்கும் சாமான்களுக்குப்பதிலாக நமது ராஜ்யப்பொருள்களையே அபிவிருத்தி செய்யவேண்டும். இவைகள் ஏற்படும்வரையில் விவசாயிக்கும சர்க்காருக்கும் கஷ்டமான நிலைமைதான். ஏனெனில் விவசாயி பணமில்லாமல கஷ்டப்படுவதால் கவர்ன்மெண்டாரும் அவனிடமிருந்து சரியாக வரி வாங்குவதில கஷ்டப்படுவார்கள். இதனால் விவசாயியின நலமும் சர்க்காரின் நலமும் எவ்விதம் நெருங்கின சம்பந்தமுடையது என்றும் எனக்கு விளங்குகிறது.

---

## பத்திராதிபரின் குறிப்புகள்.

மலைக்காய்ச்சலும் அதன் பரிகாரமும்.

நமது மாகாணத்தில் மலைக்காய்ச்சல் (மலேரியா) வியாதி அதிகரிக்காமல் இருப்பதற்காக நியமித்திருந்த மலேரியா உத்தியோகஸ்தரின் அபிப்பிராயங்களின்படி கவர்ன்மெண்டார் என்ன நடவடிக்கைகள் செய்திருக்கிறார்கள் என்பதைக் குறித்துள்ள எல்லா விவரங்களையும் வெளியிடவேண்டுமென்று ம-ா-ா-ஸ்ரீ கெ கோடிரெட்டி அவர்கள் எம் எல்.ஸி. சட்ட சபையில் கவர்ன்மெண்டாரை வேண்டிக்கொண்டார். இதற்கு விடை அளிக்கையில் கனம் சுய ஆட்சி மந்திரி அந்த ஸ்பெஷல் உத்தியோகஸ்தரின் அறிக்கையை வெளியிட்டார்.

இந்த அறிக்கை 1931-ஞ பிப்ரவரி-மீ 24-உ வெளியிடப்பட்ட சட்டசபை நடவடிக்கையின் அனுபந்தமாக அதன் 57-67-ம் பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கிறது கனம் மந்திரி அவர்கள் அறிக்கை அப்பொழுதுதான் கிடைத்ததென்றும் கூறினார். சுமார் 10 தாலூகாக்களில் கொய்னா மருந்தானது மலைக்காய்ச்சலை அழிப்பதற்காக இனாமாக ஜனங்களுக்கு சர்க்காரால் கொடுக்கப்படுகிறதென்ற விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. இவ்விதம் இலவசமாக இதர தாலூகாக்களிலும் இந்த மருந்து கொடுக்கும் விஷயமாக அரசாங்கத்தார் மிகவும் அமாந்தமாக இருக்கிறார்கள். நமக்குத் தெரிந்தமட்டும், கொஞ்சகாலத்திற்கு முன்னதாக கர்நூல் ஜில்லாவை சேர்ந்த நந்தியால் தாலூக்காவையும், சிறவெல் தாலூக்காவையும் இந்த பட்டிகையில் சேர்த்திருப்பதாக நாம் அறிகிறோம். மலைக்காய்ச்சலை நீக்குவதற்கு இது மாத்திரம்தான் சர்க்கார் செய்கிறார்கள். இதனால் ஜனங்கள் பெரும் உதவியும் பெறுகிறார்கள். எனினும் இவ்விஷயத்திலாவது கவர்ன்மெண்டார் இதைவிட ஊக்கமும் சுறுசுறுப்பும் காட்டவேண்டும். இரண்டு வருஷங்களாக வெகு பிரயாசப்பட்டு கவர்ன்மெண்டாரை வற்புறுத்தியதற்கு பிறகுதான் நந்தியாலுக்கும் சிறவெலுக்கும் சர்க்கார் கொய்னா இனாமாகக் கொடுக்கத் தொடங்கி இருக்கிறார்கள் மலைக்காய்ச்சலை போக்கடிக்கிறதற்காக அநேகம் முறைகள் கையாளவேண்டும் எனினும் முதன்முதலாகக் கொய்னா இனாமாக கொடுக்கும் விஷயத்தைப்பற்றி முற்றிலும் ஆராய்ச்சி செய்யவேண்டும். தமது அறிக்கையில் ஸ்பெஷல் மலேரியா உத்தியோகஸ்தர் கிராமாந்தரங்களிலும் யூனியன் பட்டணங்களிலும் மலேரியாவை சம்பந்தித்து ஒன்றும் செய்யமுடியாது என்பதைத் திட்டமாகக் கூறியிருக்கிறார். இதற்கு உதாரணமாக ஸ்பெஷல் உத்தியோகஸ்தருடைய அறிக்கையின் 13-வது பாராவில் பிரசுரித்திருக்கும் அனந்





தப்பூர் ஜில்லா போர்ட் பிரசிடெண்டின் கடிதத்தை நமது நண்பர்களுக்கு எடுத்துக் கூறுவோம். அந்த பிரசிடெண்டு அனந்தப்பூரில் ஒரு மீட்டிங்கு கூட்டினார். அதற்கு கலெக்டர், ஸ்பெஷல் மலேரியா உத்தியோகஸ்தர், போர்டு அங்கத்தினரில் சிலர் இவர்கள் வந்திருந்தார்கள். வேண்டும்பொழுது உபதேசிப்பதற்கு அவசியமான அறிவு பெற்ற உத்தியோகஸ்தர்களை கவர்ன்மெண்டார் கொடுக்கவோ அல்லது ஏராளமான பொருளுதவி அளிக்கவோ செய்யவேண்டுமென்றும் இவ்விதம் அவர்கள் செய்யாவிட்டால் விஷஜுரத்தைத் தடுக்கும் காரியத்தில் தாலூகா போர்டார் ஒன்றும் செய்யமுடியாதென்றும் அவர்கள் தீர்மானித்தார்கள். இந்த மாதிரியான தீர்மானங்களே இதர ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்தும் கிடைக்கக்கூடும் என்று மலேரியா ஸ்பெஷல் உத்தியோகஸ்தர் நினைக்கிறார்.

அந்தந்த இடத்திற்காக விரிவாக தயார் செய்யப்பட்ட அறிக்கைகளில் ஸ்பெஷல் மலேரியா உத்தியோகஸ்தர் மலேரியா நீக்குவதற்குள்ள வழிகளில் பிரதானமான ஒரு வழியைப்பற்றி கூறியிருக்கிறார். நீர்ப்பாய்ச்சல் சேனல்களையும், விசேஷமாக சிறுசேனல்களையும் செடிகளும் அழுகிய சாமான்களுமில்லாமல் பழுது பார்க்கவேண்டுமென்று அவர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். இந்த அறிக்கையில் இதுவிஷயமாக நடந்திருக்கும் காரியங்களைப்பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை. முனிசிபாலிட்டிகளிலும் இதர பட்டணங்களிலும் இந்த வேலை இதற்காக நியமிக்கப்பட்ட சிப்பந்திகளால் செய்யப்படுகிறது என்ற காரணத்தாலாயிருக்கலாம் அவர் ஒன்றும் கூறாமலிருப்பது கிராமாந்தரங்களை சம்பந்தித்தமட்டும் இந்தக் காரியங்கள் இன்னமும் நாலளவாகவே இருக்கின்றன. ஏனென்றால் ஒருவேலையும் ஆரம்பிக்கவில்லை. என்றாலும் கிராமாந்தரங்களில் வசிக்கும் மனிதரே இந்த வியாதியால் அதிகமாகத் தொந்திரவு செய்யப்படுகிறார்கள் என்று இந்த அறிக்கையில்கூடக் கண்டுவருகிறது. அந்தஸ்தலங்கள் எல்லாம் 7வது பாராவில் அட்டவணை செய்யப்பட்டிருக்கின்றன. சுகாதார இலாகா அதிகாரியானவர், வரவு செலவு மெம்பரோடும் மராமத்து இலாகா அதிகாரியோடும் தைரியமாக மன்றாடுவதற்குப் பயப்படுகிறார் போலிருக்கிறது. மலேரியாவை அழிப்பதற்கு ஏராளமான பணம் அவசியமாகும். அதனால் வருமானத்தை அதிகரிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் கூடிய மராமத்து இலாகாவானது நீர்ப்பாய்ச்சல் சேனல்களை துப்புரவாக வைத்துக்கொண்டிருப்பதில் அவ்வளவு சிரத்தை செலுத்தாது. மலேரியா வியாதி நம்மை விட்டகலவேண்டுமானால், மராமத்து, வரவு செலவு, சுகாதாரம் இந்த இலாகாக்கள் ஒன்றுசேர்ந்து பெருமனத்துடன் சரியான முறைகளைக் கையாளவேண்டும். மேலும் ரிப்போர்ட்டுகளை வரவழைத்து அவைகளை ரிக்கார்டு செய்வதினால் மாத்

திரம் கொஞ்சமேனும் பிரயோசனமில்லை. இந்த விஷயத்தை நடவடிக்கைக்கு கொண்டுவர சாத்தியான வழியில் கொண்டுவரவேண்டும்.

தற்காலிக பிரசிடெண்டுகளின் நியமனம்.

பஞ்சாயத்துக்கு தற்காலிக பிரசிடெண்டின் நியமன அறிக்கையைப்பற்றி ரூல் ஒன்று கொண்டுவருவதாகச் சென்னை கவர்ன்மெண்டார் யோசனை செய்கிறார்கள். தாலூகா போர்டின் பிரசிடெண்டானவர் தற்கா பிரசிடெண்டு நியமிக்கும்பொழுது தமது போர்டின் அறிக்கை போர்டிலும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அறிக்கை போர்டிலும் இந்த விஷயத்தை ஆங்கில பாஷையிலும் அந்த பிரதேசத்தில் வழங்கி வரும் நாட்டு பாஷையிலும் தமது கையொப்பமிட்டு பிரசுரம் செய்தால் போதுமென்று சர்க்கார் நினைக்கிறார்கள். இந்த விஷயத்தில் இப்பத்திரிகையை வாசிப்பவர்களுக்கு ஏதேனும் அபிப்பிராயம் இருந்தமாகில் அவர்கள் ஏப்ரல்மீ 28உக்கு முன்னதாக சர்க்காருக்கு அறிவிக்கவேண்டும். தற்காலிக பிரசிடென்டை நியமிப்பதற்கு தாலூகா போர்ட் பிரசிடென்டுக்குள்ள அதிகாரம் திருத்தப்பெற்ற லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின்படி மிக்க சொல்பம்தான் என்று இதை வாசிப்பவர்களை நாம் தெரியப்படுத்துகிறோம். ஓரோ பஞ்சாயததிலும் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உப-பிரசிடெண்டு இருக்கிறார். அவர் வேலையில் இருக்கும் தருணத்தில், தொடர்ந்து 15-நாட்களுக்கு மேலாக ஸ்தலத்தில் இல்லாமலிருந்தாலும், அல்லது வேலை செய்ய முடியாதவிதம் சுகக்கேடு ஒன்றும் இல்லையானாலும் அவரே பிரசிடெண்டுக்குப் பகரம் வேலை பார்ப்பார். பிரசிடென்டை தேர்ந்தெடுப்பதற்குக்கூட அவரே மீட்டிங்கை கூட்டவேண்டும். பிரசிடெண்டு உத்தியோகமும் உப-பிரசிடெண்டு உத்தியோகமும் இரண்டும் காலியாக இருக்கும்பொழுதோ அல்லது உப-பிரசிடெண்டு 15-தினங்களுக்குமேலாக தொடர்ந்து ஸ்தலத்தில் இல்லாமலிருக்கும்பொழுதோ அல்லது சீக்கால் அவர்வேலை ஒன்றும்செய்யமுடியாமல் இருக்கும்பொழுதோதான் தற்கால பிரசிடெண்டு வேலை செய்யவேண்டியது. இந்த சந்தர்ப்பங்களில் கூடவும், உப-பிரசிடெண்டு கிராமத்திற்கு திரும்பி வருவாரானால் அவரே வேலை பார்ப்பார். இதனால் தற்கால பிரசிடெண்டு நியமிப்பது என்பது பிரசிடெண்டினுடையவும் உப-பிரசிடென்டினுடையவும் வேலைகள் காலியாக இருக்கும்பொழுதோ, அல்லது பிரசிடெண்டு வேலை காலியாக இருக்கும்பொழுது உப பிரசிடெண்டு வேலை செய்யமுடியாமல் சுகக்கேடாக இருக்கும்பொழுதோ மாத்திரம் தான் என்று விளங்குகிறது. பிரசிடென்டை தேர்ந்தெடுக்க ஒரு கூட்டம் கூடுவதற்குமாத்திரமே தற்காலிக பிரசிடெண்டு நியமிக்கப்படுகிறார். பிரசிடென்டாவது அல்லது வைஸ்-பிரசிடென்டாவது வேலையில் அமரும் தருவாயில் தற்கால பிரசிடெண்டின் வேலை முடியும். தற்கால பிரசிடெண்டின் அதிகாரமும், உத்தியோக காலமும் இவ்விதம் மிக்க





குறைவாதலால், அவர் நியமித்தலைப்பற்றிய அறிக்கையை வெகு பிரதானமாக ஆலோசிக்கவேண்டியதில்லை. எனினும் ஒப்பு மாத்திரமன்றி அறிக்கை முற்றிலுமே நாட்டு பஷையில் இருக்கவேண்டுமென்று சர்க்கார் தெளிவாகக் கூறுவார்கள் என்று நாம் நம்புகிறோம். இப்பொழுதுள்ள சர்க்காரின் அறிக்கையின் பிரகாரம், ஒப்பு மாத்திரமே நாட்டு பாஷையில் இருக்கவேண்டுமென்று ஜனங்கள் நினைக்கலாம்.

வங்காளத்தில் பஞ்சாயத் தங்கத்தினர்களை நாமி நேட் செய்வது.

கல்கத்தாவிலிருந்து மிஸ்டர் ப்றவோத்குமார் கோஷ் என்பவர் வங்காளத்தில் பஞ்சாயத்தங்கத்தினர்களை சர்க்கார் நாமிநேட் செய்வதைக் குறித்து ஒரு வியாசம் நமக்கு அனுப்பி இருக்கிறார். நமது பத்திரிகையின் ஸ்தலக்குறைவால், அதை பிரசுரிப்பதற்கு நமக்கு சாத்தியமில்லை. வோட்டர்களுக்கு அனுபவமில்லாததினாலும், சிறிய வகுப்பினர்களுக்குப் போதுமான பிரதிநிதித்வம் கொடுப்பதற்குமாக ஓரோ யூனியன் போர்டிலும் அதன் அங்கத்தினர்களில் மூன்றில் ஒருபங்கு ஜில்லா மாஜிஸ்திரேட்டால் நியமிக்கவேண்டும் என்று வங்காள கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறதாக தெரியவருகிறது. சிறிய வகுப்பினர்களுக்குப் போதுமான ஸ்தானம் கொடுப்பது என்பது நேராக அனுஷ்டிப்பதில்லை என்று மிஸ்டர் கோஷ் குறை கூறுகிறார். இதற்கு அவருடைய ஜில்லாவிலிருந்து தானே ஒரு சமாசாரத்தை அவர் உதாரணமாகக் காண்பிக்கிறார். ஒரு கிராமத்திலிருந்து இரண்டுபேர் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அதே கிராமத்தாரும் அதே வகுப்பினருமான ஒருத்தர்கூட அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ்விதம் நாமினேட் செய்யப்படுவதெல்லாம் வங்காள கிராம சுய ஆட்சிச் சட்டப்படியே ஆகும். இது 1919-ம் ஆண்டில் அமுலுக்கு வந்தது. இந்த மாதிரியான நாமினேஷன் நமக்கு நன்றாகத் தெரியும். தைவகிருபயால் அவை எல்லாம் இப்பொழுது தான் நமது மாகாணத்தில் நிறுத்தப்பட்டன. நமது அனுபவத்திலிருந்து இந்த அதிகாரம் அக்கிரமமாக உபயோகிக்கப் படுமென்பது நமக்கு தெரிந்த விஷயமே. முன்னேற்ற மடைந்திருக்கும் வங்காள மாகாணத்தில் சுய ஆட்சியை முற்றிலும் ஜன நாயக ஆட்சியாக்குவதற்கு வேண்டிய முறைகள் கையாளாமல் இருப்பதும், நமது மாகாணத்துப் பஞ்சாயத்துக்களுக்கு சமானமான யூனியன் போர்டுகளுக்கு அங்கத்தினர்களில் மூன்றில் ஒருபங்கு ஜில்லா மாஜிஸ்திரேட் நியமிக்கவேண்டும் என்ற பின்னோக்கமான சட்டம் இருப்பதும், நமக்கு வெகு அதிசயமாக இருக்கின்றன. ஆங்கில ஏகாதிபத்திய ராஜ்யங்களில் இதர ராஜ்யங்களுக்குச் சமமான நிலைமை வேண்டுமென்று சொல்வதும் அதே தருணத்தில் மேல் கூறப்பட்ட சட்டங்களை நடப்பில் வைத்துக் கொண்டிருப்பதும் பொருந்தினதன்று வங்காளத்திலுள்ள உத்தியோகஸ்தர்களும் உத்தி

யோக மற்றவர்களும் சுய ஆட்சியை சென்னை மாகாணத்தில் வழங்கும் போலாவது கூடியசீக்கிரத்தில் செய்யவேண்டும்.

சத்திரங்களையும் சந்தைகளையும் தாம்பிரித்தல்

சென்னை மாகாண கவர்ன்மெண்டார் இப்பொழுது தமது ஒரு ஆர்டரை திருத்தி இருக்கிறார்கள். 1930-ஆம் ஆகஸ்ட்மீ 21௳ அனுப்பப்பட்ட ஜி. ஓ. நம்பர் L & M-ல் அடங்கிய உத்தரவுகளை அவர் ரத்து செய்திருக்கிறார்கள். பொது ரஸ்தாக்கள், சத்திரங்கள், சந்தைகள் இவைகளின் உரிமையை இப்பொழுது பஞ்சாயத்துக்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். 1930ஆம் ஆகஸ்டுமீ 26௳க்கு முன்னதாக எந்தெந்த ஜில்லா போர்டுகளாலோ அல்லது தாலூகா போர்டுகளாலோ சம்ரக்ஷிக்கப்பட்டுவரும் ரோடுகளும் சத்திரங்களும் இப்பொழுது ஜில்லா தாலூகா, ரோடுகளும் சத்திரங்களென்றும் பெயரிடப்பட்டிருக்கின்றன. தாலூகா போர்டாரால் சம்ரக்ஷிக்கப்பட்ட சந்தைகள் தாலூகா போர்டு சந்தைகள் என்று தாம் திரிக்கப்பட்டிருக்கின்றன. இதர ரோடுகளும், சத்திரங்களும் சந்தைகளும் பஞ்சாயத்தைச் சேர்ந்தவைகளாகும். இம்மாறுதல்கூட திருப்திகரமல்லவென்று நாம் எண்ணுகிறோம். இவ்விஷயமாகப் பஞ்சாயத்துக்களுக்கும் தாலூகா போர்டுகளுக்குமுள்ள உரிமைகள் உறுதிப்பட்டிருக்கிறதா அல்லது உறுதிப்பட்டிருக்கவில்லையா என்பதை நாம் மூற்றிலும் ஆராயவேண்டும்.

தற்காலத்தில் கிராம போக்குவாத்து வழிகள் எல்லாம் மிகவும் மோசமான நிலைமையிலிருக்கின்றன. இவ்விஷயத்தில் பஞ்சாயத்துக்கள் மிக்க சிரத்தை செலுத்தினால் மட்டுமே ஏதாவது அபிவிருத்தி ஏற்படக் கூடும். கவர்ன்மெண்டார் இந்த விஷயத்தை இன்னும் கவனித்து வருவதாக நாம் எண்ணுகிறோம். போக்குவரவுக்குரிய வழிகளின் ப்ளான்கள் தயார் செய்வதற்கு இன்னும் மூன்று மாதகாலம் கூட இல்லை. ஜூன் மாதத்தில் நமது மாரிகாலம் தொடங்குகிறது. அதற்குள்ளாக எல்லா ஸ்தல உத்தியோகஸ்தர்களும் அவரவர்களுடைய போக்கு வரவு வேலைகளை முடிக்கவேண்டும். பஞ்சாயத்துக்கள் இவ்விஷயமாக அமர்ந்திருக்கமாட்டார்கள் என்று நாம் நம்புகிறோம். கிராமாந்தரங்களுக்குத் தேவையான ரஸ்தாக்களைப்போடுவதற்குள்ள ஏற்பாடுகள் எல்லாம் செய்வதற்கு அவர்கள் சிரமப்படவேண்டும்.

---



## பேஷ்வாக்கள் காலத்தில் பஞ்சாயத்துக்களின் நிலைமை.

பூனா பட்டணத்து "ப்ராங்க்ஸ் வீக்லி" என்ற பத்திரிகையின் பத்திராதிபரான மிஸ்டர் H. ஜார்ஜ் ப்ராங்க்ஸ் என்பவர் "பேஷ்வாக்கள் காலத்தில் பஞ்சாயத்துக்களின் நிலைமை" என்ற ரசமான புஸ்தகத்தை எழுதி இருக்கிறார். இதற்குக் காரணம் ஒன்றுள்ளதை கீழ் குறிப்பிடுகிறேன். 19-ம் நூற்றாண்டில் பம்பாய் கவர்னராக இருந்த மௌண்ட் ஸ்டூவேர்ட் எல்பின்ஸ்டன் என்பவர் ப்ரிட்டிஷார் மஹாராஷ்டிர தேசத்தைக் கைப்பற்றிய காலத்தில் பஞ்சாயத்துக்களின் ஸ்திதியை விசாரிப்பதற்காக அனேக வினாக்களுக்கு விடை பெற அவைகளை பிரசுரம் செய்தார். எல்பின்ஸ்டன் பஞ்சாயத்து விஷயமாக இவ்வாறு செய்திருந்தார் என்பதைப்பற்றி மிஸ்டர் ப்ராங்க்ஸுக்கு அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இதன் பேரில் இவர் இவ்விசாரணையில் ஊக்கமுடையவராய் மேற்கூறிய புத்தகத்தை எழுதலானார். இந்த புத்தகத்தின் விஷயமாவது தகுந்த தலைவரிசைகளோடுள்ள தனி அத்தியங்களில் எழுதி இருக்கப்பட்டிருக்கிறது. முதல் அத்தியாயத்தில் புஸ்தகத்திலுள்ள எல்லா விஷயங்களும் சுருக்கமாக குறிப்பிட்டிருக்கின்றன. இரண்டாவது அத்தியாயம் 18-ம் நூற்றாண்டில் மஹாராஷ்டிரர்களுடைய ஆட்சி எவ்விதம் இருந்தது என்பதை விவரிக்கின்றது. மூன்றும் நான்கும் அத்தியாயங்களில் அக்காலத்தில் பஞ்சாயத்துக்களின் ஸிவில் விஷயமாகவும் கிரிமினல் விஷயமாகவும் உள்ள வேலையைப்பற்றி கூறப்படுகின்றன. ஐந்தாவது அத்தியாயத்தில் எல்பின்ஸ்டன் எவ்விதம் பஞ்சாயத்து ஆட்சியை நடத்தினார் என்பது மிக்கத் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. ஆறாவது அத்தியாயத்தில் சென்ற காலத்திய அனுபவத்தால் கிடைக்கும் அறிவை மிஸ்டர் ப்ராங்க்ஸ் எடுத்துக் கூறுகிறார். அனுபந்தங்களில் கண்டுவரும் விஷயங்களாவன :—

(1) எல்பின்ஸ்டனுடைய கேள்விகளில் சில.

(2) ஒரு பஞ்சாயத்து அக்காலத்தில் எவ்விதம் கிரிமினல் வழக்கைத் தீர்ப்பு செய்தது என்பது.

(3) பஞ்சாயத்தொன்றின் விதித் தீர்மானத்திற்கு எதிராகக்கொண்டு வரப் பட்ட அப்பீலின் சாராம்சமும், 1825-ம் வருஷத்தில் தீர்மானிக்கப் பட்ட வழக்குகளின் கணக்குகளும்.

இப்புத்தகத்தில் பிரதானமாக மிஸ்டர் ப்ராங்க்ஸ் ஸ்தாபிப்பதென்னவென்பதை நாம் கவனிப்போம். அதாவது மஹாராஷ்டிரியர்களின் அரசாங்க காலத்தில் மாத்திரமன்று, அதற்கு முன்னதாகவும் கிராமப்பஞ்சாயத்து என்று சொல்வது ஒரு ஸ்தாபனமன்று ; உண்மையில் இரண்டு ஸ்தாபனங்களே. அவைகளில் ஒன்று வழக்குகள் தீர்மானிக்கவும் மற்றொன்று பரிபாலன வேலை கவனிக்கவும் செய்து வந்தன. இவைகளில் வழக்குத் தீர்மானிக்கும் பஞ்சாயத்தை ஒரு ஜூரியோடு ஒப்பிடலாம். அது கக்ஷிக்காரர்களால் தேர்ந்தெடுத்ததோ அல்லது ஒரு பெரிய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரால் நியமிக்கப்பட்டதோ ஆக இருந்தது. இப்பஞ்சாயத்து விதிகள் அனேகமாக முடிவான தீர்மானங்களாகவே இருந்தன. ஆயினும் சில சந்தர்ப்பங்களில் இதனுடைய விதிகளை அனுசரியாமல் புதிதாக ஸ்தாபிக்கப்படும் பஞ்சாயத்துக்களுக்கு அப்பீல் செய்ய சம்மதிக்கப்பட்டிருந்தது. வழக்கு முடிந்ததும் அதற்காக ஸ்தாபிக்கப்பட்ட பஞ்சாயத்துக் கலைந்துவிடும். வழக்கு

களைத் தீர்மானிப்பதில் அனேக வழிகளுள்ளதில் கூடின வரையில் கக்ஷிகளுக்கிடையில் சமாதானம் உண்டுபண்ணுவதோ அல்லது ராஜி செய்வதோ இவைகளையே பிரதான வழிகளாக பஞ்சாயத்துக்கள் கருதியுள்ளன. விசாரணை செய்வதில் வேறொரு விசேஷமும் உண்டு. அதாவது சாதாரண சில்லறை வழக்குகளெல்லாம் கிராமத் தலைவரே தீர்மானித்து விடுவார். நுட்பமான வழக்குகளே பஞ்சாயத்தின் பார்வைக்கு வருவது வழக்கம். பஞ்சாயத்துக்கள் அனேக விதமான வழக்குகளை விசாரணை செய்வதற்கு உரிமை பெற்றிருந்தன. கணக்கு விஷயமாகவோ அல்லது கடன் விஷயமாகவோ உள்ள உடன்படிக்கைகளைப்பற்றிய விவாதங்கள், ஆள் டேரிலுள்ளதும் சொத்து விஷயமாகவுமுள்ள சச்சரவுகள், எல்லை, ஜல விபாகம் இவைகளைப்பற்றியுள்ள தர்க்கங்கள், நில அவகாசங்களைப்பற்றிய சண்டைகள், பங்காளிகள் தம்மிலுள்ள சண்டைகள், வகுப்பினர்களுக்கிடையிலுள்ள உடன்படிக்கைகள், ஆசார முறைகளைத் தவறுதல், விவாகம் சழிப்பதற்குக் கொடுத்த உறுதிமொழியை மறுத்தல், தத்தெடுப்பதற்குள்ள முறைகளை நிராகரித்தல், தானமாகவோ அல்லது பாரம்பரியமாகவோ கிடைக்கவேண்டிய பொருள்களைக் குறித்துள்ள தர்க்கங்கள் இவ்விஷயங்களெல்லாவற்றையும் பஞ்சாயத்து விசாரணை செய்தது.

கிரிமினல் விஷயங்களில் என்ன சிக்ஷை அல்லது எவ்வளவு சிக்ஷை விதிக்க வேண்டுமென்பதைப்பற்றி பஞ்சாயத்துத் தீர்மானிப்பதில்லை. தற்காலத்திலிருக்கும் மாஜிஸ்திரேட்டுக்கு சமானமான பட்டேல் என்னும் உத்தியோகஸ்தர் ஒருவன் குற்றவாளியா அல்லது குற்றமற்றவனா என்பதை பஞ்சாயத்து சொல்லுகிறபடியே தீர்மானிப்பார்; ஸிவில் அல்லது கிரிமினல் விஷயங்களிலோ பஞ்சாயத்து ஜூரி அல்லது நிர்ப்பந்த சமாதான ஸ்தாபனமோ இவைகளின் தன்மையே உடைத்தது. சாதாரணமாக வழக்காளிகளே பஞ்சாயத்துக்களை தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுக்கு இவ்விஷயத்தில் தர்க்கம் வரும்போது மாத்திரமே கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் குறுக்கிட்டு பஞ்சாயத்தார்களைத் தாம் நியமிப்பார். இந்த சந்தர்ப்பங்களில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் தெரிந்தெடுத்த பஞ்சாயத்தார்களும் கக்ஷிக்காரர்களின் விசுவாசத்தை உடையவர்களாகவே இருந்தனர்.

பரிபாலன பஞ்சாயத்தில் கிராமத்திலுள்ள உத்தியோகஸ்தர்களும் வயது சென்ற மூற்றோரும் அங்கத்தினர்களாக இருப்பார்கள். மிஸ்டர் ப்ராங்க்ஸின் அபிப்பிராயப்படி இந்த பஞ்சாயத்துக்கள் மஹாராஷ்டிரர்களின் ஆட்சியில் வேலை செய்யவில்லையாம். ஸிவில், கிரிமினல் வழக்குக்காரர்களைச் சமாதானப்படுத்திக் கொண்டு போவதற்கு பஞ்சாயத்துக்களுக்குத் திறமையிருக்குமாகில் பரிபாலனத்தையும் அவர்கள் ஏன் நடத்தியிருக்கக்கூடாது என்பதற்குக் காரணம் இல்லையென்று அவரே சொல்லுகிறார். பரிபாலனம் என்பது உண்மையில் கிராமத்தார்களுடைய உரிமைகளைப்பற்றிய வழக்குத் தீர்ப்பதே. (கிருஸ்துவ வருஷத்திற்கு முந்திய இந்தியாவில் தவிர) நவீன காலத்திலும் மத்திய காலத்திலும் இவ்வகை பஞ்சாயத்துக்கள் ஒன்றுமே இல்லையென்று கூறுவது சரியன்று. மஹாராஷ்டிரர் ஆட்சி காலத்தில் பரிபாலன பஞ்சாயத்துக்கள் ஏராளமாக இருக்கவில்லையென்பதற்குக் காரணம் அவரே கூறியுள்ளார் அதென்னவெனின் மஹாராஷ்டிரியர்களுக்குத் தமது ஏகாதிபத்தியத்தை வெகு சீக்கிரத்தில் ஸ்தாபிக்கவேண்டியதாயும் துரிதமாக ஆட்சி முறைகள் ஏற்படுத்தவேண்டியதாயும் இருந்ததாகும். அவ்





விதம் செய்யாவிட்டால் அவர்களின் ஏகாதிபத்தியமே நாசமடைந்துபோகும்போல் இருந்தது. இக்காரணங்களால் இந்தியா முழுவதிலும் பரிபாலன பஞ்சாயத்துக்கள் இல்லையென்று சொல்வது சரித்திர விரோதமாக இருக்கிறது. தக்காணத்தில் பஞ்சாயத்துக்கள் இருந்ததற்கு அனேக அத்தாட்சிகள் இருக்கின்றன. கிறிஸ்துவ வருஷத்திற்கு முன்னதாகவன்றி பிற்காலத்தில் பரிபாலன பஞ்சாயத்துக்கள் இல்லையென்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. மேலும் மிஸ்டர் ப்ராங்க்ஸ் முன் காலத்து பஞ்சாயத்துக்களின் ஜனநாயகத் தன்மையை குறைப்பதற்கு சிரமப்பட்டிருப்பதாகவே தெரியவருகிறது. அந்தக் காலங்களில் கிராமத்தார்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோ அல்லது நாமினேட் செய்யப்பட்டவர்களோ ஆன அங்கத்தினர்களால் நடத்தப்பட்ட எம்மாதிரி ஜனநாயக சுயஆட்சி ஸ்தாபனங்களும் இருக்கவில்லையென்று அவர் கூறுகிறார். அவர் சொல்வதில் ஒரு உண்மை இருக்கிறது. தற்காலத்தில் வழங்கிவரும் ஓட்டு முறைகள் அப்பொழுது இல்லாதிருக்கலாம். ஓட்டுப்பெட்டி, ஓட்டு அடையாளம், படித்த ஓட்டர் இவை ஒன்றும் முன்காலத்து ஜனங்களுக்குத் தெரிந்திருக்காமல் இருக்கலாம். ஆனால் பஞ்சாயத்தார்கள் அந்தந்த ஜாதிக்காரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வயது முதிர்ந்தவர்களாகவே இருந்தனர். மேலும் பஞ்சாயத்தார்கள் எல்லா கிராம ஜனங்களாலும் அங்கீகரிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். உத்தரமல்லூர் சிலா விகிதத்தைப்போன்ற அத்தாட்சிகளால் கிராமங்கள் வார்டுகளாக பிரித்திருப்பதாகவும் அவைகளில் சரியான தேர்தல்கள் நடைபெற்றனவென்றும் நாம் அறிகிறோம்.

மேலும் இந்த புத்தகத்தில் மிஸ்டர் ப்ராங்க்ஸ் அக்காலத்திய பஞ்சாயத்து ஆட்சி முறையில் சிறிய வகுப்பினர்கள் எப்பொழுதும் கஷ்டப்பட்டனர் என்ற பெருங்குறை இருந்ததாக எடுத்துக் கூறுகிறார். அவர் சம்மதிக்கிறபடியே பஞ்சாயத்து முறையாலமட்டுமே பெரிய வகுப்பினர்களுக்கும் சிறிய வகுப்பினர்களுக்கும் அனுகூலமாக வேலை நடத்தமுடியும். முன்காலங்களிலுள்ள பஞ்சாயத்துக்களில் ஒவ்வொரு ஜாதிகளிலும் வயது சென்றவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இதிலிருந்து சிறிய வகுப்பினர் எவரையும் ஒரு விதத்திலும் கஷ்டப்படுத்துவதற்கு எண்ணம் அவைகளுக்கு இருக்கவில்லையென்பது தெளிவாகும். ஆனால் நாம் ஒருவிஷயத்தை எப்பொழுதும் ஞாபகம் வைக்கவேண்டும். தற்காலத்தில் கூடவும் நன்றாக நடத்தப்பட்ட ஜனநாயக ஆட்சியிலும் சிறிய வகுப்பினர்களுக்குக் கொஞ்சம் அங்கத்தினர்களை மாத்திரமே தேர்ந்தெடுக்கக்கூடும். பெரிய வகுப்பினரோடு ஒப்பர்த்தப்படுத்துவோமானால் சிறிய வகுப்பினர்களுக்கு எப்பொழுதும் கஷ்டப்படவேண்டியதுண்டு. ஆனால் பஞ்சாயத்து ஆட்சியில் இந்த கஷ்டம் மிகக் குறைவாக இருக்கும். கிராமங்களில் சிறிய வகுப்பினர்களுக்குச் சரியான நியாயத்தைக் கொடுக்க பஞ்சாயத்தே உயர்ந்த கருவியாகும்.

பிரிட்டிஷார் பாஞ்சாயத்து ஆட்சியை கவனிக்காமல் இருந்தார்கள் என்றோ அல்லது அழித்தார்கள் என்றோ கூறுவதை மிஸ்டர் பிராங்க்ஸ் மறுக்கிறார். இவ்வளவு காலங்கள் கழிந்தபிறகு இந்த விஷயத்தைப்பற்றி நாம் கவனிக்கவே வேண்டாம். ஆனால் ஜனங்கள்தான் பஞ்சாயத்துக்களை அழித்தார்கள் என்று கூறுவது இந்த வாதத்தின் தப்பிதத்தை அதிகரிக்கிறது. இதற்குப் பதில் ஒன்றுமளிக்காமல் நாம் சும்மாவிருக்கக்கூடாது. பஞ்சாயத்துக்கள் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து முற்றிலும் வேறான ஆட்சியின் ஒரு பாகமாகும். அதனால் அவர்கள் இந்தியாவில்

நமது ஆட்சியை ஸ்தாபித்தபொழுது இந்த பஞ்சாயத்தாட்சியை (அவைகளின் முக்கிய அம்சங்களைக்கூட) அனுசரிக்க முடியாமல் இருந்தார்கள். எல்பின்ஸ்டன் முதல் போன்றவர்கள் பஞ்சாயத்தாட்சிக்கு புனர்ஜீவன் கொடுக்கவேண்டுமென்று பகீரதப்பிரயத்தினம் செய்திருக்கிறார்கள் என்பது விளங்குகிறது. பிரிட்டிஷ் ஆட்சியால் பஞ்சாயத்தாட்சி கீழ் விழுந்தது என்று இப்பொழுது நாம் நம்புவதற்குக் காரணம் பிரிட்டிஷார்கள் கிராம சமூக வாழ்வுக்கு விரோதமான ஒரு பரிபாலன முறையை கைக்கொண்டார்கள் என்பதே. கிராமத்தின் இயற்கை வாழ்வானது திரும்பவரவேண்டுமானால் அதற்குப் பழைய முறையேதான் சாதகமென்று புதிய முறையை அனுசரிப்பவர்கள் உணரும் வரையில் பழைய முறையானது கீழ்படிந்தே இருந்தது. ஜனங்கள் பஞ்சாயத்தாட்சி அவசியமென்று எண்ணுவார்களானால் அதன்வெற்றி சுலபமென்று மிஸ்டர் ப்ராங்கஸ் கூறுகிறார். இக்கொள்கையை நாம் ஆமோதிக்கிறோம். இவ்விஷயமாக பிரசார வேலைக்கும் மேற்பார்வை இடுவதற்குமாக அவர் செய்திருக்கும் வேண்டுகோளுக்கு ஜனங்கள் சகாயம் செய்வார்கள் என்று நாம் நிச்சயமாக நம்புகிறோம். பஞ்சாயத்தாட்சிகு மேற்பார்வை மிக்க அவசியமென்று அவர் கூறுவதோடு நாமும் இணங்குகிறோம். முன்னேற்றமடைந்திருக்கும் இந்த 20-ம் நூற்றாண்டில் இதற்குத் தேவையான மேற்பார்வை இடுவதற்கு ஊழியர்கள் முன்வருவார்கள் என்பதில் நாம் மனச்சோர்வடைய வேண்டாம் இப்பொழுது கண்டுவரும் போலிப் பஞ்சாயத்து உத்தாரணத்திற்கு அவர் எதிராகவே இருக்கிறார் என்பதைக் குறித்து நாம் சந்தோஷமடைகிறோம். சுயராஜ்யத்திற்குப் பஞ்சாயத்தாட்சி பெருதவி செய்யலாம் என்று மிஸ்டர் ப்ராங்க்ஸ் கூறுவதோடு நாமும் இசைகிறோம். கூடியசீக்கிரத்திலும் இன்னும் அனேக ஸ்தலங்களிலும் பஞ்சாயத்தாட்சி ஸ்தாபித்தால் மாத்திரமே நமது லக்ஷியம் நிறைவேறும். இந்த புத்தகத்தைப் படித்த பிறகு இதர சில ஸ்தாபனங்களில் இருக்கவேண்டியது போலவே, பஞ்சாயத்துக்களிலும் நீதி நியாய அதிகாரமும் நிர்வாக அதிகாரமும் வெவ்வேறாக இருக்கவேண்டுமென்பது நமக்கு முன்னதைக் காட்டிலும் தெளிவாகப் புலப்படுகிறது. தற்காலிக நிலைமையை நோக்கும்போது பஞ்சாயத்துக்களின் நிர்வாக அதிகாரங்களையும் நீதி நியாய அதிகாரங்களையும் எவ்வாறு அதிகப்படுத்துகிறார்களோ அவ்வாறே அவைகளின் வருமானங்களையும் அதிகப்படுத்தவேண்டும். இம்மூன்று விஷயங்களிலும் நாம் சிரத்தை செலுத்தி வேலை செய்வோமானால் நமது லக்ஷியமான ஜனநாயக ஆட்சியை நாம் சீக்கிரம் அடைவோமென்பது திண்ணம். அவைகள் என்னவென்றால் :—

(1) பரிபாலன பஞ்சாயத்தானது கிராம பரிபாலன காரியங்களை எல்லாம் ஒன்று சேர்த்து கவனிக்கவேண்டும்.

(2) கிராமத்தின் பொருளாதார முன்னேற்ற விஷயங்களை கூட்டுறவு பஞ்சாயத்துக் கவனிக்கவேண்டும்.

(3) நீதி நியாய பஞ்சாயத்து வழக்காளிகளால் அவர்களின் சமான ஸ்திதியிலுள்ளவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும். வழக்குகளில் கட்டாயமாக மத்தியஸ்தம் பேசவும், கூடியவரையில் தர்க்கங்களை சமாதானப்படுத்தவும் வேண்டும்.

மிக்க ரசமான இந்த புத்தகத்தை வெளியிட்டதற்கு மிஸ்டர் பிராங்க்ஸை நாம் மெச்சுகிறோம். பஞ்சாயத்து இயக்கத்தில் அவர் செலுத்தும் சிரத்தை இந்த புத்தகத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் பிரகாசிக்கின்றது. கிராம இந்தியாவைக் குறித்து கவனிப்போர் எல்லோரும் இந்த புத்தகத்தை படிக்கவேண்டுமென்று நாம் வேண்டுகிறோம். இந்த புத்தகம் ஆங்கில பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை 1-8-0. இந்த புத்தகம் பூனாவில் வெல்லஸ்லி ரோடில் பிரசுரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

G H. S.



# கிராம ஊழியமும் பஞ்சாயத்தின் தேவையும்.

BY MISS. TICKELL,

*(Municipal Councillor, Nandyal.)*

இது சுலபமான கிராம புனருத்தாரண வழிகளில் மூன்று மாதங்கள் முயற்சித்த கிராம ஊழியத்தின் சுருக்கமான வரலாறாகும். பாளய தாமதத்தில் நடத்தின ஊழியமாதலால் அதற்குத் தகுந்த சில குற்றம் குறைகளும் சில விசேஷ குணங்களும் கலந்து இதில் காணப்படும். நாங்கள் பாளயம் சென்று இருந்த இடம் ஒரு கிராமத்திலிருந்து ஐந்து நிமிஷ நேரம் நடக்கவேண்டும் தூரத்திலேயே இருந்தது. மேலும் அதன் சமீபத்திலுள்ள ஒரு பாதை வழியாகவே கிராமத்தார்கள் ஆற்றிலிருந்து ஜலம் கொண்டுபோவார்கள். இந்த ஆராய்ச்சியின் பிரதான குற்றம் என்னவெனில் நாங்கள் சொல்பகாலம்தான் ஆராய்ச்சி செய்தோம் என்பதே. ஆனால் பாளய வாசத்தின் பெரிதான குணத்தினால் கிராமத்தாரோடு அபிப்பிராயங்களை கலந்துகொள்ளுவதற்கு எங்களுக்கு வெகு சௌகரியமாக இருந்தது. சயன கூடாரம், சமயல் கூடாரம் இவ்விரண்டுமன்றி கைத்தொழில் செய்வதற்கும் பிரசங்கம் செய்வதற்குமாக ஒரு பெரிய கூடாரமும் நாங்கள் கொண்டு போயிருந்தோம். இந்தக் கூடாரத்தில் செய்துவந்த கைத்தொழில் வேலைகளை காண்பதற்கு யாருக்கு விருப்பமோ அவர்கள் எல்லோரும் சந்தோஷத்துடன் அவ்விடத்தில் தங்கி அவைகளை பார்வையிட்டார்கள். மேலும் அவைகளைப்பற்றிய சந்தேகங்களையும் கேட்டுத் தீர்த்துக் கொள்ள அவர்களுக்குமுடிந்தது. சாதாரண மருந்துகளும் அங்கு வருவோருக்குக் கொடுக்கப்பட்டன. தேக சௌக்கியம், சுகாதார முறைகள், மலைக்காய்ச்சல் இவைபோன்ற விஷயங்களைப்பற்றி பிரசங்கங்களும் நடத்தப்பட்டன. பகலில் இதற்காக ஜனங்கள் கூடுவார்கள். இராத்திரியில் பிரயாணிகள் எங்களுடைய பாளயத்தின் பக்கத்தில் வண்டிகளை நிறுத்தி சிரம பரிகாரத்திற்காகத் தங்குவார்கள் இந்த பாளய சிவிதத்தின் மூலமாக சில தினங்களில் அனேக கிராமத்தினர் எங்களுடைய சிநேகிதராய்விட்டனர்.

முதலில் எங்களுடைய பாளயவாசம் சமீபத்திலுள்ள கிராமத்தாருக்கு மிகவும் புதுமையாகவே இருந்தது. ஆனால் சிறிது காலத்தில் அவர்கள் எங்களுடன் பழகிவிடவும், நாங்கள் கீழ்சொல்லிய வழிகளில் வேலைசெய்யத் தொடங்கினோம். கிராமத்தார்களுக்கு பாய் முடைதல், கூடைசெய்தல் போன்ற மிகவும் இலகுவான கைத்தொழில்களை கற்பித்தோம். இனிமேல் நூல் நூர்ப்பதை கற்பிக்கவேண்டுமென்று நாங்கள் நிச்சயித்திருக்கிறோம். இதையே பிரதான தொழிலாக்கவேண்டுமென்பது எங்களுடைய கொள்கை. ஆனால் அந்தந்த ஜில்லாக்களில் கிடைக்கக்கூடிய சாதனங்களுக்குத் தக்கவாறு கைத்தொழில்களும் மாறுபடும். தையல் வேலை கற்றுக்கொள்ள இஷ்டமுடையவர்களுக்கு அது தவறாமல் கற்பிக்கப்பட்டது. ஒவ்வொரு பகலும் எங்களுடைய தையல் உபாத்தியாயர் முக்கிய கிராமவாசியின் ஒருவனது வீட்டிற்குப் போவார். இரவுதோறும் பகலில் கூலிவேலை செய்யும் 20, 25 பெண்பிள்ளைகள் எங்களுடைய பாளயத்திற்கு வந்து தையல் வேலையை கற்

றுக்கொண்டு போவார்கள். நாங்கள் தாமதித்த இரண்டு மாதத்திற்குள்ளாக தையல் படிக்க வந்தவர்கள் எல்லோரும் அவர்களுடைய ஜாக்கெட்டுகளை தாமாகவே தைத்துக்கொள்ள கற்றுக்கொண்டு விட்டனர்.

நாங்கள் செய்த இரண்டாவது வேலை தேக ஆரோக்கியத்தைப்பற்றியாகும். எங்களுடைய கூடாரத்தில் சாதாரண சில மருந்துகள் நாங்கள் வைத்திருந்தோம். இதன்றியும் வீடுகள்தோறும் நாங்கள் சென்று பெண்டிர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு சிசு பாலனம், பிரசவம் முதல்போன்ற விஷயங்களைப்பற்றி பிரசங்கம் செய்தோம். எப்பொழுதும் அவர்கள் எங்கள் வார்த்தைகளை மிக்க சிரத்தையோடும் ஆவலோடும் கவனித்து வந்தனர். அடுத்த கிராமத்திலிருந்த ஒரு விவசாயி எங்களுடைய மருத்துவச்சியை அவனுடைய கிராமத்தில் வந்து அவ்விடத்திலுள்ள பெண்டிர்களுக்கும் இதைப்போன்ற பிரசங்கங்கள் செய்யவேண்டுமென்று எங்களை கேட்டுக்கொண்டான். நாங்களும் அதற்குச் சந்தோஷத்தோடு இசைந்தோம். மேலும் கிராமத்திலுள்ள மருத்துவச்சிகளின் இஷ்டத்தை சம்பாதித்து அவர்களுக்குக் கூடுதல் ஞானத்தை ஊட்டுவதற்கு நாங்கள் மிக்க சிரத்தை செலுத்தினோம்.

பெண்டிர்கள், குழந்தைகள் இவர்களின் தினமாக ஒரு தினத்தைக்கொண்டாடினோம். அன்றைக்கு ஒரு பெண் டாக்டரும் ஒரு செவிலித்தாயும் வந்து பிரசங்கம் செய்தார்கள். குழந்தைகளை நிறுவில் நிறுக்கவும் செய்தார்கள். இதற்கு ஏராளமான ஜனங்கள் கூட்டம் கூடினார்கள்.

எங்களுடைய கூடாரத்திற்கு வெளியில் பிள்ளைகள் விளையாடுவதற்காக ஒரு மைதானம் தயார் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் விளையாடுவதை கண்டானந்திக்க அவர்களின் பெற்றோர்கள் வருவது வழக்கம்.

கல்வியில் முக்கியமாக பெண்களின் கல்வியைப்பற்றியும் தேகாரோக்கிய விஷயங்களைப்பற்றியும், விவசாய முறைகளில் சீர்திருத்தத்தைப்பற்றியும் பிரசங்க மூலமாகவும் சம்பாஷணை மூலமாகவும் கிராமத்தாருக்கு அறிவு ஊட்டுவது எங்களது மூன்றாவது வேலையாக இருந்தது. இத்துடன் கிராமபோன், கதாகாலக்ஷேபம் முதலியவைகளால் கிராமத்தாருக்குச் சந்தோஷம் அளிக்க முயன்றோம். இவை எல்லாம் கிராமத்திலேயே நடைபெற்றன.

ஆனால் இவ்வித வேலை எல்லாம் நீடித்த பயனை அளிக்காவிடின் உபயோகமற்றதாகவே போய்விடுமாதலால் அது நீடித்த பயனை அளிப்பதற்கு எவ்வழி அனுசரிக்கவேண்டுமென்று நாங்கள் பின்பு யோசனை செய்தோம்.

குடிசை கைத்தொழில் நீடித்த பயனை அளிக்கும்படிச்செய்வது சுலபமாக இருந்தது. ஏனெனின் போர்டு பள்ளிக்கூடத்திலும் கிருஸ்தவ பள்ளிக்கூடத்திலும் சமீப கிராமத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்திலும் உள்ள உபாத்தியாயர்கள் தங்கள் மாணாக்கர்களுக்கு பின்பு கற்றுக்கொடுக்கும் பொருட்டு தாங்களே இக்கைத்தொழில்களை கற்றுக்கொண்டனர். இம்மாதிரியே உபாத்தியாயர்களின் மனைவிகளும் சௌகரியமுள்ளபொழுது தையல் வேலையைப் படித்துக் கிராமப் பெண்களுக்கு கற்பிக்கலாம்.





சுகாதார வேலைகளை ஒழுங்குவர என்றென்றும் நடப்பிப்பது என்பது கஷ்டமான வேலையாகும். நாங்கள் திரும்பிவருவதற்கு முன்னதாக இருந்த சில தினங்களில் பல ஜாதிகளையும் பல வகுப்புகளையும் சென்று கண்டு தங்கள் வகுப்பின் சுகாதார விஷயங்களை கவனிப்பதற்கு ஐந்து பேர் அடங்கிய ஒரு பஞ்சாயத்தை அமைக்குமாறு அவர்களை வற்புறுத்தினோம். இவ்வாறு அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தை வாழ்வதற்குத் தகுந்த சுத்தமான இடமாக்கிக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் எடுத்துரைத்தோம். எங்களுடைய இந்த வழிமட்டும்கிராம அபிவிருத்திக்கு போதாது. எனினும் கீழ்வகுப்பினருக்கு முதன்முதலில் இவ்வழி வெகு அவசியமே. ஆனால் கிராமத்தார்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து புனருத்தாரண வேலைகள் சரிவர செய்யவேண்டுமாகில் இதனினும் மிகவும்பொறுப்புவாய்ந்ததும் கவர்ன்மெண்டின் அனுமதியும் ஆதாரவும் பெற்ற ஒரு ஸ்தாபனம் அவசியம் அது என்னவெனில் நமது ராஜ்யத்திற்கு பண்டைக்காலம் முதலே பொருந்தின கிராமப் பஞ்சாயத்தே. ஊழியமாக வேலை செய்பவர்கள் பஞ்சாயத்தார்களுக்கு நேரான நோக்கங்களையும் சாத்தியமான முறைகளையும் போதிப்பதுமன்றி அவர்கள் மூலம் கிராமங்களை முன்னிலைக்குக் கொண்டுவரலாம். இந்த சொற்பகால ஆராய்ச்சியில் இருந்து எனக்குப் பெரிதான தத்வம் ஒன்று விளங்கிற்று. என்னவென்றால் இக்காலத்திலும் பழைய காலத்து பஞ்சாயத்து ஆட்சியை ஏற்படுத்தி, பஞ்சாயத்தார், சுயஆட்சி அதிகாரிகள், ஊழிய வேலைக்காரர்கள் இவரெல்லோரும் ஒன்றுசேர்ந்து வேலை செய்வார்களானால் கிராம வாழ்வு வெகு முன்னேற்றம் அடையும் என்பது எனது பலமான அபிப்பிராயம்.

கடைசியாக இரண்டு விஷயங்களை குறிப்பிட நான் இஷ்டப்படுகிறேன். சுய ஆட்சி அதிகாரிகள் எல்லோரும் எங்களுக்கு மிகவும் உதவிபுரிந்தார்கள். கிராமத்தார்களும் புதிதான ஞானம் சம்பாதிப்பதற்கு ஆவலோடும் கூடி இருந்தார்கள்.

---

## செய்யார் தாலுக்கா போர்டின் எல்லையிலடங்கிய பஞ்சாயத்துக்களின் 1929-30-ம் வருஷத்திய யாதாஸ்து.

BY MR. T. M. AUDIKESAVALU NAIDU, PRESIDENT,

*(Cheyyar Taluk Board).*

செய்யார் தாலுக்கா போர்டின் எல்லையில் அனேகம் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளின் 1930ஞு மார்ச்சு மீ 31உயில் முடிகிற வருஷத்திய பஞ்சாயத்தாருடைய விசாரணையை நான் கீழ் குறிப்பிடுகிறேன்.

இந்த வருஷமும் பஞ்சாயத்துக்களை அமைப்பதும், மேல்பார்வையிடுவதுமாகிய வேலைகள் என்னிடத்திலும் தாலூக்கா போர்டாரிடத்திலும் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. முதன் முதலாக 1925-26-ம் வருஷத்தில் மாத்திரமே பஞ்சாயத்துக்களை புதிதாக அமைப்பதுபற்றிய வேலை ஆரம்பிக்கப்பட்டது. அந்த வருஷத்தில் 52 பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அதற்கு பிற்பாடு 1927-28ஞு வரையில் 202 பஞ்சாயத்துக்களே இந்த தாலூக்கா போர்டில் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த தாலூக்கா போர்டிலுள்ள 429 பிரதான கிராமங்களில் 1930ஞு மார்ச்சு மீ 31உ வரையில் 277 பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் சோலாபாவோர், திருப்பனமூர், மேலப்பாளையம், கோதண்டவரம், வெப்பம்பட்டு வில்லிவலம் ஆகிய ஐந்து பஞ்சாயத்துக்கள் சச்சரவுபற்றியோ அல்லது வேலை ஒன்றும் செய்யாமல் இருப்பதுபற்றியோ நீக்கப்பட் ன.

### பிர்க்காவாராக உள்ள பஞ்சாயத்துக்களின் ஸ்திதி.

| செய்யார் தாலூக்கா. | | வாண்டிவாஷ் தாலூக்கா | |
|---|---|---|---|
| (1) அரக்காலூர் | 25 | (1) வாண்டிவாஷ் | 25 |
| (2) வல்க்கடை | 20 | (2) தேசூர் | 25 |
| (3) மெல்மா | 23 | (3) பெர்னமல்லூர் | 23 |
| (4) செய்யார்குஸ்பா | 20 | (4) நெடுங்குணம் | 20 |
| (5) வெம்பக்கம் | 17 | (5) சலவேடு | 22 |
| (6) பெருங்கத்தூர் | 19 | (6) தெல்லார் | 23 |
| (7) தூசி | 15 | | |
| | 139 | | 138 |

இவைகளில் 36 பஞ்சாயத்துக்களைத் தவிர இதர எல்லா பஞ்சாயத்துக்களிலிருந்தும் ரிப்போர்ட்டுகள் கிடைத்திருக்கின்றன. அவைகள் ரிஜிஸ்டிரார் ஜனரலுக்கோ அல்லது கலெக்டருக்கோ யாருக்கு அனுப்பவேண்டியதோ, அவர்களுக்கு அனுப்பப்பட்டன. 73 பஞ்சாயத்துக்கள் கலெக்டரின் ஆளுகையில் இருந்தன.



## 1929—30-ம் வருஷத்திய செய்யார் தாலூக்கா பஞ்சாயத்து.

எல்லா பஞ்சாயத்துக்களிலும் தேர்தல்கள் நடைபெற்றன. அவை எல்லோருக்கும் சந்தோஷமாகவே முடிந்தன. எல்லாப்பொதுவிஷயங்களிலும் அனுசரிக்கவேண்டிய முறைப்படியை ஒவ்வொரு வகுப்பினருக்கும் பஞ்சாயத்தில் ஸ்தானம் கொடுக்க நிச்சயிக்கப்பட்டது. தேர்தல் நடைபெறும்பொழுது ஸ்தானங்களுக்கு எதிரிகள் மிகவும் குறைவாகவே இருந்தனர். 8 தேர்தல்கள் விஷயமாக குற்றங்கள் கொண்டுவந்ததில் அவை முற்றிலும் நிராகரிக்கப்பட்டன. அந்தரங்க சம்மதத்தின்படி 38 பஞ்சாயத்துக்களில் ஆதித்திராவிடர்கள் ஸ்தானம் பெற்றார்கள். சில கிராமங்களில் முகம்மதியர் சிறு வகுப்பினராகக் கண்டுவந்தார். 10 பஞ்சாயத்துக்களில் அவர்களுக்குச் சரியான ஸ்தானம் கிடைத்தது. தற்பொழுது நடைபெறும் தேர்தலில் வயது முதிர்ந்த எல்லோருக்கும் உரிமையுண்டு, ஆனால் ஓட்டர்கள் பட்டிகை, ஓட்டு செய்யும் பெட்டி முதல் போன்றவை உபயோகப்படுத்தவில்லை. இதனால் அனாவசியச் செலவுகள் ஒன்றும் நேரிடவில்லை. ஜனங்களுக்குப் பொதுவாக சந்தோஷம் அளித்ததுமன்றி அவர்களுக்கு உத்தம மனிதர்களை தெரிந்தெடுப்பதற்கு பூர்ண சுதந்திரமும் இருந்தது.'

சட்டப்படி ஒவ்வொரு மாதத்திலும் பஞ்சாயத்துக் கூடவேண்டும். சில பஞ்சாயத்துக்கள் இதைச் சரியாக அனுஷ்டிக்கவில்லை. அனேகம் பஞ்சாயத்துக்கள் தங்கள் வேலைகளை நடத்துவதற்கு வேண்டிய தடவை கூடின. பஞ்சாயத்துக் கூட்டங்களுக்கு அங்கத்தினர்கள் தகுந்தவாறு ஆஜரானார்கள். கொஞ்ச காலமாக தொடர்ந்து வராததுபற்றி 5 பஞ்சாயத்து அங்கத்தினர்கள் அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். இதன்றி வேறெந்த காரணத்துக்காகவும் பஞ்சாயத்துத் தலைவரோ, அல்லது அங்கத்தினரோ அவர்கள் பதவியை இழந்திலர்.

ஆபீஸின் பொருட்டுச் செலவு அனேகமாக இல்லை. அவசியமான சொல்ப எழுத்து வேலை தேவையாயிருந்தால் பிரசிடெண்டாலும் எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயராலும் அது செய்யப்பட்டது. 71 தீர்வை ப்ரேரேபணைகள் கொண்டுவந்ததில் 48 எண்ணமே அனுமதிக்கப்பட்டன. இந்த வரிகள் எல்லாம் வசூலிக்கப்பட்டனவென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அனேகமாகத் தலைவர்களே வரி வசூல் செய்தார்கள். கொடுக்காமல் ஏமாற்றிவந்த சில பேர்களிடம் இருந்து வரி வசூலிப்பதற்கு கிராம முனிசீப்பின் சகாயம் நாடப்பட்டது. வழக்கப்படி கிராமத் தலைவர் சிலரிடம் வரி வசூலிப்பதை மிக்கத் தாமதப்படுத்தினர். தகுந்த சமயத்திற்குள் வரி வசூலிக்காததினால் ஒரு பஞ்சாயத்து ரூ. 200 இழக்கவேண்டி நேர்ந்தது. சுத்த ஜல குளங்களை சீர்திருத்துவது, சப்பாத்திக்கள்ளி நீக்குதல், ரஸ்தாக்களை அமைப்பது, குடி மராமத்து வேலை, பாடசாலை கட்டிடங்கள் அமைப்பது, விளக்குப் போடுவது முதலிய பல மாதிரி வேலைகள் பஞ்சாயத்துக்களால் செய்யப்பட்டன.

இந்த வேலைகளுக்காகச் செலவு செய்யப்பட்ட பணத்தொகையின் பட்டிகை கீழ் குறிப்பிட்டிருக்கின்றது. பணமாக வரி வசூலிக்காமல், வேலையே வரியாகக் கருதி, இந்த வேலைகள் செய்யப்பட்டன. இதுவரையில் 40-மைல் தூரம் ரோடு போடப்பட்டிருக்கின்றது. 26 சுத்த ஜல குளங்கள் ரிப்பேர் செய்யப்பட்டன.

| | 1929—30 ரூ. | சென்ற இரண்டு வருஷங்களில் ரூ. |
|---|---|---|
| (1) சுத்த ஜல குளங்கள் ரிப்பேர்க்கு ... | 5,400 | 12,130 |
| (2) நீர் பாய்ச்சல் உற்பத்தி ஸ்தானங்களிலிருந்து செல்லும் கால்வாய்களை ரிப்பேர் செய்யும்பொருட்டு. | கணக்கு கிடைக்கவில்லை, 4 பஞ்சாயத்துக்கள் இவ்வேலை செய்திருக்கின்றன. | 6,450 |
| (3) நீர் பாய்ச்சல் குளங்கள் ரிப்பேர்க்கு ... | — | 1,396 |
| (4) ரஸ்தா இடுதல் ... ... | 3,000 | 2,270 |
| (5) கிணறு குழித்தல் ... ... | — | 150 |
| (6) சர்க்கார் புறம்போக்கிலிருந்து சப்பாத்திக்கள்ளியை நீக்குதல். | 250 | 2,320 |
| (7) கல்வர்ட்டுகள் நிர்மித்தல் ... | 480 | 100 |
| (8) பள்ளிக்கூடக் கட்டிடங்கள் ஸ்தாபித்தல். | 15,050 | 4,200 |
| (9) இதர வேலைகள் ... ... | — | 50 |
| | 24,180 | 29,065 |

16-3-26-ல் தாலூக்கா போர்டு 32-ம்நம்பர் தீர்மானத்தை அங்கீகரித்தது. அதன்படி (1) மீன் பிடிக்கும் ஸ்தலங்கள் (Fisheries), (2) லோக்கல் பண்டு புறம்போக்கு மரங்கள், (3) வண்டிகள் தங்கும் இடங்கள், (4) லைசென்ஸ் பீசுகள், (5) எல்லை கடந்ததற்குள்ள பிழை இவைகளின் வருமானத்தை பஞ்சாயத்துக்களுக்காக தாலூக்கா போர்டு கொடுத்திருக்கின்றது. ஒவ்வொரு வருஷமும் இவ்விதம் சுமார் ரூ 3,000 பஞ்சாயத்துக்களுக்காக தாலூக்கா போர்டு இழந்துள்ளது. பொது வேலைகளுக்காக சர்க்காராலும் தாலூக்கா போர்டாராலும் கொடுக்கப்பட்டிருக்கின்ற பணத்தின் தொகை கீழ் வருமாறு:—

| | ரூ. |
|---|---|
| (1) தாலூக்கா போர்டு ... ... ... | 962 |
| (2) கவர்ன்மெண்டார் ... ... ... | 4,200 |

இவ்விதம் தாலூக்கா போர்டால் கொடுக்கப்பட்ட வருவாய் பஞ்சாயத்துக்களுக்கு மூலதனமாக இருக்கின்றது. இது போதாமல், பஞ்சாயத்துக்கள் தங்களுடைய வருமானத்தை சர்க்கார் புறம்போக்குகளில் கிடக்கும் சாணி, வயல் புல் இவைகளை விற்பனை செய்தும், அவைகளின் அதிகாரத்தில் சேர்க்கப்பட்ட இனும், சமுதாயம் தோப்புகளின் வருமானத்தைக்கொண்டும் விருத்தி செய்கின்றன. சிற்சில குறிப்பிட்ட வேலைகளுக்காகப் பஞ்சாயத்துக்கள் வரிகள் விதித்தன. பணமாக





வரியை வாங்குவதற்குப் பதிலாகக் கூலி வேலையை நடப்பித்துக்கொண்டன. இந்தக் கூலி வேலைகள் நீடித்து நடைபெறவில்லை; சொற்ப காலமே நடைபெற்றன. கள்ளு, சாராயக்கடைக்காரர்களின்மேலும் இவரைப்போன்ற வேறு சில பேர்கள்மேலும் மாத்திரமே ஸ்திரமான வரிகள் விதிக்கப்பட்டன. வேறொருவர் மேலும் ஸ்திரமான வரி விதிக்கப்படவில்லை.

கல்வி.—1926-27-ல் 65-ம் 1927-28-ல் 83-ம் 1928-29-ல் 48-ம் மொத்தம் 196 பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகளில் 6 பள்ளிக்கூடங்கள் ஸ்திரமாக திறக்கப்பட்டன. பிற்காலம் திறக்கப்பட்ட இரண்டு பள்ளிக்கூடங்களுக்கு சர்க்காரின் அனுமதியை எதிர்ப்பார்த்திருக்கிறோம். நிகழும் வருஷத்தில் புதிதாக 5 பள்ளிக்கூடங்கள் அதிகமாகத் தொடங்குவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது.

190 பள்ளிக்கூடங்களிலும் சேர்ந்து 294 உபாத்தியாயர்களுள்ளனர். இந்த வருஷக்கடைசியில் மொத்தம் 8436 மாணாக்கர்கள் இப்பள்ளிக்கூடங்களில் கற்று வந்தனர். ஆதித்திராவிட பிள்ளைகளுக்காக 18 பள்ளிக்கூடங்கள் பிரத்தியேகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இதர அனேக பள்ளிக்கூடங்களிலும் ஆதித்திராவிட மாணாக்கர்கள் சேர்க்கப்பட்டனர். 1930ளு மார்ச்சுமீ 30உயில் இருந்த 294 உபாத்தியர்களில் 53 பேர்கள் S.S.L.C. பெற்றவர்களும் 162 பேர்கள் மூன்றாம் பாரத்திற்குமேல் கற்றவரும், 37 டிரெயிண்டு உபபாத்தியாயர்களும் 22 பேர்கள் தகுந்த கல்வி இல்லாதிருந்தும் விசேஷ அனுமதி பெற்றவர்களும் ஆயிருந்தார்கள். போதுமான யோக்கியதை இல்லாமல் 20 உபாத்தியாயர்களை வருஷ முடிவில் இருந்தார்கள். இப்பொழுது அவர்களுக்குப் பதிலாக யோக்கியதையுள்ளவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அதிசயமான நிலை வருவதற்குப் பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜனரல் மிக்க கிஷ்கருணையாக இருந்ததே பிரதான காரணம். S.S.L.C. ஜயித்தவர்கள் ஸ்திரமாகப் பள்ளிக்கூடங்களில் இருக்கிறார்களில்லை. அதனால் சில பள்ளிக்கூடங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஸ்கூல் பைனல் ஜயித்த வெகு பேர் வேலை ஒன்றுமில்லாமல் இருக்கின்றனர். இவர்களை ஏராளமாக உபாத்தியாயர்களாக நியமிக்கலாமென்று தோன்றுகிறது. தாலூக்கா போர்டார் ஸெகன்டரி கிரேட் டிரெயிண்டு உபாத்தியாயர்களைக்கொண்டு இராத்திரி பாடசாலை ஒன்றை நடத்துகிறார்கள். 86 ஆதித்திராவிட உபாத்தியாயர்கள் இதில் சேர்ந்து படிக்கிறார்கள். இவர்களுக்கு ஹயர் கிரேட் டிரெயினிங் ஆகிறதற்கு இது ஒரு பெரு உதவியாக இருக்கும். இந்த ஜில்லாவில் டிரெயினிங்குக்கு வேண்டிய சௌகரியமில்லாததினால் அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கின்றது.

பள்ளிக்கூடங்களின் ஸ்தல சௌகரியம்.—190 பாடசாலைகளில் 56 பள்ளிக்கூடங்கள் குடிக்கூலி கட்டிடங்களில் இருக்கின்றன. மற்றவைகளெல்லாம் பஞ்சாயத்துக்களால் கட்டப்பட்டிருக்கும் கூரை கட்டிடங்களிலோ அல்லது பக்கா கட்டிடங்களிலோ இருக்கின்றன. மார்ச்சுமீ 31உ வரை ரூ 1000 முதல் 1506 ரூ. வரை விலை பெறுமான 16 பக்கா கட்டிடங்கள் நிர்மிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் மொத்த விலை ரூ 19,000. வேறு 20 பஞ்சாயத்துக்கள் இந்த வருஷத்தில் ரூ. 20,000 பெறுமான கட்டிடங்கள் அமைத்திருக்கின்றன. பஞ்சாயத்து ஆதீனத்திலுள்ள கூரை கட்டிடங்களிலும் போதுமான ஸ்தலம் இருப்ப

தாகவே தெரியவருகிறது. எஸ்டிமேட் செலவில் பாதி பஞ்சாயத்துக்கள் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையை கவர்ன்மெண்டார் ரத்து செய்வார்களானால் சாம் கூடிய சீக்கிரத்தில் எல்லா பஞ்சாயத்துகளும் ஓட்டுக் கட்டிடங்கள் கட்டுவதைக் காணலாம். தாலூக்கா போர்டு தம் எல்லையிலுள்ள பஞ்சாயத்துக்களுக்கு எவ்வாறு பண உதவி செய்யவேண்டுமென்பதை தாமே நிச்சயிப்பதற்கு சம்மதம் பெறவேண்டும். ஆனால் இவ்வாறு செய்தபோதிலும் தாலூக்கா போர்டும் கவர்ன்மெண்டும் மட்டுமே கட்டிடங்களுடைய எஸ்டிமேட் செலவு முழுவதையும் வகிக்கமுடியாது. ரெவினியூ இலாகா அதிகாரிகள் பள்ளிக்கூட கட்டிடங்களுக்காக பிரத்தியேக இடங்களை காலதாமதமின்றி கொடுத்தார்கள். ஜில்லா கல்வி சபையால் இந்த தாலூகா போர்டின் எல்லையிலுள்ள எல்லா பள்ளிக்கூடங்களும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தது முதற்கொண்டு 500 நபர்களுள்ள எல்லா கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. நிர்ப்பந்தக் கல்வி தொடங்குவதற்கு இந்த தாலூகா போர்டு முயற்சித்து வருகின்றது. கல்வி வரியை இதனால் உயர்த்தியே விதித்துள்ளது. குறிப்பிட்ட சில இடங்களில் கட்டாயப்படிப்பு ஏற்படுத்துவதற்குள்ள பிரேரபணைகள் சொல்பகாலத்தில் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்படும். தற்காலத்தில் வழங்கிவரும் சுயேச்சைப் படிப்பில் அதிகமான வீண் செலவு இருப்பது தீரவேண்டுமாகில் மத்திய பாடசாலைகளாலும் கட்டாயப் படிப்பாலும் தான் சாதிக்கும். இவைகள் ஏற்படுத்தவேண்டிய முறைகள் தயாராக்கப்படுகின்றன. கவர்ன்மெண்டார் இப்பொழுது கொடுக்கும் உபாத்தியாயர் உதவிப் பணத்தை தாலூகா போர்டாரிடமோ அல்லது திருத்தப்பெற்ற லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தில் லோக்கல் போர்டு என்று கூறப்பட்டிருக்கும் பஞ்சாயத்துக்களிடமோ ஒப்புவிப்பார்களானால் மிக்க நலமாகும். இவ்வாறு செய்வதால் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களை சீர்திருத்துவதில் ஒரே மாதிரியான திட்டத்தை அனுசரிக்கமுடியும். எல்லா ஜூனியர் பள்ளிக்கூடங்களையும் பஞ்சாயத்துக்களுக்கு விட்டுக் கொடுப்பதும் மத்திய ஹயர் எலிமெண்டரி பாடசாலைகளைமட்டுமே தாலூகா போர்டின் அதிகாரத்தில் வைத்துக்கொண்டிருப்பதுமே நம்முடைய கடைசி நோக்கமாகும். போர்டு பள்ளிக்கூடங்களை மேல்பார்வை செய்வது பஞ்சாயத்துக்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டது. அனேகம் பஞ்சாயத்துக்கள் இந்த பாடசாலைகள் விஷயமாக மிக்க சிரத்தை செலுத்துகின்றன. போர்டு பாடசாலை உபாத்தியாயர்களுக்கு கியாஷுவல் லீவு கொடுப்பது பஞ்சாயத்து பிரசிடெண்டுகளிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் இந்த அதிகாரத்தை நியாயமாகவே உபயோகித்துள்ளார்கள் என்பதைப்பற்றி நான் சந்தோஷமடைகிறேன்.

கவர்ன்மெண்டின் சம்மதத்தின்மேல் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களையும் தாலூகாபோர்டு பள்ளிக்கூடங்களையும் கவனிப்பதற்கு 4 சூபர்வைஸர்களை தாலூகா போர்டார் வேலையில் அமர்த்தியிருக்கிறார்கள். இவர்களில் இரண்டு பேர்களுக்குப் பொது நிதியிலிருந்தும் மற்ற இரண்டு பேர்களுக்கு எலிமெண்டரி கல்வி நிதியிலிருந்தும் சம்பளம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். ஒவ்வொரு சூபர்வைஸர்களின் கீழிலும் பஞ்சாயத்து தாலூகா போர்டைச் சேர்ந்த சராசரி 50 பாடசாலைகள் இருக்கின்றன. இதன்றியும் இன்னும் அனேக விஷயங்களில் பஞ்சாயத்துக்களுக்கு அவர்கள் உதவி புரிந்திருக்கிறார்கள். உதாரணமாக பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான உபாத்தியாயர்களைத் தேடுவது; பள்ளிக்கூடங்களை சர்க்





காரால் சம்மதிக்கச் செய்தல்; பாடசாலைக் கட்டிடங்களுக்கு ஸ்தலம் சம்பாதித்துக் கொடுத்தல்; வரி தீர்மானங்கள் கொண்டுவருவது; வரியல்லாத இதர பண வருமானத் துறைகளைத் தேடுதல்; கிராம சீர்திருத்த மார்க்கங்களைக் காண்பித்துக் கொடுத்தல்; சமூக சமாசாரங்களை கிராமத்தார்களுக்குப் போதித்தல் முதல் போன்றவையாகும். பள்ளிக்கூடங்களை போதுமான நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வருவதிலும், போதனாமுறைகளையும் அதற்கு வேண்டிய சாதனங்களையும் சீர்திருத்தம் செய்வதிலும், உபாத்தியாயர்களுக்குத் தகுந்த சமயங்களில் சம்பளம் கொடுப்பிப்பதிலும் அவர்கள் மிகுந்த சகாயம் செய்திருக்கின்றனர். அவர்கள் சென்ற வருஷம் செய்த வேலை பிரத்தியேகமாக பார்வையிடப்பட்டது. மொத்தமாக அவர்கள் திறமையோடு வேலை செய்தனர் என்றே சொல்லவேண்டும்.

புத்தகசாலை.—அனேகம் பஞ்சாயத்துக்கள் பொருளுதவிக்காக கலெக்டரைக் கேட்டுக்கொண்டன. அதற்கு 300 பஞ்சாயத்துக்களில் 5 பஞ்சாயத்துக்கள் ரூ. 110 மாத்திரமே பெற்றன. எனது அபிப்பிராயம் என்னவென்றால் ஹயர் எலிமெண்டரிபாடசாலைகள் இருக்கும் கிராமங்களிலாவது நல்ல புத்தகசாலைகள் ஸ்தாபிப்பதையே நமது கல்வி அபிவிருத்தி மார்க்கத்தில் முதன்முதலாக கையாளவேண்டும். கல்வி பெறுவது என்பது மனிதனுடைய முடிவான வேலையாக இருக்கமுடியாது. அது அவனுக்கு மற்றொன்றை நாடுவதற்கு சாதகமாகவேதான் இருக்கமுடியும். நமது தற்காலத்திய கல்வி முறையால் ஒரு மாணாக்கன் விசேஷ பயனொன்றும் அடைவதில்லை. மேலும் தாம் ஏற்கெனவே பெற்றகல்வியை அபிவிருத்தி செய்ய புத்தகங்கள் ஒன்றுமே அவர்களுக்கு கிடைக்கிறதில்லை. இந்த பள்ளிக்கூடங்களில் கற்றவர்களுக்கு பிற்காலத்தில் அவர்களின் அறிவைப் புதிப்பிப்பதற்கு ஒரு மார்க்கமும் இல்லாததால் தாங்கள் படித்ததையும் மறந்துவிடுகின்றார். ஆகையால் கவர்ன்மெண்டாரும் தாலூகா போர்டாரும் பிரதான ஸ்தலங்களிலாவது புத்தகசாலைகளை ஏற்படுத்துவது அவசியமென்பதை நான் அவர்களுக்கு எடுத்துக் கூறுவேன்.

சுகாதார ஏற்பாடுகள்.—சுத்த ஜல குளங்களை அசுத்தம் செய்யாமல் இருப்பதற்கு 50 பஞ்சாயத்துக்கள் நோட்டீஸ் போர்டுகள் போட்டிருக்கின்றன. இதனால் அசுத்தம் செய்வதில் சொல்பம் குறைவு வந்திருக்கிறதாக தெரியவருகிறது. இரண்டு பஞ்சாயத்துக்கள் குற்றவாளிகளை கோர்ட்டாரின் முன்பு கொண்டுவந்து அவர்களுக்குத் தண்டனையும் விதிக்கச் செய்திருக்கின்றன. காவற்காரர்களை நியமிக்க 300 ரூ. செலவு செய்யப்பட்டது. ரூ. 17,500 செலவு செய்து 26 குளங்கள் பழுது பார்க்கப்பட்டன. சில பஞ்சாயத்துக்கள் பொது புறம்போக்குகளிலிருந்து சப்பாத்திக்கள்ளியை அழித்தன; 103 பஞ்சாயத்துக்களால் சுகாதார காட்சிகள் நடத்தப்பட்டன; அதற்காக ரூ. 389 செலவு செய்யப்பட்டது.

மரம் நடுதல்.—குறிப்பிட்ட ஒரு தினத்தில் மரங்கள் நடுவதற்காக இந்த தாலூகா போர்டார் ஓர் வேண்டுகோள் எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் அனுப்பினார்கள். அவர்கள் அதற்குச் சந்தோஷமாக இசைந்தார்கள் என்றே கூறவேண்டும். ஏனெனில், 42 பஞ்சாயத்துக்கள் 6000 மரங்கள் நட்டதாக அறிக்கை செய்திருக்கிறார்கள். கிராமாந்தரங்களில் மரம் நடுவதை அபிவிருத்தி செய்ய தாலூகா போர்டார் இளஞ்செடிகளை வளர்க்கும் ஒரு ஆபீஸ் (Nursery) ஏற்படுத்தியிருக்கின்றனர். இதற்கு பிற்பாடு இளஞ்செடிகள் வேண்டுமென்று அனேக பஞ்சாயத்துக்கள்

கேட்கின்றன. இதனால் வருங்காலத்தில் ஏராளமான மரங்கள் நட்டு வளர்க்கப்படுமென்று நிச்சயமாக நம்பலாம். பஞ்சாயத்துக்களுக்கு இது விஷயமாக பெருப் சங்கடம் ஒன்று இருக்கின்றது. என்னவெனில், 19–4–24-ல் பிறப்பித்த G.O. நம்பர் 928, L. & M. பிரகாரம் குளம், பட்டாய்போன்ற புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கலாமென்று விதித்திருந்தும் அவ்வாறு அனேகமாக செய்யப்படவில்லை. சுத்த ஜல குளங்களின் கரைகள் கூட ரெவினியூ அதிகாரிகள்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இக்குளங்களில் நீர் நிற்கும் ஸ்தலமும் அதைச் சுற்றியுள்ள அணையும் மாத்திரமே பஞ்சாயத்தின் அதிகாரத்தில் இருக்கின்றன. இப்பொழுது கிராமங்களில் ஏராளமான புறம்போக்குகள் சப்பாத்திக் கள்ளியால் நிரம்பி இருக்கின்றன. இவை பஞ்சாயத்துக்களுக்கு சொந்த ஸ்தலமென்ற நிலையில் சர்க்கார் விட்டுக் கொடுப்பார்களானால் இந்த ஸ்தலங்களில் பஞ்சாயத்துக்கள் கள்ளியை அழித்து மரங்களை நடுவார்கள். தற்காலம் இந்த ஸ்தலங்களை ஒருத்தரும் கவனிப்பதில்லை. விவசாயி திருட்டுத்தனமாக இந்த இடங்களில் இருக்கும் சில மரங்களைக்கூட வெட்டி வருவதை நாம் காண்கிறோம்.

விளக்குப் போடுதல்.—7 பஞ்சாயத்துக்கள் 78 விளக்குகள் போட்டு அவைகளை வருஷம் முழுதும் காப்பாற்றி வந்தன. இதற்கு 284 ரூ. செலவு செய்யப்பட்டது.

வைத்திய உதவி.—தேசூரில் வைத்தியசாலை ஒன்று அமைப்பதற்காக அவ்வூரிலிருந்தும் சுற்றுமுள்ள பஞ்சாயத்துக்களில் இருந்தும் ரூ. 600 பிரிக்கப்பட்டது. தாலூகா போர்டாரும் இந்த கட்டிடத்திற்காக 2,390 ரூ. அனுமதித்திருக்கிறார். கட்டிடமும் கட்டி முடியலாய் விட்டது. கிராம வைத்தியசாலைகள் இருக்கின்ற இதர பஞ்சாயத்துக்களும் இவ்விதம் பணம் சேகரிக்கின்றன. மார்ச்சு மாதம் 31உக்கு முன்னதாக அவரவர்களுடைய பாக பணத்தை கட்டி விடுவார்கள் என்று நம்புகிறோம்.

சந்தைகள்.—தாலூகா போர்டாரின் அதிகாரத்திலிருந்த சிறு சந்தைகள் எல்லாம் பஞ்சாயத்துக்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

நீர்ப்பாய்ச்சல்.—ஆற்றுக் கால்வாய்களையும் நீர்ப்பாய்ச்சல் சேனல்களையும் பழுது பார்ப்பதற்கு வரி வாங்குவதற்கு பதிலாக குடி மராமத்து வேலையாட்களைக் கொண்டு அவைகளைச் செய்து முடிக்க சில பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜனரலிடமிருந்து அனுமதி பெற்றுக்கொண்டன. நீர்ப்பாய்ச்சல் ஸ்தலங்களில் பஞ்சாயத்தாட்சிக்கு விருப்பம் ஜாஸ்தியாக இருப்பதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் அவைகள் நீர்ப்பாய்ச்சல் சேனல்களை துப்பரவு செய்தற்குள்ள உரிமையை சரியான விதம் நடத்துவதே. திருத்தப்பெற்ற சட்டத்தில் பஞ்சாயத்துக்களிடமிருந்து இந்த உரிமை எடுக்கப்பட்டிருக்கின்றது.

பொது சமாச்சாரம்.—பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜெனரல் இந்த வருஷம் 50 பஞ்சாயத்துக்களைப் பார்வையிட்டார். பொதுவாக அவைகளின் வேலையைப் பற்றி அவர் சந்தோஷமடைந்தார். பஞ்சாயத்துக்களை அமைப்பதுபற்றிய வேலை முழுதும் தாலூகா போர்டு அங்கத்தினரும் யானுமே செய்தோம். தாலூகா போர்டு அங்கத்தினர்கள் அளித்த பெரு உதவிக்கு நான் மனப்பூர்வமாக நன்றி பாராட்டுகிறேன். எனது சிப்பந்திகளும் அவர்களில் முக்கியமாக ஹெட் குமாஸ்தா ம-ா-ா-ஸ்ரீ பாஸ்கர அய்யர் அவர்களும் எனக்குச் செய்திருக்கும் சகாயத்தை இவ்விடத்தில் யான் மெச்சிக் கூறுவேன். ம-ா-ா-ஸ்ரீ பாஸ்கர அய்யர் அவர்கள் பஞ்சாயத்து இயக்கத்தில் ஊக்கமும் உள்ளறிவும் உடையவராயிருந்து இந்த தாலூகாவிலுள்ள பஞ்சாயத்துக்களின் முன்னேற்றத்திற்காக வெகு வேலை செய்திருக்கிறார்.



பலக்குறைவைக் நீக்கி, உங்கள் நரம்புகளையும், மூளையையும், சரீரத்தையும் பலப்படுத்திக்கொள்ள எங்கள் ஆயுர்வேத ரத்ன பண்டிட்
Dr. N.V. ஸ்ரீராமாசார்லுவின் திவ்விய ஔஷதத்தை சாப்பிடுங்கள்

**"ஸித்தகல்ப மகரத்வஜம்"**

(ரிஜிஸ்டர்ட்)

எவ்வளவு கடினமான வியாதியையும் தவறாது கண்டிப்பதிலும், ரத்தத்தை நன்கு சுத்திசெய்வதிலும், நரம்பு தளர்ச்சியை நீக்குவதிலும் பொன்னைப்போல் போற்றத்தக்கதுமான டானிக் மருந்தில் இது சிறந்தது. இச்சஞ்சீவியை தேர்ந்த வைத்தியர்கள் பரிசோதித்து, மனிதர்களின் வாழ் நாட்களை அதிகரிப்பதில் இதைவிட உத்தமமான ஔஷதம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். ஒரு புட்டி மருந்தினால் தேகம் முழுமையும் வீர்யம், வலிமை, ஜீவசக்தி முதலியவை ஏற்படுமென்பது திண்ணம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூ. 10—0—0.

மருந்துகள் உத்திரவாத முள்ளவை. நிவர்த்தி நிச்சயமானது.

**மதறாஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்,**

தபால் பெட்டி 151. (ஸ்தாபனம் 1915) தந்தி விலாஸம்:—"கல்பம்" சென்னை.

மிகவும் நீடித்ததும், சிக்கலானதுமான வியாதிகளுக்கு விசேஷமான மருந்துகள் கொடுக்கப்படும்.

(கேட்லாக், ஏஜன்ஸி விவரம், இனாமாக அனுப்பப்படும்).

மானேஜர்:—வி. ரகுபதி, பி.ஏ., பி.எல்.

90-வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

**அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.**



அநேக மெடல்கள், நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

காரம், மணம், நிறம், குணம், வாடை, உள்ளது.

விலை விபரத்திற்கு எழுதுக:—

ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி, லிமிடெட்.,

தபால் பெட்டி 140, மதராஸ்.

# அறிக்கை.

அநேகம் பஞ்சாயத்துப் பாடசாலைகளில் கீழ்கண்ட பாடபுத்தகங்களை வைத்து நடத்திவருகிறார்கள். எல்லாப் பஞ்சாயத்துப் பிரசிடெண்டுகளையும் தங்கள் பாடசாலைகளில் அடியில்கண்ட புஸ்தகங்களைத் தருவித்து, உபயோகப்படுத்திக் கொள்ள கோரப்படுகிறார்கள். புஸ்தகங்கள், சென்னை, ஜார்ஜ் டவுன், புஸ்தக வியாபாரிகள் பி. ஜி பால் அண்டு கம்பெனியாரிடமிருந்து தருவித்துக்கொள்ளலாம்.

## புஸ்தகங்களின் விபரம்.

| | ரூ. | அ. | ப |
|---|---|---|---|
| **1-ம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. I | | | |
| By A. M. S. இராகவன் B.A., L.T. ... ... | 0 | 2 | 0 |
| கோபால் வாய்ப்பாடு ... ... ... ... | 0 | 1 | 0 |
| **2-ம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. II | | | |
| By A. M. S. இராகவன், B.A., L.T. ... ... | 0 | 3 | 0 |
| கோபால் வாய்ப்பாடு ... ... ... ... | 0 | 1 | 0 |
| **3-ஆம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No III | | | |
| By A. M. S. இராகவன், B.A., L.T. ... ... | 0 | 4 | 0 |
| சிறுமணிக் கதைகள் | | | |
| By S. S. அருணகிரிநாதர் ... ... ... | 0 | 5 | 0 |
| **4-ஆம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. IV | | | |
| By A. M. S. இராகவன், B.A., L.T. ... ... | 0 | 4 | 6 |
| ஸிவிக்ஸ் Part I By S. சுப்பிரமணிய அய்யர், B.A. ... | 0 | 5 | 0 |
| ஆஞ்சநேயர், By ம. குப்புசாமி முதலியார் ... ... | 0 | 5 | 0 |
| **5-ஆம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. V | | | |
| By A. M. S இராகவன், B.A., L.T. ... ... | 0 | 6 | 0 |
| கம்பர் By பண்டிதர் A. N. கன்னையா ... ... | 0 | 5 | 0 |
| ஸிவிக்ஸ் Part II By S. சுப்பிரமணிய அய்யர், B.A. ... | 0 | 6 | 0 |
| இந்து தேச சரித்திரம் | | | |
| By V. ஜயராம அய்யர், B.A., L.T. ... ... | 0 | 5 | 0 |
| சிற்றிலக்கண வினாவிடை | | | |
| By C. R. கோவிந்தராஜ முதலியார் ... ... | 0 | 4 | 0 |

குறிப்பு :—உபாத்தியாயர்கள் மொத்தமாக தருவித்து கொள்ளும் புத்தகங்களுக்கு 100-க்கு 20-0-0 வீதம் கமிஷன் கழித்து கொடுப்பார்கள் என்பதையும் குறிப்பிடப்படுகிறது. மாதிரி புத்தகங்கள் பாதி விலைக்குமட்டும் அனுப்பப்படும். தபால் செலவு வேறு.

*Apply to :—*

**B. G. PAUL & CO.,**


PUBLISHERS,

*2, Francis Joseph Street, Madras.*

# மையர்ஸ் பம்புகள்
# ஜெகப்பிரசித்தி பெற்றவை

**எல்லா வேலைகளுக்கும் இவைகளையே உபயோகியுங்கள்**

கைபம்புகள், விசிறி (ஸ்பிரே) பம்புகள்,
பவர் பம்புகள் முதலியவை எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்




## ஸ்டோவர் எஞ்ஜின்கள்.

*பவர் பம்புகளும் மற்ற மெஷின் பம்புகளையும் ஓட்டுவதற்கும், தங்களுக்கு எக்காரியத்திற்காகப் பம்புகள் வேண்டுமென் பதைப்பற்றியும் விவரமாக எழுதுங்கள். எஸ்டிமேட்டின் :: விவரம் முழுவதும் அனுப்புகிறோம். ::*

இந்தியாவுக்கு சோல் ஏஜண்டுகள் !—

தபாற் பெட்டி 202 } லிமாயி பிரதர்ஸ் லிமிடெட்,
1/173, பிராட்வே, மதராஸ்.



ரியர்.—கனம். ஜி. ஹரிஸர்வோத்தமராவ்-எம்.ஏ.
வர்.—மத்தியக் கூட்டுறவு அச்சு இயந்திரசாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.


1001


இதழ் I. நெ. 8.

ரிஜிஸ்தர் நெ. M. 2623.


30 MAY 1931

# 'கிராமப் பஞ்சாயத்து.'

*மாகாண மாதாந்திரப் பத்திரிகை.*


மே 1931.


*பிரசுரஞ் செய்வோர்.*

**சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,**

ராயப்பேட்டை, சென்னை.

# நன்ஜன்கூடு சத்வைத்திய சாலை கூட்டுவேலை.




ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ்.

## "சத்வைத்தியசாலை." நன்ஜன்கூடு

சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

டானிக்
சியாவனப்
ராசா
ஜீவஸ்ஹிதா
பாலஸ்ஹிதா

I·D·L
CHYAVANPRASH
TONIC

தைலம் :
பிருங்காமலக
அமிர்தாமலக
சந்தனாதி

(குழந்தை கட்டிக்கு, 15 நாள் மருந்து ரூ. 2—0—0).

---

## நஞ்சன்கூடு பல்பொடி

சோல் ஏஜண்டுகள்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

## அடக்கம்.

பக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | பஞ்சாயத்தாட்சியா இந்தியாவுக்கேற்ற ஆட்சி ... ... | 173 |
| 2. | சுய ஆதார கிராம இந்தியா நோக்கம் ... ... | 178 |
| 3. | கூட்டுறவும் விவசாயமும் ... ... ... | 179 |
| 4. | மாட்டு டாக்டருடன் சென்ற பிரயாணத்தின் வரலாறு :— By. Mr. Y. Sankarasubrahmanian ... | 181 |
| 5. | லோக்கல் ஸெல்ப் கவர்ன்மெண்டு க்வார்ட்டர்லி :— பரிசோதனை By G. H. S. ... ... ... | 184 |
| 6. | பஞ்சாயத்து ஜாயிண்டு கமிட்டி ஸ்தாபிப்பதற்கு ஒரு வேண்டுகோள் :— By Mr. T. M. Audikesavalu Naidu ... | 188 |
| 7. | லோக்கல் போர்டுகளைப்பற்றிய குறிப்புகள் ... ... | 190 |
| 8. | விவசாயமே உயிர்த்தொழில் ... ... ... | 194 |
| 9. | விவசாயிகளுக்குத் தெரியவேண்டும் விஷயங்கள் ... ... | 195 |
| 10. | சுய ஆதார கிராம இந்தியா ... ... ... | 196 |


### சந்தா விவரம்.

| | | |
|---|---|---|
| பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு | ரூபாய் | 2. |
| மற்றவர்களுக்கு ... | „ | 3. |
| தனிப்பிரதி ... | அணா | 4. |

30 MAY 1931

### விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,
ராயப்பேட்டை, சென்னை.

---

## 19-வது சென்னை மாகாணக் கூட்டுறவு மகாநாடு.

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,
ராயப்பேட்டை, சென்னை,

அன்புமிக்க ஐயா !

19-வது சென்னை மாகாணக் கூட்டுறவு மகாநாடானது சென்னையில் வருகிற ஜூன்மீ 20, 21 தேதிகளில் கோயமுத்தூர் ம-ா-ா-ஸ்ரீ ராவ் பஹதூர் **T. A** ராமலிங்கம் செட்டியார், B.A., B.L., M.L.C., அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் நடைபெறும்.

ஷை மகாநாட்டிற்கு தங்களுடைய பிரதிநிதி அல்லது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர் (அவர்களுடைய) பெயரையும் (பெயர்களையும்) சரியான விலாஸத்தையும் எமக்குத் தெரிவிக்கவேண்டுமாய்த் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஒவ்வொரு சென்ட்ரல் பாங்கியும், ஜில்லா பெடரேஷனும், லோகல் யூனியனும், லேவாதேவியல்லாத இதர முறைகளை யடுத்த சங்கங்களும், அர்பன் பாங்கிகளும் இரண்டு பிரதிநிதிகள் வீதம் அனுப்பலாம், வரையறுக்கப்படாத கிராமப் பிரதம சங்கங்கள் ஒரு பிரதிநிதி வீதந்தான் அனுப்பலாம்.

தங்கள் விதேயன்,
வி. ராமதாஸ் பந்துலு,
பிரஸிடென்டு.

## பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிரூபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிரூபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிரூபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எத்தேர்ந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.

---


### உ த் த ம தோ ழ ன்.

மூத்திரசம்பந்தமான வியாதிகளால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுத்து பேரும் புகழும் பெற்ற உத்தம தோழன் யாதென்று உங்களுக்குத் தெரியுமா?

அதுவே எங்கள்

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளை நாஸ்தமாகக் கண்டிக்கும்.

[32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1]

இனும்! "போஜன விதி" இனும்!!

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**

26, பிராட்வே, சென்னை.



# கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் 1.] 1931ஞ் மேமீ [இலக்கம் 8.


## பஞ்சாயத்தாட்சியா இந்தியாவுக்கேற்ற ஆட்சி?

தற்காலம் இந்திய தேசிய காங்கிரஸ்ஸானது அரசியல் முறை அமைக்கும் விஷயத்தில் இதர கக்ஷிகளோடும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரோடும் ஒத்துழைக்க சம்மதித்திருக்கின்றது. காங்கிரஸ்ஸின் இந்த திட்டம் பஞ்சாயத்தாட்சிக்கு அனுகூலமாக ஏற்படுகிறது. காங்கிரஸ் பிரசிடெண்டாகவிருந்த பண்டித ஜவாஹர்லால் நேரு கராச்சி காங்கிரஸ் மகாநாட்டில் சாதாரண சர்க்கார் உத்தியோகஸ்தரின் சம்பளம் ரூபாய் 500-க்கு மேற்படக்கூடாதென்ற தீர்மானத்தை ஜனங்களுக்கு பிரசாரம் செய்தபொழுது பஞ்சாயத்தாட்சி முறையின் அவசியத்தை எடுத்துரைத்தார். சமான சம்பத்து வாதம் என்ற கொள்கையில் (communism) அவர் சேர்ந்தவர். ஆதலால் அவர் கூறியுள்ளதை அனேகர் கண்டித்திருக்கிறார்கள். இந்த கண்டனமே இந்தியாவுக்கு வெகு முக்கியமான விஷயமென்ன வென்பதையும் காண்பிக்கிறது. அதென்னவெனின் இராஜ்யத்தில் கடைசி அதிகாரம் பஞ்சாயத்துக்களுக்கும் அவைகளின் பிரதிநிதிகளுக்கும் இருக்கவேண்டுமா; அல்லது, தேர்ந்த உத்தியோகஸ்தர்களால் நடத்தப்பட்ட பொது பரிபாலனத்தின்கீழ் பஞ்சாயத்துக்கள் அவைகளை சம்பந்தித்த சில்லற விஷயங்களை மட்டும் கவனித்து வரவேண்டுமா என்பதேயாம்.

100 வருஷங்களாக உலக முழுவதும் ஜனநாயக ஆட்சி பரவிவந்துள்ளது. முதன்முதலாக ஜனநாயக ஆட்சி என்பது ஒரு இராஜ்யத்திலுள்ள தேச உரிமை பெற்றவர்களில் பெரும்பான்மையோர்களின் பிரதிநிதிகளால் நடத்தப்படும் ஆட்சி என்று கூறப்பட்டிருந்தது. ஆட்சி முறைகள் அனேகமுள்ளதில் ஜனநாயக ஆட்சியை முடிவு ஆட்சி என்று கூறமுடியாது. பண்டைக்கால முதலே ஜனநாயக ஆட்சிக்கு போதுமான திறமையுடன் தேச பரிபாலனத்தை நடத்த சாத்தியமாகாதென்று சிலர் குறைகூறிவந்தனர். தேச முழுவதற்கும் ஜனநாயக முறையை அனுசரித்த ஒரு ஸ்தாபனமிருப்பதால் அந்த ஸ்தாபனத்தில் மெஜாரிட்டி கக்ஷியினரும் சில ஸ்தலங்களின் பிரதிநிதிகளுமே சக்திவாய்ந்தவர்களாவார்கள். இதனால் மைனாரிட்டி கக்ஷியினரின் தேவைகளும், வேறு சில

ஸ்தலங்களின் தேவைகளும் கவனிக்காமல் மெஜாரிட்டி கக்ஷியினரின் சுகங்களும் சில ஸ்தலங்களின் சுகங்களும் கவனித்து வரக்கூடும். இக்குறையை நீக்குவதற்கு ஜனநாயக ஆட்சி, பூரண அதிகாரம் வாய்ந்த ஒரு ஸ்தாபனத்திற்குப் பதிலாக இராஜ்யமெங்கும் ஸ்தல ஸ்தாபனங்களை அமைத்தது. அவைகளுக்கு தம்தம் விஷயங்களை நிர்வகிக்க அதிகாரமும் அளித்தது. ஆதலால் மைனாரிட்டி கக்ஷியினருக்கும், கவனிக்கப்படாத ஸ்தலங்களுக்கும் இருந்த குறைகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டன. ஜர்மனியிலுள்ள கம்யூன்களைப் போன்றதும் ருஷியாவிலுள்ள சோவியட்டுகளைப் போன்றதுமான அதிகாரம் வாய்ந்த ஸ்தல ஸ்தாபனங்கள் சில குடியரசு நாடுகளில் உற்பத்தியாயிருக்கின்றதின் உத்தேசமும் இதுவே. ஜனநாயக ஆட்சி சகலரின் சம்மதத்தையும் பெறவேண்டுமாகில் இவ்விதம் அனேகம் ஸ்தல ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதே தகுந்ததாகும்.

நவீன காலத்தில் ஒவ்வொரு இராஜ்யத்திலும் அதிகாரங்களை எல்லாம் ஒன்றாகத்திரட்டி மத்திய கவர்ன்மெண்டுக்கு கொடுக்கப்படும் ஆட்சி முறை அனுஷ்டிக்கப்படுகின்றது. இது ஜனநாயக ஆட்சியின் இயற்கைக் குறையால் ஏற்பட்டதன்று. இயற்கை ஆராய்ச்சியின் அபிவிருத்தியினாலும் சாமான்களை ஒரோ வீடுகளிலும் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக சில ஆலைகளில் உற்பத்தி செய்வதாலும் ஏற்படுகிற நிலைமைகளே இதற்குப் பிரதான காரணங்களாகும். கைத்தொழில்கள் சில ஸ்தலங்களில் மட்டுமே செய்வதால் அதற்குத் தேவையான ஏராளமான பணமெல்லாம் சிலரே கொடுக்கிறார்கள். ஆதலால் இவர்களின் சக்தி அதிகரிக்க, அதன் பயனாக ஆட்சி முறையிலும் அதிகாரங்களை எல்லாம் ஓரிடத்தில் அமைத்தல் என்ற திட்டமும் உலகமெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. நவீன காலத்து இராஜ்யங்களை பார்வை இடுவோமானால், இவைகள் நன்கு விளங்கும். இவைகளால் அந்த இராஜ்யங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றன. இந்த முறை பிரயோசனமற்றதென்று எல்லோருக்கும் 1914-18-ம் வருஷத்திய மகாயுத்தத்திற்குப் பிறகு தெரியவந்தது. ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை கொடுக்கவும் உத்தியோக வகுப்பினர்களுடைய அதிகாரத்தை குறைப்பதற்கும் எல்லா இராஜ்யங்களிலும் சிரமப்படுகிறார்கள். ஸோஷ்யலிஸம், கம்யூனிஸம் (socialism and communism) என்ற ஆட்சிகள் ஸ்தாபிப்பதின் உத்தேசமும் இது பற்றியே.

சில ஸ்தலங்களில் பொருளுற்பத்தி செய்வது என்ற முறை இந்தியாவில் ஜனங்களின் நலத்திற்காகவே இதுகால் பரவவில்லை. நமது நலத்திற்கோ அல்லது நமது தீமைக்கோ எதற்காக விரும்பினும், இந்திய இராஜ்ய கைத்தொழில்களில் இதர இராஜ்யங்களிலுள்ள குழப்பங்கள் அதிகமாகக் கிடையா. நமது இராஜ்யத்தில் பொருளாதார விஷயமாக





வும், அரசாட்சி விஷயமாகவும் அதிகாரங்களை ஒரு மத்திய ஸ்தாபனத்திற்கு கொடுக்காமலே இராஜ்ய பரிபாலனத்தை நடத்த இன்னும் அவகாசமிருக்கின்றது. ஏனென்றால் ஜனநாயக ஆட்சி இவ்விடத்தில் ஸ்தாபித்ததும், நிர்வாக அதிகாரங்களில் அதிக பாகத்தையும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நாம் பிரித்துக்கொடுத்துவிடலாம். ஸ்தல ஸ்தாபனங்கள் என்று சொல்வது கடைசியாக பஞ்சாயத்துக்களையே குறிப்பிடும். நமது இராஜ்யம் மிகவும் விஸ்தாரமானது; பலவிதமான ஜனங்கள் இவ்விடத்தில் வசிக்கிறார்கள். அவர்களுடைய நோக்கங்களும் பின்னாபின்னமாக இருக்கலாம். ஆகையால் ஒரு சமயத்திலும் அதிகாரமனைத்தையும் மத்திய ஸ்தாபனம் வகிப்பது என்பது இவ்விடத்தில் ஏற்படாது. பிரிட்டிஷ் உத்தியோக வகுப்பினர்களின் ஆட்சிகாலத்தில்கூட அதிகாரங்களை ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பிரித்துக்கொடுக்கவேண்டுமென்று அனேகர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கும் கால் நாம் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகாரங்களைக் கொடுத்து, அரசாட்சியை நன்றாக நடத்தலாம். அவைகளுக்கு சரியான கடைக்காலை அமைத்து தற்பொழுது இந்திய நாட்டினருக்கும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் சமரஸ ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. இத்தருணத்தை தவறிவிடுவோமாகில் மேனாட்டில் ஜனநாயக ஆட்சி எவ்விதம் சீர்கெட்டதாய் முடிந்திருக்கோ அதுபோலவே நமது நாட்டிலும் அது சீர்குறைந்துவிடும். ஸ்தல ஸ்தாபனங்களால் உண்மையான ஜனநாயக ஆட்சியை நமது இராஜ்யத்தில் ஸ்தாபிப்பதற்கு நமக்கு ஒரு விசேஷ சௌகரியம் இருக்கின்றது. இதர தேசத்தினரைப்போல் அனாவசிய வழக்கங்களொன்றும் நம்மிடம் அவைகளை ஒழிக்கமுடியாவண்ணம் அவ்வளவு திடமாக ஊன்றவில்லை. அதனால் மிதமான வாழ்வை நடத்த நாம் சக்தியுடையவராக இருக்கின்றோம். இந்த தத்வம் கதரின் பிரசாரத்தை கவனித்தாலே தெளிவாகின்றது. நம்முடைய சொந்த வழிகளிலேயே பரிபாலனம் செய்ய நமக்கு சுதந்திரம் கிடைக்குமானால் 35 கோடி ஜனங்களடங்கிய பரந்துகிடக்கும் பாரத நாடு முழுவதையும் சரியான ஜனநாயக முறைப்படி பரிபாலனம் செய்து உலகமனைத்திற்கும் அதை உதாரணமாக எடுத்துக் காட்டுவோம் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவின் பண்டைக்கால சரித்திரத்தை ஆராயுங்கால், பஞ்சாயத்தாட்சிக்கு நமது நாட்டில் இடமிருக்கிறதென்பது நன்கு விளங்கும். முற்காலத்தில் அனேக சதவருஷங்களாக பஞ்சாயத்துக்களே நமது இராஜ்யத்தை ஆண்டு வந்தனவென்றும், மத்திய கவர்ன்மெண்டார் ஜனங்களை பாதுகாப்பதும் அதற்கு வேண்டிய வருமானத்தை வசூலிப்பதும் மாத்திரமே செய்து வந்தார்களென்றும் பிரிட்டிஷ் பிரமாணிகர்களே கூறுகிறார்கள். ஆனால் எக்காலத்திலாவது மத்திய கவர்ன்மெண்டு பஞ்சாயத்துக்களின் பிரதிநிதிகளால் அமைக்கப்பட்டதென்றோ, அந்த கவர்ன்மெண்டார்களின் வேலைகள் இப்பொழுதுள்ள கவர்ன்மெண்டாரின் வேலைகளைப்போல பிரயாசமானதென்றோ நாம் கூறப்போவதில்லை. ஆனால் பண்டைக் காலத்திய சுயாதிபத்தியத்தையும் நவீன காலத்திய உத்தியோக ஆட்சியையும் போக்கடித்து உண்மையான ஜனநாயக அரசாங்கம் ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருப்பின், அது நிச்சயமாகவும் சாதிக்கலாம். அந்த மத்திய கவர்ன்மெண்டில் ஸ்தல

ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் இருக்கவேண்டும். அவர்கள் அகில இந்திய சமாசாரங்களை கவனிக்கவேண்டும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு அனேகம் குற்றம் குறைவுகள் இருந்தபோதிலும், அது இந்த 150 வருஷ காலத்தில் இந்திய ஜனங்களில் தேசிய உணர்ச்சியை எழுப்பி இருக்கிறது. அதனால் மேல்குறிப்பிட்டதுபோன்ற ஜனங்களுக்கு ஜவாப்தாரியான மத்திய கவர்ன்மெண்டு ஒன்றை ஸ்தாபித்து அது அகில இந்திய விஷயங்களை கவனிக்கும்படி செய்வது அசாத்தியமன்று.

தேசிய பொருளாதார அபிவிருத்தியை கவனிக்குமளவிலும் பஞ்சாயத்தாட்சி ஒன்றே நல்ல ஆட்சியாக ஓங்குமென்று விளங்குகிறது. இந்திய ஜனங்களின் தாரித்திரியம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவர்களின் தாரித்திரியமானது உணவிற்கும் உடுதுணிக்குமன்று. கிராமத்தார்கள் இன்று மனம் வைப்பார்களானால், அதிக பிரயாசமின்றி இவைகள் அவர்களுக்குக் கிடைக்கும். ஏனென்றால் இப்பொருள்கள் கிராமங்களிலேயே உற்பத்தியாகின்றன. அவனுக்கு வேண்டிய சுகப்பொருள்கள்கூட கொடுப்பதற்கும் விசேஷ தடைகள் இல்லை. சரியான விதம் பணவருமானமுள்ள கூட்டுறவு சங்கங்களை நமது இராஜ்யத்தில் ஸ்தாபிக்கப்படும் ஜனநாயக கவர்ன்மெண்டு கவனிக்குமாகில் அவனுக்கு சுகப்பொருள்கள்கூட கிடைக்கும். நமது தற்கால வறுமையின் காரணமென்னவெனின் நாம் இச்சித்த வாழ்வை நடத்தவும் நமக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யவும் நமது அவசியத்திற்கியல்பான நாணயச் செலவாணி முறையை அனுசரிக்கவும், நமது இராஜ்யத்தை காப்பாற்ற நமது நாட்டினர்களுக்கு இராணுவப் பயிர்ச்சி அளிக்கவும், இராணுவத்திற்காக கொடுக்கப்படும் அன்னியாயச் செலவை நிறுத்தவும், அயல் நாட்டு சாமான்களின் இறக்கு மதியை நிர்ணயிக்கவும், கடைசியாக நம்மையே நாம் அரசாளவும், சுதந்திர மற்றவர்களாக இருக்கிறோமென்பதே. நமது புராதன நாகரிகத்தை நவீனகால வாழ்விற்கிசைத்து அதன்படி நமது பிரச்னைகளை முடிவுசெய்ய நாம் சுதந்திரம் பெற்றிருப்பின், பஞ்சாயத்துக்களை நாடெங்கும் ஸ்தாபித்து ருஷியாவிலுள்ள சோவியட்டுகளையும், ஜர்மனியிலுள்ள கம்யூன்களையும்விட மிகச் சிறப்புற்றதும் ஜன நலத்திற்கேற்றதுமான ஆட்சி முறையை நமது நாட்டில் நாம் ஏற்படுத்தலாம் என்று கூறுவது மிகையாகாது. ஏனென்றால் ஜனநாயக ஆட்சி பண்டைக்கால முதலே நமக்கு இயற்கையாகும். மேலும் நமக்கு அவசியமானவைகளை வரும்படிக்குத் தகுந்தவாறு கூடுதல் குறைவு செய்வது நமது சுபாவமாகும். இதன்றியும் பொருளாதார விஷயங்களை நல்வழியில் நடத்த நமக்குத் திறமையுண்டு.

இதற்கு அத்தாட்சியும் வேண்டுமா? உப்புவரி, குடி இவை இரண்டையும் ஒழித்ததும், குறைந்த சம்பளத்தில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் அடங்கியதுமான எளியவனுக்கு ஏற்ற அரசாட்சி முறையை நாம் ஏற்படுத்தமுடியுமென்று மகாத்மா காந்தி கூறுவது சொற்பனமன்று. ஜனநாயக ஆட்சி முறையை கைப்பற்றும் பழைய சுபாவமானது நம்மிடத்தில் குடிகொண்டிருக்குமளவும், பஞ்சாயத்தாட்சியே இந்திய வாழ்விற்கு அஸ்திவாரமாக இருக்குமளவும் இது சொற்பனமாகப் போகாது.

சமீபத்தில் ஐரோப்பிய சங்கத்தின் பிரசார பிரதிகாரியஸ்தரான மிஸ்டர் சாப்மன் மார்டிமர் உதகமண்டலத்தில் ஒரு பிரசங்கம் செய்





தார். சிறுபான்மையோர்களுக்கும், பட்டணவாசிகளல்லாத கோடிக்கணக்கான கிராமவாசிகளுக்கும் திருப்திகரமான அரசியல் அமைப்பே இந்தியாவில் சமாதானத்தை ஸ்தாபிக்கும் என்று அவர் அபிப்பிராயப்பட்டார். அவருடைய இந்நோக்கம் பயனடையவேண்டுமானால் பஞ்சாயத்தாட்சியாலயே இது சாதிக்குமென்று அவரை நாம் அறிவித்துக்கொள்ளுகிறோம். இந்த குழப்பங்களை நீக்குவதில் பிரிட்டிஷ் ஜனநாயக ஆட்சிக்கும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் உதவியோடுகூடிய இந்திய உத்தியோகஸ்தர்களுக்கும் முடியவில்லை. இந்தியரால மட்டும் அமைந்த உத்தியோக வகுப்பினர் ஸ்தாபிக்கப்பட்டாலும் அவர்களுடைய சிரமமும் இவர்களின் தோல்வியிலும் மிகவும் கேவலமாகவே முடியும். பஞ்சாயத்தாட்சி ஸ்தாபிக்கப்பட்டால் இப்பொழுது எந்த புத்திசாலியாலும் தீர்க்கமுடியாத வகுப்பினர்களின் சச்சரவு உடனே ஒழிந்துவிடும். ஏனென்றால் சுய ஆகார கிராமத்திலுள்ள ஜனங்கள் இத்தர்க்கங்களை ஒரு நொடிப்பொழுதில் நீக்கிவிடுவார்கள். வாழ்விலும் சாவிலும் ஒரு ஸ்தலத்திலேயே வசிக்க நேர்ந்திருக்கும் ஜனங்கள் அவர்களுக்குப் பொதுவாகவுள்ள சமாசாரங்களில் மிகவும் சிரத்தை செலுத்த வேண்டியதால் பிரயோசனமற்ற இத்தர்க்கங்களை மறந்துவிடுவார்கள். கிராமத்தான் கேட்பதும் தனக்குச் சுதந்திரம் கொடுக்கவேண்டுமென்று மாத்திரமே. படித்த இந்திய நகரவாசியோ, அவனை பறிமுதல் செய்யும் அன்னிய நாட்டு மனிதனோ, அல்லது அன்னிய நாட்டு உத்தியோகஸ்தனோ யாரானாலும் சரி, கிராமத்தானின் விஷயங்களில் தலையிடுவார்களானால் அவர்களை அவன் கட்டாயமாக வெறுக்கிறான். இவரெல்லோரும் உண்மையில் கிராமத்தாரின் வேலைக்காரர்களாக இருக்கவேண்டும். அவர்களுடைய பிரதிநிதிகளின் நிர்வாக திட்டங்களை சரிவா நடத்துவதே இவர்களின் கடமை. அரசியல் அமைப்பு சீர்திருத்தங்களின் நோக்கமும், கிராமத்தானுக்கு அவனை சம்பந்தித்த விஷயங்களை அவன் மனம்போல் செய்வதற்கு பூர்ண சுதந்திரம் கொடுப்பதற்காக வேண்டும். அப்பூர்ண சுதந்திரம் கிராமாந்தரங்களில் அடிப்படி ஸ்தாபனங்களான பஞ்சாயத்துக்களுக்கே கொடுக்கப்படவேண்டும்.

இராஜ்யமெங்கும் இப்பொழுது பஞ்சாயத்துக்களை ஏற்படுத்துவதைப்பற்றி நவீன காலத்திற்கனுசரித்த அரசாங்கக் கொள்கைளையுடைய அறிஞர்கள் என்ன குற்றம் கூறினாலும் ஜனங்களின் நலத்தைக் கருதி ஜனங்களாலேயே நடத்தப்படும் சரியான ஜனநாயக ஆட்சி முறையை நாம் காலக்கிரமத்தில் ஏற்படுத்தவேண்டுமானால் அதற்கு நாடெங்கும் பஞ்சாயத்து ஸ்தாபனங்களே சாதனமாகும். இதற்கு இடையூறுகள் ஏற்படினும் அவைகளையெல்லாம் நாம் நீக்கவேண்டும். இந்த இடையூறுகளைக் கண்டு பயப்படுவது சற்றும் சரியன்று. ஜனநாயக ஆட்சியானது கிரமமாக வளருங்கால் ஜனப்பிரதிநிதிகளின் ஆலோசனை வேலைகளைவிட நிர்வாக வேலைகளே பிரதானத்தைப் பெற்றுள்ளனவென்பதையும், நிர்வாக வேலைகள் அதிகரித்து வந்திருப்பதையும் கவனிப்போமாகில், அரசாங்க தத்துவ நிபுணர்களின் கொள்கை எவ்விதமிருந்தாலும் பஞ்சாயத்தாட்சி நாடெங்கும் ஸ்தாபிப்பதால் ஜனங்களின் நலமே அதிகரிக்குமென்று நாம் சற்றும் சந்தேகமில்லாமல் கூறுவோம்.

## சுய ஆதார கிராம இந்தியா நோக்கம்.

கனம் திவான் பஹதூர் முனிசாமி நாயுடு அவர்கள் சித்தூர் ஜில்லாவிலுள்ள ஸ்ரீராமபுரத்து ஜனங்களின் நல்வரவுக்கு மறுமொழி கூறியபொழுது, சுய ஆதார கிராம இந்தியா எத்தகையதாக இருக்கவேண்டுமென்பதைக் குறித்து தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். நமது முதல் குறிப்பை எழுதியபொழுது நாம் இதை உணர்ந்திருந்தோம். அவருடைய பிரசங்கத்தின் ஒரு பாகத்தை இப்பத்திரிகையில் 196-வது பக்கத்தில் நாம் பிரசுரித்துள்ளோம். பிரதம மந்திரியின் கொள்கையை அறியும்பொருட்டு அந்த பாகத்தை இதை வாசிப்போரெல்லோரும் கவனிக்கவேண்டும். அந்த பிரசங்கத்திலிருந்து கிராம இந்தியாவின் சுய ஆதாரத்தைக் குறித்து பிரதம மந்திரியின் நோக்கமானது சம்பூர்ணமல்லவென்று நாம் எடுத்துக் கூறுவோம். அவை அவருடைய நோக்கத்தின் ஒரு அம்சம் மாத்திரம் தானாகும். கிராமத்திற்கு பக்கா ரோடு ஒன்று அமைத்து அதை பிரதான ரோடோடு சேர்ப்பதாலும், ஆஸ்பத்திரி ஒன்றும் பள்ளிக்கூடமொன்றும் ஸ்தாபிப்பதாலும் கிராமம், சுய ஆதாரமுடையதாகாது. மிஸ்டர் முனிசாமி நாயுடு இம்மாதிரி விஷயங்களை கவனிக்கும் இலாகாவுக்கு அதிகாரியானதால் அவைகளைப்பற்றி இவ்வாறு கூறியது முறையே. மேற்கூறியவைகளை உதாரணமாகவே கூறினார் என்று நாம் நிச்சயமாக நினைக்கின்றோம். 1930ஸு திருத்தப்பெற்ற லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தை ஆராயுங்கால், கிராம ஆட்சி சம்பந்தமான சகல விஷயங்களையும் கிராமப் பஞ்சாயத்திடம் கொடுத்துவிடலாம் என்பதற்கு விதிகள் இருக்கின்றன. ஆனால் நமது இராஜ்யத்திய ஸ்தல ஸ்தாபனங்களுக்கு (தற்பொழுது பஞ்சாயத்துக்களும் இவையில் அடங்கியுள்ளன) இயல்பாக அதிகாரமொன்றும் கிடையாது. அவைகள் சட்ட சபையால் குறிப்பிட்ட வேலைகளை குறிப்பிட்ட வருமானத்தைக்கொண்டு நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டவைகள். இவ்விதமாயினும் பஞ்சாயத்து சம்பந்தமான இச்சட்ட விதிகள் பஞ்சாயத்துக்களுக்கு ஏராளமான அதிகாரங்களை கொடுக்க இடம் கொடுக்கின்றன. இதனால் வருங்காலத்தில் பஞ்சாயத்தாட்சி சிறப்புற்று வாழலாம். நம் தாய் நாட்டிற்குச் சுயராஜ்யம் சித்திப்பதற்கு முன்னதாகவே ஆட்சி முறையின் அடிப்படி ஸ்தாபனமாகப் பஞ்சாயத்தை கருதி நாம் அதை ஸ்தாபித்திருக்கிறோம். திவான் பஹதூர் முனிசாமி நாயுடுபோல் பெரும் பதவியில் இருப்பவர்கள் லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தில் பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கலாமென்று கூறப்பட்டிருக்கும் சகல அதிகாரங்களையுமாவது சம்பாதித்துக் கொடுப்பதற்கு சிரமப்படவேண்டும்.

இவ்விதம் வேண்டிக்கொள்ளும்பொழுது கிடக்கும் தடைகளை நாம் கவனிக்கவில்லையென்று சொல்லமுடியாது. முன்னேற்ற இலாகாவில் வெகு பிரதானமான நீர்ப்பாய்ச்சலை கவனிப்போமாகில், சற்றேனும் அதிகாரங்களை விட்டுக்கொடுக்க மனமில்லாததும் ஜனங்களின் நலத்தை அவர்களின் அபிப்பிராயப்படி கவனிக்காததுமான உத்தியோகஸ்தரின்கீழ் அது இருக்கின்றது. இவர்களின் மனம் இரங்குவது எளிதில் சாத்தியமன்று என்று நாம் நன்குணர்வோம். எனினும், காலம் மாறியிருப்பதால் சக்தி வாய்ந்த மந்திரிகள் இந்த உத்தியோகஸ்தர்களோடு தமது கோரிக்கைகளை தைரியமாக கூறுவார்களானால் அவர்கள் மறுக்கமாட்டார்கள். சுயாதார கிராம இந்தியா எவ்விதம் இருக்கவேண்டும் என்பதை நாம் சென்ற குறிப்பில் தெளிவாக ,எடுத்துக் கூறினோம். இந்தியாவின் இராஜாங்க நலம் கிராமப் பஞ்சாயத்து ஆட்சியையே பொறுத்திருக்கிறதென்பது நமது பலமான கொள்கை. இதோடு திவான் பஹதூர் முனிசாமி நாயுடுவும் இசைவாரென்று நாம் நிச்சயமாகக் கூறுவோம். ஒரோ கிராமத்திலும் ஒரோ பஞ்சாயத்து ஸ்தாபிக்கவேண்டுமென்றும் அப்பஞ்சாயத்து அந்த கிராமத்தின் நலத்தை பாதுகாக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரிடமிருந்து கிராமத்தானின் கஷ்ட நிவாரணத்திற்காக





வேண்டியவைகளை அது பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அவர் ஸ்ரீராமபுரத்து பிரசங்கத்தில் கூறினார். இந்த வார்த்தைகளை எல்லோரும் கவனிப்பாராக.

### கூட்டுறவும் விவசாயமும்.

கூட்டுறவுக்கும் விவசாயத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறதென்பதை எல்லோரும் கவனிப்பதுபற்றி நாம் சந்தோஷப்படுகிறோம். சென்ற ஏப்ரல்மீ 25வ தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள நீடாமங்கலத்தில் கூட்டுறவு விவசாய மகாநாடொன்று ம-ா-ா-ஸ்ரீ V. ராமதாஸ் பந்துலுகாருவின் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது அவர் சில பிரதான தத்துவங்களை எடுத்துரைத்தார். கூட்டுறவு மட்டுமே விவசாயியின் எல்லா கஷ்டங்களையும் நீக்கிவிடாதென்பது அவருடைய கருத்து. அவன் கஷ்டங்கள் வேரோடு ஒழியவேண்டுமாகில், திருப்திகரமான நில உரிமையும் நில வரி திட்டமும் வெகு அவசியம். ஏனென்றால் அப்பொழுது மாத்திரம்தான் விவசாயிக்கு தனது நிலங்களில் முதற்பணம் செலவு செய்து அவைகளை சீர்திருத்தவும், புதிய வழிகளில் பயிர் செய்யவும் உற்சாகமுண்டாகும் அவருடைய இந்த அபிப்பிராயம் சரியானதென்று நமக்குத் தோன்றுகிறது. இந்திய சாகுபடி சாமான்களை சரியானவிதம் விற்பனை செய்வதற்கு அனேக தடைகள் இருக்கின்றன. உதாரணமாக கோதுமைபேரிலும் எண்ணை விதைகள்பேரிலும் சுமர்தப்பட்டிருக்கிற ரயில்வே போக்கு வரத்து கட்டணத்தை கவனிப்போம். ஆஸ்திரேலியாவிலிருந்து கல்கத்தாவுக்கு ஒரு மணங்கு கோதுமை கப்பலில் கொண்டுவருவதற்குக் கட்டணம் 6 அணா மாத்திரம் தான். ஆனால் பஞ்சாபில் லயல்பூர் என்ற ஸ்தலத்திலிருந்து கல்கத்தாவுக்கு ஒரு மணங்கு கோதுமை மேல் ரூ. 1-3-3 ரயில்வே போக்கு வரத்து கட்டணம் இடப்பட்டிருக்கிறது. மிஸ்டர் V. ராமதாஸ் பந்துலு அவருடைய பிரசங்கத்தில் இந்தியா எண்ணை விதைகளை ஏற்றுமதி செய்வதால் கணக்கிடக்கூடாத உரத்தை இழந்து நஷ்டமடைகிறதென்பதையும் இதனால் விவசாயியின் நிலத்திற்குப் போதுமான உரம் கிடைக்காமல் போவதையும் எடுத்துரைத்தார். துறைமுகப் பட்டணங்களில் பொடிக்கப்படுகிற எலும்புகள் வெளி நாடுகளுக்கு உடனே அனுப்பப்படுகின்றன. விலைபெற்ற இந்த உர வஸ்துக்களை இழந்துவிட்டு இதர ராஜ்யங்களிலிருந்து அதிகப் பிரயோசனமில்லாத செயற்கை உரங்கள் ஏராளமாக வரவழைக்கப்படுகின்றன. நமது விவசாயி இதைப்போன்ற அனேக கஷ்டங்கள் அனுபவிக்கிறான். மிஸ்டர் V. ராமதாஸ் பந்துலுவின் அபிப்பிராயமென்னவெனில், இந்தியரல்லாத இதர தேசீய விவசாய டயரக்டர்களால் இந்திய விவசாய திட்டமொன்று கையாளுவது சாத்தியமன்று. நமது மாகாண விவசாய டயரக்டரின் 1929-30ஸுத்திய விவசாய இலாகா வேலை யதாஸ்தில் கூறியிருக்கும் சில அபிப்பிராயங்களை இதை உதாகரிக்க அவர் சுட்டிக் காண்பிக்கிறார். விவசாய அபிவிருத்தி விஷயத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு இருக்கும் கஷ்டங்களையெல்லாம் அவர் நன்குணர்ந்துள்ளார். ஆனால் இவைகளுக்காக அவர் சற்றும் பயப்படுகிறதில்லை விவசாயி முன்னேற்றமடையவேண்டுமானால் அவனுடைய சாகுபடி சாமான்களுக்குத் தகுந்த விலை கிடைப்பதற்கும், அவனுடைய சொற்ப விவசாய வருமானத்தை அதிகரிப்பதற்கான உபத்தொழில்களை ஸ்தாபிப்பதற்கும் வேண்டிய பிரயத்தனம் செய்யவேண்டுமென்பது அவருடைய கொள்கை. ஆதலால், தற்காலத்தில் மிக்க பிரதானமான இரண்டு விஷயங்களை அதாவது, சாகுபடி சாமான் விற்பனை, குடிசைக் கைத்தொழில் இவைகளைப்பற்றியும் அவர் அந்த மகாநாட்டில் பிரசங்கம் செய்திருக்கிறார். நமது சாமான் விற்பனை முறைகளை முற்றிலும் வெகு சீக்கிரத்தில் மாற்றவேண்டும். இதற்கு அனேகம் தடைகள் இருக்கின்றன. அவைகளில் சில என்னவென்றால் :—

கிராமங்களில் நல்ல ரஸ்தாக்களில்லாததால் போக்குவரத்துக்குள்ள பிரயாசம் ; சாமான்களை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்குக் கொண்டுபோவதற்குள்ள

சிரமம்; களஞ்சியங்களில்லாமை; சாமான்களை தரம் பிரிப்பதும், அவைகளை விற்பனைக்கு தயார் செய்யவுமுள்ள வழிகள் விவசாயிக்கு தெரியாதது; சாமான்களை ஈரமாக்குவதும் அதிகரிப்பதற்காக சிலர் அவைகளை கலப்பாக்குவதும்; நிறைகளும், அளவுகளும் சரியான விதமில்லாதது; ஆனால் இந்த கஷ்டங்களெல்லாம் இருப்பதை விசாரித்து நாம் முயற்சியில் சற்றும் பின் வாங்கக்கூடாது. விற்பனை செய்வதற்கு எதிராகவுள்ள மேல் குறிப்பிட்ட இந்த தடைகள் எல்லாவற்றைக் காட்டிலும் பிரதானமான தடை என்னவெனின், விவசாயிக்கு ஏராளமான பணம் இல்லாமையே. ஆனால் கிராம கூட்டுறவு சங்கங்களின் பண வருமான நிலைமையோ போதுமான திருப்திகரமாக யிருக்கவில்லை. விவசாயத்திற்கும் அதை சம்பந்தித்த கைத்தொழில்களுக்கும் பண உதவி செய்யவேண்டுமென்பது தமது கடமையென்று கூட்டுறவு சங்கங்கள் இன்னும் கருதவில்லை. விவசாயிக்கு வருஷா வருஷம் தேவையான பண உதவிக்கு கூடிய சீக்கிரத்தில் வழி கண்டு பிடிக்கவேண்டும். இவ் விஷயத்தில் கவர்ன்மெண்டின் அமார்த்தத்தைக் குறித்து அவர் ஒரு உதாரணம் கூறுகிறார். துணி உபதேச கமிட்டி (Textile Advisory Committee) முடிவு தீர்மானங்களில் நெசவுக்காரர்களுக்கு ஆரம்ப சங்கங்களும் (Primary Societies) ஒரு பாங்கியும் ஆரம்ப சங்கங்களை சகாயிப்பதற்கு ஒரு மத்திய சங்கமும் ஏற்படுத்த வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு சங்கங்களின் ரெஜிஸ்டிரார் இவைகளை அனுசரித்த சில தீர்மானங்களை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியும் அவர்கள் ஒன்றுமே இதுகால் செய்யவில்லை. மேலும் இப்பொழுதுள்ள மந்திரிகள் கூட கூட்டுறவு சங்கங்கள் எதுவரை அபிவிருத்தி செய்யக்கூடாது என்ற ஆர்டரை ரத்து செய்ய சக்தியில்லாமலிருப்பதையும் அவர் உதாரணமாகக் கூறுகிறார். மிஸ்டர் ராமதாஸ் பந்துலு நமது மாகாண உத்தியோகஸ்தர்கள் குடிசை கைத்தொழிலுக்கு சொற்பமேனும் சகாயம் செய்யமாட்டார்கள் என்ற உண்மையான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார். நமது இராஜ்யத்தில் இதுவரை பிழைத்திருக்கிற கைத்தொழில்களுக்கு புனர்ஜீவன் கொடுக்கலாமென்று அவர் பலமாக நம்புகிறார். ஆனால் அதற்கு தேசீய கைத்தொழில் திட்டத்தை அரசாங்கத்தார் கையாளவேண்டும். நமது இராஜ்யத்திலுள்ள கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கும், விவசாயிக்கு உதவி வருமானத் துறைகளை ஏற்படுத்துவதற்கும், அன்னிய நாட்டினரின் போட்டியை எதிர்ப்பதற்கும் தேசீய விவசாய திட்டமென்ற ஒரு வழியால்மட்டுமே சாதிக்குமென்று நமக்கும் தோன்றுகிறது. தேசீய கைத்தொழில் திட்டமென்று அவர் கூறியது இந்திய கைத்தொழில்களை சகாயிப்பதற்கு ஒரு சங்கமும், ரயில்வே போக்குவரத்து கட்டணம், இன்ஷியூரன்ஸ் செலவு முதல் போன்றவைகளை குறைத்து கூட்டுறவு விற்பனை ஏற்பாடுகள் செய்வதுமாகுமென்று நாம் கருதுகிறோம்.

கூட்டுறவு மகாநாட்டில் விவசாயத்தையும் ஆலோசனை செய்வதென்ற இந்த புது முறையைக் கொண்டுவந்ததற்கு, சீடாமங்கலம் கூட்டுறவு விவசாய மகாநாடு நடத்த நிச்சயித்தவர்களையும், மிஸ்டர் ராமதாஸ் பந்துலுவையும் நாம் மெச்சுகிறோம். இந்த வழியை இதர தேச ஊழியர்களும் அனுசரிப்பாராக. நமக்கு எதிராக உலகமெங்கும் சாகுபடி சாமான விற்பனையில் பலமான போட்டி இருக்கின்றது. கொஞ்ச காலத்திற்கு முன்னதாக நம் நாட்டைப்போலவே மிகவும் கேவலமான வறுமை ஸ்திதியிலிருந்த ருஷியா ராஜ்யம் கூட தற்பொழுது விவசாயத்தில் வெகு முன்னேற்றமடைந்திருக்கின்றது. அதிக காலதாமதமன்றி நம்மோடு போட்டி போடக்கூடவும் அது வந்துவிடலாம். நமது விவசாயியின் நலத்தைக் கருதுகிற நாமெல்லோரும் சரியான விதம் நமது கடமைகளை உணர்ந்து ஒன்று சேர்ந்து நமது விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்.



## மாட்டு டாக்டருடன் சென்ற பிரயாணத்தின் வரலாறு.

By. Mr. Y. Sankarasubrahmanian.

சில தினங்களுக்கு முன் சென்னை பட்டணத்திற்கு சமீபத்திலுள்ள ஓர் கிராமத்திற்குப் போக எனக்கு சௌகரியம் கிடைத்தது. அப்பொழுது சில புதுமையான விஷயங்களை அறியலானேன். அவைகள் கிராம புனருத்தாரண தொண்டர்களுக்கு ஏதாவது பயனை அளிக்கலாமென்ற எண்ணத்துடன் அவைகளைப் பற்றி இவ்விடத்தில் எழுதுகிறேன்.

மாட்டு டாக்டர் ஒருவர் எனது நண்பர். சமீப கிராம மொன்றில் மாடுகளுக்கு தொத்து வியாதி வந்திருப்பதாக அவருக்கு சமாசாரம் தெரிந்தது. போகும் பொழுது அவர் என்னையும் அழைத்தார். கிராமத்திற்கு போவதென்றால் எனக்கு வெகு உற்சாகம். கிராமவாசிகள் பட்டணவாசம் வெகு சுகமென்று நினைக்கிறார்கள். ஆராய்ந்து பார்க்குங்கால் அது அவ்வாறு எண்ணத்தக்கதல்லவென்று யான் கூறுவேன். சொற்ப நேரமாவது கிராமத்திலுள்ள சுகமான காற்று கொள்ளவும் சுத்த ஜலத்தை அருந்தவும், வறுமை நிலைமையிலிருந்த போதிலும் மன திருப்தியையும் சந்தோஷத்தையும் அடைகிற கிராமத்தார்களைக் கண்டு அவர்களிடமிருந்து அறிவு சம்பாதிக்கவும் நான் எனது நண்பரோடு போக இசைந்தேன்.

எனது நண்பரும் புதிதாக வேலையில் அமர்ந்துள்ளவர். இந்த கிராமத்திற்கு முன்னதாகப் போகாதவர். மத்தியான உணவுக்காக கொஞ்சம் சாதத்தை கட்டி எடுத்துக்கொண்டு நாங்கள் இருவரும் சைக்கில்களில் காலையில் புறப்பட்டோம். பிரதான ரஸ்தாவழி சொற்பநேரம் சென்றதும், எங்களுக்கு ஒரு சிறு ரஸ்தாவில் திரும்ப வேண்டி வந்தது. அவ்விடத்திலிருந்த சிலரைக் கேட்டதில் கிராமத்திற்கு இன்னும் இரண்டு மைல்தூரம் தானுண்டென்றும் நாங்கள் சிறு ரஸ்தா வழியாகவே போக வேண்டுமென்றும் அவர்கள் கூறினார்கள். நாங்களும் சந்தோஷத்தோடு சீக்கிரமாக சைக்கிலை ஓட்டினோம்.

ஆனால் சிறிது தூரம் சென்றதும் அந்த சிறு ரஸ்தாவானது ஒற்றை வண்டிப் பாதையாய்விட்டது. இரண்டு பக்கங்களிலும் சப்பாத்திக் கள்ளிகள் அடர்ந்து வளர்ந்திருந்தன. அவைகளுக்கிடையே செல்வது வெகு கஷ்டமாக இருந்தது. பட்டணத்து வழவழப்பான டார் ரோடுகளிலேயே ஓடியுள்ள எங்களுடைய சைக்கில்களோ காடுமுரடான அப்பாதையில் செல்லுங்கால் செல்ல பிள்ளைகள் கஷ்ட காலத்தை அடைந்தால் எவ்விதம் வருந்துவார்களோ அதுபோல் கஷ்டம் பொறுக்க முடியாதவைபோல் கூச்சலிடத் தொடங்கின. இவ்வளவோடு எங்களுடைய கஷ்டம் நிற்கவில்லை. நாங்கள் சென்றவழி திடீரென்று ஒரு குளத்தினருகில் முடிந்தது.

குளத்தில் பெரும்பாலும் சேறே ஆங்காங்கு காணப்பட்டது. சூரியன் உச்சியில் வந்து விட்டான். எங்களுடைய நாக்களும் வரண்டன. தாகந்தீர்க்க தண்ணீர் ஓரிடத்திலும் காணப்படவில்லை. நாங்கள் அடையவேண்டிய கிராமமோ குளத்



௧

தின் மறு கரையில் இருந்தது கிராமம் சென்று சேர்வதற்கு முன்னம் நாங்கள் வெகு கஷ்டத்தை அனுபவித்தோம். கிராமம் சென்று சேர்ந்ததும், கிராமத்தார்களில் அனேகம்பேர் எங்களை சுற்றிக் கொண்டனர். தொத்துவியாதியைப்பற்றி எனது சினேகிதர் விசாரித்தார்; ஒன்றிரண்டு மாடுகளையும் பார்த்தார். அதற்குத் தேவையான மருந்து கொண்டுவருவதாகச் சொல்லிவிட்டு நாங்கள் திரும்பி சென்னப்பட்டணம் வந்து சேர்ந்தோம்.

ஒரு குறிப்பிட்ட தினத்தில் நாங்கள் புறப்பட்டோம். முன்பட்ட கஷ்டங்களை தவிர்க்க நாங்கள் சில சௌகரியங்களைச் செய்து கொண்டோம். முந்தின தினமே ஒரு வேலைக்காரனிடம் மருந்து பெட்டிகளை அந்த கிராமத்துக்கு கொண்டு போகச் சொன்னோம். நாங்களும் சூரியன் உதித்து நாலு நாழிகைக் குள்ளாக கிராமத்தில் சென்று சேர்ந்தோம். எனினும் இப்பொழுதும் எங்களுக்கு ஒரு தொந்திரவு ஏற்பட்டது.

கிராமம் சென்று சேருவதற்கு முன்னதாகவே நாங்கள் அனுப்பின வேலைக்காரனை வழியில் கண்டோம். அவன் மருந்து பெட்டியையும் வைத்துக்கொண்டு இருந்தான். ஏனென்று கேட்டதற்கு, கிராமத்தார்கள் மாட்டு டாக்டரும் அவருடைய மருந்தும் தங்களுக்கு வேண்டாமென்று மறுத்துவிட்டதாக அவன் கூறினான். கிராமத்தில் சென்றதும் வேலைக்காரன் கூறிய விதமே அவ்விடத்து ஜனங்கள் ஒருவரும் தங்களுடைய மாடுகளுக்கு மருந்து குத்திவைக்கக் கூடாது என்று பிடிவாதம் செய்தார்கள். எனது சினேகிதர் சாமம், தானம், முதல்போன்ற எல்லா வழிகளையும் பிரயோகித்தார். கிராமத்தார்களுடைய மனது சற்றேனும் இளகவில்லை. என் செய்வார்! அவர்களை பயமுறுத்திபார்த்தார். அதற்கும் அவர்கள் மனம் கலங்கவில்லை. மனிதனுடன் வாதாடலாம். மௌனத்தோடு வாதாட எவரால் முடியும்? எங்களுடைய ஸ்திதியோ மிகவும் பரிதாபகரமாகிவிட்டது. கிராமத்தானுடைய எண்ணம் என்னவென்றால் இந்த வியாதிகளெல்லாம் தெய்வத்தின் கோபத்தால் உண்டாவதென்றும், டாக்டர்கள் அவர்களுடைய பயங்கரமான ஊசிகளுடன் கிராமத்தில் வருவார்களானால் தெய்வம் கோபிக்கும் என்ற மூடவிசுவாசமே. மேலும் இந்த மாட்டு டாக்டர் சிலவு ஒன்றுமில்லாமல் மருந்து இனாமாக கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார்; இது எங்கேயாவதுண்டா? விவசாயி எவ்வித கஷ்ட மனுபவித்தாலும் சரி, தனது நிலத் தீர்வையை தயவில்லாமல் வசூலிக்கின்ற இந்த அரசாங்கத்தாரா இவ்விதம் இலவசமாக மருந்து கொடுப்பார்கள்?

அவனுடைய எண்ணம் எவ்விதமாயினும், எங்களுடைய காரியம் நிறைவேறுதென்று நிச்சயமாயிற்று. அப்பொழுது ஒரு விசேஷம் நடந்தது. பக்கத்து கிராமத்திலுள்ள ஒரு வியவசாயி அவ்விடம் வந்து சேர்ந்தான். ஜனங்கள் கும்பலாக எங்களை சுற்றி இருப்பதைக்கண்டு காரணம் விசாரித்தான். சமாசாரத்தை அறிந்ததும், அவன் தனது அனுபவத்தை எடுத்துக்கூறினான். தன்னுடைய கிராமத்திலும் இதேவிதமாக தொத்து வியாதி வந்திருந்ததாகவும், எனது நண்பரே அவ்விடம் சென்று சில மாடுகளுக்கு மருந்து கொடுத்ததாகவும், சில பேர் அதற்கு இசையவில்லையென்றும், அதனால் அவ்வாறு இசையாதவர்களின் மாடுகள் முழுதும் இறந்து போயிற்றென்றும், மருந்து கொடுத்த மிருகங்கள் எல்லாம் பிழைத்ததென்





றும் அவன் சொன்னான். இது கேட்டவுடன் அவர்கள் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. பசியாயிருப்பவனை அழைத்து விருந்தளித்தால் அவன் எவ்விதம் சந்தோஷப் பெருக்கை அடைவானோ அது போலவே அவர்கள் சந்தோஷம் அடைந்தார்கள். அவர்களுடைய மாடுகளைக் கொண்டுவந்து மருந்து கொடுப்பதற்கு ஓடிப்போனார்கள். மூன்று நான்கு மணிநேரத்தில் மருந்துப் பெட்டி காலியாயிற்று. மருந்துகொடுக்க இன்னும் மாடுகள் மீதியிருந்ததால் நாங்கள் அந்த கிராமத்திலேயே தங்கி மருந்து வரவழைத்து அந்த மாடுகளுக்கும் மறுநாள் மருந்து கொடுத்துவிட்டு திரும்பிவந்தோம்.

இந்த அனுபவத்திலிருந்து நான் அனேக பாடங்கள் கற்றுக்கொண்டேன். கிராமத்தான் மனஸ்திதி இதிலிருந்து எவ்விதமென்று விளங்கிற்று. அவனுக்கு இருக்கும் மூடவிசுவாசத்திற்குக் கணக்கில்லை. சர்க்கார் உத்தியோகஸ்தரைக் குறித்து அவனுக்கு எப்பொழுதும் அச்சம்தான். இதனால் அவனுக்கு உபகாரம் செய்யப்போகிற சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் அனேகம் சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணங்கள் எவையாயினும், இந்த பயம் அவன் மனதிலிருந்து முற்றிலும் ஒழியவேண்டும். மேலும் புதிதான எவ்வழியாவது நிச்சயமாக பயனளிக்குமாகில், அதைக் கையாள கிராமத்தான் சித்தனாயிருக்கிறான். ஆனால் அவ்வழியை அனுசரித்தால் அவர்களுக்கு ஏராளமான லாபமுண்டாகும் என்று பிரசங்கம் மாத்திரம் செய்தால்போதாது. அவனுக்கு அனுபவத்தில் காண்பித்துக்கொடுத்தால் அவன் அவ்வழியை வெகு சந்தோஷத்தோடு பின்பற்றிக்கொள்வான். மூன்றாவது, கிராமத்தானுடைய இவ்வித தாழ்வு நிலைமைக்குக் காரணம் என்னவென்பதும் மேற்கூறிய வரலாற்றிலிருந்து நன்கு விளங்குகிறது. அன்னிய நாடுகளையும் அன்னிய மனிதர்களையும் போய் காண்பதும் அவர்களுடன் பேசுவதும், அவர்கள் தாமிருக்குமிடங்களுக்கு வருவதும் இவைகளே அஞ்ஞானமென்ற இருளை நீக்கும் கருவிகளாகும். நமது கிராமத்தானிருக்கும் இடத்திற்கோ நல்ல ரோடுகூடக் கிடையாது. அவன் முன்னேற்றமடையவேண்டுமானால் ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனி ரஸ்தாக்களை அமைக்கவேண்டும். இதுவே சர்க்காரின் முதன்முதலான கடமையாகும். அவர்கள் இதற்கு கூடியசீக்கிரத்தில் சிரமப்படுவார்களென்று நான் நம்புகிறேன்.

---

**கோளச் சந்தன சோப்பை வாங்குங்கள்.**

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் சுகத்தையும் ஆனந்தத்தையுமளிக்கும் சோப்பு இதுவே.

கோடையில் குளிர்மையையும் பரிமளத்தையும் கொடுக்கும் வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கோள சோப்பு இன்ஸ்டிடியூட்,
கள்ளிக்கோட்டை.

## லோக்கல் ஸெல்ப் கவர்ன்மெண்டு க்வார்ட்டர்லி.

### (ஸ்தல சுய ஆட்சி என்ற பெயருடைய மூன்று மாதத்திற்கு ஒரு தடவை வெளிவரும் பத்திரிகையின்பரிசோதனை.)

சென்னை ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபன சங்கத்தினுடைய பத்திரிகையின் முதல் இதழ் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. "லோக்கல் ஸெல்ப் கவர்ன்மெண்டு க்வார்ட்டர்லி" என்பது அப்பத்திரிகையின் பெயர். இம்முயற்சிக்காக நாம் அச்சங்கத்தை வாழ்த்துகிறோம். நமக்கு கிடைத்திருக்கும் இந்தப் பிரதி மிகவும் அழகாக தயார் செய்யப் பட்டிருக்கிறது. இதில் சுய ஆட்சி ஸ்தாபன சங்கத்தின் நோக்கங்களையும், அமைப்பையும் பற்றி பத்திராதிபர் சுருக்கமாக எழுதி இருக்கிறார்.

பத்திராதிபரின் சுருக்கமான குறிப்புகளில் கிராமப் பஞ்சாயத்து சம்பந்தமாக சில விஷயங்கள் இருக்கின்றன. 8 பஞ்சாயத்து பிரசிடெண்டுகள் சங்கத்தின் மாகாண சபையில் ஸ்தானம் பெற்றிருக்கின்றனர். சங்கத்தால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். 460 யூனியன் பஞ்சாயத்துக்களுள்ளதில் 100 யூனியன் பஞ்சாயத்துக்கள் சங்கத்தினங்கத்தினர்கள். இதிலிருந்து சாதாரண பஞ்சாயத்துக்களொன்றும் சங்கத்தினங்கத்தினர்களல்லவென்று விளங்குகிறது. இச்சங்கம் சில காரியங்கள் செய்வதை 1930ளு நவம்பர் மீ 20உக்கு முன்னதாகவே ஆரம்பித்ததெனினும் சரியாக வேலை செய்யத் தொடங்கியது அந்தத் தேதிக்கு பிறகு தான் என்று கூறப்பட்டிருக்கிறது. இச்சங்கம் மேன்மேலும் அபிவிருத்தியடையவேண்டுமென்று நாம் ஆசிகூறுகிறோம்.

சங்கத்தின் வேலையைப் பற்றி பத்திராதிபர் குறித்துள்ளதில் ஒரு விஷயத்தை நாம் கவனிக்கவேண்டும். இந்த சங்கத்தின் ஆரம்பவிழாவில், இப்பொழுது மந்திரி பதவியிலிருக்கும் கனம் திவான் பஹதூர் முனுசாமி நாயுடு அவர்கள் கிராம அபிவிருத்தி நிதியின்பொருட்டு ஒரு கோடி ரூபாய் சர்க்கார் பிரத்தியேகமாக வைக்கவேண்டுமென்ற பிரேரணையை கொண்டுவந்தார். 1929ளு ஆகஸ்டு மீ 11உ இக்காரியம் நடைபெற்றது. 1931-32-ம் வருஷத்திய வரவு செலவானது தற்காலம் நடத்தப்படுகின்றன. கனம் திவான் பகதூர் முனிசாமி நாயுடுவும் மந்திரி பதவியில் அமர்ந்திருக்கிறார். கிராம அபிவிருத்தி நிதி மட்டும் எவ்விடத்திலும் காணோம். 1931-32-ம் வருஷத்திய வரவு செலவு சட்டசபையில் விசாரணை செய்தபொழுது ஸர் எ. பி. பாத்ரோ கூறிய விதம் படிப்பு விஷயமாகவும், கிராம அபிவிருத்தி மார்க்கங்கள் விஷயமாகவுமுள்ள செலவை அதிகரிப்பதற்குப் பதிலாக சர்க்கார் அதைக் குறைத்திருக்கிறார்கள். சென்னை ஸ்தல ஸ்தாபன சங்கத்தின் ஆரம்பவிழாவில் ஜனித்த தமது செல்வ குழந்தையான கிராம புனருத்தாரண நிதி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வரவேண்டுமென்று கனம் ஸ்ரீமான் நாயுடு அவர்கள் கவனிக்கவேண்டும். இப்பொழுது 7 லக்ஷம் ரூபாய் சர்க்காரால் நன்கொடை கொடுக்கப்பட்டு இந்த நிதி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கோடி ரூபாய் எங்கே; இப்பொழுதுள்ள





ஏழு லக்ஷம் எங்கே; தமது வாக்கை பரிபாலிக்கவேண்டுமானால் மா. ரா. ரா. ஸ்ரீ. நாயுடு அவர்கள் இன்னமும் அதிகம் கவனத்தைச் செலுத்தி சிரமப்படவேண்டியதாயிருக்கும்.

மிஸ்டர் T. சிவராம சேது பிள்ளை இந்த பத்திரிகையில் சுய ஆட்சி ஸ்தாபனங்களின் பண வருமானத்தைப்பற்றி ஒரு வியாசம் எழுதி இருக்கிறார். சுய ஆட்சி ஸ்தாபனங்கள் தமது வேலைகளை சரியாகச் செய்ய வேண்டுமானால் அவசியமான வருமானத்துறைகள் என்னென்ன வேண்டுமென்று மாத்திரம் அவர் இந்த வியாசத்தில் கவனிக்கிறார். சுருக்கமான ஒரு பத்தியில் அவைகளுக்கு படிப்பு, தேக சிகித்சைபோன்ற அவசியமான காரியங்களுக்கு பண வருமானம் தேவையாயிருப்பதைக் குறித்து அவர் குறிப்பிடுகிறார். பிறகு நமது இராஜ்யத்தில் சுய ஆட்சி ஸ்தாபனங்களின் நாளது வரையுள்ள வளர்ச்சியை ஆராய்ந்து அது எவ்விதம் அவைகளின் வருமானங்களை பாதித்ததென்று திருஷ்டாந்தப் படுத்துகிறார். இதர இராஜ்யங்களில் சுய ஆட்சி ஸ்தாபனங்களுக்கே வரி விதிப்பதற்குள்ள கடைசி அதிகாரம் இருக்கின்றன. மத்திய கவர்ன்மெண்டாருக்கு அவ்வித அதிகாரம் கிடையாது. இதனால் அந்த தேசங்களில் மத்திய கவர்ன்மெண்டில் மாத்திரம்தான் சம்பந்தமில்லாத வரிகள் காணப்படும். ஆனால் நமது இராஜ்யத்திலோ இதற்கு நேர் விரோதமாக இருக்கிறது. ஏனென்றால் சக்திவாய்ந்த மத்திய கவர்ன்மெண்டே எல்லா சுய ஆட்சி ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தியுள்ளது. வரி ஆராய்ச்சி கமிட்டி (Taxation Enquiry Committee) யின் தீர்வை தரம் திருத்தல்களை மிஸ்டர் டி. சேதுபிள்ளை அங்கீகரித்திருக்கிறார். இப்பொழுது சுய ஆட்சி ஸ்தாபனங்களின் வருமான துறைகளைப்பற்றி அவர் விவரமாக எடுத்துரைக்கிறார். அவைகளின் பொது தன்மைகளில் சிலவற்றை அவர் சுட்டி காண்பிக்கிறார். (1) தீர்வை துறைகள் இன்னென்னவென்று திட்டமாக கூறப் பட்டிருக்கின்றன; இரண்டாவது அபரோக்ஷித (Indirect) தீர்வைகளின் பிரதான்னியம்; மூன்றாவது இவைகளின் பயன்களாக தீர்வைதிட்டத்தில் நிகழ்ச்சியில்லாமையும், பொறுப்பற்றதும் நேர்ந்திருப்பது. வருமானத் துறைகளில் நிகழ்ச்சி ஏற்படுவதற்கும், அவைகளை வசூலிப்பதில் அதிக சிரமமில்லாமலிருப்பதற்கும் அதே சமயத்தில் ஏராளமாக பணம் வருவதற்கும் வரிவிதிப்பதிலும் அவைகளை வசூலிப்பதிலும் பொறுப்பு வாய்ப்பதற்குமாக சிலபொது அபிப்பிராயங்களை அவர் கூறியுள்ளார். அவர் அபிப்பிராயங்களாவன (1) விவசாய வருமானத்தின்மேல் தீர்வை (2) போக்குவரத்து, வியாபாரம் இவைகளின்மேல் கட்டணம் (3) ஆள்வரி. இவைகளை விதிப்பது சில விஷயங்களை பொறுத்திருக்கிறதென்று அவர் ஒப்புக்கொள்ளுகிறார்; அதாவது தீர்வை கொடுப்பவன் அதை கொடுப்பதற்கு சக்தி யுள்ளவனாக இருக்கவேண்டும்; இதர வரிகளின் பாரமானது அவனை வருத்தாமல் நியாயமாக இருக்கவேண்டும்; வரி வசூலிப்பவர்கள் திறமுடையவரும் சத்தியவான்களும் ஆயிருக்கவேண்டும்; மேலும் வரி பிரயோசனமான செலவுகளுக்காகவே இருக்கவேண்டும். இவ்விதம் கூறிவிட்டு மிஸ்டர் சேது பிள்ளை நிறுத்திவிடுகிறார். இதைப்பற்றி எல்லோரையும் அவரவர்களுடைய அபிப்பிராயங்களை வெளியிடும்படி அவர் கேட்டுக் கொள்ளுகிறார்.

இந்த இதழில் இன்னும் சில வியாசங்கள் காணப்படுகின்றன. அவைகளாவன: (1) செங்கற்பட்டு ஜில்லா போர்டு பிரசிடெண்டு திவான் பகதூர் M. கிருஷ்ணசாமி

ரெட்டியாருடைய "கிராமபுனருத்தாரண வேலைகளைப்பற்றிய சில ஆராய்ச்சிகள்" (2) ராமநாதபுரம் ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தர் மிஸ்டர் T. S. ஆதிசுப்பிரமணியம் M.B B S. அவருடைய "கிராம சுகாதாரத்தைப்பற்றிய சில யோசனைகள்". (3) விடுதலைபெற்ற P.W.D. எஞ்சினீயர் மிஸ்டர் V. K. குப்புசாமி அய்யரின் "அஸ்திவாரம்" இவைகளேயாம்.

திவான் பஹதூர் M. கிருஷ்ணசாமி ரெட்டியாருடைய வியாசத்தில் செங்கற்பட்டு போர்டாரால் 1927-ம் ஆண்டு முதல் நடத்தப்படும் கிராம புனருத்தாரண வேலைகள் மிகவும் சுருக்கமாகவும் வளிதமாகவும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த வேலைகள் 3 ரெவினியூ பிர்க்காவில் நடத்தப்பட்டு வருகின்றன. ஏகதேசம் 100 கிராமங்கள் இதில் அடங்கியுள்ளன. 3 சூப்பர்வைசர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். கிராம புனருத்தாரணம் பஞ்சாயத்துக்களின் முகாந்திரமே நடத்தப்படுகின்றது. சொல்ப காலத்திற்குள்ளாக 64 கிராமப் பஞ்சாயத்துக்களை புதிதாக ஸ்தாபித்திருக்கிறார்கள். வேலை ஒன்றும் செய்யாமல் பேருக்கு மாத்திரம் இருந்த வேறு சில பஞ்சாயத்துக்களும் சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கின. அனேகம் பஞ்சாயத்துகள் ஒன்று சேர்ந்த ஸர்க்கில் பஞ்சாயத்து சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. பல வழிகளில் பஞ்சாயத்து வேலைகள் வளர வளர, ஒரோ கிராமங்களிலும் முதிர்ந்த பழக்கமும் அறிவுமுள்ள ஸ்திரமான ஊழியர்களின் தேவை அதிகரித்தது. இதற்காக மிஸ்டர் F. L. ப்ரெயின் கண்டுபிடித்த "கிராம வழிகாட்டிகளை" ஸ்தாபிப்பது உத்தமமென்று விளங்கிற்று. இரண்டு தாலுகா போர்டு பள்ளிக்கூடங்களிலுள்ள 100 உபாத்தியாயர்களுக்கு 3 மாத காலம் சாரணப்பயிர்ச்சி, பஞ்சாயத்து ஆட்சி, விவசாய முறைகள் இவைகளில் பயிர்ச்சி அளிக்கப்பட்டது. இந்த புது முறையின் பயன் கவனிக்கப்பட்டு வருகின்றது. மருந்து பெட்டிகளைக்கொண்டு கிராமங்கள்தோறும் நடக்கும் இவர்களின் வரவானது கிராமத்தார்களின் சிரத்தையை ஆகர்ஷிக்கத் தொடங்கியிருக்கிறது. பிரசவ காலங்களில் கிராமப் பெண்டிர்களை சகாயிப்பதற்கும் கிராமங்களில் வைத்தியசாலைகள் ஸ்தாபிப்பதற்கும், சிசுக்களின் க்ஷேமத்தை கவனிப்பதற்குமாக பலவித வேலைகள் செங்கற்பட்டு போர்டாரின் ஆதீனத்தில் நடைபெறுகின்றன. கிராமப் பஞ்சாயத்துக்களும் ரஸ்தாக்களை பழுது பார்ப்பதிலும் அவைகளில் விளக்குப் போடுவதிலும் சிரத்தை செலுத்துகின்றன. குடிக்கும் ஜல வசதிகளையும், ஜனன மரண யாதாஸ்துக்களை சரி பார்ப்பதிலும், தமது பள்ளிக்கூடங்களை மேல்பார்வையிடுவதிலும் அவைகள் சிரத்தை காண்பிக்கத் தொடங்குகின்றன. இவ்விதமிருந்தாலும் ஸ்ரீமான் ரெட்டியின் அபிப்பிராயப்படி கிராமப் பஞ்சாயத்துக்கள் ரஸ்தா அமைப்பதற்கு திறமற்றவைகளாகவிருக்கிறதாம். சுற்றுமுள்ள பஞ்சாயத்துக்கள் பொது விஷயங்களில் அசிரத்தையாயிருப்பதும், முதன்முதலாக வேண்டிய பொருளில்லாததும், வேலைசெய்ததற்குப் பிறகு பணம் கொடுப்பது என்ற முறையும் இதற்குக் காரணங்கள் என்று அவர் கூறுகிறார். ஆனால் பஞ்சாயத்துக்களுக்குப் போதுமான பணம் கிடைக்கும் காலத்தில் அவைகள் பொது விஷயங்களில் சிரத்தை செலுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீமான் V. K. குப்புசுவாமி அய்யரின் "அஸ்திவாரம்" என்ற வியாசமானது சிறிது சாங்கேதிகமானதால் சாமானிய ஜனங்களுக்கு அதை படித்த பிறகு





ஒரு உண்மை புலப்படும். அதாவது அஸ்திவாரத்தின் கீழில் மணல் போட்டால் வெகு பிரயோசனமாயிருக்கும்.

ஸ்ரீமான் T. S. ஆதி சுப்பிரமணியம் அவருடைய வியாசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சுகாதார சட்டத்தை ஆதரித்து எழுதுகிறார். சுகாதார இலாகாவுக்கு ஏராளமான அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்றும் அவர் வாதிக்கிறார். எனினும், கிராம சுகாதாரத்திற்காக சேவாசதன், மலேரியாவை ஒழிக்கும் சங்கங்கள், கிராம புனருத்தாரண ஸ்தாபனங்கள், கிராம வழி காட்டி போன்றவர்கள் ஊழியம் செய்வதை அவர் மறுக்கவில்லை. இவ்விதமெல்லாம் இந்த வியாசத்தில் கூறியிருப்பினும், அதை முழுதும் படிக்கும் பொழுது கிராமவாசி தானாகவே தனது கையில் கிடைக்கும் கருவிகளைக்கொண்டு எவ்விதம் சுத்தமாக இருக்கமுடியும் என்பதைப்பற்றிய ஒரு வழியையும் அதில் நாம் காணவில்லை. கிராம சுகாதாரத்திற்கு கிராமத்தின் வெளியிலுள்ள அதிகாரிகளும், பொருளும் அவசியமாயினும், தற்பொழுதுள்ள தேவை என்னவென்றால் கிராமத்தானுக்கு அதிகச்செலவு ஒன்றுமில்லாமல் எவ்விதம் தனது தேகத்தையும், சுற்றுமுள்ள பிரதேசங்களையும் சுத்தமாகவும் விருத்தியாகவும் வைத்துக்கொள்ள முடியும் என்பதாகும். கிராமத்தானுக்கு உசிதமான வழி ஒன்று கண்டுபிடிக்காவிட்டால், மேனாட்டுக் கல்வி கற்ற நமது நண்பர்களின் ஆராய்ச்சிகளெல்லாம் யாதொரு பயனையும் அளிக்காது.

இந்த வியாசங்களைத் தவிர இந்த பத்திரிகையில் (1) "ஸ்தல ஸ்தாபனங்கள் வேலை செய்வது," (2) சங்கத்திற்குள்ள கடிதங்கள், (3) மகாநாடுகள், ஆட்சி யாதாஸ்துகள் போன்ற அனேகம் இதர சமாசாரங்களும் காணப்படுகின்றன. சங்கத்திற்கு அனேகம் பெயர்களிடமிருந்து வந்த வாழ்த்துரைகளும் இருக்கின்றன.

இப்பத்திரிகையின் வருடாந்திர சந்தா ரூ. 4. இது ஆங்கில பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. சஞ்சிகை தேவையுள்ளவர்கள் பிரசுர கர்த்தர், பனகல் கட்டிடம், சைதாப்பேட்டையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

G. H. S.

**DO YOU REALLY DESIRE VILLAGE UPLIFT?**

THEN SUBSCRIBE TO THE

**"VILLAGE PANCHAYAT"**

AND

**INFLUENCE EVERY FRIEND TO DO THE SAME**

The "VILLAGE PANCHAYAT" is a Journal conducted in English, Telugu and Tamil. Its chief objective is the establishment of the self-rule in villages. It is published by the Madras Provincial Co-operative Union. It is edited by a well-known publicist and scholar Mr. G. Harisarvottama Rau, M.A.,

**Subscription Rs. 2 per annum for all Co-opeative Societies and Village Panchayats and Rs. 3 for others.**

*Every Co-operative Society and Village Panchayat, Please Subscribe.*

# பஞ்சாயத்து ஜாயிண்டு கமிட்டி ஸ்தாபிப்பதற்கு ஒரு வேண்டுகோள்.

By Mr. T. M. ஆதிகேசவலு நாயுடு.

செய்யார் தாலூகா போர்டு பிரசிடெண்டு.

அரசியல் முறைகளில் நிபுணரான ஒருவரின் அபிப்பிராயப்படி ஸ்தல சுய ஆட்சி என்பது ஆட்சி முறைகளில் ஒன்றாகும் அதன்படி ஒரு இடத்திலுள்ள காரியங்களையெல்லாம் அவ்விடத்தில் வசித்துவரும் ஜனங்களில் மிகவும் புத்திசாலிகளும், அனுபவம்வாய்ந்தவர்களும் தாமாகவே நடத்தவேண்டும். அல்லது அவைகள் நடத்துபவரை முழுஅதிகாரத்தோடு அவர் கவனிக்கவேண்டும். இக்காரியங்கள் அவர்களை பாதிக்குமாதலால், அவ்வேலைகளை சரிவர நடத்துவதில் அவர்கள் மிகவும் சிரத்தையுள்ளவராக இருப்பார்கள். இதன்றி அதிகாரங்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி மத்திய கவர்ன்மெண்டில் வைப்பது என்ற அரசாட்சியை (centralisation) அந்த நிபுணர் இவ்வாறு விவரித்திருக்கிறார். மிக்கக் குறைவாக அனுபவமுள்ளவர்களும், விஷயங்களைக் குறித்து அறிவதற்கு சௌகரியமற்றவர்களும் அவைகளை சரிவர நடத்துவதில் சொல்ப சிரத்தை செலுத்துபவருமாகிய குறைந்த பேர்களுக்கு அதிகாரத்தை கொடுப்பதே மத்திய ஆட்சியின் தன்மை. வோட்டு செய்பவர்களும் சட்டசபையோர்களும் இந்த அருமையான இரண்டு தத்துவங்களையும் கவனித்திருந்தால், எவ்வளவோ ஊழல்கள் சேர்ந்திருக்காது. அவர் மேலும் சொல்லுவதாவது, "ஸ்தல ஆட்சியில் உத்தியோகஸ்தர்கள் ஜனங்களின் நலத்திற்காக இருக்கிறார்கள்; மத்திய ஆட்சியில் அதிகாரிகளின் நன்மைக்கே ஜனங்கள் இருப்பதாகத் தோன்றும். ஸ்தல ஸ்தாபன ஆட்சியால் ராஜீய காரியங்களில் ஜனங்களுக்கு ஞானம் சித்திக்கும். ஆனால் மத்திய ஆட்சியில் ஜனங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் சர்க்காரே செய்வதால் ஜனங்களுக்கு சுதந்திரம் கிடைக்கிறதில்லை, மேலும் அவர்களின் புத்திகள் மங்கிவிடும்; அவர்கள் சன்மார்க்கங்களிலிருந்தும் அகன்று விடுவார்கள்; சமூக வாழ்விலும் அவர்கள் திறமையற்றவராவார்கள். மேலும் ஸ்தல ஆட்சி ஜனங்களின் நம்பிக்கையை பொறுத்திருக்கிறது. மத்திய ஆட்சி ஜனங்களில் எப்பொழுதுமே அவநம்பிக்கையோடு கூடியதாகும்."

இவ்வளவு விரிவாக ஸ்தல ஆட்சியின் தத்துவங்களை யான் விவரித்தது எதற்காகவென்றால் திருத்தப்பெற்ற 1930-ம் வருஷத்திய லோக்கல் போர்டுஸ் சட்டத்தின்படி நமது மாகாணத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஸ்தல ஸ்தாபனங்கள் இந்த தத்துவங்களை எவ்வாறு பின்பற்றியிருக்கின்றன என்பதை எல்லோரும் ஆராய்ந்து உணர்வதற்கே.

நமது இராஜ்யத்திலுள்ள ஜனங்களில் 9/10 கிராமங்களில் வசிக்கிறார்கள். அவர்களின் சமூக வாழ்வுக்கு கிராம ஆட்சி மிகவும் அவசியம்.

லோக்கல் போர்ட்ஸ் சட்டப்படி ஸ்தல சுய ஆட்சியின் அடிப்படையானது கிராமமென்று கருதப்பட்டிருக்கின்றது. நமது இராஜ்யத்தில் சிறிய கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றும் அந்தந்த கிராமங்களில் வசிப்போருக்கு முழு சௌகரியங்களை அளிக்க சக்தியற்றவைகளாகவே இருக்கின்





றன. அனேகம் கிராமங்களடங்கிய தாலுகா போர்டு இவைகளை செய்ய சக்தியுள்ளதாயினும் அது மிகவும் பெரிதான ஸ்தாபனமாதலால் கிராமத்தானுக்கு அதன் ஆட்சியில் வேண்டுமளவு சிரத்தை செலுத்துவது சாத்தியமன்று. அதனால் கிராமத்தானுக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் கொடுக்க பண சக்தியுள்ளதும், ஆனால் தாலூகா போர்டைப்போன்ற பெரிதல்லாததுமான ஒரு ஸ்தாபனம் தேவையாகும்.

திருத்தப்பெற்ற ஸ்தல ஸ்தாபன சட்டத்தின் 30-வது செக்ஷன்படி அனேக கிராமங்களை ஒன்றுசேர்த்து ஜாயிண்டு கமிட்டி ஏற்படுத்தலாம். இந்த புதுஸ்தாபனத்திற்குத் தற்பொழுது தாலுகா போர்டுகளுக்கும் ஜில்லா போர்டுகளுக்குமிருக்கின்ற அதிகாரங்களை கவனத்துடன் பங்கிட்டு கொடுக்கவேண்டும். அங்கத்தினர்களான பஞ்சாயத்துக்களிலிருந்து இதற்கு வேண்டிய வருமானத்தை சேர்க்கவேண்டும். இவ்விதம் செய்வதால் கிராம வாழ்வின் அபிவிருத்திக்கேற்ற ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தலாம்.

பணமாகவும் வேலையாகவும் கொடுக்கும் வரிகளை இந்த ஜாயிண்டு கமிட்டியோ அல்லது கிராம கூட்டங்களின் சபையோ வசூலிக்கலாம். இந்த வருமானத்தைக்கொண்டு வண்டிப்பாதை சாக்கடை ஜலவசதி, நீர்ப்பாய்ச்சல் இவைகளை சீர்திருத்தலாம். அவைகளின் வருமானத்தைப் பொறுத்து இன்னும் விளக்குப் போடுவதுபோன்ற இதர சௌகரியங்களையும் கிராமத்தானுக்களிக்கலாம். இந்தஜாயிண்டு கிராம சபையின் வேலைகள் என்னென்னவென்று சட்டத்தின் கீழ் உப சட்டங்கள் ஏற்படுத்தி தீர்மானிக்கலாம். சாதாரணமாக இந்த யூனியன்கள் அல்லது கிராமங்களின் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு ஹயர் கிரேட்டு ஆரம்பப் பாடசாலையும், தொழில் கற்பிக்கும் வேறொரு பாடசாலையும், ஒரு கிராம ஹாலோ அல்லது பொதுக்கூட்டங்கள் நடைபெறுவதற்குள்ள ஸ்தலமொன்றும், வாசக சாலையும், புத்தக நிலையமும், விவசாய கூட்டுறவு சங்கமும் இதர சபைகளும் இருக்கவேண்டும்.

புது வேலைகளெல்லாம் இந்த யூனியனே செய்யவேண்டும். ஆனால் அவைகளை பழுதுபார்ப்பது அங்கத்தினர்களான பஞ்சாயத்துக்களின் வேலையாகும். இவ்வேலைகள் செய்வதற்குப் பணம் எங்கென்று கேட்கலாம். ஜில்லா போர்டால் ஸ்தாபிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி நிதியும், கிராம ரஸ்தாக்களுக்கும், ஜல வசதிக்குமாக மாகாண கவர்ன்மெண்டார் கொடுக்கும் பொருளுதவியும், தாலுகா போர்டாராலும் ஜில்லா போர்டாராலும் கொடுக்கப்படுகின்ற இதர வருமானங்களும். இதன்றியும் அங்கத்தினர்களான பஞ்சாயத்துக்களால் கொடுக்கப்படுகின்ற பணமும் இந்த ஸ்தாபனத்திற்கு வேண்டிய வருவாயாகும். இந்த ஸ்தாபனம் வேலை செய்யுமானால் கிராம புனருத்தாரணம் மிகவும் ஊக்கமாக நடைபெறும். தற்பொழுது செய்யவேண்டும் காரியமென்னவென்றால் தலைமையிலிருக்கும் ஸ்தல ஸ்தாபனங்கள் எல்லா கிராமங்களிலும் பஞ்சாயத்துக்களை ஸ்தாபிக்கவேண்டும்; அவைகளை ஒன்றாகச் சேர்த்து புது ஸ்தாபனமொன்று அமைக்கவேண்டும்; இந்த புது ஸ்தாபனத்திற்கு தமது அதிகாரங்களிலும் வருமானத்திலும் சிலவற்றை கொடுக்கவேண்டும். அவர்கள் இவ்விதம் செய்வார்களா? தாலுகா போர்டிலும் ஜில்லா போர்டிலும் இருக்கின்ற கிராமத்தார்களுடைய பிரதிநிதிகளே இதற்குத் தகுந்த விடையளிக்கவேண்டும்.

# லோக்கல் போர்டுகளைப்பற்றிய குறிப்புகள்.

[லோக்கல் ஸெல்ப் கவர்ன்மெண்டு க்வார்ட்டர்லி என்ற பத்திரிகையில் பஞ்சாயத்துத் தலைவர்கள் முதலியவர்களிடமிருந்து சில கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அக்கடிதங்களில் கூறியிருக்கும் வினாக்களுக்கு நமக்குத் தோன்றுகிற விடைகளை கீழ் குறிப்பிடுகிறோம்.—பத்திராதிபர்.]

## கிராமச் சந்தைகள்.

கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள சூலூர் பஞ்சாயத்துப் பிரெஸிடெண்டானவர் எல்லா சந்தை பீசுகளும் பஞ்சாயத்துக்களைச் சேரவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார். லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின் ஷெடியூல் V, ரூல் 5-A, சப் ரூல் 7-ல் "தாலூகா சந்தை என்று தரம் திரிக்கப்படாத கிராமத்திலுள்ள பொது சந்தைகள் மேல் விதிக்கப்படும் பீசுகள்" என்று கூறப்படுவதை "கிராமத்திலுள்ள பொதுச் சந்தைகள்மேல் விதிக்கப்படும் பீசுகள்" என்று திருத்தவேண்டுமென்று அவர் அபிப்பிராயப்படுகிறார். தற்காலத்திய ரூலானது பஞ்சாயத்துக்களுக்கு கஷ்டம் விளைவிக்கிறதென்றும் அவைகள் இதுகாலம் அனுபவித்துக்கொண்டிருந்த வருமானங்கள் அவைகளிடமிருந்து எடுக்கப்படுகிறதென்றும் அவர் தர்க்கிக்கிறார் கிராமங்களிலிருக்கும் தாலூகா சந்தைகளிலிருந்து கிடைக்கும் வருமானங்களின் ஒரு பாகத்தை கிராம நிதிக்குத் தாலூகா போர்டார் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் ரூல்கள் கொண்டுவந்தாலும், சந்தைகளையே தமது வருமானத்திற்கு பிரதான துறைகளாகக் கொண்டுள்ள பஞ்சாயத்துக்கள் நஷ்டம் தான் அடையுமென்கிறார். சூலூர் பஞ்சாயத்துக்கு இப்பொழுதுள்ள ரூலானது அதிக நஷ்டத்தை அளிக்கின்றதென்று அவர் உதாரணமாகக் கூறுகிறார். தாலூகா போர்டுகள் என்னுமே அவர்களுடையதல்லாத சந்தைகளையும் அவர்களுடையதாக நினைத்து ஆசைப்படாமல் சர்க்கார் பார்த்துக்கொள்வார்களானால், தாலூகா போர்டுகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் சச்சரவுகள் ஒன்றுமே உண்டாகாமல் இருக்கலாம்.

## கிராமப் பஞ்சாயத்தும் தொழில் வரியும்.

தொழில் வரி (Professional Tax) விதிப்பதற்கு ஆபீஸ்களிலுள்ள தொழிலாளிகளைக் குறித்த சமாசாரங்கள் அதாது ஆபீஸ்களின் தலைவர்களிடமிருந்து வருவிப்பதற்கு லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தில் ஸ்பஷ்டமான நியமம் இல்லையென்று செம்பியம் பஞ்சாயத்துப் பிரஸிடெண்டு கூறுகிறார். ஆனால் முனிஸிபல் சட்டத்தின் 97-வது செக்ஷன் இதை தெளிவாக்குகிறது. லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின் 206-வது செக்ஷன்படி ஜில்லா முனிசிபாலிட்டிகள் சட்டத்திலுள்ள எந்த செக்ஷனையும் நீடிப்பிக்கவேண்டுமென்று எந்த பஞ்சாயத்தும் கேட்கலாம். ஏதாவது பஞ்சாயத்து பிரஸிடெண்டானவர் ஆபீஸ் தலைவர்களிடமிருந்து அவர்களின் வேலையாட்களின் பெயர்கள் வேண்டுமென்று கேட்டும் கிடைக்கவில்லையானால்,





அந்த ஆபீஸ் ரயில்வேயோ அல்லது எதுவாயிருந்தாலும் சரி, அவர் தற்காலம் செய்யவேண்டும் உத்தமமான வழி என்னவென்றால் ஜில்லா முனிசிபாலிட்டி சட்டத்தின் 97-வது செக்ஷனை நீடிக்கவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்வதேயாம்.

## பஞ்சாயத்து வேலைகள்.

சென்னை லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின் ஷெடியூல் V, ரூல் I-A, சப் ரூல் 2-ல் பிரியமானால் பஞ்சாயத்துக்கள் எடுத்துக்கொள்ளலாமென்று சொல்லியிருக்கும் பஞ்சாயத்து வேலைகளைப்பற்றி மதுராந்தகம் யூனியன் பஞ்சாயத்துப் பிரஸிடெண்டு ஒரு வினா கேட்கிறார். இவ்விஷயங்களைக் குறித்து அரசாங்கத்தார் கெஜட்டில் ரூல்கள் பிரசுரிக்கப்படும் வரையில் பஞ்சாயத்துக்கள் இவ்வேலைகளை செய்யாமல் இருக்கவேண்டுமா அல்லது இந்த வேலைகளை செய்வதற்கு அவைகளுக்கு இப்பொழுது உரிமை இருக்கிறதாவென்று அவர் கேட்கிறார். ரூல் 1-A சப் ரூல் 2-ல் கூறியிருக்கும் வேலைகளில் இதற்கு முன்னதாகவே சில பஞ்சாயத்துக்கள் செய்யவேண்டிய, ஜனனமரண பட்டிகை தயாரிப்பது, பௌண்டுகளை நிர்வகிப்பது, வண்டி ஸ்தலங்களை கவனிப்பதுபோன்ற சில வேலைகளும் அடங்கியிருக்கின்றன. இதனால் பஞ்சாயத்துக்கள் சும்மா இருக்கவேண்டுமென்றல்ல இந்த ரூலின் உத்தேசமென்று நன்கு விளங்குகிறது. லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின் உத்தேசமென்னவென்றால் இந்த விஷயங்களெல்லாம் சர்க்காரால் பிரசுரிக்கப்படும் ரூல்களுக்குட்பட்டு நடத்தப்படவேண்டும். கவர்ன்மெண்டார் ரூல்கள் ஒன்றும் கொண்டுவராத காலம் வரை பஞ்சாயத்துக்கள் இவ்வேலைகளை செய்யலாம். ரூல்கள் ஏற்படுத்தும்பொழுது பஞ்சாயத்துக்கள் அதற்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

## பஞ்சாயத்தும் பௌண்டுகளும்.

நீடமங்கலம் கிராமப் பஞ்சாயத்து பிரஸிடெண்டு பௌண்டுகளின் நிலைமையைக் குறித்து எழுதுகிறார். லோக்கல் போர்டுகளின் இன்ஸ்பெக்டர் அவருடைய 1931௵ ஜனவரி௴ 16௳ பிரசுரிக்கப்பட்ட N. Dis. 607 மேலெழுத்தில் (endorsement) இப்பொழுது இருக்கும் பௌண்டுகளை பஞ்சாயத்துக்களின் ஆளுகைக்கு மாற்றுவதற்கு கவர்ன்மெண்டார் கண்டிப்பாக மறுத்துவிட்டதாகவும், பஞ்சாயத்துக்கள் புதிய பௌண்டுகள் ஸ்தாபிக்கவும் அவைகளை கவனிக்கவும் கூடாதென்றும் சொல்லியிருப்பதாக அறிக்கை செய்திருக்கிறார். கவர்ன்மெண்டாரின் இந்த கட்டளை 1930-ம் வருஷத்திய திருத்தப்பெற்ற லோக்கல் போர்ட்ஸ் சட்டத்திற்கு முன்பாக பிரசுரித்திருந்தால், இச்சட்டத்தின் விதிகள் அதை விலக்குகின்றன. இச்சட்டத்திற்குப் பிறகு பிரசுரிக்கப்படின் சட்டசபை தீர்மான மூலமாக இதை அங்கீகரிக்காததுவரையில் கவர்ன்மெண்டின் கட்டளை சட்டத்தின் விதிகளை விலக்கமுடியாது. இவ்விதம் அவர் கூறுவது நியாயம் தான். 1930-ம் வருஷத்திய சீர்திருத்தப்பெற்ற சட்டத்தின்கீழ் பௌண்டுகள் பஞ்சாயத்துக்களால் பரிபாலிக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. சட்டப்படி மனப்பூர்வமாக செய்திருக்கும் விதிகளை கவர்ன்மெண்டார் இவ்விதம் எவ்வழிபற்றியும் நிராகரிக்க முயலாமல் இருப்பாராக.

# கிராமப் பஞ்சாயத்து

## பஞ்சாயத்தும் இழக்கப்பட்ட பொருள்களும்.

நீடமங்கலம் பஞ்சாயத்து பிரசிடெண்டு இன்னமொரு வினாவையும் கேட்கிறார். பஞ்சாயத்து எல்லைக்குள் இறக்கின்ற கதியற்றவர்கள் பஞ்சாயத்துச் செலவின்மேல் அடக்கம் செய்யப்படுகிறார்கள். ஆனால் இவர்கள்மீது இருக்கும் சாமான்களை ரெவினியூ இலாகாக்காரர்கள் விற்று பணத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். ரெவினியூ இலாகாவைப்போலவே பஞ்சாயத்தும் அரசாங்கத்தின் ஒரு பாகமே. ரெவினியூ இலாகாவைப் பார்க்கிலும் முக்கியமான பாகமென்றே சொல்லலாம். ஒருவருக்கும் பாத்தியதையில்லாத தனமானது சர்க்காரைச் சேருகின்றது. லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின் ஷெடியூல் 5, ரூல் 5, சப் ரூல் 21-ன்படி இந்த இழக்கப்பட்ட பொருள்கள் பஞ்சாயத்தைச் சேரவேண்டும்.

## பட்டண ஆபாஸ நிவாரண சட்டமும் பஞ்சாயத்தின் உரிமைகளும்,

யூனியன் போர்டுகள் டவுன் நுயிஸன்ஸ் சட்டத்திற்காக (பட்டண ஆபாஸ நிவாரண சட்டம்) பட்டணங்கள் என்று கருதப்பட்டிருந்தன. ஆனால் இப்பொழுது அவைகள் லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின்படி கிராமங்களாகவே கருதப்படுகின்றன. இவைகளுக்கும் டவுன் நுயிஸன்ஸ் சட்டத்தின் விதிகளை நீடித்துக் கொடுக்காமலே டவுன் நுயிஸன்ஸ் சட்டத்தின்படி அதிகாரம் செலுத்த உரிமையிருக்கிறதா இல்லையா என்பதைக் குறித்து மதுராந்தகம் யூனியன் பஞ்சாயத்து பிரசிடெண்டு கேட்கிறார். டவுன் நுயிஸன்ஸ் சட்டத்தின்படி அதிகாரம் செலுத்துவதற்கு எந்த யூனியன் போர்டுக்காவது எக்காலத்திலாவது அதிகாரம் இருந்ததாவென்பது நமக்குத் தெரியவில்லை. இச்சட்டத்தின் 6-வது செக்ஷன்படி எந்த போலீஸ் உத்தியோகஸ்தரும் வாரண்டில்லாமல் இச்சட்டத்தில் கூறியிருக்கும் குற்றமேதாவது செய்தவர்களை அரஸ்டு செய்யலாம். செக்ஷன் 9-ன்படி கிராம முனிசிப்பல்லாத இதர மாஜிஸ்திரேட்டுகளுக்கும், அஸிஸ்டெண்டு அல்லது டிப்டிசூப்பரின்டெண்டுகளுக்கு கீழல்லாத போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் சூதாட்ட ஸ்தலங்களைப்பற்றி வேறு சில அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தில் டவுன் நுயிஸன்ஸ் சட்டத்திலுள்ள விதிகளையொத்த சில விதிகள் இருக்கின்றன. VIII. IX, X அத்தியாயங்களில் 122, 123, 126, 129, 147, 149, 150, 154, 157, 163 (1), 183 போன்ற சில செக்ஷன்களில் டவுன் நுயிஸன்ஸ் சட்டத்திலுள்ள செக்ஷன் 3, சப் செக்ஷன்கள் 5, 6, 9, 11-ம் செக்ஷன்கள் 4-ம் 10-ம் இவைகளிலுள்ள விதிகளைப்போன்ற சில விதிகள் அடங்கியிருக்கின்றன. எல்லா லோக்கல் போர்டுகளும், யூனியன் பஞ்சாயத்துக்களும் இந்த செக்ஷன் பிரகாரம் அதிகாரம் செலுத்தலாம். அஜாக்கிரதையாகவும் அலட்சியமாகவும் வண்டி ஓட்டுதல், தெருக்களில் யாசித்தல், சூதாடுதல், கோழிகளை சண்டைவிடச் செய்தல், குடி மயக்கமுள்ள நடத்தையோ அல்லது கலகமுண்டு செய்யும் நடத்தையோ இன்னும் மற்ற பாங்கு கெட்ட நடத்தையோ, பிராணி துரோகமோ இவைகள் லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தில் கூறப்படவில்லை. பஞ்சாயத்துக்களுக்கு இந்த விஷயங்களிலும் அதிகாரம் பெறவேண்டுமானால் "கிராம" எல்லைகளுக்கும் டவுன் நுயிஸன்ஸ் சட்டத்தை நீடித்துக் கொடுத்து லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின் செக்ஷன் 65-Cன்படி பஞ்சாயத்துக்களை அந்த சட்டத்திலுள்ள அதிகாரங்களையெல்லாம் செலுத்துவதற்கு சர்க்கார் சம்மதிக்கவேண்டும்,



# லோக்கல் போர்டுகளைப்பற்றிய குறிப்புகள்

## ஸ்தல ஸ்தாபன உத்தியோக வகுப்பின் தேவை.

செய்யார் தாலூகாபோர்டு பிரசிடெண்டு லோகல் போர்ட்ஸ் சட்டத்தின் 71-வது செக்ஷன்படி தமது ஜில்லா போர்டார் அந்த ஜில்லாவில் உத்தியோக ஒழிவுகளுக்கு ஜில்லா முற்றிலும், எல்லா ஸ்தல ஆட்சி ஸ்தாபனங்களிலுமுள்ள உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கு வேண்டிய முறைகளை கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார். ஸ்தலஸ்தாபன உத்தியோகஸ்தர்களெல்லோரும் ஒரு வகுப்பாகக் (கேடர்) கருதப்படாவிட்டால் 1930-ம் வருஷத்திய திருத்தப்பெற்றஸ்தலஸ்தாபன சட்டத்தால் நேர்ந்ததுபோன்ற பணச்சிக்கனம் ஏதாவதுஸ்தல ஸ்தாபனத்திற்கு வரும்பொழுது, அந்த ஸ்தாபனத்திலுள்ள உத்தியோகஸ்தர்களில் சிலர் வேலையை இழக்கநேரிடும், அதே சமயத்தில் கூடுதல் உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டிய ஸ்தாபனங்கள் புது மனிதர்களை நியமிக்க நேரிடும் என்று அவர் கூறுகிறார். இது உண்மையாயிருக்கலாம். ஆனால் செக்ஷன் 71-ல் ஜில்லா லோக்கல் பண்டு உத்தியோகமோ, அல்லது ஜில்லாவில் தானே ஒரு ஸ்தலஸ்தாபனத்திலிருந்து வேறொரு ஸ்தாபனத்திற்கு உத்தியோகஸ்தர்களை மாற்றிக் கொள்வதோ ஒன்றுமே கூறப்படவில்லை. செக்ஷன் 71 சப் செக்ஷன் (1)ன் படி உத்தியோகங்களுக்கு நிபந்தனைகள் ஏற்படுத்தும்பொழுது உத்தியோக ஸ்தலமாற்றங்களுக்கும் நிபந்தனைகள் ஏற்படுத்தலாம் என்று நாம் நினைக்கலாம். ஆனால் இது அசாத்தியம். ஏனென்றால் 67-வது செக்ஷன்படி ஒரு ஸ்தலஸ்தாபனத்திலுள்ள உத்தியோகத்தைக் குறித்த சகல தீர்மானங்களையும் பிரசிடெண்டே கவனிப்பார், செக்ஷன் 72 படியும் தமது சிப்பந்திகளின் ஒழுக்கத்தையும் அவரே கவனிப்பார். ஸ்தலஸ்தாபனங்களின் எந்த உத்தியோகஸ்தர்களையும் வேலையாட்களையும் லோக்கல் பண்டு உத்தியோகஸ்தர்களாகவோ அல்லது வேலையாட்களாகவோ அமைக்க கவர்ன்மெண்டாருக்கு 74-A செக்ஷன்படி சட்டசபை அதிகாரம் கொடுத்திருக்கிறது. லோக்கல் போர்டுகளில் பெரும்பான்மை சம்மதிக்குமளவில், நல்ல ஒரு லோக்கல் பண்டு உத்தியோக வகுப்பு ஏற்படுத்துவது சாத்தியமாகும். அதுவரையில் செக்ஷன் 71ன்படி ஜில்லா போர்டுகளுக்குக் கீழிலுள்ள ஸ்தலஸ்தாபனங்கள் நடக்கவேண்டியமுறைகளைக் குறித்து பொதுவாக மாத்திரம்தான் அதற்குஅதிகாரம் செலுத்த முடியும். பழயசட்டப்படி ஒருக்கால் ஒருஜில்லாவிலுள்ள சகல உத்தியோகஸ்தர்களையும் ஒரு வகுப்பாக கருதக் கூடுமாயிருந்திருக்கலாம். அந்த சட்டத்தில் ஜில்லா போர்டார் "ஜில்லாவிலுள்ள சகல உத்தியோகஸ்தர்களையும்" குறித்து நிபந்தனைகள் ஏற்படுத்தலாம் என்று இருந்தது. திருத்தப்பெற்ற சட்டத்தில் ஜில்லாபோர்டார் "ஜில்லாபோர்டு உத்தியோகஸ்தர்கள், தாலுகா போர்டு உத்தியோகஸ்தர்கள், பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்கள்" இவர்களுக்கு நிபந்தனைகள் ஏற்படுத்தலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் திருத்தப்பெற்ற சட்டத்தின்படி ஜில்லாவிலுள்ள உத்தியோகஸ்தர்கள் பிரத்தியேகமாக வெகு தெளிவாக பிரித்து கூறப்பட்டிருக்கிறார்கள். இது காரணம் பற்றி பழய சட்டப்படி அதிகாரம் இருந்திருந்தாலும், திருத்தப்பெற்ற சட்டப்படி ஜில்லா போர்டுக்கு ஜில்லாவிலுள்ள உத்தியோகஸ்தர்கள் எல்லோரையும் ஒரு வகுப்பாக்குவதற்கு அதிகாரம் இல்லை என்று தெளிவாகிறது.

### திருத்தப்பெற்ற ஸ்தல ஸ்தாபன சட்டமும் தாலூகா போர்டின் வருமானமும்.

திருத்தப்பெற்ற லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தால் செய்யார் தாலுகா போர்டின் வருமானம் எவ்விதம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதை அந்த போர்டு பிரசிடெண்டு எடுத்துக் கூறுகிறார். அந்த போர்டிலுள்ள 400 கிராமங்களுக்கு 300 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. சட்டத்தில் குறித்திருக்கும் காலணா பங்கு மேனிக்கு 16,000 ரூ, அந்த தாலுகாவிலுள்ள பஞ்சாயத்துக்களுக்கு அவர் கொடுக்கவேண்டி இருக்கின்றது. தாலூகா போர்டின் செலவை எவ்விதம் குறைத்தாலும் பஞ்சாயத்துக்கள் தான் கஷ்டப்படவேண்டி இருக்கும். அவருடைய சாதாரணவருமானம் ரூ 52,100 சாதாரணச் செலவு ரூ. 51,600 பஞ்சாயத்துகளுக்காக ரூ. 16,000 நீக்கிவைக்கும்பொழுது அவருடைய வருமானம் 36,100 ரூபாயாக குறைந்துபோகிறது. வரவுக்கும் செலவுக்கும் பெரிதான வித்தியாசம் ஏற்பட்டுவிடும். அதை சரிப்படுத்த கவர்ன்மெண்டார் பொருளுதவி செய்யவேண்டும். பஞ்சாயத்து இயக்கத்திற்காக அதிகம் வேலை செய்திருக்கும் இந்த தாலுகாபோர்டு இந்த பொருளுதவி வாங்குவதற்கு மிக்க யோக்கியதை பெற்றது. இதைப்போன்ற அனேகம் தாலூகா போர்டுகள் நமது மாகாணத்தில் கிடையா. இப்படிப்பட்ட போர்டுகளுக்கு அரசாங்கத்தார் உதவி புரிவாராக.

---

## விவசாயமே உயிர்த்தொழில்.

### காலிபோர்னியா பழக்காட்சி.

1931ஆு ஏப்ரல்மீ 5உ சித்திரங்களோடு கூடின "ஹிந்து" வாரப் பத்திரிகையில் ஒரு கோட்டையினுடையதும் ஒரு வாயிற்கதவினுடையதும் அற்புதமான படங்களைக் காணலாம். 15,000,000 ஆறஞ்சு, எலிமிச்சம்பழம், திராக்ஷை பழம், இம்மாதிரி பழங்களைக் கொண்டு அந்த கோட்டையும் வாயிற்கதவும் அமைத்துள்ளன. காலிபோர்னியா பழக்காட்சியில் காலிபோர்னிய பழ விவசாயிகள் இவ்விதமே அவர்களுடைய சிறப்புவாய்ந்த பழங்களை காண்பித்தார்கள்.

### ஆங்கிலேயர்களும் ஆறஞ்சு பழமும்.

இங்கிலாந்திலிருந்து அவ்விடத்திலேயே நட்டு வளர்த்தப்பட்ட ஆறஞ்சுச் செடிகள் தென் ஆபிரிக்காவுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த மரங்களிலிருந்தே பிற்காலத்தில் இங்கிலாந்துக்கு அமிர்த துல்யமான பருத்த பழங்கள் அனுப்பப்படுகின்றன.

### தேயிலை தாங்களின் ஆராய்சி.

உலகத்தில் ஏராளமாக உபயோகிக்கப்படும் பானீய சாதனங்களில் தேயிலை ஒன்றாகும். நமது இராஜ்யத்தில் தேயிலை தாராளமாக பயிர் செய்யப்படுகின்றது. அமெரிக்காவில் நமது இராஜ்யத்திய தேயிலையும் வேறு இராஜ்யங்களிலுள்ள தேயிலையும் உபயோகிக்கப்படுகின்றன. தேயிலை இலைகளில் ஆயிர கணக்கான தாங்கள் இருக்கின்றன. அமெரிக்கா ஜனங்கள் என்ன தேயிலை தரத்தை உபயோகிக்க வேண்டுமென்பதை நிச்சயிப்பதற்கும் அவர்கள் மட்ட தினுசுகளை உபயோகிக்காம





விருப்பதற்காகவும் அந்த இராஜ்யத்திலுள்ள ஏழுபேர்கள் பல மாதிரியான தேயிலைகளை பரிசோதிக்கிறார்கள். சுற்றக்கூடிய மேசை ஒன்றில் இருந்துகொண்டு நிபுணர்களான அவர்கள் ஒரோ தேயிலையின் ரசத்தையும் மெதுவாகக்குடித்து பரிசோதிப்பார்.

---

## விவசாயிகளுக்குத் தெரியவேண்டும் விஷயங்கள்.

### விவசாயமும் மின்னலின் பிரயோசனமும்.

விவசாயிக்கு மின்னலினால் மிக்க உபயோகமுண்டு. நம்மைச் சுற்றியிருக்கிற வாயுவில் 4/5 உப்பு வாயுவும் 1/5 பிராண வாயுவும் அடங்கியுள்ளன. பயிர்களுக்கு உப்பு வாயு ஏராளமாக வேண்டும். இது கொடுத்தால்தான் பயிர்கள் செழித்தோங்கி வளரும். மின்னல் தாராளம் உப்பு வாயுவை கொடுக்கிறது. அநேகாயிரம் அடி நீளமுள்ள மின்னல்கள் வாயுவிலுள்ள பிராண வாயுவிலிருந்து உப்பு வாயுவைப் பிரித்து அதை விவசாயியின் நிலத்திற்கு கொடுக்கின்றது. இதற்கெல்லாம் விவசாயிக்கு ஒரு காசுகூடச் செலவில்லை. சிலபொழுது மின்னல் பெரும் உபத்திரவங்களையும் உயிர்ச்சேதங்களையும் கூட விளைவித்தாலும் அது விவசாயிக்கு பேருதவி செய்கிறதென்பது நமக்கு இதிலிருந்து நன்கு விளங்குகிறது.

### சப்பாத்திக்கள்ளி அழித்தல்.

கொச்சினில் பூச்சி சப்பாத்திக்கள்ளியை அழிப்பதற்கு ஏற்ற கருவியென்பது இப்பொழுது ஸ்திரப்பட்டிருக்கிறது. 1981ஆு ஜனவரிமீ த்திய "விவசாயமும் ஜந்துக்கள் பாலனையும்" என்ற பத்திரிகையிலுள்ள சில விஷயங்கள் இவ்விடத்தில் எடுத்துக் கூற ஏற்றவையாம். சென்னை மாகாணத்தில் 40,000 சதுர மைல் ஸ்தலங்கள் சப்பாத்திக்கள்ளியிலிருந்து மீட்கப்பட்டன. 10-வருஷங்களில் இதினும் மூன்று மடங்கு ஸதலங்கள் இவ்விதம் நல்ல ஸ்தலங்களாக்கப்படுமென்று நம்பப்படுகின்றது. தூத்துக்குடியில் மாத்திரமே லட்சம் ரூபாய் விலை பெறுமான ஸ்தலங்களிலிருந்து சப்பாத்திக்கள்ளி நீக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சியில் ஸிலோனில் ஜாப்ஹ தீவீக கற்பத்தில் அதிக பலன் கிடைத்திருக்கிறது. சில ஸ்தலங்களிலிருந்து சப்பாத்திக்கள்ளி முற்றிலும் ஒழிக்கப்பட்டிருக்கிறது. முன்பு 6 அடி முதல் 10 அடி வரை உயரமுள்ள சப்பாத்திக்கள்ளியால் அடர்ந்திருந்த நிலமானது இப்பொழுது சாகுபடி செய்யப்படுகிறது. ஸிலோன் ஆராய்ச்சியிலிருந்து கொச்சினில் பூச்சியானது ஒருதரம் சப்பாத்திக்கள்ளியை மாத்திரம் தான் அழிக்கத் திறமுடையதென்று காணப்படுகிறது. எவ்விடத்திலாவது இப்பூச்சியை உபயோகித்த பிறகு சப்பாத்திக்கள்ளி அழிந்து போகாவிட்டால் அந்த சப்பாத்திக்கள்ளி எந்த ஜாதியைச் சேர்ந்ததென்று பின்பு ஆராய்வது உத்தமம் என்று தோன்றுகிறது.

---

## சுய ஆதார கிராம இந்தியா.

பிரதம மந்திரி கனம் திவான் பஹதூர் B. முனுசாமி நாயுடு சித்தூர் ஜில்லாவைச் சார்ந்த ஸ்ரீராமபுரம் என்ற இடத்திற்கு சென்றபொழுது அவ்விடத்து ஜனங்கள் அவருக்கு நல்வரவு பத்திரமொன்று படித்தார்கள். அதற்குக்கீழ் குறித்தவிதம் அவர் பதிலளித்தார். சென்ற காலங்களில் கிராமத்தாரின் க்ஷேமத்திலும் சுகத்திலும் அரசாங்கத்தார் வேண்டுமளவு சிரத்தை செலுத்தவில்லை என்ற சமாசாரத்தை அவர் விசனத்தோடு அறிந்துள்ளார். இப்பொழுது கிராமத்தாருடைய தேவைகளை கவனிக்கவேண்டும் தருணம் வந்துவிட்டது. வரும் ஜூலைமாதமுதல் கிராம அபிவிருத்தி நிதி என்ற ஒரு நிதியை ஸ்தாபிப்பதற்கு சர்க்கார் நிச்சயித்திருக்கிறார்கள். இந்த நிதிக்கு அரசாங்கத்தார் 7 லக்ஷம் ரூபாய் கொடுப்பார்கள். இந்த நிதி ஸ்தாபித்ததும் அதை கிராமங்களில் ரஸ்தாக்கள் அமைப்பது, போதுமளவு ஜல சப்ளை செய்வது, சுகாதார முறைகளை சீர்திருத்துவது போன்ற வேலைகளுக்கு உபயோகிக்கப்படும். சித்தூர் ஜில்லா போர்டு, வருஷந்தோறும் ரூ. 40,000 நிலவரியாக (Land cess) வசூலிக்கின்றது. இந்த ஜில்லாவை மட்டும் கவனிக்கும்பொழுது, சர்க்கார் அதற்கு ரூ 40,000 கொடுப்பார்கள், இவ்விதம் சர்க்காரும் ஜில்லா போர்டும் சேர்ந்து சித்தூர் கிராம அபிவிருத்தி நிதிக்கு ரூ. 80,000 சேர்ப்பார்கள். சித்தூர் ஜில்லாவிலுள்ள எல்லா கிராமங்களுடைய தேவைகளையும் கவனித்தால், இந்த தொகையானது போதாதுதான். அந்த ஜில்லாவில் தற்காலம் நிறுத்தி வைக்கப்பட்ட வேலைகளுக்கே 6 லக்ஷம் ரூபாய் அவசியமாகும் தற்பொழுது இவ்வேலைகள் எல்லாம் கண்ட்ராக்டர்களால் செய்து வரப்படுகின்றன. இந்த முறையை கைக்கொண்டிருப்பதால் அதிகச்செலவும் காலதாமதமும் நிச்சயமாக ஏற்படுகின்றன. கிராமத்தார் தமது அபிவிருத்தியை கருதுவாராயின் இவ்வேலைகளை எல்லாம் தமது ஆட்களைக் கொண்டே நடத்திக் கொள்ளவேண்டும். இவ்விதமான கஷ்ட நஷ்டங்கள் ஏற்படாமல் இருக்கவேண்டுமானால் ஒரே கிராமத்திலும் அதன் உரிமைகளை பாதுகாப்பதற்காக பஞ்சாயத்தொன்று கூடின சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று அவர் கிராமத்தார்களையும் ஸ்தலஸ்தாபனங்களையும் வேண்டிக்கொண்டார். அவருடைய நோக்கத்தின்படி ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் பக்காரோடானது பிரதான ரோடைவந்து சேரவேண்டுமென்றும் இன்னும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடமும் ஆசுபத்திரியும் இருக்கவேண்டுமென்றும் அவர் கூறினார். ஒவ்வொரு கிராமமும் அதற்குத் தேவையான பொருள்களை உண்டுபண்ண வேண்டுமென்பதே அவருடைய கொள்கை.

---


இனாம் முற்றிலும் இனாம்

உம்முடைய முழு விலாசத்தைத் தெளிவாய் எழுதியனுப்பினால்

உமக்கு இன்றியமையாத

**ஆரோக்கியம் ஐசுவரியம் ஆனந்தம்**

இவைகளுக்கு வழி காட்டியாகிய

**வைத்திய வித்தியா**

என்னும் சிறந்த வைத்திய நூல் உம்முடைய வீட்டிற்கு வந்து சேரும்.

**மதன மஞ்சரி பார்மஸி**

1/94, சைனாபஜார், மதராஸ்.





பலக்குறைவைக் நீக்கி, உங்கள் நரம்புகளையும், மூளையையும், சரீரத்தையும் பலப்படுத்திக்கொள்ள எங்கள் ஆயுர்வேத ரத்ன பண்டிட்

Dr. N.V. ஸ்ரீராமாசார்லுவின் திவ்விய ஔஷதத்தை சாப்பிடுங்கள்

**"ஸித்தகல்ப மகரத்வஜம்"**

(ரிஜிஸ்டர்ட்)

எவ்வளவு கடினமான வியாதியையும் தவறாது கண்டிப்பதிலும், ரத்தத்தை நன்கு சுத்திசெய்வதிலும், நரம்பு தளர்ச்சியை நீக்குவதிலும் பொன்னைப்போல் போற்றத்தக்கதுமான டானிக் மருந்தில் இது நிகரற்றது. இச்சஞ்சீவியை தேர்ந்த வைத்தியர்கள் பரிசோதித்து, மனிதர்களின் வாழ் நாட்களை அதிகரிப்பதில் இதைவிட உத்தமமான ஔஷதம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். ஒரு புட்டி மருந்தினால் தேகம் முழுமையும் வீர்யம், வலிமை, ஜீவசக்தி முதலியவை ஏற்படுமென்பது திண்ணம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூ. 10—0—0.

மருந்துகள் உத்திரவாத முள்ளவை. நிவர்த்தி நிரந்தரமானது.

**மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்,**

தபால் பெட்டி 151. (ஸ்தாபனம் 1915) தந்தி விலாஸம்:—"கல்பம்" சென்னை.

மிகவும் நீடித்ததும், சிக்கலானதுமான வியாதிகளுக்கு விசேஷமான மருந்துகள் கொடுக்கப்படும்.

(கேட்லாக், ஏஜன்ஸி விவரம், இனாமாக அனுப்பப்படும்).

மானேஜர்:—வி. ரகுபதி, பி.ஏ., பி.எல்.



90-வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

**அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.**



அநேக மெடல்கள், நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

காரம், மணம், நிறம், குணம், வாடை, உள்ளது.

விலை விபரத்திற்கு எழுதுக:—

ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி, லிமிடெட்.,

தபால் பெட்டி 140, மதராஸ்.

# அறிக்கை.

அநேகம் பஞ்சாயத்துப் பாடசாலைகளில் கீழ்கண்ட பாடபுத்தகங்களை வைத்து நடத்திவருகிறார்கள். எல்லாப் பஞ்சாயத்துப் பிரசிடெண்டுகளையும் தங்கள் பாடசாலைகளில் அடியில்கண்ட புஸ்தகங்களைத் தருவித்து, உபயோகப்படுத்திக் கொள்ள கோரப்படுகிறார்கள். புஸ்தகங்கள், சென்னை, ஜார்ஜ் டவுன், புஸ்தக வியாபாரிகள் பி. ஜி. பால் அண்டு கம்பெனியாரிடமிருந்து தருவித்துக்கொள்ளலாம்.

## புஸ்தகங்களின் விபரம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| **1-ம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. I | | | |
| By A. M. S. இராகவன் B.A., L.T. ... ... | 0 | 2 | 0 |
| கோபால் வாய்ப்பாடு ... ... ... ... | 0 | 1 | 0 |
| **2-ம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. II | | | |
| By A. M. S. இராகவன், B.A., L.T. ... ... | 0 | 3 | 0 |
| கோபால் வாய்ப்பாடு ... ... ... ... | 0 | 1 | 0 |
| **3-ஆம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. III | | | |
| By A. M. S. இராகவன், B.A., L.T. ... ... | 0 | 4 | 0 |
| சிறுமணிக் கதைகள் | | | |
| By S. S. அருணகிரிநாதர் ... ... ... | 0 | 5 | 0 |
| **4-ஆம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. IV | | | |
| By A. M. S. இராகவன், B.A., L.T. ... ... | 0 | 4 | 6 |
| ஸிவிக்ஸ் Part I By S. சுப்பிரமணிய அய்யர், B.A. ... | 0 | 5 | 0 |
| ஆத்மநேயர், By ம. குப்புசாமி முதலியார் ... ... | 0 | 5 | 0 |
| **5-ஆம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. V | | | |
| By A. M. S இராகவன், B.A., L.T. ... ... | 0 | 6 | 0 |
| கம்பர் By பண்டிதர் A. N. கன்னையா ... ... | 0 | 5 | 0 |
| ஸிவிக்ஸ் Part II By S. சுப்பிரமணிய அய்யர், B.A. ... | 0 | 6 | 0 |
| இந்து தேச சரித்திரம் | | | |
| By V. ஜயராம அய்யர், B.A., L.T. ... ... | 0 | 5 | 0 |
| சிற்றிலக்கண வினாவிடை | | | |
| By C. R. கோவிந்தராஜ முதலியார் ... ... | 0 | 4 | 0 |

குறிப்பு :—உபாத்தியாயர்கள் மொத்தமாக தருவித்துக் கொள்ளும் புத்தகங்களுக்கு 100-க்கு 20-0-0 வீதம் கமிஷன் கழித்து கொடுப்பார்கள் என்பதையும் குறிப்பிடப்படுகிறது. மற்ற புத்தகங்கள் பாதி விலைக்குமட்டும் அனுப்பப்படும், தபால் செலவு வேறு.

*Apply to :—*

**B. G. PAUL & CO.,**

PUBLISHERS,

*2, Francis Joseph Street, Madras.*

# லோத்ரா

## கர்ப்பாசய ரோக நிவாரணி

எல்லாம் ஒருமிக்க புகழத்தக்கதே!

15 வருஷ இல்லற வாழ்க்கைக்குப் பிறகு என் மனைவி ஒரு பெண்குழந்தைக்குத் தாயானாள்.

சர்வகாலமும் 'லோத்ரா' வை கையிருப்பாய் வைத்திருப்பேன்; தூக்கத்திலும் மறவேன்.

6 வேளை மருந்து 15 வருஷகாலம் நீடித்த நோயை நிவர்த்திசெய்தது.

ருதுக சம்பந்தமான எல்லா வியாதிகளையும் பரிஹரிப்பதில் தலைமை பெற்றதெனக் கண்டேன்.

ஸ்திரீகளுக்குச் சகஜமாய் உண்டாகக்கூடிய சர்வ வியாதிகளையும் ஆச்சரியப்படக் கூடியவாறு போக்கி, அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் ஆனந்தத்தையும் தரத்தக்கது.

### கேஸரி குடீரம்

எழும்பூர், மதராஸ்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.



# அசோக சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

## (அசோக உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும், நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக-உப்பு ஓர் அருமருந்து.

உணவை நன்றாகச் செரிக்கச் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும், மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அஜீரணம், பித்த வாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலை மயக்கம் முதலிய நோய்களை நீக்கவல்லது பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீரண பேதி, கணச் சூடு, வெட்டைச் சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல் போன்ற ரோகங்களைப் போக்கி, எவ்வித பிணியும் அணுகாமல் காக்கக்கூடியது அசோக-உப்பே யாகும்.


விலை ரூ. 1-8-0. தபால் செலவு வேறு.

அசோககம்பெனி லிமிடெட், சென்னை.

# மையர்ஸ் பம்புகள் ஜெகப்பிரசித்தி பெற்றவை

எல்லா வேலைகளுக்கும் இவைகளையே உபயோகியுங்கள்

கைபம்புகள், விசிரி (ஸ்பிரே) பம்புகள்,
பவர் பம்புகள் முதலியவை எங்களிடம் எப்போழுதும் கிடைக்கும்




## ஸ்டோவர் எஞ்ஜின்கள்.

பவர் பம்புகளும் மற்ற மெஷின் பம்புகளையும் ஓட்டுவதற்கும், தங்களுக்கு எக்காரியத்திற்காகப் பம்புகள் வேண்டுமென் பதைப்பற்றியும் விவரமாக எழுதுங்கள். எஸ்டிமேட்டின் :: விவரம் முழுவதும் அனுப்புகிறோம். ::

இந்தியாவுக்கு சோல் ஏஜண்டுகள்!—

தபாற் பெட்டி நெ. 202 } லிமாயி பிரதர்ஸ் லிமிடெட்,
1/173, பிராட்வே, மதராஸ்.



பத்திராதிபர்.—கனம். ஜி. ஹரிஸர்வோத்தமராவ்-எம்.ஏ.
அச்சிடுவோர்.—மத்தியக் கூட்டுறவு அச்சு இயந்திரசாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.


1294


இதழ் I. நெ. 9.
ரிஜிஸ்தர் நெ. M. 2623.


# 'கிராமப் பஞ்சாயத்து.'

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

28 AUG 1931

ஜூன் 1931.


பிரசுரஞ் செய்வோர்.
சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,
ராயப்பேட்டை, சென்னை.

# நன்ஜன்கூடு சத்வைத்திய சாலை கூட்டுவேலை.




ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ்.

"சத்வைத்தியசாலை." நன்ஜன்கூடு

சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

டானிக்
சியவனப்
ரசம்.
ஸ்ரீ வஸிதா
பாலஸிதா

CHYAVANPRASH TONIC

தைலம்.
பிருங்காமலக
அமிர்தாமலக
சந்தனாதி

(குழந்தை கட்டிக்கு 15 நாள் மருந்து ரூ. 2—0—0).

---

## நஞ்சன்கூடு பல்பொடி

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

## அடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | உலக வாழ்வு—பாரததேசத்தின் ஸ்தானம் ... ... | 197 |
| 2. | பத்திராதிபர் குறிப்புகள்... ... ... | 202 |
| 3. | பஞ்சாயத்துக்கள் by Mr. M. K. காந்தி ... ... | 206 |
| 4. | நாதே பள்ளிக்கூடம் பஞ்சாயத்து ஆட்சி ரிப்போர்ட் ... | 208 |
| 5. | பயிற்சிபெற்ற மருத்துவச்சிகளின் தேவை :— By Mr. Subbaraya Baliga L.M. & S., D.T.M. ... | 210 |
| 6. | லோக்கல் போர்டு தேர்தல்களைக் குறித்த நகல் ரூல்கள் (H.S.G. யின் பரிசோதனை) ... ... | 212 |
| 7. | சர்க்குலர் நம்பர் 106 ... ... ... ... | 215 |
| 8. | மடகசிரா கோடைக்கால பள்ளிக்கூடமும் மகாநாடுகளும் ... | 216 |



### சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு ரூபாய் 2.
மற்றவர்களுக்கு ... „ ரூ. 3.
தனிப்பிரதி ... அணா 4

### விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்,

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,
ராயப்பேட்டை, சென்னை.


## 19-வது சென்னை மாகாணக் கூட்டுறவு மகாநாடு.

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,
ராயப்பேட்டை, சென்னை,

அன்புமிக்க ஐயா !

19-வது சென்னை மாகாணக் கூட்டுறவு மகாநாடானது சென்னையில் வருகிற ஜூன் மீ 20, 21 தேதிகளில் கோயமுத்தூர் ம-ா-ா-ஸ்ரீ ராவ் பஹதூர் T A ராமலிங்கம் செட்டியார், B.A., B.L. M.L.C., அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் நடைபெறும்.

ஷை மகாநாட்டிற்கு தங்களுடைய பிரதிநிதி அல்லது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர் (அவர்களுடைய) பெயரையும் (பெயர்களையும்) சரியான விலாஸத்தையும் எமக்குத் தெரிவிக்கவேண்டுமாய்த் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஒவ்வொரு சென்ட்ரல் பாங்கியும், ஜில்லா பெடரேஷனும், லோகல் யூனியனும், லேவாதேவியல்லாத இதர முறைகளை யடுத்த சங்கங்களும், அர்பன் பாங்கிகளும் இரண்டு பிரதிநிதிகள் வீதம் அனுப்பலாம். வரையறுக்கப்படாத கிராமப் பிரதம சங்கங்கள் ஒரு பிரதிநிதி வீதந்தான் அனுப்பலாம்.

தங்கள் விதேயன்,
வி. ராமதாஸ் பந்துலு,

28 AUG 1931

## பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிருபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிருபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிருபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.

---


### உத்தம தோழன்.

மூத்திரசம்பந்தமான வியாதிகளால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுத்து பெரும் புகழும் பெற்ற உத்தம தோழன் யாதென்று உங்களுக்குத் தெரியுமா?

அதுவே எங்கள்

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளை நாஸ்தமாகக் கண்டிக்கும்.

[32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.]

இனும்! "போஜன விதி" இனும்!!

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**

26, பிராட்வே, சென்னை



# கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் 1.] 1931ளு ஜூன் [இலக்கம் 9.


## உலக வாழ்வு—பாரத தேசத்தின் ஸ்தானம்.

இந்தியா இராஜ்யத்தின் புது நோக்கங்கள் பயனடையும் சமயமாயிற்று. ஆதலால் இதர இராஜ்யங்களுக்கும் நம் நாட்டிற்குமுள்ள பொருளாதார சம்பந்தத்தை நாம் கவனிப்பது உசிதமாகும். நாம் வறுமையெனும் சமுத்திரத்தில் ஆழ்ந்து கிடக்கின்றோம். ஒவ்வொருவனுடைய வருமானமும் எவ்வளவு குறைந்ததாயினும் எல்லோரும் ஒரு விஷயத்தை சம்மதிக்கவேண்டும். இதர நாடுகளோடு நமக்கு ஏராளமான வியாபாரம் இருக்கின்றது. நமது சாகுபடி சாமான்களுக்கும் வெளிநாட்டார்களுக்கு வெகுப்பிரயமுண்டு. இவைகளை அஸ்திபாரமாகக் கொண்டு நமது எதிர்கால வாழ்வை எவ்விதம் சீருற்றதாக நடத்தவேண்டுமோ அதற்குத் தகுந்த ஏற்பாடுகளை நாம் செய்யலாம்.

ஒரு இராஜ்யத்தின் பிரதான்னியத்தை அதற்கு வெளிநாடுகளோடுள்ள வியாபாரத்திலிருந்து அனேகமாக அறியலாம். வெளிநாடுகளோடு அதிகமாக வியாபாரமுள்ள நாடுகளில் நம் நாடு ஆறாவதாகும். இங்கிலாந்து இப்பொழுதும் பிரதம பதவியிலேயே இருக்கின்றது. அதன் மொத்த வியாபாரம் 204 கோடிப் பவுன் விலை பெறும். அமெரிக்க ஐக்கியநாடுகளின் வியாபாரம் 187 4 கோடி, ஜர்மனியின் வியாபாரம் 127·9 கோடி, பிரான்ஸின் வியாபாரம் 85 கோடி, கானடாவின் வியாபாரம் 54·1 கோடி. இவைகளெல்லாம் நம்மைக்காட்டிலும் கூடுதல் வியாபாரமுள்ளவைகள். நம்முடைய மொத்த வியாபாரம 43·5 கோடிப் பவுன் விலை பெறும். குள்ள மனிதரோடு கூடிய சிறு ஜப்பான் இராஜ்யத்திற்குக் கூட 41·7 கோடிப் பவுன் பெறுமான வியாபாரம் இருக்கின்றது. அச்சிறு இராஜ்யம் நம்மோடு போட்டி செய்து நம்மைத் துரத்துகின்றதோ என்று தோன்றும். மேல் குறிப்பிட்ட எண்களின் குறிப்பை நாம் சரியாக அறிய எண்ணுவோமாகில் அவைகளை இன்னொருவிதத்தில் ஆராய்ச்சி செய்யவேண்டும்,

இந்நாடுகள் எல்லாவற்றைக் காட்டிலும் நமது இராஜ்யத்திலேயே ஜனங்கள் கூடுதலாக இருக்கின்றனர். இதர பிரதான இராஜ்யங்களின் ஜனத்தொகையை நமது தொகையோடு ஒப்பிட்டு பார்ப்போம்.

| இராஜ்யம். | ஜனத்தொகை கோடி. | நமது நாட்டு ஜனத்தொகையின் அம்சம். |
|---|---|---|
| கிரேட்பிரிட்டன் ... | உத்தேசம் 5 | உத்தேசம் 1/7. |
| அமெரிககா ஐக்கிய நாடுகள் ... | 11 | ⅓க்கு சொற்பம் குறைவு. |
| ஜெர்மனி ... | 6½ ,, | 1/5 |
| பிரான்சு ... | 4 ,, | 1/9 |
| கானடா ... | ,, 1 | 3/100 |
| ஜப்பான் ... | 8 | ¼-க்கு ,, |

வியாபாரத்தில் நம்மோடு போட்டி போடும் இத்தேசங்களின் ஜனத்தொகையை ஒன்றுசேர்த்தால் நம் நாட்டின் ஜனத்தொகைக்கு சமானமாகும். மொத்த உலகவியாபாரமான 1091 கோடிப்பவுனில் முதல் குறிப்பிட்ட 5 இராஜ்யங்களுக்கே 604·3 கோடிப்பவுன் வியாபாரம் இருப்பதையும் ஜனத்தொகையில் பெரிதான நமது இராஜ்யம் பின்நோக்கி இருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும். எவ்விதமுறைகளால் நமது இராஜ்யத்தின் வியாபாரம் அதிகரிக்குமென்பதில் நாம் வெகு சிரத்தை செலுத்தவேண்டும். முதல் குறிப்பிட்ட 5 இராஜ்யங்களும் நம்மை விட முன்னேற்றமடைந்திருக்கின்றன. ஜப்பான் தேசத்தின் வியாபாரம் நமமுடைய இராஜ்யத்தின் வியாபாரத்திற்கு சொற்பமாத்திரம் குறைவாக இருக்கின்றது. இவைகளில் கானடா, அமேரிக்க ஐக்கியநாடுகள், ஜர்மனி, பிரான்சு இந்தேசங்களில் விவசாயமும் கைத்தொழிலும் இரண்டும் அபிவிருத்தி யடைந்துகொண்டிருக்கின்றன. தற்காலம் ருஷியா இராஜ்யம் போட்டிக்கு புறப்பட்டிருக்கின்றது. இந்த இராஜ்யங்களுக்கு கிரேட் பிரிட்டனைப்போலவல்லாமலும், ஜப்பானைப்போல வல்லாமலும், இதரநாடுகளிலிருந்து ஆஹாரசாமான்கள் தருவிக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை; நம்மைப்போல வெளிநாடுகளிலிருந்து கைத்தொழில் சாமான்களை வரவழைக்கவும் அவைகளுக்கு அவசியமில்லை.

இந்த விஷயத்தில் உலக வியாபார முன்னணியில் நிற்கும் கிரேட் பிரிட்டனுக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி நாம் ஆராய்வோம். கிரேட் பிரிட்டன் என்ற இராஜ்யத்தில் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வெயில்ஸ் இவைகள் அடங்கியுள்ளன. கிரேட் பிரிட்டனில் பிரதானமாக இறக்குமதி செய்வது ஆகாரசாமான்களும் கைத்தொழிலுக்கேற்ற விவசாயப்பொருள்களுமாகும். 5·8 கோடிப்பவுன் கோதுமையும், 4 கோடிப் பவுன் இதர தானியங்களும், 3·6 கோடிப் பவுன் தேயிலையும், 3·4 கோடிப் பவுன் பழவர்க்கங்களும், 5·2 கோடிப் பவுன் வெண்ணெயும், 12·5 கோடிப் பவுன் விலை பெறுமான இறைச்சியும், பசுக்களும், 15·9 கோடிப்பவுன் இதர மரக்கறி





பதார்த்தங்களும், பானீயங்களும், புகையிலையும், 4·3 கோடிப் பவுன் மரச்சாமான்களும் அவ்விடத்தில் முக்கியமாக இறக்குமதியாகின்றன. இப்புள்ளி விவரங்களிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. அதாவது, மனிதனுக்கு மிக்க அவசியமான ஆஹார பானீய பொருள்களும், வசதிப் பொருள்களும், இவை யெல்லாம் வெளிநாடுகளிலிருந்து வருகின்றன. கைத்தொழிலுக்குத் தேவையான சாகுபடி சாமான்களும் இறக்குமதி ஆகின்றன. இவைகளில் பிரதானமானவை :—பருத்தி 8·1 கோடிப் பவுன், ஆட்டு ரோமம் 6·4 கோடிப் பவுன், தோல் 2·6 கோடிப் பவுன், பெட்ரோல் 4·4 கோடிப் பவுன், எண்ணெ விதைகள், தாவர எண்ணெகள் முதலியவை 3·9 கோடிப் பவுன் ஆகும். இதிலிருந்து உடு துணியும் யாத்திரைக்கு வேண்டிய சாமான்களும் கூட வெளி நாடுகளிலிருந்து கிரேட் பிரிட்டனுக்கு வரவேண்டியிருக்கிறதென்பது புலப்படுகிறது. இந்த சாமான்கள் மட்டுமன்று இங்கிலாந்தில் இறக்குமதி செய்கிறார்கள். துணி வகைகளில் 9·4 கோடிப் பவுனும், உலோக சாமான்களில் 5·7 கோடிப் பவுனும், யந்திரங்கள், இரும்பு சாமான்கள் 2·9 கோடிப் பவுனும், இதர கைத்தொழில் பொருள்களில் 12·7 கோடிப் பவுனும், இறக்குமதி ஆகின்றன. இறக்குமதி செய்யப்பட்ட கைத்தொழில் சாமான்களெல்லாம் மீண்டும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக மாத்திரந்தான் கிரேட் பிரிட்டனுக்கு இவ்வளவு ஏராளமான இறக்குமதி இருக்கின்றதே. இவைகளுக்கு பதில் எந்தப் பொருள்கள் அத்தேசம் தருகின்றது என்பது பெரிய பிரச்னையாகும் உலக வியாபாரத்திற்கெல்லாம் மத்திய ஸ்தலம் (Clearing House) இங்கிலாந்தாகும். உலகத்திற்கு இவ்வழியில் அது அளவிடக்கூடாத வேலை செய்கின்றது. மேலும் உலகத்திலுள்ள கைத்தொழில்நாடுகளில் பிரதம பதவி அதற்கு இன்றைக்கும் இருக்கிறது. 85 கோடிப்பவன் விலைபெறும் கைத்தொழில் சாமான்களை அது ஏற்றுமதி செய்கிறது. இங்கிலாந்தில் இறக்குமதி செய்கின்ற கைத்தொழில் பொருள்களின் தொகையை இதிலிருந்து குறைத்தால் தனது ஜனங்களுக்குத் தேவையான ஏராளமான சாமான்களுக்குமேலாக 53·7 கோடிப் பவுன் சாமான்கள் ஏற்றுமதி செய்கின்றது. இதிலிருந்து இங்கிலாந்தின் கைத்தொழில் சக்தி நன்கு விளங்கும்.

இந்திய மக்கள் சாதாரணமாக இங்கிலாந்துக்கு நம்மோடுள்ள பருத்தித்துணி வியாபாரத்தை பிரமாதப்படுத்துவது சகஜமாகும். இப்பருத்தித்துணி வியாபாரம் மிக்கப்பெரிதென்று நாம் சம்மதிக்கிறோம். ஏனென்றால் இங்கிலாந்தின் கைத்தொழில் சக்தியாகிய 53·7 கோடியில் 14·6 கோடி இத்தொழிலில் காணப்படுகின்றது; அதாவது உத்தேசம் 27%. இந்தியாவுக்கு இறக்குமதியாகின்ற பருத்தித் துணிகளின் மொத்தத்தொகை 4·76 கோடிப் பவுன் மாத்திரம்தான் என்பதை நாம் கவனிக்கவேண்டும். இவை எல்லாம் இங்கிலாந்திலிருந்து வந்தாலும் அது இங்கிலாந்தின் பருத்தித்துணி கைத்தொழிலில் 32% மாத்திரம்தான். இங்கிலாந்தின்

மொத்த கைத்தொழில் சக்தியோடு அளவிடுவோமானால் இது 10%க்குக் குறைவாகும். ஆதலால் இந்தியாவோடுள்ள துணிவியாபாரம் அறவே நின்றுவிட்டாலும் இங்கிலாந்து கெட்டுப்போகாது. இந்தியாவை கவனிக்குமளவில் இங்கிலாந்துத் துணி இவ்விடம் இறக்குமதி செய்யாவிட்டால் நாம் பெருத்த லாபம் அடையக்கூடும். நமது மொத்த இறக்குமதி சாமான்களில் 40%ம் இங்கிலாந்திலிருந்து வரும் சாமான்களில் 56%ம் நமது இராஜ்யத்திலேயே சித்தம் செய்வதால் நமது சுய ஆதார நிலைமை அதிகப்படும். இதனால் இங்கிலாந்தின் பொருளாதார நிலைமையில் மிகுந்த அபாயமொன்றும் ஏற்படாது. எனினும், அவ்விடத்தில் சிலஸ்தத்திலுள்ள ஜனங்கள் அதிக கஷ்டப்படக்கூடும் என்பதை நாம் நிராகரிக்கவில்லை. சொற்ப காலத்திற்கு முன் வந்த சமாசாரத்திலிருந்து மிஸ்டர் ஆன்டிரூஸ் லங்காஷயருக்கு சென்றிருக்கிறார் என்று அறிகிறோம். அவ்விடத்து வேலையாட்களுடன் தாமிருந்து இந்திய பஹிஷ்காரத்தால் அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைக் கண்ணுற்று காந்திஜிக்கு அவர் அறிவிப்பார். இந்தியா இராஜ்யத்திற்கு வேண்டிய துணிகள் நெசவு செய்யும் ப்லாத்பேர்ன் என்ற ஸ்தலத்திலும் டார்வின் என்ற ஸ்தலத்திலும் தொழிலாளர்கள் மிக்க வருந்துகிறார்களாம். லங்காஷயர் இந்திய வியாபாரத்தில் நெருங்கிய சம்பந்தமுடையது. அதன் கஷ்டங்களை மாத்திரம் கவனிப்பது முற்றிலும் சரியன்று. லாங்காஷயரின் கஷ்டத்தை கவனிக்காவிடில் இந்தியா தனக்கு வேண்டியபொருள்களை தானே செய்வதைப்பற்றி இங்கிலாந்து சற்றும் பயப்பட ஆவசியமில்லை. லாங்காஷயரிலுள்ள ஜனத்தொகை 49 லக்ஷம்தான். நமது இராஜ்யத்தில் ராயலசீமாவிலுள்ள கடப்பா, கர்நூல், பெல்லாரி, அனந்தப்பூர், சிற்றூர் ஜில்லாக்களிலுள்ள ஜனத்தொகைக்கு அது ஈடாகும். பருத்தித் துணி ஆலைகளில் வேலைசெய்யும் கூலியாட்களை மாத்திரம் கவனிக்குமளவில் அவர்களின் தொகை 5 லக்ஷம் மாத்திரம் தான். துணி விஷயத்தில் இந்தியா சுதந்திரமடையுமாகில் இவர்களுக்கு தற்பொழுதுள்ள நிலைமையிலிருந்து 32% குறைவான சௌக்கியமே இருக்கும். எனினும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய குடியரசு நாடுகளில் ஒன்றாகப்போவதும், 35 கோடி ஜனங்களுள்ளதும், அந்த ஜனங்களில் ஒவ்வொருவரின் வருமானம் ஆங்கிலேயரின் வருமானத்தில் ஏழில் ஒருபங்குகூட இல்லாமலுமிருக்கின்ற இவ்விராஜ்யத்திற்காக இச்சொற்ப கஷ்டத்தை இங்கிலாந்து பொறுத்துக்கொள்ளுமென்று நாம் எதிர்பார்ப்பது சற்றும் மிகையாகாது. இவ்விதம் செய்வதால் இங்கிலாந்திற்கு இந்தியாவோடுள்ள இதரவியாபாரங்கள் நிச்சயமாக அதிகரிக்கும்.

இவ்விடத்தில் இந்தியாவின் இறக்குமதியை சற்று ஆராய்வோம். ஏனென்றால் இந்தியாவில் இறக்குமதி சாமான்களில் பாதிக்கு சொற்பம் குறைவாக இங்கிலாந்திலிருந்து வருகிறது. இச்சாமான்கள் முற்றிலும் கைத்தொழில் சாமான்கள். பருத்தித் துணியே இதில் ஏராளமானது. நாம் 4·76 கோடிப் பவுன் இறக்குமதி செய்துகொண்டிருந்தோம். இப்பொழுது அது குறைவுபட்டிருக்கிறது. யந்தி





ரங்கள், ஆயுத சாமான்கள், இரும்புச் சாமான்கள், வண்டிகள், உலோக எண்ணைகள், பருத்தியால் செய்யப்படாத இதர துணி வகைகள், சர்க்கரை, உணவுப் பொருள்கள், பானீயங்கள், மருந்துகள், சாயங்கள் முதலியவைகள் நம் இராஜ்யத்தில் இறக்குமதியாகின்றன. இவைகள் எல்லாம் இங்கிலாந்திலிருந்து தான் வரவில்லை. அவை எவ்விடமிருந்து வந்தாலும் நமது தாரித்திரியத்தை ஒழிக்கவேண்டுமானால் நாம் முதன்முதலாக இந்நாட்டில் செய்யக்கூடும் பொருள்கள் ஒன்றுமே வெளிநாடுகளிலிருந்து தருவிக்கக்கூடாது. துணிவகையில் 4·76 கோடிப்பவுனும், இதரத் துணிகளில் 1·12 கோடிப் பவுனும், உணவு, பானீயங்களில் 1 23 கோடிப் பவுனும், சர்க்கரையில் 1·2 கோடிப் பவுனும், தானியங்களிலும் மாவுகளிலும் 8 கோடிப் பவுனும், ஆகமொத்தத்தில் 10 கோடிப் பவுன் சாமான்கள் இறக்குமதி செய்வதை நமது நாட்டில் தேசிய அரசாங்கம் இருக்குமாகில் நாம் தடை செய்யலாம். இவ்விதம் செய்வதால் இந்திய மக்களின் வருமானத்தில் 133 கோடி ரூ. அதிகப்படுத்தலாம்; அல்லது நமது தாரித்திரியத்தில் 133 கோடி குறைக்கலாம். இந்தியாவின் தற்கால நிலைமையில் இத்துணையாவது கட்டாயம் இப்பொழுது செய்யவேண்டுமென்பது நமது பலமான நோக்கமாகும்.

——

கேரளச் சந்தன சோப்பை வாங்குங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் சுகத்தையும் ஆனந்தத்தையுமளிக்கும் சோப்பு இதுவே.

கோடையில் குளிமையையும் பரிமளத்தையும் கொடுக்கும் வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கேரள சோப்பு இன்ஸ்டியூட்,
கள்ளிக்கோட்டை.

## சட்டாதாரமில்லாத பஞ்சாயத்துக்களும், காந்திஜியும்.

மேமீ 28உ "யங் இந்திய" பத்திரிகையில் "பஞ்சாயத்து" என்ற தலைப்பில் மஹாத்மா காந்தி சில ஸ்தலங்களில் காங்கிரஸார் ஸ்தாபித்திருக்கும் பஞ்சாயத்து விஷயமாக வெகு கடுமையாக எழுதியுள்ளார். காங்கிரஸார் இப் பஞ்சாயத்துக்களில் பெரிய மனிதர்களுக்கு கிரிமினல் அதிகாரங்களும் ஸிவில் அதிகாரங்களும் அளிக்கிறார்கள். காந்திஜியின் வியாசத்தை இப் பத்திரிகையில் மற்றோரிடத்து நாம் பிரசுரித்திருக்கிறோம். அவருடைய வியாசத்தில் ஒரு வாசகம் மிகவும் உசிதமாகத் தோன்றுகிறது. "மனம்போனதுபோல் ஸ்தாபிக்கப்பட்ட பஞ்சாயத்துகள் கட்டாயமாக அவைகளின் வேலைகளைச் சரிவரச் செய்யச் சக்தியற்றவைகளாகி சின்னாபின்னமாகப் போய்விடும்" என்று அவர் கூறுகிறார். இந்த அபிப்பிராயம் இச்சா (வாலண்டரி) பஞ்சாயத்துக்களை சம்பந்தித்தளவில் பொருந்தினதே. ஆனால் இந்தியாவிலுள்ள அனேக மாகாணங்களில் சட்டத்தால் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து போன்ற ஸ்தாபனங்களை நாம் காண்கிறோம். இவை பல வேலைகளை செய்வதற்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்து என்று கூறப்படுவது ஆட்சி பஞ்சாயத்தாகும். சில சீர்திருத்த வேலைகளையும், சுகாதார வேலைகளையும் அதன் எல்லைக்குள் கவனிக்கச் சட்டப்படி சில அதிகாரங்களை அது பெற்றிருக்கின்றது. அனேக ஸ்தலங்களில் ஏதோருவிதம் தேர்ந்தெடுத்த அங்கத்தினர்களோடு கூடிய நியாய விசாரணை பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. கூட்டுறவு பஞ்சாயத்துகள் என்ற ஸ்தாபனங்களின் முக்கிய உத்தேசம் பண சகாயத்திற்காயினும், ஜனங்களுக்கு இதர சமுதாய விஷயங்களிலும் உபகாரம் செய்ய அதிகாரம் அதற்கு இருக்கின்றது. இந்த அதிகாரம் அதன் சுபாவத்தாலும், சேர்த்து வைக்கும்போது நல நிதியாலும் அது செய்ய சக்தியுள்ளதாக இருக்கின்றது. இன்னும் நீர்பாசன பஞ்சாயத்துக்களும், காட்டுப் பஞ்சாயத்துகளும் சர்க்காரின் நிர்வாக அதிகாரத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கும் கூடுதலாக சட்ட ஆதாரமில்லாத காங்கிரஸ் பஞ்சாயத்தும் ஸ்தாபித்தால் அது அனாவசியமாக முடியலாம், அல்லது ஜனங்களுக்கு அனாவசியமான கவலையை உண்டாக்குவதாகலாம். மஹாத்மஜி கூறும் விதமே, அது கிரமமல்லாத பஞ்சாயத்தாகிவிடும் என்பது திண்ணமே. தற்காலத்தில ஸ்தல சுய ஆட்சி முற்றிலும் மந்திரிகளின் அதிகாரத்தில் அடங்கியுள்ளது. எதிர்காலத்தில் அவர்களின் அதிகாரம் கட்டாயமாக அதிகப்படும். மேலும் குறிப்பிட்ட அங்கத்தினரோடு கூடிய நியாயவிசாரணை பஞ்சாயத்துகளை அவசரமாகவும் கவனக் குறைவோடும் அமைக்கலாகாதென்று மஹாத்மாஜி கூறுவதோடு நாம் இசைகிறோம. இதன்றியும் நமது பத்திரிகையில் இதுகாலம் நாம் எழுதியுள்ளபடி கிராமங்களில் வழக்குத் தீர்ப்பது கட்டாய மத்தியஸ்த ஸ்தாபனத்தாலேயே நடத்தவேண்டுமென்று கூட நாம் கூறுவோம். இக் கட்டாய மத்தியஸ்த ஸ்தாபனங்களின் அங்கத்தினர்கள் இரண்டு கக்ஷிகாருடையவும் பொது சம்மதம் பெற்றவரும் கிராமப் பெரியோர்களின் லிஸ்டிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவருமாக இருக்கவேண்டும். வழக்குகளை தீர்ப்பதற்கு இவ்வித ஸ்தாபனம் ஏற்படுத்தினாலும், கிராமத்தை சம்பந்தித்த எல்லா





வேலைகளையும் கவனிப்பதற்கு ஒரே ஸ்தாபனமே ஏற்படுத்தவேண்டும். அதன் வேலைகளைச் சரிவர அது நிர்வகிக்கவேண்டுமென்ற உத்தேசம் நமக்கிருப்பின் அது சட்டப்படி அமைத்திருக்கப்படவேண்டும். ஆதலால் மகாத்மாஜியையும் காங்கிரஸாரையும் நாம் ஒன்று வேண்டிக்கொள்கிறோம். அவர்கள் முதன் முதல் ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனமான பஞ்சாயத்துகளை ஒழுங்கு முறைகளை எல்லாம் பிரயோகித்து கைப்பற்றவேண்டும். பின்பு இப்பொழுது அமுலிலிருக்கும் சட்டப்படி அவைகளுக்கு எந்த அதிகாரங்கள் எல்லாம் கிடைக்கக்கூடுமோ அவைகளை சம்பாதித்துக் கொடுக்கவேண்டும். அடுத்தபடியாக சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்டு பஞ்சாயத்துகளை உண்மையான சுய ஆட்சி ஸ்தாபனங்களாக்க சட்டங்களை திருத்தவேண்டும். இப்பஞ்சாயத்தின் பணஉதவிபாகமாக கூட்டுறவு சங்கங்களும் நியாய விசாரணை பாகமாகப் பொது சம்மதத்தோடு கூடிய கட்டாய மத்தியஸ்த ஸ்தாபனங்களும் இருக்கவேண்டும். இவ்விதமெல்லாம் ஏற்படும் பொழுது தான் நமது கிராமங்கள் சுதந்திரமுடையதென்று நாம் கூறலாம். அப்பொழுதுதான் பூரண சுயராஜ்யத்தை அடையும் வழியில் நாம் செல்லுகிறோம் என்று கருதக்கூடும்,

## நோட்டீசு அறிவித்தல்.

லோக்கல் போர்டு சட்டத்தின்படி பஞ்சாயத்துக்களை சம்பந்தித்த நோட்டீசுகள் பிரசுரம் செய்வதற்கு அனேக ரூல்கள் இருக்கின்றன. இவைகளைப்பற்றி 1931ஞு மேமீ 19உ போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் சர்க்கார் அறிக்கை செய்திருக்கிறார்கள். இவ்வறிக்கைகளில் கீழ் குறிப்பிடும் விஷயங்களெல்லாம் அடங்கியுள்ளன. அவையாவன :—ரெவினியூ தாலுகாவில் ஏதேனும் ஒரு பாகத்தை கிராமமென்று குறிப்பிடுவது ; அக்கிராமத்திற்கு பிரத்தியேக பெயர் கொடுப்பது ; கிராமத்திலடங்கிய ஒரு ஸ்தலத்தை அதிலிருந்து நீக்குவது ; அதற்கு சமீபத்திலுள்ளதும் அதே ரெவினியூ தாலுக்காவிலுள்ளதுமாகிய ஏதேனும் ஸ்தலங்களை அதில் சேர்ப்பது ; செக்ஷன் 5, சப் செக்ஷன் (1) ன்படி பிரசுரிக்கப்பட்ட ஏதேனும் அறிக்கையை ரத்து செய்வது ; கிராமத்தின் பெயரை நிர்ணயிப்பது ; பஞ்சாயத்தை ரத்து செய்வது ; அவ்விதம் ரத்து செய்யப்பட்டப் பஞ்சாயத்தை திரும்பவும் ஸ்தாபிப்பதை நிறுத்தி வைப்பது ; அவ்விதமுள்ள பஞ்சாயத்தைச் சென்னை லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின் கவனத்திலிருந்து நீக்குவது ; அவ்வித ஸ்தலத்தை கிராமமென்று நிர்ணயம் செய்திருந்த நோட்டீசை ரத்து செய்வது :— இவைகளாகும். இந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் ஆங்கில பாஷையிலும், சம்பந்தப்பட்ட ஜில்லாவிலுள்ள பிரதான நாட்டு பாஷையிலும் பிரசுரிக்கவேண்டுமென்று சர்க்கார் கூறியுளார். இது போதாதென்று நாம் கருதுகிறோம். இதற்கு மேலாக அவ்விடத்திலுள்ள ஒரு பிரதான நாட்டு பாஷை பத்திரிகையிலும், கிராமத்தில் முரசு அறைவித்தும் நோட்டீசுகளை விளம்பரம் செய்ய அரசாங்கத்தார் நிபந்தனை செய்யவேண்டும். கஞ்சாம், மலபார் போன்ற சில ஜில்லாக்களில் இரண்டு பிரதான பாஷைகள் காணலாம். ஆதலால், ஜில்லாவினுடைய பிரதான பாஷையில் பிரசுரிக்கவேண்டுமென்பதற்குப் பதிலாக சம்பந்தித்த ஸ்தலத்தின் பிரதான பாஷையில் பிரசுரம் செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டார் கட்டளையிடவேண்டும். அப்பொழுது தான் பிரசுரம் செய்வ

தின் பலன் பூரணமாக லபிக்கும். ஏதேனும் ஒரு ஸ்தலத்தில் பிரதான பாஷை என்னவென்று கண்டு பிடிப்பது பிரயாசமானால் அரசாங்கத்தார் அவர்களின் கட்டளையை "ஜில்லாவினுடைய பிரதான நாட்டு பாஷையிலோ, பாஷைகளிலோ பிரசுரம் செய்யவேண்டும்" என்று திருத்திக்கொள்ளலாம்.

## தரம் பிரிக்கும் கமிட்டி.

1931ஆு மே மீ 19உயில் பிரசுரிக்கப்பட்ட போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் கவர்ன்மெண்டார் ஒரு அறிக்கை செய்திருப்பதை நாம் கவனிப்போமாக. ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள ரஸ்தாக்களையும் ஆஸ்பத்திரிகளையும் வைத்திய சாலைகளையும் தரம்பிரிப்பதற்கு கமிட்டிகள் எவ்விதம் ஏற்படுத்தவேண்டுமென்பதற்கு ஒரு ரூல் சர்க்கார் கொண்டுவந்திருக்கின்றனர். இந்த ரூல் பிரசுரித்திருப்பது சப் செக்ஷன் 1-ன் படியும் செக்ஷன் 199 சப் செக்ஷன் 2, கிளாஸ் (a)-ன் படியும், ஷெடியூல் V ரூல் 3 சப் ரூல் 1-ன்படியும் ஆகும். இந்த ரூலில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் தரம் பிரிக்கும் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தக் குறிப்பிட்டிருக்கிறது. அதில் ஜில்லா போர்டு பிரசிடெண்டும் உபப் பிரசிடெண்டும், அந்த ஜில்லாவிலுள்ள தாலுகா போர்டுகளின் பிரசிடெண்டுகளும் அங்கத்தினராவார்கள். ஷெடியூல் V ரூல் 3, சப் ரூல் 1 கீழ் கண்டவாறு இருக்கின்றது.

"ரஸ்தாக்களை ஜில்லா தாலுகா ரோடுகள் என்றும், சத்திரங்களை ஜில்லா தாலுகா சத்திரங்களென்றும், ஆஸ்பத்திரிகளையும் வைத்திய சாலைகளையும் ஜில்லா ஆஸ்பத்திரி, வைத்தியசாலை என்றும் கிராம வைத்தியசாலை என்றும் பிரிப்பதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தவேண்டும். அந்தக் கமிட்டியில் ஜில்லா போர்டுக்கும் தாலுக்கா போர்டுகளுக்கும் சரியான அளவில் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும்.'

மேல் குறிப்பிட்ட ரூல் பிரசுரம் செய்தபொழுது ஒரு விஷயத்தைப் பற்றி அரசாங்கத்தார் அவர்களின் சட்ட உபதேசர்களின் அபிப்பிராயத்தை நாடினார்களோ இல்லையோவென்று நமக்குத் தெரியவில்லை. அதாவது இந்த கமிட்டிகளில் ஜில்லா தாலுக்கா போர்டுகளின் பிரதிநிதிகளன்றி இதர பிரதிநிதிகளுக்கு ஸ்தானம் கொடுக்கலாமா அல்லது கூடாதா? இக்கமிட்டியின் தீர்மானங்களால் பஞ்சாயத்துக்கள் அநேக லாபமோ அல்லது நஷ்டமோ அடையலாம். ரஸ்தாக்களையும் சத்திரங்களையும் வைத்தியசாலைகளையும் தரம் பிரிப்பதில் பஞ்சாயத்துக்களுக்கும் மிக்கப் பொறுப்பு இருக்கின்றது. அவைகளின் எல்லையிலுள்ள எல்லா ஸ்தலங்கள்பேரிலும் பஞ்சாயத்துக்களுக்கே கடைசி சுதந்திரமிருக்கின்றது. ஆதலால், இக்கமிட்டிகளில் அவைகளுக்கும் சொற்ப அதிகாரமாவது—அது எவ்வளவு குறைவாகவிருந்தாலும் சரி—கொடுக்கவேண்டும். மீண்டும் கவர்ன்மெண்டார் லோக்கல் போர்ட் சட்டத்தை ஆராய்ந்து ஜில்லா கமிட்டிகளில் பஞ்சாயத்துக்களின் பிரதிநிதிகளையும் சேர்க்கவேண்டும். பஞ்சாயத்தின் சார்பாக உதார மனதுடன் இருப்பதற்கும், அவைகளுக்கு இக்கமிட்டிகளில் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கும் ரூல் 3, சப் ரூல் 1, சற்றும் தடை செய்யாதென்பது நம்முடைய திட்டமான நம்பிக்கை.

## தாவர நெய்யின் கெடுதல்.

நம் நாட்டினரின் நலத்தை கருதுவோரெல்லோரும் தாவர நெய்யின் குணகுணங்களை ஆராய்ச்சி செய்கிறார்கள். இந்த நெய் அனேக நாமதேயத்தோடு நம்





நாட்டில் இறக்குமதி செய்யப்படுகின்றது. மத்திய கவர்ன்மெண்டாரும் சில உத்தியோகப்பற்றற்றவரும் இச்சாமானில் தீங்கொன்றும் இல்லை என்று எண்ணுகிறார்கள். அவர்களின் அபிப்பிராயப்படி இது வியாபார சரக்குகளில் ஒன்றாகும். அதனால் இதை விற்பனை செய்வதற்கு தடை ஒன்றும் ஏற்படுத்தக்கூடாதாம். எனினும் பஞ்சாப் கவர்ன்மெண்டார் இந்த நெய்யை அந்த மாகாணத்தில் கொண்டுவரக் கூடாதென்று கட்டளை யிட்டிருக்கிறார்கள். அவர்களின் புத்தியை நாம் மெச்சுகிறோம், இந்த நல்ல புத்தியானது இதர மாகாணங்களிலும் பரவ வேண்டும். நமது இராஜ்ய ஜனங்களின் நன்மையைக் கருதுங்கால் இந்தத் தாவர நெய் ஓரிடத்திலுமே இறக்குமதி செய்யப்படக்கூடாது. தாவர நெய்யின் குணகுணங்களை ஆராய்சி செய்யும் பொருட்டு கல்கத்தா கார்ப்பரேஷன் சில ஆராய்சி நிபுணர்களை நியமித்திருந்தது. அவர்களிடமிருந்து இப்பொழுது யாதாஸ்துகள் கிடைத்திருக்கின்றன. ராய் பஹதூர் ஹரிநாத் கோஷ் அவர்கள், M. D.-க்கு அனுப்பப்பட்ட கேள்விகளின் விடைகள் விசேஷமாயிருப்பதால் நாம் அவைகளை கீழ் குறிப்பிடுகிறோம். கல்கத்தா கார்பரேஷனின் கேள்விகளாவன:—

(*a*) வனஸ்பதி நெய் அல்லது தாவர நெய் தேகாரோக்கியத்திற்குக் கெடுதலா?

(*b*) இந்த சாமானத்திற்கு போஷிக குணமுண்டா?

(*c*) மனிதனுக்கு என்னென்ன வியாதிகளை இது உற்பத்தி செய்யக்கூடும்?

(*d*) சாதாரண நெய்க்குப்பதிலாக இதை உபயோகிக்கலாமா?

(*e*) ஆஹாரமாக உபயோகிக்க யோக்கியதை இல்லையானால் இதன் இறக்குமதியை நிறுத்த உத்தரவு செய்யவேண்டாமா?

(*f*) இந்த நெய்யும் சாதாரண நெய்யும் ஒன்றுபோல் தோற்றுவதால் இதை மணத்தினாலாவது அல்லது பார்வையினாலாவது எவ்விதம் இலகுவில் தரம் பிரிக்கலாம்.

(*g*) பெரிபெரி என்ற வியாதி நகரத்தில் அதிகரித்திருப்பதற்கு இந்த நெய் அதிகமாக உபயோகிப்பது எவ்விதத்திலாவது காரணமாகுமா?

(*h*) இதன் இறக்குமதியை எவ்விதம் முற்றிலும் நிறுத்தலாம்?

அந்த டாக்டரின் அபிப்பிராயத்தில் வனஸ்பதி நெய் அல்லது தாவர நெய் ஆரோக்கியத்திற்கு ஹானியன்று ஆனால் சாதாரண நெய்யின் போஷிக குணம் அதற்கு இல்லை. சாதாரண நெய்யில் பரிமள குணங்கள் இருக்கின்றன. நெய்யின் மணமும், அதன் ஜீர்ண சக்தியும், ஜீர்ணமான உணவில் புழுக்கள் ஒன்று முண்டாகாமல் பாதுகாக்கும் தன்மையும் இந்த பரிமள குணத்தின் பயனே. சாதாரண நெய்யில் வைட்டமின் என்று கூறுகிற போஷிக வஸ்துக்கள் இருக்கின்றன. அதன் குணத்தால் மனிதன் சாதாரண தொத்துவியாதிகளை போராடுவதற்குத் திறமுள்ளவனாகிறான். இந்த இரண்டு குணங்களும் தாவர நெய்க்கில்லாததால் அது சுகாதார முறைகளுக்கு விரோதமானது. சாதாரண நெய்க்குப் பதிலாக இதை உபயோகிக்கக்கூடாது என்று Dr. ஹரிநாத் கோஷ் பலமாகக் கூறுகிறார். அதன் இறக்குமதியை சட்டப்படி நிறுத்தவேண்டுமென்று அவர் அபிப்பிராயப்படுகிறார்.

வேறு எந்த வழியாலும் இக்கெட்ட வஸ்துவை அகற்றுவது அசாத்தியமென்பது அவருடைய பலமான கொள்கை.

## டி. ஜி. ருதர் போர்டுக்கு வழிவிடல் வாழ்த்து

குண்டூர் ஜில்லாவைச் சேர்ந்த கிராமப் பஞ்சாயத்துக்களின் பிரதிநிதிகள் ஜம்மலபாலம் என்ற இடத்தில் 12-4-31-ல் கூட்டம் கூடினார்கள். பஞ்சாயத்துக்களின் ரெஜிஸ்டிரார் ஜனரல் டி ஜி. ருதர் போர்டு, C.I.E.,I.C.S.-க்கு அவர் இங்கிலாந்துக்குப் போகுமுன் அப்பிரதிநிதிகள் ஒரு வாழ்த்துப் பத்திர மளித்தார்கள். அவர் மேல் ஜனங்களுக்குள்ள பேரன்பையும் அபிமானத்தையும் காண்பிப்பதற்காக அப் பத்திரிகையின் சில பாகத்தை இவ்விடம் நாம் எடுத்துக் கூறுகிறோம்.

"தாங்கள் பஞ்சாயத்து இலாகாவின் தலைவராக இருக்கும்பொழுது கிராமங்களில் சீர்திருத்த வேலைகளுக்கு ஏராளமான பணம் கொடுப்பது என்ற திட்டத்தை கைக்கொண்டீர்கள். ஆதலால், தாங்கள் கிராம ஜனங்களின் க்ஷேமத்தையும் சௌக்கியத்தையும் அபிவிருத்தி செய்து அவர்களுக்கு வெகு சந்தோஷமளித்தீர்கள். கவர்ன்மெண்டாருடன் தமது செல்வாக்கை உபயோகித்து கிராமங்களில் தற்காலமுள்ள ஜல சப்ளையை ரிப்பேர் செய்வதற்கும், சீர்திருத்தம் செய்வதற்கும் சர்க்காரிடமிருந்து உதவியை பெற்றீர்கள். இந்த ஜில்லாவைப்பற்றி தாங்கள் நன்குணர்ந்து 2 லக்ஷம் ரூபாய்க்கு எஸ்டிமேட்டுகளை அனுமதித்தீர்கள். மேலும் தண்ணீர் இல்லாத பெத்தநந்திப்பாடு என்ற ஸ்தலத்தில் ஒருபோர் ஹோல் கிணறு வெட்டவும் சர்க்காரின் உதவி பெற்றீர்கள். சர்க்காரின் பதிவு அமாந்தத்தை பூண்டோடு ஒழித்து வேலைகள் சீக்கிரத்தில் செய்து முடிப்பதற்கு ஏற்பாடு செய்தீர்கள். இவ்விதம் பஞ்சாயத்துக்களின் தேவைகளை வெகு சிரத்தையோடு தாங்கள் கவனித்ததால், பஞ்சாயத்துக்களுக்கு புத்துயிரும் தங்களுடைய சுறுசுறுப்பும் உண்டாயிற்று. பெரும்பதவியில் இருக்கிறோமென்ற எண்ணத்தை முற்றிலும் ஒழித்துவிட்டு, குடிமக்களுடன் அவர்களுக்குச் சமானராய் தாங்கள் பழகியதால் அவர்களின் ஹிருதயத்தை கவர்ந்துவிட்டீர்கள் என்றே கூறவேண்டும்."

## பஞ்சாயத்துக்கள்.

### (Mr. M. K. காந்தி)

பஞ்சாயத்து என்ற பெயரை கேட்ப்போருக்கு பண்டைக்கால ஞாபகங்கள் அனேகம் தோன்றும். அது நல்ல பெயர். கிராமத்தார்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து அங்கத்தினர்களோடு கூடிய சபை என்பது அதன் பொருள். இந்தியாவிலுள்ள எண்ணிறந்த கிராமக் குடியரசுகள் ஒவ்வொன்றும் பஞ்சாயத்து முறையாலேயே ஆண்டுவரப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் தயையில்லாத கிஸ்துவரியை அவைகளுக்குப் பொறுக்கமுடியவில்லை. ஆதலால் அவை அறவே அழிந்து போயின. தற்காலத்தில் பஞ்சாயத்துக்களை புதிதாக ஸ்தாபிப்பதற்கு காங்கிரஸார் சிரமப்படுகின்றனர். அவர்களின் சிரமங்கள் ஒழுங்கற்றவைகள் என்றே கூறவேண்டும். கிராமங்களிலுள்ள பெரியோர்களுக்கு சிவில் அதிகாரங்களும் கிரிமினல் அதிகாரங்களும் கொடுக்க அவர் உத்தேசிக்கிறார்கள். முதன் முதலில் 1921ஆ-ல் இவ்விதம் அவர்கள் முயர்ச்சி எடுத்துக்கொண்டனர். அம்





முயற்சி தோல்வியடைந்தது. இப்பொழுதுள்ள சிரமும் ஒழுங்கு முறையில்—சாஸ்திரிக முறையில் என்றுகூடக் கூறுவேன்—செய்யாவிட்டால் 1921ஆ-ல் செய்த பிரயத்தினத்தின் கதியை அடையும் என்பது நிச்சயம்.

நயினிடாலிலிருக்கும் பொழுது ஐக்கிய மாகாணத்திலுள்ள சிலவிடங்களில் பலாத்காரமான கற்பழித்தல்போன்ற கிரிமினல் வழக்குகளைக்கூட காங்கிரஸாரால் ஏற்படுத்தப்பட்ட இப்பஞ்சாயத்துக்கள் விசாரணை செய்ததென்று நான் கேள்வியுற்றேன். இப்பஞ்சாயத்தார்கள், லாபத்தை உத்தேசித்தோ அல்லது அவர்களின் அறியாமையினாலோ விசேஷமான சில தீர்ப்புகளை விதித்தார்களாம். மிக்க தூரத்திலிருக்கும் ஆஸாமிலிருந்து கிடைத்திருக்கும் சமாசாரத்தை கீழ் குறிப்பிடுகிறேன்.

"சாபர்முக் என்ற ஸ்தலத்தில் கவர்ன்மெண்டாருடைய ஆட்சி ஸ்தாபனங்களுடன் போட்டிசெய்வதுபோன்ற வேறொரு ஸ்தாபனத்தை காங்கிரசார் ஏற்படுத்தி இருப்பதாக உண்மையில் தெரியவருகிறது. இந்த ஸ்தாபனத்திற்கு ஸிவில் வழக்குகளையும், கிரிமினல் வழக்குகளையும் கேட்டு தீர்ப்பு கொடுக்கும் வேலையுண்டு. சாபர் முகத்தின் சமீபத்திலுள்ள வேறு சிலவிடங்களில் கூட இந்த ஸ்தாபனத்தின் கிளைகள் (ப்ராஞ்சு ஆபீசுகள்) இருக்கின்றன. அவைகளும் இதுபோன்ற கேசுகளை தீர்மானம் செய்கின்றன. சாபர் முகத்திலுள்ள ஆபீஸில் கிரிமினல் வழக்குகளுடையவும் சிவில் வழக்குகளுடையவும் கணக்குப் பட்டிகையும் தயார் செய்யப்படுகின்றது. கிரிமினல் வழக்குகளுக்கு பிழையிடுவதாகவும் சிவில் வழக்குகளுக்கு டிக்கிரி கொடுக்கிறதாகவும் தெரியவருகிறது. சில கேசுகளில் இப்பஞ்சாயத்தின் டிக்கிரி தீர்ப்பின்மேல் சொத்துக்களைக்கூட ஜப்தி செய்யப்பட்டிருக்கிறதாம்."

இவை எல்லாம் உண்மையாக நடந்திருக்குமாகில் மிகவும் கெடுதியை விளைக்கும். ஒழுங்கு முறைகளில் ஸ்தாபிக்கப்படாதப் பஞ்சாயத்துக்கள் அவைகளின் வேலைகளை சரிவர செய்ய சக்தியற்றவைகளாகி சின்ன பின்னமாகப் போய்விடும் என்பது திண்ணம். ஆதலால் கிராமத் தொண்டர்கள் கீழ்க் குறிப்பிடும் முறைகளை அனுசரிக்கவேண்டுமென்று நான் கூறுகிறேன்,—

(1) மாகாண காங்கிரஸ் கமிட்டியின் எழுத்து மூலமான சம்மதத்தின் மேலன்றி ஒரு பஞ்சாயத்தையும் ஏற்படுத்தக் கூடாது.

(2) பஞ்சாயத்தை முதன்மையாக ஸ்தாபிக்கும்பொழுது அந்த ஸ்தலத்தில் முரசு அடித்து பொதுக்கூட்டம் கூட்டி அக் கூட்டத்தில் பஞ்சாயத்தார்கள் தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

(3) தாசில் காங்கிரஸ் கமிட்டி அந்த பஞ்சாயத்தை ஸ்தாபிப்பதற்கு சிபார்சு செய்யவேண்டும்.

(4) இவ்விதம் ஸ்தாபிக்கப்பட்டப் பஞ்சாயத்துக்களுக்கு கிரிமினல் அதிகாரங்கள் இருக்கலாகா.

(5) அது சிவில் வழக்குகளை விசாரிக்கலாம், ஆனால் இது கட்சிகளின் சம்மதத்தின் மேல் மாத்திரம் தான் கூடும்.

(6) ஒருவரையாவது வழக்குகளை அதன் முன் கொண்டுவர வற்புறுத்தக் கூடாது.

(7) ஒரு பஞ்சாயத்திற்கும் பிழைவிதிக்க அதிகாரம் கொடுக்கக்கூடாது. அதன் சிவில் தீர்ப்புகளின் பலம் அத்தீர்ப்புகளின் நீதியையும், நடுவு நிலைமையையும், கட்சிகளின் சம்மதத்தையும் பொறுத்திருக்கும்.

(8) கட்சிகளின்மேல் ஒருவிதமான சமுதாய பகிஷ்காரமும், வேறெந்த பகிஷ்காரமும் பிரயோகிக்கக் கூடாது.

(9) ஒவ்வொரு பஞ்சாயத்தும் கீழ்க்குறிப்பிடும் வேலைகள் செய்ய கடமைப் பட்டிருக்கின்றன.

(a) கிராமத்திலுள்ள ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் கல்வி கற்பித்தல்.

(b) கிராமத்தின் சுகாதாரம்.

(c) அதன் வைத்தியத் தேவைகள்.

(d) கிராமக்குண்டு குளங்களை நன்றாக வைத்துக் கொள்வது.

(e) தீண்டப்படாது என்று கூறப்படும் ஜனங்களின் முன்னேற்றத்தையும் அவர்களின் தினசரித் தேவைகளையும் கவனித்தல்.

ஏதேனும் பஞ்சாயத்து க்ளாஸ் 9.ல் குறிப்பிட்ட வேலைகளை அது தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாதத்திற்குள் தக்க காரணமன்றி செய்யாவிட்டாலும், ஜனங்களின் ஆதரவை இழந்துவிட்டாலும், அல்லது வேறெந்த காரணம் பற்றியாவது பிரயோஜன மற்றதென்று மாகாண காங்கிரஸ் கமிட்டிக்குத் தெரியவந்தாலும் அதை மாகாண காங்கிரஸ் கமிட்டி நீக்கிவிட்டு வேறொன்றை தேர்ந்தெடுக்க ஏற்பாடுகள் செய்யலாம்.

பஞ்சாயத்து ஸ்தாபனத்தின் ஆரம்பத்தில் அவைகள் பிழை தீர்ப்பு விதிக்கலாகாதென்று கூறுவதும் சமுதாய பகிஷ்காரம் கட்சிகளின்மேல் அனுஷ்டிக்கக் கூடாதென்று கூறுவதும் இன்றியமையாததாகும். கிராமாந்திரங்களில் சமுதாய பகிஷ்காரமென்ற ஆயுதத்தை கல்வியில்லாதவர்களும் பழிக்கஞ்சாதவர்களும் கையாளுவதில் பெருத்த அபாயங்கள் நேரிடும். பிழைவிதிப்பதும் இதைப் போலவே சச்சரவுகளை கிராமங்களில் கிளப்பி பஞ்சாயத்து ஏற்படுத்துவதின் உத்தேசத்தை—அதாவது ஜனச் சமாதானத்தை—முற்றிலும் ஒழித்துவிடும். எந்த விடத்தில் க்ளாஸ் 9-ல் கூறப்பட்ட நன்மை வேலைகளை நன்றாகச் செய்வதால் பஞ்சாயத்திற்கு பொது ஆதரவும் கீர்த்தியும் கிடைக்கின்றதோ அவ்விடத்தில் அதன் தீர்ப்புகளுக்கும் அதிகாரங்களுக்கும் மதிப்பு கட்டாயமாக இருக்கும். இவ்விதம் கிடைக்கக்கூடும் அனுமதிக்கு நிகரில்லை. அதை அப்பஞ்சாயத்தினிடமிருந்து யாராலும் எடுக்கவும் முடியாது.

## மேற்கு கோதாவரியில் தாதே பள்ளிக்கூடம் தாலுக்காவைச் சேர்ந்த கிராமப் பஞ்சாயத்துக்களின் ஆட்சி ரிப்போர்ட்.

இந்த தாலுக்காவிலுள்ள மொத்தம் 111 கிராமங்களில் 44 கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இப்பஞ்சாயத்துகளில் 35 எண்ணம் கிராம ஜனங்களின் பொருளாதார அபிவிருத்தியிலும் நன்னடத்தையிலும்





மிகவும் சிரத்தை செலுத்துகின்றன. இதர பஞ்சாயத்துக்கள் பேரளவில் மாத்திரம் நிற்கின்றன. விசேஷ சிரத்தை அவைகள் காண்பிக்கவில்லை. 35 பஞ்சாயத்துக்கள் கீழ் குறிப்பிட்ட விதங்களில் வேலை செய்கின்றன.

| வருஷம். | பஞ்சாயத்துக்களின் எண்ணம். | வேலை விஷயம். | சர்க்கார் உதவிப் பணம். | மொத்தச் செலவு. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| 1927_28 ... | 3 | ரஸ்தா ... | 461 | 1,000 |
| ,, ... | 3 | ஜல சப்ளை ... | 1,357 | 2.776 |
| ,, ... | 3 | புஸ்தகசாலை ... | 318 | ... |
| 1928_29 ... | 7 | ரஸ்தா ... | 4,897 | 9,625 |
| ,, ... | 7 | ஜல சப்ளை ... | 1,100 | 2,265 |
| ,, ... | 3 | புஸ்தகசாலை ... | 269 | ... |
| 1929_80 ... | 22 | ரஸ்தா ... | 20,034 | 87,782 |
| ,, ... | 22 | ஜல சப்ளை ... | 8,969 | 27,282 |
| ,, ... | 9 | புஸ்தகசாலை ... | 475 | ... |
| 1930_31 ... | 27 | ரஸ்தா ... | 29,123 | 1,20,472 |
| ,, ... | 27 | ஜல சப்ளை ... | 8,969 | 27,282 |
| ,, ... | ... | புஸ்தகசாலை ... | 160 | ... |

மேல் குறிப்பிட்ட புள்ளி விவரங்களிலிருந்து கிராமங்களுக்குத் தேவையான நல்ல ரஸ்தாக்களும் ஜல சப்ளையும் வெகு சீக்கிரத்தில் அமைக்கப்படுகிறதென்று நன்கு விளங்குகிறது. டெல்டா பூமிகளில் மெட்டல் ரஸ்தாக்களும் இதர பிரதேசங்களில் மண் ரோடுகளும் ஸ்தாபிக்கப்படுகின்றன. ஜல சப்ளை விஷயமாக பஞ்சாயத்தார்கள் சுத்த ஜல குளங்களை ஆழமாக்குகிறார்கள். குடி ஜல குளங்களுக்கு உள்மடைகளும் வெளி மடைகளும் நிர்மிக்கிறார்கள். ஆனால் இந்த சௌகரியங்கள் கொண்டு கிராமங்களின் ஜல கஷ்டங்கள் முற்றிலும் தீரவில்லை. கோடைக் காலத்தில் போதுமான ஜல சப்ளைக்கு டெல்டா பிரதேசங்களில் குளங்களும், குன்று பிரதேச கிராமங்களில் கிணறுகளும் அமைப்பது மிகவும் இன்றியமையாததாகும். புஸ்தகசாலைகளுக்கு சர்க்கார் கொடுக்கும் பொருளுதவியைக் கவனிக்குமளவில் அது மிகவும் குறைவென்றே கூறவேண்டும். இந்த தாலுகாவிலுள்ள 44 பஞ்சாயத்துக்களில் 23 எண்ணத்துக்கு சர்க்கார் கிராண்டு இதுகால் கிடைக்கவில்லை. 9 பஞ்சாயத்துக்களுக்கு ஒரே ஒரு தடவை மாத்திரம் தான் கிடைத்திருக்கிறது. 2 எண்ணம் இரண்டு தடவைகள் பெற்றிருக்கின்றன. ஒரே ஒரு பஞ்சாயத்து மாத்திரமே 1927-28 முதல் இவ்வருஷம் வரை தடையில்லாமல் கிராண்டு பெற்றிருக்கின்றது. அஞ்ஞான இருளை அகற்றுவதற்கேற்ற கருவிகளில் பிரதானமானது புஸ்தகசாலை என்று எல்லோரும் அறிந்த விஷயமே. இத்தத்துவத்தை தாதே பள்ளிகூடம் தாலுக்கா போர்டார் நன்குணர்ந்து 1929-30-ம் வருஷத்தில் 8,800 ரூபாய் செலவு செய்து ஒரு புஸ்தக நிலையமொன்று ஸ்தாபித்

தார். இந்தச் செலவின் ஒரு பங்கை கொடுக்கவேண்டுமென்று சர்க்காரை வேண்டிக் கொண்டதில், அவர்கள் அதற்கு இசையவில்லை. 1930-31-ம் ௵த்தில் புஸ்தக சாலைக்கு 400 ரூபாய் சர்க்கார் கிராண்டு கொடுத்தார்.

பஞ்சாயத்துக்களுக்கு இன்னமொரு குறையும் இருக்கிறது. தற்காலத்தில் பொது வேலைக்கு பஞ்சாயத்துக்கள் பாதிப் பணம் கொடுக்குமாகில் சர்க்கார் பாதிப் பணம் கொடுப்பார்களென்ற ரூல் இருக்கிறது. இந்த ரூல் பிரயோசனகரமான வேலைகள் செய்வதற்கு இடையூறாக இருக்கிறது. பஞ்சாயத்துக்கள் பாதிப் பணம் கொடுப்பதற்கு சக்தியற்றவைகள். கிராமங்களுக்கு இன்றியமையாததான நல்ல ரஸ்தா, நல்ல ஜலம், கக்கூசு, புஸ்தகசாலை போன்றவைகள் ஸ்தாபிப்பதிலாவது இந்த ரூலை சர்க்கார் நிஷ்கருஷையாக அனுசரிக்கக்கூடாது.

வயது முதிர்ந்தோருக்கு கல்வி கற்பிக்கிறதற்காக 2 சூபர்வைசர்கள் இத்தாலுகாவில் நியமிக்கப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் தாதபேள்ளிகூடம் தாலுகா போர்டாராலும், மற்றொருவர் மேற்கு கோதாவரி ஜில்லா போர்டாராலும் நியமிக்கப்பட்டிருக்கிறார். 1929-ம் வருஷத்தில் மூன்று வாரத்திற்கு ஒரு கோடைக்கால பள்ளிக்கூடம் நடத்தப்பட்டது. அதில் 70 உபாத்தியாயர்களுக்கு கிராம புனருத்தாரண விஷயங்கள் கற்பிக்கப்பட்டன. சில கிராமங்களில் வயது முதிர்ந்தோருக்கு பயிர்ச்சி அளிப்பதற்கு இராப்பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் இப்பிரயத்தினம் முற்றிலும் பலமடையவில்லை. உபாத்தியாயர்கள் வேண்டுமளவு கவனம் செலுத்தாததினால் கோடைக்கால பள்ளிக்கூடம் நிறுத்தப்பட்டது. தாலுக்கா போர்டு சூபர்வைசரின் உத்தியோகமும் நின்றுவிட்டது. 1930-ம வருஷத்தில் ஆடு மாடுகளுக்கு மும்முரமான வியாதி ஏற்பட்டதால் விவசாயிகளுக்கு வெகு நஷ்டம் உண்டாயிற்று. இதை உத்தேசித்து அரசாங்கத்தார் இந்த தாலுக்காவில் மிருக ஆஸ்பத்திரி ஒன்று ஸ்தாபிக்க அனுமதித்திருக்கிறார்கள்.

மேல் குறிப்பிட்டதிலிருந்து ஒரு அனுபவம் கிடைக்கின்றது. ஜில்லா போர்டாரும், தாலுக்கா போர்டாரும், பஞ்சாயத்தார்களும் ஒத்துழைப்பாராகில் கிராமங்கள் கட்டாயமாக அபிவிருத்தியை அடையும்.

## கிராமங்களில் பயிர்ச்சி பெற்ற மருத்துவச்சிகளின் தேவை.

(By Mr. Subbaraya Baliga, L.M. & S., D.T.M.)

(ஜில்லா சுகாதார ஆபீஸர், தென் கன்னடம்.)

இவ்வுலகில் எத்தொழிலாயினும் அதை முற்றிலும் கற்காதவர்கள் செய்வார்களானால் அளவிடக்கூடாத கஷ்டங்களை அவர்கள் விளைவிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எல்லாத் தொழிலைக் காட்டிலும் கிராம மருத்துவச்சிகளின் விஷயத்தில் இந்தத் தத்துவத்தை நாம் நன்கு கவனிக்கவேண்டும். ஏனென்றால், ஜனங்களின் வாழ்வு இவர்களின் சிரத்தையை பொறுத்திருக்கிறது. நமது கிராமங்களில் இவ்விதம் பொறுப்பு வாய்ந்த வேலையை பிழைப்பில்லாதவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். இவர்களை தடை செய்வதற்கும் நமது இராஜ்யத்தில் சட்டங்களில்லை. கிராமாந்தரங்களில் இவர்கள் விளைவிக்கும் அனர்த்தத்துக்கு அளவில்லை. இதிலெல்லாம் வைத்து விசனிக்கவேண்டியது என்னவெனின் வேறொரு உதவியுமின்றி நமது கிராமத்தான் இருக்கும் நிலைமையே. மேலும் அரசாங்கத்தாரும்,





லோக்கல் போர்டாரும் பணக்கஷ்டத்தால் இதுவரையிலும் கிராமாந்தரங்களில் படித்த வைத்தியர்களை ஏற்படுத்தாதது மிகவும் பரிதாபகரமானதாகும்.

கொஞ்ச காலத்திற்கு முன் கிராமாந்தர மருத்துவச்சிகளுக்கு பயிர்ச்சி அளிக்க ஜில்லா தலை நகரத்திலுள்ள பெண்கள் ஆஸ்பத்திரியில் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அது சரியாக நடக்கவில்லை. தாய்களுக்கு அவர்களின் வீடுகளிலிருந்து வெகு தூரம் போகவேண்டியிருந்தது. ஆஸ்பத்திரியிலும் அவர்களை அனுதாபத்தோடு கவனிக்கவில்லை. அவர்களுக்கு படிப்பித்ததும் அவர்களின் தாய் பாஷையிலன்று. ஆதலால், அவர்களுக்கு இந்த பயிர்ச்சியில் சற்றும் உற்சாகம் ஏற்படவில்லை.

இவ்விஷயத்தைப்பற்றி நான் ஆலோசித்துக்கொண்டிருந்தேன். ஒரு நாள் இரயில் நான் புத்தூர் தாலுக்கா போர்டு பிரசிடெண்டு மிஸ்டர் சிவராவுவைச் சந்தித்தேன். சுகாதார விஷயங்களைப்பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். சுற்றுமுள்ள கிராமங்களிலுள்ள தாய்களுக்கு பயிர்ச்சி அளிப்பதற்கு நான் தயாராயிருப்பதையும் அவருக்குத் தெரிவித்தேன். இதைக் கேட்டவுடன் மிஸ்டர் சிவராவ் மிகவும் ஆவலோடு 1931௵ மார்ச்சு௴ 16௳ முதல் 18௳ வரை பெல்தன்காடி என்ற ஸ்தலத்தில் வைத்து தாய்களுக்கு கற்பித்துக் கொடுக்க ஏற்பாடு செய்தார்

அதன்படி அவர்களுக்கு காண்பித்துக் கொடுக்கத் தேவையான சாதனங்களுடன் நான் குறிப்பிட்ட தினத்தில் பெல்தன்காடி சென்று சேர்ந்தேன். அவ்விடத்திலுள்ள ஆஸ்பத்திரியில் பாடம் கற்பித்தேன். இதற்கு மெடிகல் ஆபீஸரும் பஞ்சாயத்து சூபர்வைஸரும் மிகவும் உதவிபுரிந்தார்கள். மார்ச்சு௴ 16௳யன்று 8 பேர்கள் வந்திருந்தார்கள். அடுத்த தினத்தில் 2 பேர் கூட வந்து சேர்ந்தனர். எல்லோரும் அறியும்பொருட்டு நான் துளு பாஷையில் பிரசங்கம் செய்தேன். தினந்தோறும் காலையிலும் சாயங்காலமுமாக இரண்டுமணி நேரம் பிரசங்கம் நடந்து வந்தது. இவ்விதம் 6 பிரசங்கங்கள் நடைபெற்றன. அழுக்காலும், பிரசவ காலத்தில் அனாவசியமாக சிகிச்சை செய்வதாலும் நேரிடுகின்ற தீமைகளை நான் நன்றாக எடுத்துரைத்தேன். சாதாரண பிரசவத்திற்கும் பிரயாசமான பிரசவத்திற்குமுள்ள வித்தியாசங்களும், சிறிதான அசாதாரண பிரசவ விஷயங்களை சரி பார்ப்பதும், அவர்கள் பிரயாசமான பிரசவங்களில் கையிடக்கூடாதென்பதும் வற்புறுத்தி சொல்லப்பட்டன. மேலும் பிரசவத்திற்கு எத்தனை காலம் தாமதிக்கலாம், எப்பொழுது டாக்டரை வரவழைக்கவேண்டும், தாமதித்தால் மாதாவுக்கும் சிசுவுக்கும் நேரிடக்கூடிய அபாயங்கள் இவைகளை யெல்லாம் அவர்களுக்கு நான் கற்பித்தேன்.

இந்த பிரசங்கங்களை கேட்கவந்தவரெல்லோரும் பிரசவ சிகிச்சை எவ்விதம் நடத்த வேண்டுமென்பதை வெகு ஆவலோடு கவனித்தார்கள். இதுகால் தாம் செய்யும் தப்பிதங்களையும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் இத்தப்பிதங்களில் ஒன்றிலும் அவர்கள் வேண்டுமென்று செய்ததன்று. அவர்களின் அறிவீனமே இதற்குத் தகுந்த காரணமாகும். அறிவீனத்தை அகற்றுவதற்கு பயிர்ச்சியே உயர்ந்த கருவியாகும். கிராமத் தாயிகளின் வீடுகளிலிருந்து அதிகம் தூரமில்லாததும் சுற்றுமுள்ள கிராமங்களிலுள்ளவரெல்லோரும் கற்க வேண்டுவதற்கு நடுஸ்தல மொன்

றில் வைத்தும் பிரசவ விஷயங்களைக் குறித்து போதிப்பதைப்பற்றி அவர்களுக்கு வெகு சந்தோஷமுண்டு. நான் கற்பித்துக்கொடுத்த விஷயங்கள் பிரயோஜனகரமாகவும் இருந்தது. பிரசவ விஷயங்களைப்பற்றிய அனுபவங்கள் அவர்களுக்கு வெகு விசேஷமாகத் தோன்றிற்று. சுகப் பிரசவத்திற்கு அறிவு எவ்விதம் உதவியளிக்குமென்பதைப்பற்றி அவர்கள் இப்பொழுது நன்குணர்ந்திருக்கின்றனர். நான் செய்த பிரசங்கத்தை அறிவதற்கு அவர்களின் இதுகாறுள்ள அனேக அனுபவங்கள் பெருத்த சகாயமாக இருந்தன. இந்த பயிர்ச்சியானது சொற்பகாலத்திற்கே இருந்ததெனினும் இதனால் அவர்களுக்கு வெகு பிரயோசனம் உண்டாயிற்றென்று நான் பலமாக நம்புகிறேன். மேலும் இப்பயிர்ச்சி நடக்கும்பொழுது ஒரு பிரயாசமான பிரசவத்தை சிகிச்சை செய்ய ஆஸ்பத்திரியில் சிலர் கொண்டுவந்தார்கள். அந்த சிகிச்சை எனது பிரசங்கத்துக்கு வெகு பிரயோசனமாகவிருந்தது.

இவ்விடத்தில் பெல்டன்காடி மெடிக்கல் ஆபீசரும் பஞ்சாயத்து சூபர்வைசரும் அளித்த சகாயத்திற்கு எனது மனப்பூர்வமான நன்றியை நான் கூற விரும்புகிறேன். இதைப்போலவே இன்னும் ஏதேனும் ஸ்தலத்தில் பிரசங்கம் செய்யவேண்டுமென்று யாராவது விரும்புவார்களானால் யான் வெகு சந்தோஷத்தோடு தயாராக இருக்கிறேன்.

## லோக்கல் போர்டு தேர்தல்களைக் குறித்த நகல் ரூல்கள்.

(H: S. G. யின் பரிசோதனை.)

ஸ்தல ஸ்தாபனத் தேர்தல் விஷயமாக சென்னை அரசாங்கத்தார் நகல் ரூல்களைப் பிரசுரம் செய்திருக்கின்றனர். இந்த ரூல்களைப்பற்றி யாருக்காவது குற்றம் குறைகளும், இதர அபிப்பிராயங்களும் இருக்குமாயின் அவர் அவைகளை தெரியப்படுத்தலாம். சென்னைச் சட்டசபைத் தேர்தல் ரூல்களை மாதிரிகையாகக்கொண்டு அரசாங்கத்தார் இந்த ரூல்களை தயார் செய்தார்போலிருக்கின்றது. சட்ட சபை தேர்தல் ரூல்களைப்பற்றிய அனுபவத்தால் இந்த ஸ்தல ஸ்தாபன தேர்தல் ரூல்களை பரிசோதனை செய்வோமாகில் இவையில் அதிக குற்றங்களில்லை. சேர்வை கொடுப்பவரெல்லோரும், இதிலும் மேலாக, மெஜாரிட்டி வந்த மக்களெல்லோரும் மாகாண சட்ட சபைக்கும் அகில இந்திய சட்ட சபைக்கும் மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும் ஓட்டுரிமை பெறுவார்களாகில் எல்லா தேர்தல்களுக்கும் ஒரே விதமான முறையை பின்பற்றுவது மிக்க பிரயோசனமாகும். அச்சந்தர்ப்பத்தில் கூட தற்பொழுது பிரசுரித்திருக்கும் நகல் ரூல்களைக் காட்டிலும் எவ்வளவோ இலகுவாக அந்த ரூல்கள் இருக்கலாம். இவ்விதம் எல்லா சபைகளிலும் எல்லோருக்கும் ஓட்டுரிமை கிடைக்கும் காலம் வருமளவில், கீழ்ப்படியிலுள்ள ஸ்தல ஸ்தாபன தேர்தல் ரூல்கள் கூடின மட்டும் பாமர ஜனங்களின் புத்திக்கெட்டுவதாக இருப்பது இன்றியமையாததாகும்.

இப்பொழுது பிரசுரித்திருக்கும் நகல் ரூல்களின்படி கிராமப் பஞ்சாயத்துக்களை இதர ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து பிரத்தியேகமாக அரசாங்கத்தார் கருதவில்லையென்று புலப்படுகிறது. பாலட் ஓட்டு இவ்விடத்திலும் வேண்டுமென்று சர்க்கார் நிச்சயித்திருக்கின்றனர். இதர ஸ்தாபனங்களில் பாலட் தேர்தல் புரி





காசத்தை உண்டாக்குகிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இவ்விடத்திலும்கூட பழைய பாலட்டு காகிதத்தையும் பார்க்கலாம். அதே IV-ம் நம்பர் பாறமும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது. ஆங்கில பாஷையிலோ, அல்லது பிரதான ஸ்தல பாஷையிலோ, அல்லது இரண்டு பாஷைகளிலுமோ அச்சிடப்பட்ட அதே பழைய விஷயங்கள் ஓட்டருக்குக் கொடுக்கப்படும். இவைகளெல்லாம் அனுவசியமென்பது எமது நம்பிக்கை. மேலும் எந்த பாஷையில் பிரசுரம் செய்ய வேண்டுமென்பதைக் குறிப்பிட்ட அதிகாரி நிச்சயிக்கவேண்டுமென்று கூறியிருக்கிறது பஞ்சாயத்து எலெக்ஷனில் கவர்ன்மெண்டாருக்கிருக்கும் அசிரத்தையை நன்கு வெளியாக்குகிறது.

ஸ்தலபிரதான தாய்பாஷையில் பாலட் காகிதம் அச்சிடப்படுமென்பது நமக்குத் தெரிந்த விஷயமே. ஆனால் கிராமப் பஞ்சாயத்து விஷயத்தில் இதை குறிப்பிட்ட அதிகாரியின் சுயேச்சைக்கு ஏன் கவர்ன்மெண்டார் விட்டிருக்கிறார்கள் என்பது நன்கு புலப்படவில்லை. ஒருவரும் இதைப்பற்றி ஆலோசித்தார்களில்லை என்பதாயிருக்கும் இதற்குக் காரணம். மேலும், 100-க்கு 7-வீதம் கூட படிக்காத ஜனங்களோடு கூடிய ஒரு இராஜ்யத்தில் தேர்தல் பெயர்களை பாலட் காகிதத்தில் அச்சிடுபவதின் உத்தேசம் தான் என்ன? இதனால் பாலட் தேர்தலின் உத்தேசம்—அதாவது வோட்டர்கள் யாருக்கு வோட்டு கொடுக்கிறார்கள் என்பது வேறொருவருக்கும் தெரியக்கூடாது என்பது—நிறைவேறுமா? நிச்சயமாக நிறைவேறாது. பஞ்சாயத்து எலெக்ஷனுக்காவது காண்டிடேட்டின் படத்தை ஏன் அச்சிடக் கூடாது? வோட்டர்கள் யாருக்கு வோட்டு செய்யப் பிரியப்படுகிறார்களோ அவரை படத்திலிருந்து கண்டுபிடித்துக்கொள்வார்கள். பஞ்சாயத்து எல்லைக்குள் ஒருவரை ஜனங்கள் பார்த்திருக்காவிட்டால் அவர் எவ்விதம் பஞ்சாயத்தாராக தனது வேலையை சரிவர நடத்தமுடியும். ஆதலால் காண்டிடேட்டுகளின் படங்களை அச்சிட்டு யாரைத் தேர்ந்தெடுக்க விருப்பமிருக்கிறதோ அவருடைய படத்தின் நெற்றியில் ஒரு சிவந்த பொட்டு இடவேண்டுமென்று ஜனங்களை கட்டளையிட்டால் எலெக்ஷன் இரகசியமாக விருக்கும். எல்லோருக்கும் பூர்ண திருப்தியையும் அளிக்கும். பஞ்சாயத்திற்கு மேல் ஸ்தாபனங்களான தாலுகா, ஜில்லாபோர்டு எலெக்ஷன்களுக்கு ஆபிரிக்கா ஆஸ்திரேலியா முதலிய இராஜ்யங்களிலுள்ள நாகரீகமில்லாத ஜனங்களிடையிலிருக்கும் ஒரு சம்பிரதாயத்தை கையாளலாம். அவர்களில் ஒவ்வொருவரும் ஏதேனும், மரம் ஆறு, மிருகம் இவைகளின் பெயரை வைத்துக்கொள்வார். அதுபோலவே ஒவ்வொரு காண்டிடேட்டுக்கும் பசு, மாங்காய், என்று நாமதேயத்தைக் கொடுத்து இவைகளின் படத்தை அச்சிடவேண்டும். யாருக்கு வோட்டு கொடுக்கப் பிரியமோ அந்த காண்டிடேட்டின் படத்திற்கெதிரே ஒரு சிவந்த பென்சலால் முழுச் சந்திரனுடைய அடையாளம், அதாவது ○ யை வோட்டர்கள் இடவேண்டும். தற்காலமிருக்கும் × அடையாளத்திற்கு விசேஷமகிமை ஒன்றும் கிடையாது. மையால் வரையப்படும் அடையாளங்களை முற்றிலும் நிறுத்தவேண்டும். ஏனென்றால் இவ்விதம் செய்வதால் இப்பொழுது சரியல்லவென்று தள்ளிவிடுகிற பாலட் காகிதங்கள் அதிகம் வாராது.

தவிரவும் தேர்தல் தீர்ப்புகளை பஞ்சாயத்துக்களில் கூட அறிக்கை செய்ய கவர்ன்மெண்டார் நிச்சயித்திருக்கும் முறையை கவனிப்போம். இவ்விடத்திலும்

தேர்தல் ஆபீசரும் அவரின் பரிவாரங்களும் வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. அனேக ஸ்தலங்களில் தேர்தல்கள் நடத்தி அவைகளின் பலன்களை ஒன்று சேர்க்க வேண்டிய பெரிய ஸ்தாபன தேர்தல்களுக்கு இம்முறை அவசியமாயிருக்கலாம். ஆனால் சிறிதான பஞ்சாயத்துக்களில் இது அவசியமல்லை, வோட்டர்கள் வோட்டு செய்த உடனே தேர்தல் ஆபீசர் பெட்டியைத் திறந்து திட்டப்படுத்தி தேர்தலின் பலனைக் கூறவேண்டும். இவ்விதம் செய்வதால் தேர்தல்களைப் பற்றிய வழக்குகள் மிகவும் குறைந்துவிடும். மேலும் வோட்டு பெட்டிகளை ஒருத்தருக்கும் தெரியாமல் அக்கிரமமாக யாரேனும் திறந்தார்களென்ற குற்றமும் சாட்டப்படமாட்டாது.

எலெக்ஷனை எவ்விதம் பிரசுரம் செய்யவேண்டுமென்று ரூல்கள் கூறியிருக்கின்றன. பஞ்சாயத்துப் பலகைகளிலும் இதர மூன்று ஸ்தலங்களிலும் தேர்தல் விஷயம் ஒட்டப்படவேண்டுமாம். இவ்வழி பஞ்சாயத்துக்களுக்கு சற்றும் யோசித்ததன்று. தவிரவும் இது போதாது. ஏனென்றால் இவ்விதம் ஒட்டப்பட்டிருப்பது ஜனங்களுக்குத் தெரியாமலே இருக்கலாம்; அல்லது இதில் சம்பந்தப்பட்ட காண்டிடேட்டுகளில் யாராவது இந்த நோட்டீசுகளை ஒட்டினவுடனே கிழித்தெறிந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யலாம். மேலும் வாசிக்கத் தெரியாத வோட்டருக்கு இந்த நோட்டீசு ஒன்றையும் விளக்காது. ஜனங்களெல்லோரும் இன்ன தினம் தேர்தல் நடக்குமென்பதை அறிய உத்தமவழி என்னவெனின் தேர்தல் தினத்திற்கு முன்புள்ள 30 தினங்களில் இரண்டு தடவை இந்த நோட்டீசுகளை முரசு அடித்து பிரசுரம் செய்யவேண்டும். தாலுகா போர்டு, ஜில்லாபோர்டு எலெக்ஷன்களுக்கும் ஏன் இவ்வழியை அனுசரிக்கக் கூடாது? பலகைகளிலும், இதர ஸ்தலங்களிலும் நோட்டீசுகள் ஒட்டுவதற்கு மேலாக முரசும் அடிக்கவேண்டும். தெலுங்கு ஜில்லாக்களிலுள்ள தொம்மு வாத்தியத்தைப் போல பிரத்தியேக வாத்தியமொன்று தேர்தலை விளம்பரம் செய்ய உபயோகிக்கவேண்டும்.

ரூல் (5) சப்ரூல் 5-ல் காண்டிடேட்டின் டிப்பாசிட்டு பணம் திரும்பக் கொடுப்பது கூறப்பட்டிருக்கிறது. அதன் நிபந்தனைகளை கவனிக்குமளவில், ஒரு சர்க்கிளுக்குமேல் அனேகம் சர்க்கில்களில் தேர்தலுக்கு நிற்கும் காண்டிடேட்டுகளுக்கு பெருத்த நஷ்டமேற்படுகின்றது. ஒரு வார்டுக்கு கட்டப்பட்ட டிப்பாஸிட்டு பணம் மாத்திரம் தான் திரும்பக் கொடுக்கப்படும். இதர டிப்பாஸிட்டுகளை சர்க்கார் பறிமுதல் செய்வார்கள். இது ஒழுங்கீனமாகும். கவர்ன்மெண்டார் தேர்தலையும் வருமானத் துறையாக்கவேண்டாம். ஒரு காண்டிடேட்டுக்குக் குறைந்த நம்பர் வோட்டுகள் கிடைக்காவிட்டால் சர்க்கார் அவன் டிபாசிட்டை கைப்பற்றிக் கொள்ளலாம். இதர சந்தர்ப்பங்களில் அவன் பணத்தை இழப்பது சரியன்று. ஒரு சர்க்கிலுக்குக் கூடுதலாக அனேகம் சர்க்கில்களுக்கு ஒருத்த காண்டிடேட் நிற்கக் கூடாதென்பது சர்க்காரின் உத்தேசமானால் அதற்கு அவர்கள் உறுதியான தடை ரூல்களிடலாம். அது இதைக் காட்டிலும் நல்ல வழியாகும். மேலும் ரூல் 5, சப்ரூல் 5-ன்படி ஒரு காண்டிடேட்டு தனது ஸ்தானத்தில் பிரவேசித்தபிறகுதான் அவனுடைய டிபாசிட்டு பணம் திரும்ப கொடுக்கப்படும் என்றும் தோல்வி அடைந்த காண்டிடேட்டின் டிபாசிட்டு பணம் திரும்பிக் கொடுப்பது எலெக்ஷன் பலன்களை ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்தபிறகு மாத்திரம்தான் என்றும் காணப்படுகிறது. ஆனால் ரிட்டர்னிங் ஆபீசர் தேர்தல் பலனைக் கூறிய தினத்திலேயே எலெக்





ஷனின் பலன் அனுபவத்தில் வருகிற படியால் காண்டிடேட்டின் பணத்தை வட்டியில்லாமல் ஏன் சர்க்கார் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்? என்றைக்கு தேர்தல் பலன் விளம்பரம் செய்யப்பட்டதோ அன்றைக்கே டிபாசிட்டு பணத்தைத் திரும்பக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ரூல் 19-ல் பெண்டிர்களின் உரிமைகள் குறிப்பிட்டிருக்கின்றன. இவை திருப்திகரமாகவில்லை. கோஷா ஸ்திரீகளுக்கு மாத்திரம்தான் ஏன் பிரத்தியேக சௌகரியங்கள் கொடுக்கவேண்டும்? எல்லா பெண்டிர்களுக்கும் இவை அளிக்கப்படவேண்டும்.

ஒரு காண்டிடேட் ஒன்றிலதிகம் வார்டுகளுக்கு பிரதிநிதியாக நிற்கலாம். அவர் இரண்டு வார்டுகளில் தேர்ந்தெடுக்கப்படின் அவர் இரண்டிற்கும் பிரதிநிதியாக இருக்க முடியாததால் ஏதேனும் ஒருவார்டின் பிரதிநிதித்வத்தை வேண்டாமென்று கூறவேண்டும். அப்பொழுது அந்த வார்டில் புதிதாக எலெக்ஷன் நடைபெறுவதற்குள்ள முறைகளை ரூல் 32 (2) ல் கவர்ன்மெண்டார் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னத்திற்காக புது எலெக்ஷன் நடைபெற வேண்டுமென்று ஒருத்தற்கும் தெரியவில்லை. இது அவசியமில்லை என்று நான் எண்ணுகிறேன். முதல் தேர்தல் மிகவும் பகிரங்கமாக நடந்ததால் அதைப்பற்றி எல்லோருக்கும் தெரிந்திருக்கும். பிரியமுள்ளோரெல்லோரும் அப்பொழுதே காண்டிடேட்களாய் இருந்திருக்கலாம். அப்பொழுது யாரேனும் காண்டிடேட்டாக நிற்கா விட்டால் அது அவனுடைய புத்தி யீனமே. ஆகலால் மேற் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் முதல் தேர்தலிலேயே இதர வார்டுகளில் கூடுதல் வோட்டுகள் பெற்றிருப்பவர்களை பிரதிநிதியாகக் கொள்வதே ஒழுங்காகும். புது எலெக்ஷனால் ஏற்படும் கஷ்டங்களை இவ்விதம் நிவர்த்திக்கலாம், இப்படி செய்வதில் ஒரு பிசகுமில்லை. இரண்டு வார்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவன் உண்மையில் என்ன செய்கிறான் என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் ஒருவார்டின் பிரதிநிதித்வத்திலிருந்து விலகிவிடுகிறான். இதர காண்டிடேட்டுகளுக்கு அவன் விலகுவதால் அப் பதவிக்கு உரிமை கிடைக்கவேண்டும். இந்த உரிமையைத்தான் ரூல் 35 குறிப்பிடுகிறது.

---

## சர்குலர் நம்பர், 106

விஷயம்:— கணக்கு—கிராமப் பஞ்சாயத்து போர்டுகள்—கணக்கு பரிசோதனையும்—அதற்குவேண்டிய பாறங்களும்.

சென்னை லோக்கல் போர்ட்ஸ் திருத்தச் சட்டத்திலுள்ள ஷெடியூலின் 12-வது ரூல்படி கவர்ன்மெண்டார் 18-2-31-ல் பிரசுரித்த ஜி. ஒ. நம்பர் 512 L. & S. M. ல் கீழ்க் குறிப்பிடும் விதம் விதித்திருந்தார். 1930-ஞ் ஆகஸ்டு மாதம் 25-உக்கு முன் யூனியன்போர்டாகயிருந்த பஞ்சாயத்துக்கள் ஒழிய இதர பஞ்சாயத்துக்களின் கணக்குப் புஸ்தகங்களெல்லாம் 1930-ஞ் ஆகஸ்டுமீ 25-ம்டீ முதல் புது ஆர்டர் சர்க்காரால் அறிவிக்கை செய்யும்வரை ரவினியூ அதிகாரிகளால் பரிசோதனை செய்யப்படவேண்டும். மேலும் 1930-ஞ் ஆகஸ்டுமீ 25-ம்தேதி முதல் புது ஆர்டர் பிறப்படும் வரை அப்பஞ்சாயத்துக்கள் ஆதியில் எம்மாதிரி கணக்குமுறைகளை வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று சர்க்காரால் நிச்சயிக்கப்பட்டிருந்ததோ, அதே முறையில் இப்பொழுதும் கணக்குகளை வைத்துக்கொண்டிருக்கவேண்டும். இதுபோலவே பாறங்கள், ரிஜிஸ்டர்கள், இவைகளைச் சப்ளை செய்வதும், வைத்துக்கொண்டிருக்க வேண்டியதும் சம்பந்தித்து பஞ்சாயத்து ரிஜிஸ்திரார் ஜனரலால் அறிவிக்கப்பட்ட இன்ஸ்ட்ரக்ஷன்களில் எவைகளெல்லாம் 1930 ஞ் ஆகஸ்டு மாதம் 28-ம்டீ யன்று அமுலிலிருந்தனவோ அவைகளெல்லாம் சர்க்காரின் புது ஆர்டர் வரும்வரை அமுலிலிருக்கும். ஆதலால் பஞ்சாயத்து போர்டுகளெல்லாம் வழக்கம்போல் கணக்குகளும், ரிஜிஸ்டர் புஸ்தகங்களும் இப்பொழுதும் வைத்துக்கொண்டிருக்கவும் ரவினியூ அதிகாரிகள் பரிசோதனைக்குக் கேட்கும்பொழுது அவைகளைக் காண்பிக்கவும் கடமைப்பட்டிருக்கின்றன.

---

# மடகசிரா கோடைக்கால பள்ளிக்கூடமும் மகாநாடுகளும்.

அனந்தப்பூர் ஜில்லாவில் மடகசிரா என்ற ஸ்தலத்தில் மேமீ முதல் தேதி முதல் 18 ம்டீ வரை வித்தியாப்பியாச விஷயமாக அனேக வேலைகள் நடைபெற்றன. அவ்விடத்தில் கோடைக்கால பள்ளிக்கூடமொன்றும் அதை சம்பந்தித்த சில விசேஷங்களும், பெனுகொண்டா தாலுகா போர்டு, ராயலசீமா கூட்டுறவு இன்ஸ்டிடியூட், அனந்தப்பூர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி இவைகளின் ஆதரவில் நடைபெற்றன. இவைகளை நடத்துவதற்கு முதன் முதல் பிரயத்னம் செய்தவர் லேபாக்ஷி கிராமபுனருத்தாரண சூபர்வைசரான ம-௱-௱ஸ்ரீ வார்த்தவி ராமசந்திர ராவுகாரு B.A,, B.L , ஆகும். ஸ்ரீமான்கள் தாலுகா போர்டு பிரசிடெண்டு அகலி நாராயண ராவுகாருவும் ஜில்லா பாங்கி உபப்பிரசிடெண்டு ராகவாசாரலுகாரு B.A., B L.,-ம் ஸ்தல தாலுகா போர்டு மெம்பரும் கிராம முனிசீபும் ஆகிய சித்தனகௌடும் இந்த இயக்கத்திற்கு பெரும் உதவி புரிந்தார்கள்.

35 எலிமெண்டரி பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் இந்த கோடைக்கால பள்ளிக்கூடத்திற்கு வந்து அவ்விடத்தில் படிப்பித்த பாடங்களை கற்றுக் கொண்டனர். ஒவ்வொரு மணிநேரமும் தெலுங்கில் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. அனந்தப்பூர் ஜில்லாவிற்கு வெளியிலிருந்து ஸ்ரீமான்கள், இந்திய ஊழிய சங்கத்தைச் சேர்ந்த வி. வெங்கடசுப்பய்யாவும், கிராமப் பஞ்சாயத்து பத்திரிகையின் பத்திராதிபரான ஜீ. ஹரிசர்வோத்தமராவும், ப்றபொஸர் N. G. ரங்காவும் விஜயம் செய்தனர். அவர் மாணவர்களுக்கு பாடம் கற்பிப்பதிலும் இதர விசேஷங்களிலும் பங்கு கொண்டனர். நந்தியாலிலிருந்து பிக்ஷுவர ஸாம்ப சுப்பிரமணிய சர்மா இந்த பள்ளிக்கூடத்தை பார்வையிட்டார். அவர் சுகாதாரம், அவசர சிகித்சை முதலியவைகளைப்பற்றி கற்பித்தார். ராயலசீமா கலாசாலையைச் சேர்ந்த பண்டிதர்களும், ராயலசீமா கூட்டுறவு இன்ஸ்டிடூட்டைச் சேர்ந்த பண்டிதர்களும் பிரசங்கம் செய்தார்கள். ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியும், "சாதன" பத்திரிகையின் பத்திராதிபருமாகிய ம-௱-௱ஸ்ரீ பாப்பூர் ராமாசார்லுகாரு அவ்விடம் விஜயம் செய்திருந்தார். தினந்தோறும் இரவில் அவர் புராண கதைகளைப் படித்து ஜனங்களுக்கு சந்தோஷமளித்தார். ராயலசீமாவில் புகழ்பெற்ற ஆர்டிஸ்டு வெங்கடராவு தமது ராயலசீமா ஆர்ட் இன்ஸ்டிடூட்டைச் சேர்ந்த மாணவர்களுடன் அவ்விடம் வந்து அவருடைய அழகான படங்களை எல்லோருக்கும் காண்பித்து அவர்களின் மனதைக் களிக்கச் செய்தார். அவர் அனேகம் படங்களை எழுதியுள்ளார். ஹாம்பி என்ற பிரதேசத்திலுள்ள அனேகம் சிற்பவேலைகளை அவர் இப்பொழுது வரைந்திருக்கிறார். ராயலசீமா சில்ப வித்தையைப்பற்றி அவருக்குள்ள அபிமானத்திற்கு அளவேஇல்லை. சொற்பகாலத்தில் ராயலசீமா சிற்பவித்தை என்று பிரத்தியேக சிற்பகலாசாலையை அவர் ஏற்படுத்துவார். ஆயுர்வேத வித்வான் ஹிந்துப்பூர் சூரியநாராயண சர்மாவும், விவசாய டிமான்ஸ்டிரேட்டர் Mr. K. அம்பிகாசரணும் மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டனர்.

இந்த கோடைக்கால பள்ளிக்கூடத்தில் அனுசரிக்கப்பட்ட நித்திய நிதான முறைகள் கவனிக்கத் தக்கவையாகும். காலமே 4-மணிக்கு மணி அடிக்கப்படும்.





5-மணிக்கு பிரார்த்தனைக்கு எல்லோரும் கூடுவார்கள். பிறகு 6-80 மணிவரை தேசிய நாம சங்கீர்த்தனம் நடைபெறும். பின்பு பிராதல். மாணவர்களுக்கு 7-15 மணிக்கு கல்வி கற்பிக்கத் தொடங்கப்படும். இந்தியா சரித்திரம், உயர்ந்த இந்திய ஆட்சி, இந்திய தனசாஸ்திரம், கூட்டுறவு, கிராம தனசாஸ்திரம், பஞ்சாயத்து ஸ்தல ஆட்சி, தெலுங்கு பாஷை, கணக்கு, ஜோதிடம் அதை அடுத்த பூமி சாஸ்திரம், சிற்பவித்தியை, தேகாரோக்கியம், விவசாயம், சுகாதாரம், சிகிச்சை— இவைகளெல்லாம் மாணவர்களுக்கு எளிதில் புலப்படும் விதத்தில் கற்பிக்கப்பட்டன. 11-மணிவரையில் இவ்விதம் கற்பிக்கப்படும். மத்தியானம் 2-மணி முதல் 5-மணி வரையும் பாடங்கள் கற்பிக்கப்படும். 11-மணி முதல் 2-மணி வரையிலுள்ள சமயங்களில் மாணவர்களும் உபாத்தியாயர்களும் போஜனம் செய்துவிட்டு சிரமம் தீர்த்துக்கொள்வார்கள். கொடுக்கப்பட்ட ஆஹாரம் அவ்விடத்தில் நடைபெறும் தேச ஊழியவேலைக்கு இசைந்து வெகுசாதாரணமானதாயிருந்தது. சாயங்காலத்தில் பொதுப் பிரசங்கங்களும், இராத்திரியில் புராணவாசிப்பும் நடைபெற்றன. அவ்விடத்து ஜனங்கள் இவைகளில் அதிகம் உற்சாகம் காண்பித்தார்கள்.

15-ம் தேதியன்று கூட்டுறவு பஞ்சாயத்தார்களுக்காக ம-௱-௱ஸ்ரீ வி. வெங்கடசுப்பய்யா காரு ஒரு வகுப்பை ஆரம்பித்தார். கூட்டுறவு இயக்கத்தின் தற்பொழுதுள்ள ஸ்திதியை அவர் வெகு தெளிவாக எடுத்துக்கூறினார். பஞ்சாயத்தார்கள் தங்களுடைய கடமைகளை யாருடைய பிரியத்தையும், கோபத்தையும் கவனியாது செய்யவேண்டுமென்று அவர் வற்புறுத்தினார்.

16-ம் தேதியன்று தாலூகாக் கூட்டுறவு மகாநாடும், தாலூகா விவசாயிகள் மகாநாடும் நடைபெற்றன. கூட்டுறவு மகாநாட்டில் ம-௱-௱ஸ்ரீ ஜீ. ஹரிசர்வோத்தமராவுகாரு தலைமைவகித்தார். அவருடைய பிரசங்கத்தில் கூட்டுறவு இயக்கத்தின் மகத்துவமான வேலையை அவர் எடுத்துரைத்தார். புதிதாக உலகமெங்கும் பரவுகின்ற ஜனநாயக ஆட்சியின் தனபாகம் கூட்டுறவு என்று அவர் அபிப்பிராயப்பட்டார். தற்பொழுது உலகமெங்கும் ஜனங்கள் கஷ்டத்தால் வருந்துவதுபோல் நாமும் வருந்தவேண்டியதாயினும், வருங்காலத்தில் சுதந்திரம் பெற்ற இதர இராஜ்யங்களுக்கு நிகராக கவலை இல்லாமல் நிற்பதற்கு நாம் வேண்டிய வழியில் சிரமிக்கவேண்டும். சென்னை சட்ட சபையில் இப்பொழுது கொண்டுவந்திருக்கும் கூட்டுறவு பில்லின் உத்தேசம் கூட்டுறவு இயக்கத்தை உத்தியோகஸ்தரின் அதீனத்தில் கொண்டு வருவதற்காகும். இது நமது சுதந்திர வாழ்வுக்கு எதிர்யாதலால் அந்த பில்லை அவர் கண்டித்தார். இந்திய கூட்டுறவு இயக்கத்தின் சரித்திரத்தை விஸ்தாரமாக அவர் ஜனங்களுக்குக் கூறினார். இந்த இயக்கத்தை தற்பொழுதுள்ள நெருக்கடியான ஸ்திதியில் கொண்டுவந்தது அனுதாபமில்லாத அன்னியநாட்டு உத்தியோக வகுப்பினர்கள் அரசாங்க விஷயத்திலும், பொருளாதார விஷயங்களிலும் கையாண்ட திட்டங்களேகாரணமென்று அவர் அபிப்பிராயப்பட்டார். உத்தியோக வகுப்பினர்கள் எல்லோரும் இவ்விதமிருந்ததாகக் கூறமுடியாது. அவர்களில் சிலர் நமது நலத்தில் சிரத்தையுடனிருந்தார்களாயினும் பெரும்பாலோரும் இரக்கமற்றவர்களாகவே இருந்தார்கள். அரசாங்கத்தார் இதுவரையும் விவசாயியின் கடனை மாத்திரம்தான் கவனித்தார். அவனுடைய வருமானத்தை அதிகரிக்கத்தகுந்த முறைகளைக் கண்டுபிடித்து கடனைத் தீர்ப்பதற்குள்ள வழிகளை அவர் நாடினார்களில்லை. இதுவே கூட்டுறவு இயக்

கத்தின் தற்பொழுதுள்ள ஸ்திதிக்குக் காரணமாகும். ஜனங்களைத் தண்டிக்கக் கூடுதல் சட்டங்களை அமைப்பதால் என்ன பிரயோஜனம்? விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும், விவசாயி தனது சமயத்தைப் பாழாக்காமலிருப்பதற்கு அவனுக்கிசைந்த தொழிலைக் கற்பிப்பதற்கும், அவனுடைய சாமான்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு சந்தைகள் அமைப்பதற்கும், அவன் சுகமாக வசிப்பதற்கும் வேண்டிய திட்டங்களை கவர்ன்மெண்டார் தைரியத்துடன் கையாளவேண்டும். இந்த ஒருவழியே அரசாங்கத்தாருக்கு இருக்கிறது. தற்பொழுது சில பலமான முறைகள் தேவையென்று கவர்ன்மெண்டார் கருதுவார்களானல் அதற்கு இரண்டு மூன்று வருஷங்களுக்குப் போதுமான ஒரு தற்காலிக சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். சாதாரண சீர்திருத்தங்கள் மாத்திரமே இந்தப் புது பில்லில் கொண்டுவரவேண்டியது. கூட்டுறவு சங்கங்கள் விவசாயத்தையும் உதவி குடிசைக் கைத்தொழில்களையும் அபிவிருத்திசெய்ய முன் வரவேண்டும் என்று மிஸ்டர். ஹரி சர்வோத்தம ராவ் கூறிமுடித்தார்.

விவசாயிகளின் மகாநாட்டிற்கு ஆசிரியர் N. G. ரங்கா தலைமை வகித்தார். காந்திஜிக்கும் லார்டு இர்வினுக்கும் ஏற்பட்டுள்ள சமரசத்தால் கிடைக்கக்கூடும் ஆட்சி குணங்களை அவர் வெகு தெளிவாக பிரசங்கம் செய்தார். பிரிட்டிஷாரின் குணகுணங்களை அவர் எடுத்துக் காட்டினர். இங்கிலாந்திலும் இந்தியாவிலுமுள்ள ஆட்சி நிபுணர்களைக் குறித்து அவர் புகழ்ந்துபேசினர். வருங்காலத்தில் இந்தியா மிகவும் பெருமையோடும், சிறப்புடனும் வாழுமென்று அவர் கூறினர். ஆனல் அன்னியர்கள் செய்யும் உதவியை நம்பி நாம் சும்மா இருக்கக்கூடாதென்று அவர் எச்சரிக்கை செய்தார். நமது அபிவிருத்தி நமது கையிலேயே இருக்கிறது. நாம் விவசாயிகளின் சங்கங்களை நாடெங்கும் அமைத்து, நாட்டில் நடக்கின்ற சம்பவங்களை புத்தியோடு கவனித்து, தகுந்த தருணத்தை நழுவவிடாமல் வேலைசெய்ய வேண்டும். இந்திய மக்கள் ஒன்றுசேராவிட்டால் சுயராஜ்யமென்று கூறுவது வெறும் பெயரளவில் மாத்திரம் நின்றுவிடுமென்பது திண்ணம்.

இந்த இரண்டு மகாநாடுகளிலும் கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தி சம்பந்தமானதும், கிராமாந்தர வாழ்க்கைப்பற்றிய சகலவிஷயங்களைக்குறித்தும் தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன. ஸ்தல சட்டசபை மெம்பர் ஸ்ரீமான் வ. கொண்டப்ப அவர்களும் இந்த மகாநாடுகளுக்கு வந்திருந்தார். விவசாயிகளின் மகா நாட்டில் காட்டுப் பஞ்சாயத்தைப் பற்றிய பிரேரபணை ஒன்று அவர் கொண்டுவந்தார். மிகவும் லளிதமான ஒரு பிரசங்கத்தில் அவருடைய நோக்கங்களைச் சபையோர்களுக்கு அவர் உரைத்தார்.

17-ம் தேதியன்று ஸ்ரீமான் S. V. ராகவாசாரி அவர்கள் இந்த மகாநாடுக்கு வந்திருந்த மாணவர்கள், உபாத்தியாயர்கள், பார்வையிட வந்தவர்கள், மகாநாடுகளை நடத்த ஏற்பாடுசெய்தவர்கள், எல்லோரையும் மைசூர் இராஜ்யத்தில் 8 மைலுக்கப்பாலுள்ள கிருஷ்ணபுரம் என்ற தமது கிராமத்திற்கு அழைத்தார். இந்த யாத்திரை ஒவ்வொருவருக்கும் அளவிடக்கூடாத ஆனந்தத்தை அளித்தது. குன்றுகள்மேலும் மைதானங்கள்மேலும் நாங்கள் நடந்தோம். சிலபொழுது ஆங்காங்கு பட்டிகள் இப்பெருங் கூட்டத்தைக் கண்டு குரைக்கும். வழியிலுள்ள கிராமஜனங்கள் [illegible] பார்ப்பதற்கு ஓடிவருவார்கள். மைசூர் இராஜ்யத்திலுள்ள குன்றுகளின் [illegible] தின் சுகத்தை யாரால்தான் வர்ணிக்கக்கூடும். அரசமரங்களும், வேப்ப[illegible] எங்கும் வெயிலின் வெப்பத்தைக் குறைத்தன. எங்களை அழைத்துச் [illegible] வைஷ்ணவரான ராகவாசாரியின் உதாரகுணத்தை நினைக்கும்பொழுது ராமானுஜரின் ஜன சமத்வ நோக்கம் எல்லோருடைய மனதிலும் உண்டாகும். வழியில் ஒரு கிராமத்தில் எங்களுக்கு ஸ்ரீமான் ஹனுமந்தராய் இளநீர் கொடுத்தார். அதன் ருசி ஒருவராலும் சொல்லமுடியாது. இவ்விதம் வெகு விமரிசையாக இம்மகாநாடுகள் நடைபெற்றன.




**நாமே உயிர்த்தோழர்கள்**

20 நாளைக்கு ஒரு ரூபாய் பெற்று தினம் இரண்டு வேளை உம்முடைய வியாதிகளை அப்புறப்படுத்தி உம்முடைய வாழ்நாளை நன்னுட்களாய் கழியும் படி செய்ய

மதனசஞ்சரி டானிக்

என்னும் பெயருடன் உலாவும் தமையனும் வந்த வியாதிகளைத்தீர்க்கவும் வியாதிகள் வரவொட்டாமல் தடுக்கவும் வேண்டிய வழிகாட்டி

வைத்திய வித்தியா

என்னும் பெயருடன் இலவசமாய் கிடைக்கும் தம்பியுமேயாம். எழுதுங்கள்

**மதனமஞ்சரி பார்மஸி**

1/94, சீனு பஜார், மதறாஸ்.

90-வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

**அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.**



அநேக மெடல்கள், நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

காரம், மணம், நிறம், குணம், வாடை, உள்ளது.

விலை விபரத்திற்கு எழுதுக:—

ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி, லிமிடெட்.,

தபால் பெட்டி 140, மதராஸ்.

# அறிக்கை.

அநேகம் பஞ்சாயத்துப் பாடசாலைகளில் கீழ்கண்ட பாடபுத்தகங்களை வைத்து நடத்திவருகிறார்கள். எல்லாப் பஞ்சாயத்துப் பிரசிடெண்டுகளையும் தங்கள் பாடசாலைகளில் அடியில்கண்ட புஸ்தகங்களைத் தருவித்து, உபயோகப்படுத்திக் கொள்ள கோரப்படுகிறார்கள். புஸ்தகங்கள், சென்னை, ஜார்ஜ் டவுன், புஸ்தக வியாபாரிகள் பி. ஜி. பால் அண்டு கம்பெனியாரிடமிருந்து தருவித்துக்கொள்ளலாம்.

## புஸ்தகங்களின் விபரம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| **1-ம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. I By A. M. S. இராகவன் B.A., L.T. ... ... | 0 | 2 | 0 |
| கோபால் வாய்ப்பாடு ... ... ... ... | 0 | 1 | 0 |
| **2-ம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. II By A. M. S. இராகவன், B.A., L.T. ... ... | 0 | 3 | 0 |
| கோபால் வாய்ப்பாடு ... ... ... ... | 0 | 1 | 0 |
| **3-ஆம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No III By A. M. S. இராகவன், B.A., L.T. ... ... | 0 | 4 | 0 |
| சிறுமணிக் கதைகள் By S. S. அருணகிரிநாதர் ... ... ... | 0 | 5 | 0 |
| **4-ஆம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. IV By A. M. S. இராகவன், B.A., L.T. ... ... | 0 | 4 | 6 |
| ஸிவிக்ஸ் Part I By S. சுப்பிரமணிய அய்யர், B.A. ... | 0 | 5 | 0 |
| ஆஞ்சநேயர், By ம. குப்புசாமி முதலியார் ... ... | 0 | 5 | 0 |
| **5-ஆம் வகுப்பு.** | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் No. V By A. M. S. இராகவன், B.A., L.T. ... ... | 0 | 6 | 0 |
| கம்பர் By பண்டிதர் A. N. கன்னையா ... ... | 0 | 5 | 0 |
| ஸிவிக்ஸ் Part II By S. சுப்பிரமணிய அய்யர், B.A. ... | 0 | 6 | 0 |
| இந்து தேச சரித்திரம் By V. ஜயராம அய்யர், B.A., L.T. ... ... | 0 | 5 | 0 |
| சிற்றிலக்கண வினாவிடை By C. R. கோவிந்தராஜ முதலியார் ... ... | 0 | 4 | 0 |

குறிப்பு :—உபாத்தியாயர்கள் மொத்தமாக தருவித்துக் கொள்ளும் புத்தகங்களுக்கு 100-க்கு 20-0-0 வீதம் கமிஷன் கழித்து கொடுப்பார்கள் என்பதையும் குறிப்பிடப்படுகிறது. மாதிரி புத்தகங்கள் பாதி விலைக்குமட்டும் அனுப்பப்படும். தபால் செலவு வேறு.

*Apply to :—*

**B. G. PAUL & CO.,**

PUBLISHERS,

*2, Francis Joseph Street, Madras.*

# லோத்ரா

## கர்ப்பாசய ரோக நிவாரணி

எல்லாம் ஒருமிக்க புகழத்தக்கதே!

15 வருஷ இல்லற வாழ்க்கைக்குப் பிறகு என் மனைவி ஒரு பெண்குழந்தைக்குத் தாயானாள்.

சர்வகாலமும் 'லோத்ரா' வை கையிருப்பாய் வைத்திருப்பேன்; தூக்கத்திலும் மறவேன்.

6 வேளை மருந்து 15 வருஷகாலம் நீடித்த ரோகத்தை நிவர்த்திசெய்தது.

ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் பரிஹரிப்பதில் தலைமை பெற்றதெனக் கண்டேன்.

ஸ்திரீகளுக்குச் சகஜமாய் உண்டாகக்கூடிய சர்வ வியாதிகளையும் ஆச்சரியப்படக் கூடியவாறு போக்கி, அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் ஆனந்தத்தையும் தரத்தக்கது.

**கேஸரி குடீரம்**

**எழும்பூர், மதராஸ்**

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

# அசோக சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

## (அசோக உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும், நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக-உப்பு ஓர் அருமருந்து.

உணவை நன்றாகச் ஜீரணிக்கச் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும், மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அஜீரணம், பித்த வாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலை மயக்கம் முதலிய நோய்களை நீக்கவல்லது பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீரண பேதி, கணைச் சூடு, வெட்டைச் சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல் போன்ற ரோகங்களைப் போக்கி, எவ்வித பிணியும் அணுகாமல் காக்கக்கூடியது அசோக-உப்பே யாகும்.


விலை ரூ. 1-8-0. தபால் செலவு வேறு.

அசோககம்பெனி லிமிடெட், சென்னை.

# மையர்ஸ் பம்புகள் ஜெகப்பிரசித்தி பெற்றவை

**எல்லா வேலைகளுக்கும் இவைகளையே உபயோகியுங்கள்**

கைபம்புகள், விசிறி (ஸ்பிரே) பம்புகள்,
பவர் பம்புகள் முதலியவை எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்




## ஸ்டோவர் எஞ்ஜின்கள்.

பவர் பம்புகளும் மற்ற மெஷின் பம்புகளையும் ஓட்டுவதற்கும், தங்களுக்கு எக்காரியத்திற்காகப் பம்புகள் வேண்டுமென்பதைப்பற்றியும் விவரமாக எழுதுங்கள். எஸ்டிமேட்டின்
:: விவரம் முழுவதும் அனுப்புகிறோம். ::

இந்தியாவுக்கு சோல் ஏஜண்டுகள் !—

தபால் பெட்டி நெ. 202 } **விமாயி பிரதர்ஸ் லிமிடெட்,**
**1/173**, பிராட்வே, மதராஸ்.

பத்திராதிபர்.—கனம். ஜி. ஹரிஸர்வோத்தமராவ்-எம்.ஏ.
அச்சிடுவோர்.—மத்தியக் கூட்டுறவு அச்சு இயந்திரசாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.